என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

MANGAYAR MALAR ஏப்ரல் 2006

194 பக்கங்கள் ரூ.18/-



திருமண மலர் இணைப்பு கேட்டு வாங்குங்கள்

வெள்ளி விழா கொண்டாட்டம்!

-வாசகியர் கடிதங்கள்!

வீடு பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலி!


எங்கள் வைரங்கள் பேசுகின்றன
நாங்கள் பேசுவதில்லை!
SINCE 1973
KFJ
வைரங்கள்
Rs.100 LESS PER GM
42651100
24984617
26650500

ஆனந்தம் 'ஆயிரம்' 60க்கு மேலும்...



60 வயதை அடைந்தவர்களே ! வாழ்நாள் முழுவதும் சந்தோஷம் நிலைத்திட மற்றும் கூடுதல் வசதிக்கென்றே தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி சந்தோஷ் டெபாசிட் என்ற திட்டத்தை வழங்குகிறது. சேமிப்பு கணக்காகவும், டெபாசிட் திட்டமாகவும் இரு வழியில் செயல்படும் இத்திட்டம் உங்களுக்கு பயன் தரும், கூடுதல் வட்டி தரும், மகிழ்ச்சி தரும், மன நிம்மதி தரும். உற்றாரைப் போலவே உங்களை என்றென்றும் பேணிக்காக்கும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி.

சந்தோஷ்

டெபாசிட்

(தேவையானதை, தேவையானபோது எடுக்க)

- இருவழிப் பயன் - சேமிப்புக் கணக்கு + டெபாசிட் கணக்கை ஒரே கணக்காக வைத்துக் கொள்ளும் வசதி
- தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் எந்தக் கிளையிலும் பணம் செலுத்தும் வசதி + பணம் பெறும் வசதி
- சேமிப்புக் கணக்கில் குறைந்தபட்ச இருப்பு தேவையில்லை
- ஒவ்வொரு 1000/- ரூபாயும் முத்துக்குவியல் டெபாசிட் திட்டத்திற்கோ / நிரந்தர டெபாசிட் திட்டத்திற்கோ மாற்றிக் கொள்ளும் வசதி
- இலவச ATM கார்டு - வங்கியின் ATM மையங்களில் பணம் பெறும் வசதி. இந்தியா முழுவதிலும் உள்ள 5500க்கும் அதிகமான ATM மையங்களில் பணம் பெறும் வசதி
- பகுதிபகுதியாகவும் பணம் எடுக்கும் வசதி - குறைந்த அளவு பணம் எடுத்தாலும் டெபாசிட் முழுவதையும் முறிக்க வேண்டிய அவசியம் இல்லை. டெபாசிட்களை முன்னரே திரும்பப் பெற்றாலும் அபராதத் தொகை ஏதுமில்லை.
- சீனியர் சிட்டிசன்களுக்கான சிறப்பு கூடுதல் வட்டி விகிதத்துடன்

இப்போது 8% p.a.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.

Customer Oriented & Committed to Excellence

ESTD. 1921

பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி 628 002 இணையதளம் www.tmb.in

Electronic Money Transfer • Anywhere Banking • Free ATM Card • 100% RTGS enabled branches • Countrywide accessible ATMs



25 இரும்பு மருந்து வகைகளை நாடுங்கள்!

அரிய வாய்ப்பு

'இம்மாத இல்லத்தரசி' சமையல் போட்டிக்கு நடுவர்களாக இருக்க - மகளிர் அமைப்புகளை வரவேற்கிறோம். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.



95 பழமின்னும்; பளபள இன்னும்!

முதலில் படிக்க...

8 மங்கையர் மலர் - 25 வாசகியர் கடிதங்கள்

128, 154, 160 அடடே அறிவிப்புகள்!

100 இளைய சக்தி
நாளைய அப்துல்கலாமே!

33 அம்மாவுக்கு :
திருடும் குழந்தைகளைத் திருத்துவது எப்படி?

சமையல்

84 கேரள ஸ்பெஷல் உணவு!

68 இனிய தம்பதி
மரியாதையும் முக்கியம்

137 இம்மாத இல்லத்தரசி



அனுஷா பதில்கள்! **152**

கதைகள்

88 ஆசை அலையில்
அகல்யா

108 தருமமிகு
சென்னையில்

142 தினை
விதைத்தால்...



40 வடாம் போடலாமா?

65 சட்ட ஆலோசனைகள்

129 இந்த மாதம் எப்படி?


159 நடப்புச் செய்திகள்

அழகு

113 அழகாய் இருக்க ஆலோசனை



106 குழந்தையின் அழுகைக்கு பதிலளியுங்கள்!



116
ரூ. 1000 பரிசு
பெறும்
குழந்தைகளின்
குறும்பு -
வாசகியர்
அனுபவங்கள்


ஸ்பெஷல் பகுதிகள்

48 என் செல்லமே!

அட்டையில் : மாலினி
படம் : அஜீத்

என்றும் உங்களுடன்
மலர்:26 **மங்கையர் மலர்** இதழ் 3
ஏப்ரல் 2006

உத்தியோகத்தில பிரச்னையா?



எந்த உத்தியோகத்திலும் என்னால Maximum 6 மாதத்திற்கு மேல் இருக்க முடியலை. மாறிட்டே இருந்தேன். அதனால என் வளர்ச்சி தடைபட்டது. நான் இருக்கணும்னு நினைச்சாலும் ஏதாவது ஒரு ப்ராப்ளம். என்ன செய்யறதுன்னு தெரியலை. இதனால என் மேரேஜ் தடைபட்டுப் போனது. மங்கையர் மலர் விளம்பரம் பார்த்து **பத்மஸ்ரீ ஜெம்ஸ்க்கு** ஜாதகத்துடன் சென்றேன். என் ஜாதகத்தை நன்றாக பார்த்து சில தோஷங்கள் இருப்பதாக கூறி, காலஹஸ்தி போய் பரிகாரம் செய்ய சொன்னாங்க. பிறகு என் ஜாதகத்திற்கு பொருத்தமான அதிர்ஷ்ட கல் கொடுத்து, சில சிம்பிள் பரிகாரங்கள் இங்கேயே என்னை செய்யச் சொன்னாங்க. Within 2 months-ல நான் ஒரு சாப்ட்வேர் கம்பெனியில வேலைக்கு சேர்ந்தேன். என்னோட ஒர்க் பார்த்து நல்ல ஊக்கம்கொடுத்து கம்பெனி எனக்கு இன்கிரிமென்ட் + பிரொமோஷன் குடுத்தாங்க. இப்ப 2 இயர்ஸ் ஆயிடுச்சு. இப்ப கல்யாண சம்மந்தப்பட்ட வாய்ப்புகளும் நிறைய வருகிறது. ஜாதகம் பொருத்தம் பார்க்க **பத்மஸ்ரீ ஜெம்ஸ்**க்கு போகும்போது அப்போதுதான் எனக்கு வாழ்க்கையில் நடந்த மாற்றங்கள் சொல்ல வாய்ப்பு கிடைத்தது. பத்மஸ்ரீ ஜெம்ஸ்க்கு மனமார்ந்த நன்றி!

Subramaniam, Nanganallur, Chennai

Subramaniam மாதிரி பலரது நம்பிக்கையும் பிரச்சனையும் தீர்த்து வைக்கும் சிறந்த நிறுவனம்

Padmashri Gems Jewellers

சரி இதை யார் பரிந்துரைக்கிறார்கள்

Mrs.SHARMILA RAJASHEKAR M.A., P.G.A. Member

Mr.RAJASHEKAR B.Com., C.Gem., P.Gem.A., Bangkok

International Astrogemmologist

இந்தியாவின் சிறந்த Astrologer என்று Bangkok Association மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பலரது பிரச்சனைகளை தன் Astrogemmology மூலம் நிரந்தர தீர்வு தருகிறார்.

தபாலில் பதில் அறிய ரூ.251 **with Birth Details** அனுப்பவும்

Free Consultation with this Copy

For Appointment Contact : 52122927, 28157560

100% Genuine & Energized Astro Gems, Original Rudraksh (All Faces), Valamburi Shank, Saaligram, Sriyantra, Rasamani & Other Devine Articles

PADMASHRI GEMS
1915-2001
• 86 Years •

Padmashri Gems Jewellers

Astro-Gems, Diamonds, Gold & Silver Jewellery

53-A, North Usman Road, T.Nagar, Chennai - 17. India.
Ph : 52122927, 28157560

Email : powerofgems@yahoo.com Website : www.padmashrigems.8m.com

ADVT.

திண்டுக்கல்லி லிருந்து கிளம்பிய அந்தக் காதல் ஜோடி, மதுரை மீனாட்சி யம்மன் கோவிலில் தாலி கட்டிக் கொண்டு, கோயமுத்தூருக்கு பஸ் ஏறியுள்ளது. கோயமுத்தூரிலிருந்து அடுத்த பஸ் ஏறி மதுரை வந்து, மீண்டும் பஸ் ஏறி கோவைக்குப் போய்... இப்படியே கிட்டத்தட்ட பத்து நாட்கள் கண்ணில் பட்ட பேருந்துகளில் எல்லாம் ஏறி, தலை மறைவாக இருந்துவிட்டு, கையிலிருந்த காசெல்லாம் தீர்ந்ததும் காவல் நிலை யத்தில் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

இருவருமே மேஜர் என்பதால், காவல் துறையினர் பெற்றோர்களை அழைத்து, ஸ்டேஷனிலேயே கல்யாணம் செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

''இதை முதலிலேயே செய்திருக்க லாமே!'' என்றால், ''இல்லீங்க, இரண்டு பேரும் வேற வேற சாதி. கையில கிடைச்சா வெட்டிப் போட்டுடுவாங்க!'' என்று அழுதிருக்கிறார்கள்.

இன்னொரு காதல் கதை! சென்னை யில் சமீபத்தில் நடந்ததுதான். ஓடிப் போய் கல்யாணம் செய்துகொண்ட காதல் ஜோடியைச் சமாதானப்படுத்தி, கல்யாணம் செய்து வைக்கிறோம் என்று சொல்லி அழைத்து வந்திருக்கிறார்கள். பிறகு, பெண்ணை அடித்து, பிரித்து, பூட்டி வைத்து விட, தப்பித்து ஓடியிருக்கிறாள் அந்த இளம்பெண். சாலைகளில் அழுது கொண்டே அவள் ஓட, பின்தொடர்ந்து விரட்டிய தாய், மகளின் புதுத்தாலியை அறுத்து வீசியிருக்கிறாள். சாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட, போலீஸ் தலையிட்டு, விசாரணை நடத்தி... சுபம்... சுபம்!

இந்த இரண்டு சம்பவங்களும், சமீபத்தில் சூப்பர்ஹிட்டாகி ஓடிய 'காதல்' திரைப்படத்தில் உள்ள காட்சிகள்!

'காதல் ஜோடி தற்கொலை', 'காதல் ஜோடி போலீஸில் சரண்' 'இளம்பெண்ணைக் கடத்தியதாக வாலிபர் மீது புகார்..' இதுபோன்ற அரை டஜன் செய்திகளாவது வராத நாளேடுகளே இன்று கிடையாது.

சினிமா, டிவி, பத்திரிகை, ரேடியோ என ஊடக உலகம், காதலைக் கொண் டாடிக் கொண்டிருக்க, குடும்பங்களில் மட்டும் 'காதல்' என்பது இன்னமும் ஒரு கெட்ட வார்த்தை! இந்த முரண்பாட்டில் சிக்கித் தவிக்கிறது இளைய சமுதாயம்.

டீனேஜ் வரை சிறு வட்டத்துக்குள் இருக்கும் பெண்குழந்தைகள், வெளி உலகத்துக்குப் போகும் போது, அங்கே அவர்கள் பார்க்கும் உலகமே வேறு விதமாக இருக்கிறது. எங்கும் எதிலும் ஆண் - பெண் ஈர்ப்பு. கதை, சினிமா, பாட்டு, கவிதை எல்லாவற்றிலும் காதல் ஆராதனை. இளம் பருவமும், அதற்கே உரித்தான கனவுகளும் சேர்ந்து கொள்ள, காதல் என்பது நம் சமுதாயத்தில் விதிவிலக்கான



ஒரு வார்த்தை

மங்கையர் மலர்

இந்தியாவின் நெ.1 மகளிர் இதழ்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
பி.ஆர். ராஜன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 -22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

மங்கையர் மலர்
இண்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

நிகழ்வாக இருந்த நிலை மாறி, அதுவே விதியாகி விடும் போலிருக்கிறது. காதல் மயக்கத்தில் விழுந்து, இருபது வருடம் பாசத்துடன் வளர்த்த பெற்றோர்களை உதறி விட்டுப் போய் விடுகிறார்கள்.

பெற்றோர்களுக்கு அவமானம், ஏமாற்றம், பிரிவு வலி நிரந்தர தழும்புகளாகி விடுகின்றன.

காலம் மாறி விட்டது. குழந்தைகள் எப்போதும் குழந்தைகளாவே இருக்க முடியாது. அவர்களுக்கு என தனி விருப்பங்கள் இருக்கின்றன. 'டேட்டிங்', 'வேலன்டைன்ஸ் டே' போன்ற மேற்கத்திய சமாசாரங்கள் நம்முடைய கலாசாரத்தில் நுழைந்து விட்ட பிறகு, நம் குழந்தைகளை மட்டும் காபந்து செய்வது எப்படி? மகளைத் தோழியாகப் பாவித்து அவளுடன் பேசுங்கள். அப்படி மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ளும்படியான சிநேகிதமான சூழ்நிலையை உருவாக்குங்கள். மின்சாரக் கம்பிகள் மீதுதான் மைனாக்கள் கூடு கட்டும். அது இயற்கை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இளம்பெண்களுக்கும் ஒரு வார்த்தை. நாலு முறை பார்த்து, இரண்டு எஸ்.எம்.எஸ். அனுப்பி, ஒரு ஐஸ்க்ரீம் வாங்கித் தந்ததும் 'ஐ லவ் யூ' சொல்லும் வாலிபர்கள் இருக்கிறார்கள். 'காதலன்' ரோலுக்கும் 'கணவன்' ரோலுக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது. நல்ல காதலன் நல்ல கணவனாகவும் இருப்பான் என்று நிச்சயமில்லை.

இந்த வயதில் ஏற்படும் சலனங்கள், ஜிலுஜிலு உணர்வுகள் எல்லாம் காதலும் இல்லை.

காதல் என்ற மூன்றெழுத்துச் சொல்லுடன் இணை பிரியாமல் இருப்பவை அப்பழுக்கற்ற அன்பு, தியாகம், பொறுப்புணர்ச்சி என்கிற மூன்று கனமான விஷயங்கள். இவற்றைச் சுமக்க உங்கள் பூந்தோள்களில் வலிமை இருந்தால் போதாது; 'மை மேன்' என்று நீங்கள் உரிமை கொண்டாடும் இளவலுக்கும் இந்தப் பண்புகள் வேண்டுமே!

அப்படி இருக்குமானால், "எங்களுடையது தெய்விகக் காதல்" என்ற உறுதி இருந்தால், ஓடிப் போகத் தோன்றாது. கண்ணியமாகப் போராடி, சாதிக்கத் தோன்றும்.

வாசகிகளே... உங்கள் எண்ணம் என்ன? நீங்கள் யார் கட்சி? எழுதி அனுப்புங்கள்.





• குத்துவிளக்கு ஏற்றி...



26.2.06 ஞாயிறன்று சிவ ராத்திரி வைபவம் கைலாயத்திலா (அ) காமராஜர் அரங்கிலா? என்ற சந்தேகம் சென்னைவாசிகளுக்கு.. கூட்டமோ கூட்டம். மக்கள், வாசகர், வாசகிகள், முகவர் என்று எங்கெங்கு காணினும் மக்கள் சக்தி மங்கையர் சக்திதான்! துளியும் மிரளாது வந்திருந்த கூட்டத்தைச் சமாளித்த நேர்த்தி நமக்குப் புரியாத புதிர்.

மிமிக்ரியில் வாசகிகளின் திறனை வெளிக்கொண்டு வரச் செய்த மங்கையர் மலருக்கு ஒரு சபாஷ்.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

'காலம் வரைந்த கோலங்கள்' ஃபேஷன் ஷோ, துளியும் விரசமின்றி, ரொம்பவும் டீசண்ட்டாக வண்ணமயமாக இருந்தது.

- லக்ஷ்மி ஸ்ரீநிவாசன்,
சென்னை - 24.

நாங்கள் இருப்பது குரோம்பேட்டையைத் தாண்டி அஸ்தினாபுரம். அதனால் விடியலிலேயே



கிளம்பி விட்டோம். வெள்ளி விழா வாசகியான எனக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? மனம் நிறைந்த சந்தோஷம். அது மட்டுமா? வர வேற்பின்போதே அளிக்கப்பட்ட பேகில்தான் எத்தனை பொருள்கள்! மங்கல மங்கை விரும்பும் மஞ்சள் குங்குமத்தோடு, தாம்பூலம், பாரீஸ் ப்யூர் சுகர் சாஷேகள், லக்ஷ்மி முத்து மாளிகையின் நல் முத்து, சக்தி மசாலாவின் சாம்பார் பொடி, ஹிமாலயாவின் ப்ரோடீன் ஷாம்பூ, சன் சில்க் ஷாம்பூ, உதயம் நெய், இதயம் நல்லெண்ணெய், பிசி பெருங்காயம், லக்கி ட்ரா கூப்பன், லஞ்ச் கூப்பன், எழுத பேனா என அசத்தி விட்டீர்கள்! முதல் முறையாக விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட என் அனுபவம் மறக்க முடியாதது. ஆசையால்தான் வராத, வர முடியாது போன சகோதரிகளுடன் என் ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ளவே இந்தக் கடிதம்! - **கலாவதி, தலையூர்.**

சுறுசுறுப்பாக, முகமலர்ச்சியுடன், தெளிவாக, அழகாக நகைச்சுவை மிளிர மிக மிக உற்சாகத்துடன் தொகுத்து வழங்கிய பி. அனுராதா, அனைவரது பாராட்டையும் பெற்றார். ஆசிரியரோடு அவருக்கும் சேர்த்து திருஷ்டிக் கழித்து சுற்றிப் போட்டால்தான் மனம் நிம்மதி பெறும்.
- **கிரிஜா நரசிம்மன், சென்னை.**

வெள்ளி விழா நிகழ்ச்சிகளை மிகவும் உயர்ந்த, உன்னதமான முறையில்



• வரவேற்பு...





• இறைவணக்கம்



• ஒவ்வொரு பூக்களுமே...



• எஸ். ராஜாவுக்கு மரியாதை!

நடத்தி விட்டீர்கள். செவிக்கினிய போட்டிகள், வயிறார உணவு, கண்ணுக்கு இனிய விஷயங்கள் என்று ஒரே அசத்தல்!

நீங்கள் முகவர்களுக்கு நடத்திய வினாடி வினா கணீரென்ற குரலில் கோவில் மணி அடித்த மாதிரி இருந்தது.

எனக்கு ஒரு குறை! அந்தப் பிரம்மாண்ட மேடையில் ஏறி ஒரு பரிசு கூடப் பெற முடியவில்லையே என்பதுதான்.

ஆனாலும் ஆகஸ்ட் மாத இதழில் 'விழா மங்கை'யாக என்னை நீங்கள் ஏற்றிவைத்த பெருமையை என் வாழ்நாள் உள்ளவரை மறக்க மாட்டேன்.

- சரோஜா ரங்கராஜன், கோட்டூர்புரம்.

பசியையும் பறந்து போகச் செய்தது நடுவர் எஸ். ராஜா தலைமையில் நடந்த பட்டிமன்றம். சும்மா நச்சென்று ஒரு தீர்ப்பு! நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல சந்தோஷமும், சங்கடமும் நிறைந்திருந்தாலும், உழைக்கும் மகளிர் பெரிதும் அனுபவிப்பது சந்தோஷமே என தீர்ப்பு வழங்கியது ஜோர்!

- எஸ். மங்கையர்க்கரசி, ராமாபுரம்.

வெள்ளி விழாவில் கலந்து கொண்டு விட்டு வந்த என்னை என் மகன், டாக்டர். எஸ். அசோகன் "ஏம்மா உனக்கு இந்த வயதில் இப்படிப்பட்ட ஆசை?" என்றான். அதற்கு, 'அசோகா! டாக்டர் சாந்தா தமது 78வது வயதில் வந்து மேடை ஏறி வாழ்த்துரை வழங்கி விட்டுச் சென்றார் என்றால் நான் எம்மாத்திரம்? ஆசை, சாதனைகளுக்கெல்லாம் வயதில்லையப்பா' என்றேன். வாழ்க மங்கையர் மலர் சாதனைகள்!

- பாக்யம் சுப்ரமணி, கோவை.

பெண் வாசகர்களுக்கு, ஊக்கத்தையும், முன்னேற வாய்ப்பையும் தந்த மங்கையர் மலரே, சொந்தங்களை அழைத்து, சொர்ண மாலைகளைச் சூட்டினீர்கள். பூவுலக மக்கள் பூரித்துப் போனார்கள். பூவையர்கள் புனிதம் அடைந்தார்கள். உன் புகழ் வானுயரம் பரவ, என் இதயங்கனிந்த நல்வாழ்த்து.

- பி. சந்திரா பத்மநாபன், பொழிச்சலூர்.

மங்கையர் மலர் வெள்ளி விழா அழைப்பிதழைப் பார்த்ததிலிருந்து எனக்கும் என் தோழிக்கும் ஒரே கொண்டாட்டம். எப்பொழுது 26-ம் தேதி வரும் என்று வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தோம். அந்த 26ம் தேதியும் வந்தது. காமராஜர் அரங்கத்துக்கு காலை 11:30 மணிக்கே சென்று விட்டோம். சென்று நுழைந்தவுடனேயே ஒரு பேப்பர் பேக்! 'ஆஹா' என்று இருந்தது. 'அதில் மதியச்

• மைது முகவர்களுக்கும் போட்டி!





• கௌரவிக்கப்பட்ட எமது ஊழியர்கள்!

சாப்பாடு கூப்பன் தண்ணீர் கூப்பன்' என்று சொல்லி அவர்கள் கொடுக்கும் போது எவ்வளவு சந்தோஷம். (எங்கள் முகத்தில்தான்!) அப்பொழுதே வயிறு நிரம்பி விட்ட திருப்தி!

ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, போன்ற பெயர்கள் கொண்டவர்கள் டாக்டர் சாந்தாவுடன் வந்து விளக்கேற்றி மேடையையே மங்களகரமாக்கி விட்டார்கள்.

பிறகு 'மஹதி'யின் 'நெஞ்சுக்கு நீதியும்' இறைவணக்கம் இசைப் பூமாலையாய் வந்தது. அந்த அமைதியான அரங்கத்தை அப்படியே ஒரு நிமிடம் மௌனம் சூழ்ந்துக் கொண்டது. அதன் பிறகு ஆசிரியரின் பேச்சு (அதன் அழகும் தரமும் எழுதித் தெரிந்து கொள்ள அவசியமில்லை). டாக்டர் சாந்தா அவர்களின் பேச்சு அந்த வயதிலும் அரங்கத்தில் கணீரென்று ஒலித்தது. நடுநடுவே தொகுப்பாளரின் பேச்சு (விளம்பரத்துடன்) நன்றாகவே இருந்தது.

அடுத்து உணவு! இதுவல்லவா மிக மிக முக்கியமான ஒன்று. அரங்கத்தில் உள்ள அனைவருக்கும் உணவு கொடுப்பது என்பது சாதாரண விஷயமா? (வெளியில் ஹாலில் உட்கார்ந்து இருப்பவர்களை விட்டு விட்டேனே) ரொம்ப அழகாக, வரிசையாக ஆங்காங்கே கவுண்டர்கள் வைத்து ஒரு சத்தம் இல்லாமலும், (ஒரு சண்டை இல்லாமலும் நான்கு லேடீஸ் இருந்தாலே பேச்சு, சலசலப்பு இருக்கும். அங்கு இரண்டாயிரம் பெண்களாவது இருப்பார்கள்) ஒரு சச்சரவு இல்லாமல் மிக அழகாக உணவு பரிமாறிய 'சுபம் கணேசன்' அவர்கள் குழுவுக்கு ஒரு நன்றியல்ல, பலப்பல நன்றி கூறினாலும் தகும்.

நன்றாகச் சாப்பிட்டு பீடா போட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் அரங்குக்கு வந்தார்களே அவர்கள் முகத்தில்தான் எவ்வளவு சந்தோஷம். அவர்கள் ஒவ்வொருவர் வயிறும் நிச்சயமாக மங்கையர் மலரை வாழ்த்தும். இந்த 'வெள்ளி விழா' ஆண்டில் இந்த வாழ்த்து உங்களுக்குப் போதாதா?

நான் ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேனே! பாரீஸ் சர்க்கரையின் குழந்தையின் குறும்புதான். ஆஹா! சில குறும்புகள் இன்றும் என்றும் மனதை விட்டு அகலாது.

ஆக மொத்தத்தில் ஒருநாள் முழுவதும் 'மங்கையர் மலருடனே நாங்களும் மலர்களாக இருந்ததை நினைக்கும் போது ரொம்ப ரொம்ப ரொம்ப (மூன்று முறைக்கு மேல் எழுத முடியவில்லை) சந்தோஷப்பட்டோம். வீட்டுக்கு வந்தவுடன் வீட்டில் இருப்பவர்களுடன் நடந்ததைச் சொல்லி ஆனந்தப்பட்டோம்.

இதே போல் 'பொன் விழா'வுக்கும் நாங்கள் வருவோம். ஃபிப்டி ப்ளஸ் மங்கையாக நானும் அறுபத்தைந்து வயது நங்கையாக என் தோழியும்!

- ஜி.ஆர். லலிதா, சென்னை - 06.



• ஆஹா! 'சுப'மான விருந்து!

வெள்ளி விழா நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக இருந்தன. வாழ்வில் ஒரு பொன்னான நாள். கே.ஜி.எஸ். போட்டியில் வென்ற ஜவரில் நானும் ஒருத்தி. சகோதரி சொர்ண சுந்தரிக்கு முதல் பரிசு கிடைத்தது எனக்கு மிகவும் சந்தோஷம். எந்த அறிவிப்பும் இல்லா



* 'விழா மங்கை'க்குப் பரிசு!

மல் மற்ற நான்கு பேருக்கும் பரிசளித்தது 'சொல்லாமல் செய்வர் பெரியோர்' என்ற வார்த்தை தான் நினைவில் வருகிறது.

மங்கலப் பொருள்கள் எல்லாம் கொடுத்து, விளக்கு ஏற்ற எண்ணெய் கொடுத்து, உடுத்திக் கொள்ள பட்டுப் புடைவை கொடுத்து, நிவேதனம் செய்ய குக்கர் கொடுத்து சிவராத்திரி நன்னாளில் வயிறார உணவும் கொடுத்து எங்களை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்து விட்டார்கள். இவ்வளவு பெரிய நிகழ்ச்சி யைச் சிறப்பாக நடத்துவது என்பது பெரிய சாதனை. யாரையும் வெறுங்கையோடு அனுப்பாமல், பல போட்டிகள் நடத்தி அசத்தலான பரிசுகள் கொடுத்து அசத்தி விட்டார்கள். என் மனம் நிறைந்த நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இவ் வளவு பெரிய அதிர்ஷ்டம் கிடைத்தது நான் செய்த பாக்கியம்.

- எம். மாலதி மணியன்,
பாண்டிச்சேரி.

விழாக் குழுவினர் அனைவரையும் பாராட்டுகிறேன். எங்கள் குடும்பத்தில் நடைபெற்ற விழாவைப் போல மகிழ்ந்தோம். எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத சந்தோஷம்!

- எஸ். சரோஜா, திருச்சி - 3.

மங்கையர் மலர் வெள்ளி விழா நிகழ்ச்சி, எல்லாப் பெண்கள் நிகழ்ச்சிகளிலும் சினிமா பாட்டுக்கு ஆடுவது போல் இல்லாமல், வித்தியாசமானதொரு நிகழ்ச்சியாய் அமைந்தது. திலகவதி ஐ.பி.எஸ்ஸின் ஆணித்தரமான பேச்சு, "பெண்ணே! நீ யார்?" என்று எண்ணும்படி வைத்தது. மற்ற மாநிலப் பெண்களின் போக்கை உதாரணம் காட்டி, "நமக்கேன் வம்பு" என்று இருப்பவர்களைச் சாடியது பிரமாதம்!

கோமகன் இன்னிசைக் கச்சேரியில் (அவரது மனைவி என்னமாய் ஓடி ஓடி உதவுகிறார்!) முதல் பாடலாக 'கடவுள் இல்லயே!...' பாடலைக் கேட்டதும் குபுக்கென கண்ணீர் பெருகிவிட்டது. பக்கத்திலிருந்த என் அக்காவின் மகள் மது "கேமிரா உங்களைத்தான் பார்க்கிறது!" என்று சும்மா கூறியிருக்காவிட்டால் அழுகையை அடக்க மிகச் சிரமப்பட்டிருப்பேன்! "மங்கையர் மலர் விழாவில் பரிசுகள் அள்ளி வருவேன்" என்று நினைந்து. ஆனால் தோற்றது பெரிதாகப்படவே யில்லை.

- சித்ரா தினகரன், ராமாபுரம்.

சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடந்த நமது 'மங்கையர் மலர்' வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு வந்திருந்தேன். என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டையும் எப்படித் தெரிவிப்பது என்றே தெரியவில்லை. சமீபகாலமாக உடல்நலக் குறைவால் வெளியே எங்கும் அதிக நேரம்

50% OFFER
on UNWANTED HAIR REMOVAL

Angels®
Advanced Clinic (P) Ltd

Hair, Skin & Body Care

Since 1991

Website: www.angelsadvancedclinic.com
Email: angels@angelsadvancedclinic.com

NDYAG Long Pulsed Laser for
Unwanted Hair Removal on Upper Lip,
Chin, Cheeks, Under Arms, Chest & Abdomen

வழுவழுப்பான மற்றும் முடியில்லா
சருமம் உங்களதாக கனவு கண்டீர்களா?
இப்போது உங்களுக்கு கிடைக்கும்

...நிரந்தரமாக





50% OFFER
on WEIGHT REDUCTION

WEIGHT REDUCTION
thru **Cellulite Therapy & Body Former**





BEFORE



AFTER

Good Bye to Bald Head within one hour
thru **Silicon System**

Breast Development thru Micro Stimulation System



BEFORE



AFTER

2B, 3rd Avenue, T-53/99,
(Opp. 14 Shops) Rajeshwari Mansion,
Anna Nagar, **Chennai** - 600 040.
Timings: 9 am to 7 pm (Open on all days)
Cell: 98400 46599 Ph: 044-42176679 / 26212547 / 26213468

Our New Branch in COIMBATORE

Near V.O.C. Kalyana Mandapam,
V.O.C. Road, 117/B,
West Sambandham Rd,
R.S.Puram, Coimbatore.
Ph: 0422 - 5547577, 2547889

● Hyderabad - (040)23222111, 55368999 ● Bangalore - (080)51153995

[illegible] VIJAY - [illegible] 3.00 [illegible] 3.30 [illegible]

[illegible]

தங்குவதில்லை. திருமண விழாக்களுக்குச் சென்றால் கூட இரண்டு மணி நேரம் தான். ஆனால் அன்று காலை சுமார் எட்டரை மணிக்கு குத்துவிளக்கு ஏற்றப்படும் முன்பே இருக்கையில் அமர்ந்தவர்கள் இரவு மெல்லிசை நிகழ்ச்சி (இடையே குலுக்கல்) வரை இருந்தோம். ஒவ்வொரு நிகழ்ச்சியும் மிக நன்றாக இருந்தது. என் மனமார்ந்த வாழ்த்து!

- சுலோசனா வாசுதேவன்,
சென்னை.

நான் மத்திய அரசில் உதவி தணிக்கைத் துறை அதிகாரியாக பணிபுரிகிறேன். 'மங்கையர் மலர்' விழாவில் என்னுடைய அம்மாவுடனும், பதினைந்து வயது மகள் சரண்யாவுடனும் கலந்து கொண்டேன். எல்லா நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தோம். என்னுடைய தாயார் சுலோசனா வாசுதேவன் 62 வயது (இரண்டு முறை ஹார்ட் அட்டாக் வந்தவர்) எங்கும் ரொம்ப நேரம் செலவிட முடியாதவர். உங்களுடைய விழாவை இறைவணக்கம் முதல் இன்னிசை வரை முழுமையாக இருந்து ரசித்தார்.

- புஷ்பலதா மணிவண்ணன்,
தாம்பரம்.

மேடையில் அழகி ஒருத்தி சரோஜா தேவி பாடலாக 'பார்த்த ஞாபகம்' பாடவும் திருமதி ரேவதி சங்கரன் 'சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து' என்ற பாடலைச் சரியாக எடுத்துக் கொடுத்தார். ஃபேஷன் ஷோவில் பாவாடை சட்டை அணிந்த பெண்ணுக்கு முதல் பரிசு கிடைத்ததால் சந்தோஷம்! வீடு பெறும் அதிர்ஷ்டசாலி தேர்வு நடந்தது. அப்போது மேடையில் கூறியவற்றைக் கேட்டு இவ்வளவு பிரம்மாண்டமான ஏற்பாடுகள் நடந்தது எவ்வளவு பெரிய விஷயம். இதற்கு ஆசிரியரும் மற்றவர்களும் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் என எண்ணினேன். ஒரே நிறப் பட்டுப் புடைவையில் அதிர்ஷ்டசாலியான ஐந்து பெண்களும் நின்றது சந்தோஷமாக இருந்தது.

- ராஜேஸ்வரி ராமலிங்கம்,
சென்னை - 88.

படங்கள் : ஸ்ரீஹரி



நன்றி! நன்றி! நன்றி!

ராஜீவ் காந்தி தேசிய தர விருது 2006

சிறந்த தரமான தயாரிப்புகளுக்காக இந்திய தரக் கட்டுப்பாடு நிறுவனம் வழங்கும்

2005-ஆம் ஆண்டுக்கான

ராஜீவ் காந்தி தேசிய தர விருதினை

மத்திய வேளாண் துறை அமைச்சர் **மாண்புமிகு சரத்பவார்** அவர்களிடம் 21.02.2006 அன்று புது டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெற்றதில் **சக்தி மசாலா நிறுவனம்** பெருமிதம் கொள்கிறது.

இவ்விருது பெற்ற எங்கள் நிறுவனத்திற்கு எங்களின்பால் அன்பு கொண்டு பல்வேறு வகையிலும் எங்களை வாழ்த்தி ஊக்குவித்துக் கொண்டிருக்கும் அனைத்து நல் இதயங்களுக்கும், கடந்த 30 ஆண்டு காலமாக தொடர்ந்து எங்களுக்கு பேராதரவு வழங்கி வரும் லட்சோப லட்சம் இல்லத்தரசிகள், எங்களின் மேலான வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், இரவு பகல் அயராது பணிபுரியும் எங்கள் அனைத்து பணியாளர்கள், நண்பர்கள், நலம் விரும்பிகள், உற்றார் உறவினர்கள், நிறுவனத்தின் நலனை கண்ணும் கருத்துமாய் காத்து வரும் வழக்குரைஞர்கள், கணக்காயர்கள், வங்கியாளர்கள், எங்கள் நல்ல முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தொலைக்காட்சி, பத்திரிகைத் துறை நண்பர்கள், வர்த்தக சங்கங்கள், அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சியளித்தல், பூமியை பசுமையாக்கும் முயற்சியில் மரக்கன்றுகள் நட்டுப் பராமரிப்பு மற்றும் மழை நீர் சேமிப்பு திட்டங்கள் - இதுபற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே உருவாக்குவது, தரமான பொருட்களை உற்பத்தி செய்வது, நேர்மையான வணிக நெறிமுறைகள், வாடிக்கையாளர் நலன் காப்பது மற்றும் தேசிய நலன் போன்றவற்றில் தொடர்ந்து எங்களை அர்ப்பணித்துக் கொள்வோம் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

சக்தி® மசாலா

அன்புடன்,

பி.சி. துரைசாமி - சாந்தி துரைசாமி

சக்தி மசாலா நிறுவனங்கள்,
ISO 9001 : 2000 & HACCP தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்
6, மாமரத்துப் பாளையம், ஈரோடு - 638 004
E-mail : sakthimasala@vsnl.com Website : www.sakthimasala.com



புறா அழகு பாதங்கள்!

ஜூன் மாத இதழில், பித்தவெடிக்கு அனுபவக் குறிப்புகளை, ஒரு வாசகி எழுதியிருந்தார். மேலும் சில சுலபமான பலன் கண்ட குறிப்புகள் இதோ :

1. நம் வீட்டில் பழைய ஆயின்மெண்டை (தேதி நிறைவு பெற்று இருப்பதும்) உதாரணமாக பென்ஸிலின், நியோஸ்ப்ரின், போரோலின், போரோப்ளஸ், ஒஷரான் என எந்தக் களிம்பு இருந்தாலும் அதை பித்தவெடி இடத்தில் நன்கு தடவித் தேய்க்க (இரவு தூங்கப் போகும் முன்பு) பித்தவெடிப்பு போயே போச்சு! குறைந்தது நாலு ஐந்து நாட்கள் தடவவும்.

2. நல்ல காலணிகள் (ஹவாய் ரப்பர் செருப்புகள்) வாங்கி வைத்து எப்போதும் வீட்டில் அணிந்து கொண்டே இருந்தால் பித்த வெடிப்பு வரும் வாய்ப்பே இல்லை.

3. உருண்டை மஞ்சளை கடுக்காயுடன் அரைத்து, இரவு படுக்குமுன்பு நாலு, ஐந்து நாட்கள் தடவ, பித்தவெடிப்புச் சுவடே இருக்காது.

4. ப்யூமிஸ் என்ற சிறிய கல் கிடைக்கிறது. அதிக விலை இல்லை. அதனை கால்களைச் சுற்றி நன்கு தேய்த்து தினம் குளிக்க, பித்த வெடி நீங்கும்.

5. வெதுவெதுப்பான நீரில் பாதங்கள் மூழ்கும்படி ஒரு சிறிய பிளாஸ்டிக் தொட்டியில் அல்லது பிளாஸ்டிக் வாளியில் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் ஊறவைத்துக் குளிக்க பித்த வெடி நெருங்காது.

6. குளிர்காலங்களில்தான் பித்த வெடி தொந்தரவு அதிகமாக இருக்கும். இரவு தூங்கும்போது காட்டன் சாக்ஸ்களை கால்களுக்கு அணிந்து தூங்கினால் பித்த வெடிப்பு வருவதைத் தவிர்க்கலாம்.

7. முக்கியமாக, அழுக்கினால் பித்த வெடி வர வாய்ப்பு உள்ளது. கால்களை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொண்டால் புறா அழகு பாதங்கள் பெறலாம்!

- ஜானகி குளத்து, சென்னை.



கேன்ஸர் நோயா?

கவலைப்பட வேண்டியதில்லை.



Dr.K.Sri Sridar

குருபாலா கிளினிக்கின் Herbal Oncology™ சிகிச்சை

மீண்டும் மகிழ்ச்சியை உங்கள் இல்லத்திற்கு கொண்டு வருகிறது.

CA. PANCREAS (கணையப் புற்றுநோய்)

MRI Scan
Date: 15.08.2005

Before Treatment



Malignant mass noted in the tail and distal body of pancreas

சென்னையை சேர்ந்த 68 வயதுள்ளவருக்கு கணையப்புற்று நோய்க்காக 25 முறை ரேடியோ தெரபி கொடுத்திருந்தும் பலனளிக்காமல் கட்டி வளர்ந்துள்ளதை காட்டும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் படம்.

MRI Scan
Date: 21.01.2006



After 70 Days of Herbal Oncology

CA pancreas masses significantly decreased in size compared to the pervious scan (Dt. 15 th Aug.'05)


ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சை கொடுத்த 70-வது நாளில் கட்டி நன்கு கரைந்துவிட்டதை காட்டும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் படம்.

CA. OESOPHAGUS (உணவுக் குழாய் புற்று நோய்)

UGI SCOPY Report
Date: 21.04.05

Before Treatment

POST CT / RT RECURRENCE



மதுரை சேர்ந்த 75-வயதுள்ளவருக்கு உணவுக்குழாய் புற்று நோய்க்காக கீமோ தெரபி மற்றும் ரேடியேஷன் கொடுத்திருந்தும் பலனில்லாமல் மீண்டும் புற்று நோய் வளர்ந்திருப்பதை குறிக்கும் ஸ்கோப்பி ரிப்போர்ட்.

UGI SCOPY Report
Date: 27.09.05



After 97days Herbal Oncology

NORMAL STUDY

ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சை கொடுக்கப்பட்ட 97-வது நாள் புற்று நோய் இல்லை என்பதை காட்டும் ஸ்கோப்பி ரிப்போர்ட். மற்றொரு ஆச்சரியமான விஷயம், நோயாளியை பார்க்காமல் ரிப்போர்ட்களை மட்டும் பார்த்து மருந்து கொடுத்து குணப்படுத்தப்பட்டுள்ளது.

CA. BREAST TO LUNGS (மார்பக புற்றிலிருந்து நுரையீரல் புற்றுநோய்)



Before Treatment

NODULAR OPACITIES SEEN IN BOTH LUNG FIELDS METASTATIC DEPOSITS


Chest X-ray *Date: 08.06.05*



After 38 days

LESION LESS PRONOUNCED

Chest X-ray
Date: 21.07.05



After 68 days of Herbal Oncology

NORMAL STUDY

Chest X-ray
Date: 09.09.05

மார்பக புற்றிலிருந்து நுரையீரலுக்கு பரவிய புற்றுநோய் ஹெர்பல் ஆன்காலஜி சிகிச்சை எடுத்த 68-வது நாளில் முற்றிலும் குணமான எக்ஸ்ரே ரிப்போர்ட்.

கை விடப்பட்ட கேன்ஸரா ? கவலை வேண்டாம்

எல்லாவித புற்று நோய்க்கும் சிகிச்சை உண்டு. நோயாளி நேரில் வர வேண்டியது இல்லை. முழுமையாக எல்லா ரிப்போர்ட்டுகளையும் அனுப்பி வைக்கவும். Herbal Oncology™ சிகிச்சை என்பது டாக்டர் கே. ஸ்ரீ ஸ்ரீதர் வடிவமைத்த அற்புத முறையாகும். பத்தியம் இல்லை. மற்ற மருந்துகளோடு சேர்த்து சாப்பிடலாம். வாழும் போது நோய் தொந்தரவு குறைந்து நிம்மதியாக சந்தோஷமாக வாழலாம். அவர்களின் வாழ்நாள் 40% அதிகரிக்க முயற்சிக்கலாம். இன்று Herbal Oncology™ சிகிச்சை பயனுள்ளதாக அமைகிறது. டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிக்கும் உடனே நன்மை அளிக்கிறது.

Royale Apartment, 6, Mannar Reddy Street,
(Opp. Street to T.Nagar Bus Terminus) T.Nagar,
(Next to Krishnaveni Theatre), Chennai - 600 017.
Clinic: Ph: 044-24339596, 24363835, Cell: 98401 48808
Timings: 10.00 am to 5.30 pm
on **Sundays:** 10.00 am to 12.00 Noon

Gurubalaa™ Clinic

Speciality Clinic For Herbal Oncology™ and Asthma
Treatment given by Qualified & Experienced Doctors.

நேரில் வரமுடியாதவர்கள் தங்கள் நோயின் விவரத்தை எழுதி அனுப்பினால் கூரியர் மூலம் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும்.

For more details logon to: www.herbaloncology.com

பாட்டி என்றொரு

டிசம்பர் இதழில் 'வானப்பிரஸ்தம் போக ரெடி' என்ற தலைப்பில் வந்த கலந்துரையாடலில் 'பற்றற்ற துறவற மனப்பான்மை' பற்றி சாவித்திரி வைத்தி கூறியிருந்ததைப் படித்தபோது எனக்கு என் பாட்டியைப் பற்றி எழுதலாம் எனத் தோன்றியது.

என் அப்பாவின் அம்மா. நிச்சலனமான முகத்தில் சிறிய விபூதிக் கீற்றுடன் சாந்தசொரூபி அவர். 4 பிள்ளைகள், 3 பெண்கள் என்றாலும் அவருக்கு எல்லாமே என் தாயும், தந்தையும் (பெரிய பிள்ளை)தான். எண்பது வயதிலும் காலையில் முதலில் எழுந்து விட்டால் வாசல் தெளித்துக் கோலம் போடுவதில் தொடங்கி என் அம்மாவுக்குத் தன்னாலான எல்லா ஒத்தாசைகளையும் செய்வார்.

ஆசாரம், பூஜை, புனஸ்காரமென்று சுற்றியிருப்போரை அலற அடிக்க மாட்டார். குளித்து விட்டு பக்கத்தில் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்வதோடு சரி. அளவான சாப்பாடுதான். பின்பு கண்ணாடியின் தேவையின்றியே பேப்பர் படிப்பார். சினிமா நடிகர் கார்த்திக் பிடிக்கும். 'சிவா, ராமான்னு இருக்கற காலத்துல கார்த்திக் என்ன வேண்டிக் கிடக்கு?' என்பான் என் தம்பி கிண்டலாக. சிரித்துக்கொண்டே அவரும் பதிலுக்கு ஏதாவது சொல்வார்.

எனக்குத் தெரிந்து யாரையும் மனம் நோக அவர் பேசியதில்லை. எல்லாருக்கும் அவரைப் பிடிக்கும். என் அம்மா சுகர், ஹார்ட் பேஷண்ட் என்பதால் கூடுதல் கரிசனம் காட்டுப் பெண்ணிடம். "பிள்ளையாருக்கு சர்க்கரைப் பொங்கலா செய்து கொடுத்து (என் தந்தை அர்ச்சகர்) இவளுக்கு சுகர் வந்துடுத்து" என்று ரொம்பவே வருத்தப்படுவார்.

நான் ஸ்கூல் விட்டு வரும்போது, இருவரும் சேர்ந்து, வீட்டு வேலைக்காரி செல்லம்மாவுடன் தாயம் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்குள் சண்டை வந்து நான் பார்த்ததில்லை. எப்போதாவது அதிசயமாக அவர்கள் கொஞ்சம் காரசாரமாக, சத்தமாகப் பேசினாலும் நானும், என் அண்ணாவும் விஷயம் என்னவென்று தெரியாவிட்டாலும், பாட்டியைத் தான் சப்போர்ட் செய்வோம். அப்போது கூட, "நீங்கள் சின்னக் குழந்தைகளா லட்சணமா உங்க வேலையைப் பாருங்கோ. பெரியவா நாங்க ஏதோ பேசிண்டிருக்கோம். நீங்க இதிலெல்லாம் தலையிடப்படாது" என்று பாட்டி எங்களை விரட்டுவார். பிரித்தாளும் சூழ்ச்சி அவரிடம் கிடையாது. சில வீடுகளில் அப்பாவின் பெற்றோர், உடன்பிறந்தோர் பற்றிய ஒரு விநோத மனப்பான்மை குழந்தைகளிடம் வளர்க்கப்படும். ஆனால் என் அம்மா, பாட்டி இருவரும் அப்படி இல்லை. இன்றளவும் எனக்கு என் அப்பா, அம்மா இருவரின் கூடப் பிறந்தவர்களிடமும் ஒரே மாதிரியான நட்புறவு இருப்பதற்கு என் பாட்டியின் இந்த அணுகுமுறைதான் காரணம்.

எனக்கு முதல் குழந்தை பிறந்த போது பத்தியம் செய்து போட்டவர் என் பாட்டி. கேஸ் ஸ்டவ், மிக்ஸி என்று

எதுவுமில்லாத போதும் அம்மியில் துவையல் அரைத்து, குமுட்டி அடுப்பில் அப்பளம் சுட்டு தானேதான் இவ்வள வும் செய்வார்.

வீட்டு விஷயங்களிலோ,



சூறாவளி!

ஏதாவது வாங்கி வந்தாலோ 'செக் போஸ்ட்' மாதிரியெல்லாம் செயல்பட மாட்டார். நானாகவே, "பாட்டி இந்தப் புடைவை நன்றாக இருக்கிறதா பாரேன்" என்றால், "கட்டிக்கப் போறவ நீ. உனக்குப் பிடிச்சிருந்தா சரிதான்" என்பார். "வாங்கிப் பார் பாட்டி" என்று கையில் கொடுத்தால் "நன்னா இருக்கு" என்றபடி திருப்பிக் கொடுப்பார்.

சின்னச் சின்ன விஷயங்களில் கூட தனக்கு முக்கியத்துவம் தரணும், மரி யாதை என்றெல்லாம் எந்த எதிர்பார்ப் பும் கிடையாது. பெண்கள் வந்து தன் னைப் பார்க்கவில்லை, மற்ற பிள்ளை கள் இது செய்யவில்லை என்ற குறையோ, மற்றவர்களிடம் இது குறித்த புலம்பல்களோ கிடை யாது. அவர்கள் எது செய் கிறார்களோ அதிலேயே திருப்தியடைந்து கொள்வார். ஒருவரைப் பற்றி மற்றவரிடம் எந்தக் குறையும் சொல்ல மாட்டார். இந்தக் குணா திசயங்கள் எல்லாம் எங்களை அவர் மேல் இன்னும் அன்பு கொள்ளவே செய்தது.

வாழ்க்கையை அதன் போக்கி லேயே வாழ்ந்தவர். 13 வயதில் மணமான ஒரு மகள், ஒரு மகன் ஆகிய இரு குழந்தைகளுடன் என் தாத்தா, பாட்டியை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார். அந்தக் காலத்தில் இரண்டாம் தாரம் சர்வசாதாரணம் என்றா லும் இருபது வயதில் சிவப்பாக, அழகாக இருந்த பாட்டி, கட்டை, குட்டையா, கறுப்பா, வழுக்கைத் தலையுடன், இரண்டு குழந்தை களுடன் அதிக வயது வித்தி

யாசத்தில் இருந்த என் தாத்தாவுடன் குடும்பம் நடத்தி ஏழு குழந்தைகளையும் பெற்றாள் என்பதை நினைக்கும்போது எனக்குக் கோபமும், அழுகையும் வரும் இப்போதும். ஆனால் இதையெல்லாம் ஒரு கதை போல சிரித்துக்கொண்டே சொல்வாள் என் பாட்டி. அவரது சுபாவமே அதுதானா அல்லது திருமணத்துக்குப் பின்னரே இப்படிப்பட்ட பற்றற்ற மனோபாவம் வந்ததா என்பது புரியவில்லை.

நிறையக் கஷ்டங்கள் பட்டதினால் பின்னர் என் தாத்தாவின் மரணத்தின்



கோவிலில் டென்ஷனைத் தவிர்க்க:

பல சகோதரிகள் கோவிலில் அர்ச்சனைக்குக் கொடுக்கும் போது, அர்ச்சகர் பெயர், நட்சத்திரம் கேட்டால் சட்டென்று ஞாபகத்துக்கு வராமல் விழிப்பார்கள். சிலர் நட்சத்திரம் கேட்டால் ராசியைச் சொல்வார்கள். இதைத் தவிர்க்க அர்ச்சனைக்குக் கூடையை எடுக்கும்போதே அர்ச்சனைதாரருடைய பெயர், நட்சத்திரம் எழுதிய சிறு சீட்டையும் ஞாபகமாக எடுத்து வைத்துக் கொள்ளவும். சீட்டை அப்படியே கொடுத்து விட்டால் அர்ச்சகர் எடுத்துப் படித்து அர்ச்சனையை நிறைவாகச் செய்து விடுவார்.

- கே.எஸ்.லக்ஷ்மி, காரைக்குடி.

போது கூட அழவே இல்லையாம். 'துக்கத்தை அழுது தீர்த்து விடு' என்று உறவினர் சொன்னபோது 'துக்கம் இருந்தால்தானே அழுவதற்கு' என்று எண்ணிக்கொண்டதாக எங்களிடம் சொன்னார்.

சாப்பாடு, துணி, நகை என்ற பொருள்ரீதியாகவோ, மகன், மகள் போன்ற உறவுரீதியாகவோ எதிலும் பெரிதாகப் பற்றுதல் இல்லை. 'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்ற புத்தரின் வாக்கையும், 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது' என்ற ஸ்ரீ கிருஷ்ணரின் வாக்கையும் வாழ்ந்து நிரூபித்தவர் அவர்.

அவர் இறந்த பின்பு அவரது இரும்புப் பெட்டியில் இருந்தவை 63 ரூபாய் சில்லறையும் மற்றும் ஒன்பது கெஜ சின்னாளப்பட்டு புதுப் புடைவை ஒன்றும், பழையப் புடைவை ஒன்றும்தான். காதில் போட்டிருந்த ஒரு கல் தோடு தவிர பொன்னகை எதுவுமில்லாத போதும் எப்போதும் புன்னகையுடன் தான் இருப்பார்.

அதனால்தான் அவர் தன் வாழ்க்கையில் தலைவலியைத் தவிர வேறெந்த நோயும் அண்ட முடியாத உயரத்தில் இருந்தார். அளவான சாப்பாடு, டென்ஷனில்லாத மனம், குறைகூறத் தெரியாத, கிடைத்ததை ஏற்கும் சுபாவம் போன்றவற்றால் எண்பத்து இரண்டு வயது வரை ஒரு அமைதியான, நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர் என் பாட்டி.

இப்படி எல்லோரும் அனுசரணையாக இருந்தால் முதியோர் இல்லங்களுக்கு வேலையே இல்லை!

- லதா சந்திரன், திருவான்மியூர்.

சித்திரை மாதம் வளர் பிறை த்ருதியை அட்சய த்ருதியை. இந்த நல்ல நாளில் துவங்கப்படும் எந்த நல்ல காரியமும் வளர்பிறையாக வளர்ந்து முழுமையான பயனைக் கொடுக்கும் என்பது சாஸ்திரம். அட்சராப்யாசம், பூணூல், கல்யாணம் போன்ற எல்லா நல்ல காரியங்களுக்கும் மிகவும் ஏற்ற நாள்.



அந்த நாள் அட்சய த்ருதியை!



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் கிராமத்தில் அட்சய த்ருதியை எப்படிக் கொண்டாடினார்கள் தெரியுமா! தெருவையே அடைத்துப் பனை ஓலைப் பந்தல் போடுவார்கள். புதுப்பனை ஓலை வாசனை, காற்றோடு கலந்து வரும் வாசனையே தனி சுகம்! தெருவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு பந்தல் நிழலிலேயே நடந்து போய் விடலாம். தெருவின் இரண்டு பக்கமும் சாணி தெளித்துப் போடப்பட்ட கோலங்கள் பச்சைப் புடைவைக்கு முத்துக்களால் பார்டர் தைத்தது போல் மிக மிக அழகாக இருக்கும். பெரிய ராமர் பட்டாபிஷேக படத்தை மையமாக வைத்து மற்ற சுவாமிப் படங்களையும் வைத்து பூஜையைத் தொடங்குவார்கள். பின்பு பஜனை நடக்கும். கடைசியில் பெரிய பெரிய அண்டாக்களில் கரைத்து வைக்கப்பட்டிருக்கும். பானகம், நீர் மோர், பாசிப் பருப்பு மாங்காய், தேங்காய், வெள்ளரி சேர்த்த கோசம்பரி நிவேதனம் செய்வார்கள். பச்சைக் கற்பூரம் ஏலக்காய் சேர்த்த பானக மணம் எங்கும் நிறைந்திருக்கும்.

மேலும் அட்சய த்ருதியை சேவைகள் தொடரும். ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல் அமைப்பார்கள். கல் தொட்டிகளில் நீர் நிரப்புவார்கள். மேய்ந்து விட்டு வீடு திரும்பும் கால்நடைகள் ஆனந்தமாகத் தண்ணீர் குடிக்கும். எல்லாக் காரியமும் எந்த எதிர்பார்ப்பும் இன்றி சேவை மனப்பான்மையுடன் செய்யப்படும்.

ஆனால் இன்று அட்சய த்ருதியையின் முக்கிய நோக்கமே மறைந்து போய் ஆடம்பரப் பொருள்களின் சேமிப்பு நாளாக மாறி விட்டது. இந்த நல்ல நாளில் நல்ல தீர்மானங்களை எடுத்தாலே போதும் அது அட்சயமாக வளர்ந்து நன்மை தரும்.

- பத்மா, பெங்களூர்.



படம் : ஸ்ரீஹரி

குடும்ப மருத்துவர்களை நாடுங்கள்!

கணேசனுக்கு நாற்பது வயது. அன்று காலையிலிருந்தே, சற்று அசௌகரியமாக இருந்தவருக்கு, அலுவலகத்தில் நெஞ்சில் வலி ஏற்பட்டிருக்கிறது. பதறிப்போன நண்பர்கள், அருகிலுள்ள இருதய நோய் நிபுணரிடம் அழைத்துப் போயிருக்கிறார்கள். உடனே அந்த டாக்டர் அட்மிட் செய்யச் சொல்லி விட்டு, ஈ.ஸி.ஜி, இரத்தப் பரிசோதனை, சர்க்கரை பரிசோதனை என ஏகப்பட்டது எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

விஷயம் அறிந்து, கணேசனின் மனைவியும் குழந்தைகளும் அழுது கொண்டு ஓடி வர, ஊரிலிருந்து உறவினர்கள் புறப்பட்டு வர, பதைப்பு... டென்ஷன்!

சாயங்காலம் வந்த டாக்டர், ரிப்போர்ட்டுகளை எல்லாம் பார்த்துவிட்டு, 'ஒன்னுமில்லை; எல்லாமே நார்மல்! ஜஸ்ட் கியாஸ் ட்ரபிள் தான்! நல்லா ரெஸ்ட் எடுக்கட்டும். நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடலாம்'' என்றுசொல்லிவிட்டு போயே விட்டார்.

'ஒன்றுமில்லை' என்று சொல்வதற்கு, ஐயாயிரம் ரூபாய் செலவு! கூடவே மன உளைச்சல், வீண் அலைச்சல், கால விரயம்!



• நூருல் அமீன்

இதுபோன்ற அனுபவம் நம்மில் பலருக்கும் ஏற்படுவதுதான். இது ஏன் நடக்கிறது?

'' 'செல்ஃப் டயக்னாஸிஸ்' எனப்படும் சுய பரிசோதனைக் கோளாறாலும், 'குடும்ப நல டாக்டர்' என்ற சீரிய மருத்துவ முறை மறைந்து வருவதாலும்தான்'' என்கிறார் சென்னை, இராயப்பேட்டை..., அவ்வை சண்முகம் சாலையில் உள்ள குவாலிடாஸ் குடும்பநல க்ளினிக்கின் நிறுவனர் 'டத்தோ' டாக்டர் நூருல் அமீன்.

மலேசியாவில் செலாங்கோர் மருத்துவ மையத்தின் தலைவராக இருக்கும் இவரது நிர்வாகத்தின் கீழ் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 82 மருத்துவ மையங்கள் இருக்கின்றன. உலகத்தரம்வாய்ந்த குடும்பநல மருத்துவ சேவை, சென்னை வாசிகளுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இங்கேயும் தடம் பதித்திருக்கிறார்.

விழிப்புணர்வு கட்டுரை

''சமீபத்தில் சென்னையிலிருந்து கோலாலம்பூருக்கு விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். நான் ஒரு மருத்துவர் என்பதைத் தெரிந்து கொண்டதும் என் அருகிலிருந்த சென்னைவாசி ஒருவர் தன்னுடைய பிரச்னைகளைக் கூற ஆரம்பித்தார்.

ஒரு குறிப்பிட்ட நியூராலஜிஸ்ட் பெயரைக் குறிப்பிட்டு, ''தலைவலின்னு போனேன் சார். ஒரு எம்.ஆர்.ஐ. கூட பண்ணலை. மருந்து எழுதிக் கொடுத்துட்டு, 'சரியாப் போயிடும் போங்க'ன்னுட்டார். இவரெல்லாம் என்ன டாக்டரோ?'' என்றார் கூலாக! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பெரும்பான்மையானவர்களின் மனப்பான்மை இப்படித்தான் இருக்கிறது என்பது துரதிருஷ்டம்!

முன்பெல்லாம் ஒவ்வொரு ஏரியாவிலும் ஃபேமிலி ப்ராக்டீஷனர்ஸ் இருப்பார்கள்.



குடும்பநல டாக்டர்களுக்கு, நோயாளிகளின் குடும்பப் பின்னணி, பொருளாதார வசதி, நோயின் தன்மை, மனப் பாங்கு என எல்லாமே தெரியும் என்பதால், மருந்து மாத்திரையுடன் மனவியல் ஆலோசனையும் தருவார்கள். உண்மையான அக்கறையுடன் பேசி, தேவையான பரிசோதனைகளை மட்டுமே எடுக்கச் சொல்வார்கள். இந்த முழுமையான அணுகுமுறை (Holistic approach)யினாலேயே, நோயாளிகள் விரைவில் குணமடைந்து விடுவார்கள். ஒருவேளை, சிறப்புக் கவனம் தேவைப்படும் பட்சத்தில், குடும்பநல மருத்துவரே, தகுந்த ஸ்பெஷாலிட்டி நிபுணரையும் அடையாளம் காட்டுவார். சிறப்பு நிபுணர் என்ன சிகிச்சையைத் தருகிறார் என்பதையும் குடும்பநல மருத்துவர் கண்காணிப்பார். இதனால் நோயாளி மருத்துவர் இடையே நல்லெண்ணம் நிலைக்கும்.

ஆனால் இப்போது அந்தப் பழக்கமே மாறி விட்டது. வயிறு வலித்தால், தாங்களாகவே கேஸ்ட்ரோ என்ட்ராலஜிஸ்டிடம் போய் விடுகிறார்கள். கழுத்து வலித்தால், ஆர்த்தோ டாக்டரிடம் போய் விடுகிறார்கள்.

அந்தச் சிறப்பு மருத்துவர்களைக் குறை சொல்வதிலும் பயனில்லை. அவர்களுக்கு, நோயாளியின் கேஸ் ஹிஸ்டரியைத் தெரிந்து கொள்ளவோ, உளவியல்ரீதியாகப் புரிந்து கொள்ளவோ நேரமிருப்பதில்லை. 'ஃபுல் செக்-அப்' என்று சொல்லி விடுகிறார்.''

வெகுவாகப் பரவி விட்ட இந் நிலை மாற என்ன செய்ய வேண்டும்?

- 'கேட் கீப்பிங் சிஸ்டம்' எனப்படும் குடும்பநல மருத்துவத்தின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும்.
- நோயாளிகள் சுயபரிசோதனை செய்யக் கூடாது.
- குடும்பநல டாக்டர்கள், நோய்களைக் காட்டிலும் நோயாளியை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய பிரச்னைகளைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும்.''

''அமெரிக்கா, மலேசியா போன்ற நகரங்களில் சிறப்பு நிபுணர்களைக் காட்டிலும் குடும்பநல டாக்டர்களுக்கே மவுசு அதிகம். இங்கேயும் அப்படி ஒரு ஒருங்கிணைந்த சமுதாய மருத்துவ சேவை (Integrated community practice) பிரபலமானால், நோயாளிகளின் உரிமைகளும் நலன்களும் காக்கப்படும். மருத்துவச் செலவு குறையும். மருத்துவர்களும் சமுதாய சேவை செய்த திருப்தி அடைவார்கள்'' என்கிறார் டாக்டர் நூருல் அமீன்.

35 வருட மருத்துவ சேவைக்காக மலேசிய நாட்டின் உயரிய கௌரவமான 'டத்தோ' விருது பெற்றிருக்கும் டாக்டர். நூருல் அமீன், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த தமிழர்!

- கங்கா, சென்னை - 44.

புடைவைகள் கிழியாமல் இருக்க, மேட்சிங் ப்ளவுஸ் மட்டும் சீக்கிரம் கிழிந்து விடும். அதனால் நான் துவைக்கும் போது ரவிக்கைகளுக்கு குளியல் சோப் போட்டு அலசுவேன். உலர்த்தும் போது திருப்பி உலர்த்துவதோடு, வெயிலில் போட மாட்டேன்.

- ராஜிகணேசன், சென்னை - 87.

மாடல் : **கீதா சம்பத் குடும்பத்தினர்**

அனைவருக்கும் இனிய தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

அரிசி கூழ் வடாம்

தேவையானவை :
புது பச்சரிசி - 4 ஆழாக்கு,
ஜவ்வரிசி - 1 ஆழாக்கு,
ப. மிளகாய் - 20 அல்லது 25,
உப்பு - தேவையானது,
பெருங்காயம் - சிறிதளவு,
எண்ணெய் - 4 டீஸ்பூன்.

செய்முறை :
பச்சரிசியை நன்கு கல்லரித்து, களைந்து, தண்ணீரில் ஊறப்போடவும். நன்கு ஊறியதும், மைய அரைக்கவும். தேவையான உப்பைப் போட்டுக் கலக்கவும். இதை இரண்டு நாள் புளிக்க வைக்கவும். மூன்றாம் நாள் காலை ஜவ்வரிசியை ஊறப் போடவும். ப. மிளகாய், பெருங்காயம், சிறிதளவு உப்பு (பச்சை மிளகாய் அரைபடுவதற்காக) எல்லாவற்றையும் ஒன்றாக அரைத்து மாவில் கலக்கவும். அடிகனமான, பாத்திரத்தில் (அல்லது ஹிண்டாலியம் வாணலியில்) அரிசி மற்றும் தண்ணீர் 1:2½ என்ற விகிதத்தில், தண்ணீரைக் கொதிக்க விடவும். கொதிக்கும் நீரில் எண்ணெய் விடவும். அதில் ஊறிய ஜவ்வரிசியைப் போட்டு வேகவிடவும். தண்ணீரின் அளவு ஜவ்வரிசிக்கும் சேர்த்துத்தான் வைக்க வேண்டும். அதாவது அரிசி + ஜவ்வரிசி = 5 ஆழாக்கு, தண்ணீர் 12½ ஆழாக்கு.

ஜவ்வரிசி நன்றாக வெந்ததும், அடுப்பை நிதானமாக எரிய விட்டு, மாவை (தோசை மாவை விட நீர்க்கக் கரைக்கவும்) கொஞ்சம் கொஞ்சமாக, முழுவதும் ஊற்றி கட்டியில்லாமல் கிளறவும். தண்ணீர் போதவில்லை யென்றால், நடுவே சிறிது ஊற்றிக் கொள்ளலாம். மாவு 'பளபள'வென்று கையில் ஒட்டாமல் வருவதுதான் பதம். மாவை இரவே கிளறி வைத்துக் கொண்டு விட்டால், காலையில் வெயில் ஏறுமுன் பிழிய ஏதுவாக இருக்கும். கையும் சுடாது.

கிளறிய மாவை, தேவையான அச்சில் (ஓமப்பொடி, தேன்குழல் அல்லது



கட்டை வடாம் இத்யாதி) போட்டு, பிளாஸ்டிக் ஷீட்டில் பிழியவும். இரண்டு நாள் நல்ல வெயிலில் காயவைத்து எடுக்கவும். (2ம் நாள், மேலே மெல்லிய துணி போர்த்தி காய வைக்கவும். இல்லாவிடில் சாக்காய்களுக்கு மஜாதான்!). கட்டை வடாமென்றால் இன்னும் ஒருநாள் கூட காயவைக்க



வடாம் போடலாமா?

வேண்டும். காற்றுப்புகாத டப்பாவில் போட்டு வைத்தால், வருடத்திற்கும் உப யோகிக்கலாம்.

மாவை, புளிக்க வைக்காமல், எலு மிச்சம் பழம் பிழிந்தும் தயாரிக்கலாம். ஆனால் இயற்கைப் புளிப்பு, சுவையையும் வடாமின் நிறத்தையும் அதிகரிக்கும்.

ஜவ்வரிசி வடாம்

தேவையானவை :
ஜவ்வரிசி - 1 கிலோ (5 ஆழாக்கு),
பச்சை மிளகாய் - 20,
உப்பு - தேவைக்கேற்ப,
பெருங்காயம் - சிறிதளவு,
சீரகம் - 2 டீஸ்பூன்,
நைலான் என்ளு - 2 டீஸ்பூன்,
எண்ணெய் - 4 டீஸ்பூன்,
எலுமிச்சம் பழம் - 4.

செய்முறை : ஜவ்வரிசியை ஊறப் போடவும். நன்கு ஊறிய தும், நீரை வடித்து விட்டு, குக்கரில் போட்டு, 3 பங்கு தண்ணீர் ஊற்ற வும். உப்பு, பெருங்கா யம், பச்சை மிளகாய் இவற்றை அரைத்து அதில் கலக்கவும். சீரகம், நைலான் என்ளு இவற் றைப் போட்டு, குக்கரில் 4,5 விசில் வரும் வரை வேகவிடவும். இதையும் இரவே செய்து வைத்துக் கொள்ளலாம். காலை யில், வெளியில் எடுத்து, எலுமிச்சம் பழம் பிழிந்து, நன்கு கலக்கவும். வெந்த ஜவ்வரிசி கெட்டியாக இருக்கும். அத னால் ரிப்பன் அச்சிலேயே பிழியலாம். வில்லைதான் வேண்டுமென்றால், இன் னும் சிறிது வெந்நீர் கலந்து தளர்த்திக் கொண்டு, பிளாஸ்டிக் ஷீட்டால் சிறு கரண்டியால் தட்டை, தட்டையாக வைக்கலாம்.

எலுமிச்சம் பழத்துக்குப் பதில், தக் காளிச் சாறெடுத்து, கலந்து செய்யலாம். நிறமும் அழகாக இருக்கும். சுவையும் வேறாக இருக்கும்.



கூட்டு, குழம்பு வடாம்

தேவையானவை :
வெள்ளைக்காராமணி - ½ கிலோ,
தோல் நீக்கிய முழு
உளுந்து - ½ கிலோ,
வெள்ளைப் பூசணிக்காய் - ½ கிலோ,
மிளகாய் வற்றல் - 20 (அ) 25,
பெருங்காயம் - சிறிதளவு,
உப்பு - தேவையானது.
கறிவேப்பிலை - கொஞ்சம்.

செய்முறை :
காராமணியையும், உளுந்தையும் கல்லரித்து, தனித்தனியாக ஊறப்போடவும். நன்கு ஊறியதும் தண்ணீரை வடித்து விட்டு, உப்பு, காரம், பெருங்காயம் சேர்த்து ஒன்றாக, கெட்டியாக அரைத்தெடுக்கவும். பூசணிக்காயைத் தோல் சீவி காரட் சீவியில் சீவவும். அதிலிருந்து தண்ணீரை ஒட்டப் பிழிந்து விட்டு அதையும் மாவில் சேர்க்கவும். கறிவேப்பிலையையும் சிறிது சிறிதாகக் கிள்ளிச் சேர்க்கவும். இதுவும், இரவே தயார் செய்து வைத்துக் கொள்ளலாம். மாவு, சற்று கரகரப்பாகவே இருக்கலாம். காலையில் பிளாஸ்டிக் ஷீட்டில், மாவை சிறு சிறு உருண்டைகளாகக் கிள்ளி வைக்கவும். இந்த வடாம் உருண்டையாக இருப்பதால், காயக்கூட ஒன்றிரண்டு நாள் பிடிக்கும். இதை எண்ணெயில் வறுத்து, கூட்டு மற்றும் சாம்பாரில் சேர்க்கலாம்.

- விஜயா ராஜன்,
பெங்களூர்.

அவல் வடாம்

தேவை :
அவல் - 1 கிலோ,
எலுமிச்சம் பழம் - 3,
பச்சை மிளகாய் - 12,
உப்பு - தேவைக்கேற்ப,
பெருங்காயத் தூள் - ஒரு ஸ்பூன்

செய்முறை :
அவலைக் கழுவி சுத்தம் செய்து சிறிது நீர் தெளித்து அரை மணி நேரம் ஊற விடவும். ஊறட்டும். அதற்குள் பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் (கட்டி பாக இருந்தால்) மூன்றையும் மிக்ஸியில் நைசாக அரைத்துக் கொள்ளவும். எலுமிச்சம் பழங்களைப் பிழிந்து சாறு எடுக்கவும். பிறகு அவலில் (நீரை நன்கு வடித்து விட வேண்டும்). எல்லாவற்றையும் போட்டுக் கலந்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும். பிளாஸ்டிக் தாள்களைப் பரப்பி, கலவையை உருட்டி, உருட்டி வைத்துத் தட்டி தட்டி வைக்கவும். ஒரு நாளில் மேல் பாகம் காய்ந்து வரும். மறுநாள் அவற்றை மெல்ல எடுத்துத் திருப்பிப் போட்டு வைக்கவும். இருபுறமும் காய்ந்ததும் டப்பாக்களில் எடுத்து வைக்கவும்.

வெஜிடபிள் வடகம்

தேவை :
நீர்ப்பூசணிக்காய் - 2 கீற்று,
சௌசௌ - ½ கிலோ,
கேரட் - ½ கிலோ,



பச்சை மிளகாய் - 12,
உப்பு - தேவைக்கு,
அவல் - 1 கிலோ,
பெருங்காயப் பொடி - 1 ஸ்பூன்.

செய்முறை :

காய்கறிகளை கேரட் துருவியில் துருவிக் கொள்ளவும். பச்சை மிளகாய், உப்பு இரண்டையும் நைசாக அரைத்துக் கொள்ளவும். அவலைக் கழுவி சுத்தம் செய்து 15 நிமிடங்கள் ஊறவிடவும். பிறகு, துருவிய காய்கறிகள், அரைத்த விழுது, பெருங்காயப் பொடி அனைத்தையும் ஊறிய அவலில் (நீர் இருந்தால் வடித்து விடவும்) போட்டுக் கலந்து நன்கு பிசையவும். பிளாஸ்டிக் தாள்களைப் பரப்பி, கலவையை உருண்டையாக வைத்து, தட்டைப் போல் தட்டவும். ஒருநாள் காய்ந்தபின் மறுநாள் திருப்பிப் போட்டுக் காயவிடவும்.

இனிப்பு வடகம்

ஜவ்வரிசி வடகம் இடும் போது, உப்பு, காரம் சேர்ப்பதற்கு முன்பு தனியாகக் கொஞ்சம் ஜவ்வரிசிக் கூழ் எடுத்து வைத்துக் கொள்ளவும். வெல்லத்தை நன்கு பொடித்து கூழில் கலந்து, சிறிது ஏலக்காய்ப் பொடியும் போட்டுக் கலக்கி, வழக்கம் போல் வடகம் இடவும். மாலை வேளையில் குழந்தைகளுக்கு இனிப்பு வடகம், கார வடகம் இரண்டையும் பொரித்துக் கொடுக்கலாம்.

● ஜவ்வரிசி வடாமோ, அரிசி வடாமோ செய்யும்போது, கிளறும் கூழில் கசகசாவை ஒன்றிரண்டாகப் பொடி செய்து போட்டால் தனியான சுவையும் மணமும் சேரும்.

● காய்ந்துபோன கறிவேப்பிலையைப் பொடி செய்து ஜவ்வரிசிக் கூழிலோ, அரிசிக் கூழிலோ கலந்தால், பச்சை வண்ண வடாம் தயார். சுவையும் கூடும். சத்தும் கூடும்!

● வெண்டைக்காய், கொத்தவரங்காய் போன்றவற்றை நறுக்கி உப்பு கலந்த மோரில் ஊறவைத்து வெயிலில் நன்கு காயவைத்தால் சுவையான, சத்து நிறைந்த வற்றல் கிடைக்கும்.

● கேரட்டைப் பிழிந்து சாறு எடுத்து, வடாம் செய்ய தயாரித்த கூழில் கலந்து விட்டால் சத்து மிகுந்த ஆரஞ்சு வண்ண வடகம் கிடைக்கும்.

● எல்லா வடாம்களிலும் பெருங்காயத்தைச் சேர்ப்பது வாசனையைக் கூட்டுவதோடு உடல்நலனுக்கும் உகந்தது.

● ஜவ்வரிசி வடாம் செய்யும்போது, மிளகு, சீரகப் பொடி கலந்தால் சுவையும், மணமும் கூடுவதோடு உடம்புக்கும் நல்லது.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

பட்டாணியை முதல் நாள் ஊறவைக்க மறந்து விட்டால் நீரைக் கொதிக்க வைத்து, அதில் சிட்டிகை சமையல் சோடா, சிறிது உப்புப் போட்டு நீரை பிளாஸ்கில் ஊற்றி பட்டாணியையும் அதில் போட்டு வைக்கவும். இரண்டு மணி நேரம் கழித்து எடுத்தால் பட்டாணி முதல் நாள் ஊறவைத்தது போல இருக்கும்.

- பிரேமா சாந்தாராம், சென்னை - 110.



வடகம் போட ஒரு சுலப வழி!

தேவையான அளவு பச்சரிசியை சன்ன ரவையாக மிஷினில் கொடுத்து அரைத்துக் கொள்ளவும். 1க்கு 2½ பங்கு என்ற அளவில் தண்ணீர் எடுத்து உப்பு, பெருங்காயத் தூள் சேர்த்து கொதிக்க விடவும். ரவையைப் போட்டு உப்புமா போல் கிளறி ஆறவைத்துக் கொள்ளவும். ஆறியதும் புளித்த மோர், அரைத்த பச்சை மிளகாய் விழுது, சீரகம், பொடியாக நறுக்கிய வெங்காயம், இஞ்சி, கறிவேப் பிலை சேர்த்துக் கலந்து வெயிலில் பாலிதீன் பேப்பரைப் போட்டுக் கிள்ளி வைக்கவும். பக்கோடா போல் மொறு மொறுப்பாக இருக்கும். ஜவ்வரிசி தேவை யில்லை.

செட்டி நாட்டு வெங்காய வடகம்

தேவையான பொருள்கள் :
சின்ன வெங்காயம் - 2 கிலோ,
பூண்டு - ¼ கிலோ,
உளுத்தம் பருப்பு - 400 கிராம் (வெள்ளை),
சிவப்பு மிளகாய் - 100 கிராம்,
சீரகம் - 50 கிராம்,
பெருங்காயத் தூள் - 50 கிராம்,
கடுகு - 25 கிராம்,
உப்பு - தேவையான அளவு,
கறிவேப்பிலை - 1 கைப்பிடி அளவு,
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்.

செய்முறை :
வெங்காயத்தையும், பூண்டையும் உரித்து மிகவும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெள்ளை உளுந்தம் பருப்பை ஊறவைத்து மிளகாயுடன் உப்பும் சேர்த்து கெட்டியாக நைஸாக அரைத்துக் கொள்ளவும். மாவுடன் சீரகம், பெருங்காயத்தூள், மஞ்சள் தூள், கடுகு, பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை, வெங்காயம், பூண்டு சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும். மாவைச் சிறிது சிறிதாகக் கிள்ளி காயவைக்கவும்.

கொள்ளு வடகம்

தேவையான பொருள்கள் :
கொள்ளு - ½ லிட்டர்,
மிளகாய் வற்றல் - 50 கிராம்,
வெந்தயம் - ½ ஸ்பூன்,
பெருங்காயத் தூள் - ¼ ஸ்பூன்,
வெள்ளைப் பூசணிக்காய்த் துண்டு - 1,
தேவையான அளவு உப்பு.

செய்முறை :
கொள்ளை முதல் நாள் இரவே ஊற வைக்கவும். மறுநாள் வெள்ளைப் பூசணி கீற்று, உப்பு, பெருங்காயம், மிளகாய் வற்றல், வெந்தயம் சேர்த்து அரைத்து, வெயிலில் பாலிதீன் பேப்பரை விரித்து அதில் சிறு சிறு உருண்டைகளாக உருட் டிப் போட்டு காயவைக்கவும்.

- திராவிடமணி மேகநாதன்.

மாடல் : ராதாஸ்ரீதர்
படம் : ஸ்ரீஹரி






மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்

ஒன்பது வயது தினேஷ் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான். அவனுடைய அப்பா நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்க, அம்மா பேசினார். "அப்பா அடிச்சாருன்னு அழறியே... ஏன் அடிச்சார்னு புரியுதில்லே? நீ செய்த காரியத்துக்கு மாலை போட்டா பாராட்ட முடியும்? சுளையா அப்பா பர்ஸிலேருந்து முந்நூறு ரூபாய் திருடியிருக்கே... உன்னோட ஃப்ரெண்ட்ஸுக்கெல்லாம் பீட்ஸா வாங்கிக் கொடுக்கலேன்னா உன் கௌரவம் கொறஞ்சுடுமோ?"

அடுத்து அப்பா பேசினார். "உனக்கு என்னடா குறை வைச்சோம்? பணத்தையும் திருடிட்டு மன்னிப்புக் கேட்கக் கூடத் தெரியலையே! நாலு அறை குடுத்தும் அசையாம நிக்கறான் பாரு" என்று அவர் சொன்னவுடன், பலவீனமான குரலில், "சரி டாடி, இனி இப்படிச் செய்ய மாட்டேன்"

திருடும் குழந்தையைத் திருத்துவது எப்படி?



என்று அழுதுகொண்டே தினேஷ் சொல்ல, மறுபடியும் அம்மா, "அவன் நல்லபடியா வளர நாம சொல்லிக் கொடுத்தாச்சு. மறுபடி இருடினான்னா ஹாஸ்டல்லே விட்டுட



உங்கள் வீட்டு பள்ளிக் குழந்தைகளின் ஸ்கூல் பை, லஞ்ச் பேக், டிபன்பாக்ஸ், ஜியோமெட்ரிக் பாக்ஸ், புத்தகங்கள் அனைத்திலும் ஸ்டிக்கர் எழுத்துகளை ஒட்டி விடுங்கள். இதனால் தொலைந்து விட்டாலும் சுலபமாக அடையாளம் காட்டி உரிமை கோரலாம்!

- கங்கா ராமநாத், மும்பை.

வேண்டியதுதான். உருப்படறதும், நாச மாய்ப் போறதும் அவன் கையிலேதான்..." என்று கூற இருவரும் தங்கள் கடமை முடிந்ததாக எண்ணி எழுந்து போனார்கள். மறுபடி இந்தத் தவறு நடக்குமா, நடக்காதா என்பது யாராலும் திண்ண மாகச் சொல்ல முடியாத ஒன்று.

தினேஷ் மட்டுமல்ல, மற்ற சில குழந்தைகளும் இந்த 'ப்ரீ-அடோலஸண்ட்' பருவத்தில் (9முதல் 11 வரை) பொய் சொல்வது, திருடுவது போன்ற தவறான செயல்களைப் புரிகிறார்கள். எட்டு வயது ப்ரியா, அம்மாவுக்குத் தெரியாமல் அவள் கைப்பையிலிருந்து இருநூறு ரூபாயை எடுத்து சருமத்தை வெளுப்பாக்கும் ஒரு க்ரீமை வாங்கி உபயோகிக்க ஆரம்பித்தாள். 'இது ஏது?' என்கிற கேள்விக்கு ஒரு பொய்யைச் சொல்லி மாட்டிக் கொண்டாள்.

இந்த வயதில் இந்தப் பிரச்னை ஏன்? 'ப்ரீ-அடோலஸண்ட்' குழந்தைகளுக்கு நண்பர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் குணம் உண்டு. நண்பர்களையே அளவுகோலாகக் கொண்டு, தன்னிடம் இல்லாத ஒன்று அவர்களிடம் இருந்தால், எப்படியாவது ஈடுசெய்ய விரும்புவார்கள். மேலும் இந்த வயதில் குடும்பம், நண்பர்கள் இவர்களது ஒழுக்க மதிப்பீடுகள் மாறுபட்டிருந்தால், இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்து, பிறகு நண்பர்கள் பக்கம் சாய்ந்து விடுகிறார்கள். தினேஷும் இப்படித்தான் மாட்டிக் கொண்டிருக்கலாம்!

பெற்றோர், 'பீட்ஸா' வாங்கப் பணம் தர மாட்டார்கள். நண்பர்கள் தனக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்தால், பதிலுக்குத் தான் வாங்கிக் கொடுக்கா விட்டால், தன் கௌரவம் என்னாவது என்பது தினேஷின் கவலை. இரண்டுக்கும் நடுவே மாட்டிக்கொண்ட தினேஷுக்கு வேறு வழி தெரியவில்லை. நண்பர்களை இம்ப்ரெஸ் செய்வது முக்கியமாகத் தோன்றவே, பின்விளைவுகளை யோசிக்காது, அப்பாவின் பணத்தை எடுத்து விட்டான்! அவனுடைய பெற்றோர் அதற்குத் 'திருட்டு' என்று பெயர் சூட்டி விட்டனர். அவர்கள் சொன்ன பின்பு தான் அவனுக்குத் தான் செய்த காரியம் என்னவென்றே விளங்கியது!

குழந்தைகள் இந்த மாதிரி செயல்கள் செய்யும்போது பெற்றோருக்கு பயம் வந்து விடுகிறது. அதிலும் மிகவும் நேர்மையாக வாழும் பெற்றோருக்கு, 'என் குழந்தை திருடி விட்டானா? பொய் சொல்லி விட்டானா?' என்ற கேள்வி குடைந்தெடுக்கிறது. 'மிகவும் கடுமையாக நான் எதிர்கொள்ளாவிட்டால், இது மறுபடி தொடரலாம்' என்கிற பயத்தில் அடித்து, கடினமாகத் திட்டிக் கண்டிக்கிறார்கள். இப்படிக் கடுமையாக 'ரியாக்ட்' செய்ய வேண்டியதில்லை. பெற்றோர் செய்ய வேண்டியது இரண்டுதான். ஒன்று : 'இந்த நடத்தை ஏன் வந்தது?' என்று அந்தச் செயலைச் செய்யத் தூண்டிய உணர்வைக் கண்டுபிடித்து, அதற்கு வழி சொல்வது. இரண்டு : இந்தச் செயல் ஏன் தவறாகக் கருதப்படுகிறது, வேறு என்ன செய்ய முடியும் என்று குழந்தைக்கு விளக்குவது.

தினேஷ், அப்பாவுக்குச் சொல்லாமல் ஏன் பணத்தை எடுத்தான்? அந்தச் செயலின் பின் இருந்த உணர்வு என்ன? 'தான் கேட்டால் அப்பா தர மாட்டார்' என்கிற எண்ணத்தில், கேட்க பயம் அல்லது தயக்கம் இருக்கலாம். நண்பனுக்குத் தான் சளைத்தவன் இல்லை என்றோ, எல்லோருக்கும் வாங்கிக் கொடுக்க என்னிடமும் பணம் இருக்கிறது என்று காண்பித்துக் கொள்ளவோ இருக்கலாம். அந்த நேரத்தில் தினேஷ் அதைத் திருட்டாக நினைக்கவில்லை. 'அதெப்படி திருடினாய்?' என்று தண்டிப்பதற்குப் பதிலாக, அந்தச் செயலைச் செய்யத் தூண்டிய உணர்வை அவன் வாயிலாக வரவழைத்தால், பிரச்னையின் வேருக்குப் போவோம். அதைக் கேட்கும்போது (தான் எடுத்து விட்டதைப் பிறகு அவன் சொன்னானே...) உண்மை பேசியதைப் பாராட்டுவது, எதிர்காலத்தில் உண்மையைப் பேச வைக்கும். சொல்லாமல் எடுப்பதற்குப் பெயர் திருட்டு என்பதை அவனுக்கு எடுத்துக் கூறி இனி 'நண்பர்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்பது போன்ற ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள என்ன வழிவகுக்கலாம் என்பதையும் பெற்றோர் அவனுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கலாம். உதாரணமாக, 'நண்பர்களிடமிருந்து ஓசியில் சாப்பிட்டால், அவர்களுக்குள் 'டர்ன்' வைத்துக் கொள்ளலாம். இந்த வாரம்/மாதம் இவன்; அடுத்த வாரம்/மாதம் மற்றுமொரு நண்பன் என்று வெளியிலா, வீட்டிலா, வாரம் ஒருமுறையா, மாதம் ஒருமுறையா, எவ்வளவு ரூபாய் போன்ற விவரங்களை பெற்றோர் - குழந்தை இருவரும் தீர்மானிக்கலாம். தீர்மானங்களை எடுத்த பின்பு அவை எக்காரணம் கொண்டும் மாறக் கூடாது. குழந்தைகள் மகா புத்திசாலி; "அடுத்த வாரப் பணம் இப்பவே வாங்கிக்கறேன்; அடுத்த வாரம் வேண்டாம்" என்று அப்போதைக்குச் சொல்லி வாங்கிக் கொண்டு விடுவார்கள். அதற்குப் பெற்றோர் இடம் கொடுக்கக்கூடாது. இவற்றையெல்லாம் முதலிலேயே பேசிக் கொள்வது நல்லது. இப்படிச் செயல்பட்டால் பணத்தை கவனமாகக் கையாளவும் குழந்தைகள் பழகுவார்கள்.

பெற்றோரைப் பொறுத்தவரை, இதெல்லாம் அவசியமா என்று கேட்டால், அவரவர் குடும்பம் தீர்மானிக்க வேண்டிய விஷயம் என்றுதான் சொல்வேன். ஆனால் ஊரோடு ஒத்து வாழத்தானே வேண்டியிருக்கிறது? இல்லாவிட்டால் உங்கள் குழந்தை குறைப்பட்டுக் கொள்வான். அடுத்து, பர்ஸில் எவ்வளவு பணம் இருக்கிறது என்கிற கணக்கு பெற்றோருக்குத் தெரிய வேண்டும். குழந்தை ஒருமுறை செய்த தவறைச் சொல்லிக் காட்டி நம்பிக்கையில்லாது நடந்து கொள்வது நல்லதல்ல.

திருடுவது தவறான செயல்தான்! ஆனால் மிரட்டினால் அப்போதைக்கு நிற்கலாம். ஆனால் மீண்டும் நடக்காது என்று உத்திரவாதமில்லை. மிரட்டுவதை விட, புரிய வைத்து, உள் மனத்தில் மாற்றம் வர முயல்வது சிறந்தது.

(தொடரும்)



செருப்பு சிறிதாக இருந்தால் கூட அதைக் குழந்தைகளுக்குப் போட்டு விடலாம். ஆனால் ஷூவை அடித்துப் பிடித்து திணித்து விடாதீர்கள். காளான், நீர்க்கோவை வியாதிகள் வந்து விடும்.

- ஜே. தனலட்சுமி, கோயம்புத்தூர்.

விளையும் பயிர்...

மூன்று வயது கார்த்திக்கின் தாய், "அக்கா, இவன் இப்படி ஆட்டமாய் ஆடுகிறான். எதிர்த்து எதிர்த்துப் பேசுகிறான். பெரியவனானதும் எப்படி இருப்பானோ? பயமாய் இருக்கிறது. உங்க பையன்கள் எப்படி இருந்தார்கள்?" என்று கேட்டார் என்னிடம்.

என் மகன் நிவேதன் மங்களேஷ் எப்படி இருந்தான் என்று சொல்கிறேன்.

நான்கு மாதத்திலேயே தொட்டிலில் போட முடியவில்லை. தூங்குகிறான் என்று போட்டு விட்டுப் போனால் ஒரு நிமிடம் கழித்து, தலை மட்டும்தான் தொட்டிலில் இருக்கும்.

முகத்தை மூடிக் கொண்டு அழுவது போல் நடித்து விட்டு கைகளை விலக்கினால் எல்லாக் குழந்தைகளும் சிரிக்கும். இவனிடம் அப்படி விளையாடினால் 'பளார்' என்று விழும் அறையில் நம் கன்னம் சிவக்கும்.





தவழத் தெரிந்ததும் கிச்சனுக்குள் வந்து கேஸ் ஸ்டவ்வுக்குப் போகும் ட்யூபை வெடுக்கென்று பிடித்து இழுக்கத் தொடங்கினான். கேஸ் ஸ்டவ் இடம் மாறியது.

நடக்கக் கற்றுக் கொண்டான். முட்டையை எடுத்து வீசுவது, பிசைந்து வைத்திருக்கும் சப்பாத்தி மாவில் தண்ணீரைக் கொட்டுவது. வடையை எடுத்து நாய்க்கு வீசுவது, இட்லிக்கு நனைய வைத்த அரிசியையும் உளுந்தையும் கலப்பது என்று ஒரே கலாட்டாதான். பக்கத்தில் யார் இருந்தாலும் அவனுடைய வேகத்தின் முன் ஒன்றும் செய்ய முடிந்ததில்லை.

நடு இரவில் விழித்துக் கொண்டு மொட்டை மாடியில் ஏறி, சுற்றிச் சுற்றி ஓடுவதும் அக்கம் பக்கத்தில் என்ன நினைப்பார்களோ என்று நினைத்துக் கொண்டே அவன் பின் நான் ஓடுவதும் அடிக்கடி நடக்கும். அது மட்டுமல்ல. அவன் மொட்டை மாடியில்



கிடந்த செங்கல்களை வெளியே கடாசியதில் பக்கத்து வீட்டு ஓடுகள் உடைந்து விட்டன. கோவிலுக்குப் போனால், முன்னே இருக்கும் பெண்கள் தலையிலிருக்கும் பூவைப் பிடித்து இழுப்பதை நான் எவ்வளவு முயன்றாலும் தடுக்க முடியாது. குனிந்து கும்பிடுபவர்கள் முதுகில் தாவுவதும் நடக்கும்.

ஒன்றரை வயதில் பேசுவதற்கும் பாடுவதற்கும்

கூடக் கற்றுக் கொண்டான். "தூங்குவதற்கு வா" என்று கூப்பிட்டால், "மெத்தை வாங்கினேன். தூக்கத்தை வாங்கலை" என்று கையை விரிப்பான். ''ஆத்தாடி மனசுக்குள்ள காத்தாடி'' என்று பாடுவான்; ஃபேன் போட வேண்டுமாம்!



ஒருமுறை கடைக்குச் சென்றிருந்தேன். கடைக்காரர் அவன் கன்னத்தைத் தட்டி, "என்ன தம்பி கடைக்கு வந்தியா?" என்றார். உடனே அவன், "கடைவீதி கலகலக்கும்; நம்ம பஸ் ஸ்டாண்டே பளபளக்கும்'' என்று பாடினான். அவருக்கு ஒரே மகிழ்ச்சி. ''நல்லா பாடுறியே, இன்னொரு பாட்டுப் பாடு'' என்றார். உடனே, "ஊரைத் தெரிஞ்சுக்கிட்டேன். உறவைப் புரிஞ்சுக்கிட்டேன் அண்ணாச்சி, என் அண்ணாச்சி'' என்று பாடினான். மயங்கி விட்டார் அவர்.

''குழந்தையை என்னிடம் கொடுங்கள். வீட்டுக்குக் கூட்டிப் போய் விட்டு மாலையில் உங்கள் வீட்டில் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று (சீரியசாக) சொன்னார். நான் சிரித்துக் கொண்டே சொன்னேன். "இவனுடைய மறு பக்கத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாது."

என்னுடைய மாமியார் சிதம்பரம் சென்று விட்டுப் பையுடன் உள்ளே நுழைந்தார். வாசலில் எதிர் கொண்ட இவன், "என்ன சிதம்பரத்திலிருந்து வந்தாச்சா? அங்கேயே இருந் திருக்கலாமே'' என்றிருக்கிறான். இப்படிப் பேசுகிறானே என்று மாமியார் என்னிடம் வந்து குறைப்பட்டுக் கொண்டார்.

ஒருமுறை ரயிலில் போய்க் கொண்டிருந்தோம். எதிர் சீட்டில் இரண்டு குழந்தைகளும் பெற்றோரும் இருந்தனர். இவன், "என்ன, உங்கள் ஃபேமிலியில் எல்லாருமே கண்ணாடி போட்டிருக்கீங்க. கண்ணிலே காட்ராக்ட்டா?" என்றான். ' 'காட்ராக்ட்' என்ற வார்த்தையை எங்கே கேட்டான் என்றே தெரியவில்லையே, கடவுளே!' என நான் திகைத்தேன்.

தங்கையின் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுக்கச் சென்றிருந்தோம். ஒரு வீட்டில் அப்போதுதான் காப்பியை முடித்து தம்ளர்களை எடுத்துச் சென்று

கொண்டிருந்தார்கள். நாங்கள் போனதும் எங்களுக்கும் காப்பி வந்தது. பால் எவ்வளவு இருந்ததோ, இவன் காப்பியைச் சுவைத்து விட்டு, "என்ன காப்பி இது? ரயில்வே ஸ்டேஷன் காப்பி போல் கண்றாவியாக இருக்கு" என்றான். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் என்ன சொல்வதென்றே எனக்குத் தெரிந்ததில்லை.

தங்கை குழந்தை பெற்றிருந்தாள். நாங்களும் தாய் வீட்டுக்குப் போயிருந்தோம். "குட்டிப் பாப்பா அழுகிறது பார். நீ சத்தம் போடாமல் விளையாடு" என்ற தங்கையைப் பார்த்தான். "நீ, உன் அழுவுணி பாப்பாவைத் தூக்கிக்கிட்டு உன் ஊரைப் பார்த்து ஓடு" என்ற அட்வைஸ் பிறந்தது.

இன்னுமொரு சிறப்புக் குணமும் அவனிடம் உண்டு. அது கதவு திறந்திருந்தால் கண்ணிமைக்கும் நேரத்தில் மாயக் கண்ணனாய் மறைந்து விடுவது. வீட்டில் சமையல் என் வேலை. எனவே அவனைச் சில நேரம் யார் பொறுப்பிலாவது விட வேண்டியிருக்கும். அப்போது அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு மறைந்து விடுவான். ஒருமுறை இரண்டு தெருக்கள் கடந்து ஒரு சந்துக்குள் நுழைந்து விட்டான். பத்துப் பேர் பதறிக் கொண்டு பத்து - இல்லை எட்டு திசைகளுக்கும் பறந்தோம். மாமியார் சென்ற திசையில் பூட்டுகளைத் தரையில் பரப்பி, ஒருவர் வியாபாரம் செய்து கொண்டிருந்திருக்கிறார். அவரிடம், "இந்தப் பக்கமாகச் சின்னக் குழந்தை ஒன்று போனதைப் பார்த்தீர்களா?" என்று கேட்டிருக்கிறார். ஆமாம் "இந்தப் பூட்டெல்லாம் என்ன விலைக்கு விற்கிறீங்க? அப்படீன்னு ஒரு குட்டிப் பையன் இப்பத்தான் விசாரிச்சிட்டுப் போனான்" என்றிருக்கிறார். ஒரு வழியாக நான் அவனைக் கண்டுபிடித்து விட்டேன். "ஏன் இப்படிச் செஞ்சே? அம்மா அழுதுட்டேன்" என்றேன். அவன் கேஷுவலாக, "அம்மா அந்த வேனைப் பார். மாருதி" என்று சுட்டிக்காட்டினான்.

அவனுடைய பள்ளிக் குறும்புகளுக்கு என தனி புத்தகமே போடலாம்! எப்போது நான் பார்த்தாலும் தலைகீழாக நின்று கொண்டிருப்பான் (அதுதான் அவனுடைய டிபிகல் போஸ்) அல்லது கரும்பலகையின் பின்னால் ஒளிந்து கொண்டோ வகுப்பறையின் கதவு மேல் ஏறிக் கொண்டோதான் இருப்பான். மிஸ்ஸிடம் சொல்லியிருக்கிறான் "என்ன நீங்க? சின்னப் புள்ளைகளை அடிக்கக் கூடாதுன்னு தெரியாதா? எல்லாரையும் அடிக்கிற மாதிரி என்னையும் அடிக்கலாம்னு நினைக்காதீங்க. அடிச்சீங்க, திருப்பி அடிச்சுடுவேன்" இதை மிஸ் என்னிடம் சொன்னபோது வழக்கம் போல் எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அவனும் எப்படியோ வளர்ந்து விட்டான்! இப்போது கல்லூரியில் (சோஷியல் ஒர்க்) இரண்டாமாண்டு படிக்கிறான். மனித இயல்புகளை எனக்கு விளக்குகிறான். சைக்காலஜி என்ன சொல்கிறது என்று எடுத்துச் சொல்கிறான்.

"உங்க சின்னப் பையன் ரொம்ப அமைதியான டைப் அக்கா" என்று கார்த்திக்கின் தாய் சொல்லும்போது "ஆமாம்" என்கிறேன் நான்!

- பி. சாரதாதேவி, சிவகாசி.



ஸ்ரீரங்கபாட்டி சொல்லைத் தட்டாதே!

எங்கள் ஸ்ரீரங்க பாட்டி சொல்லுவார் "வீட்டில வேப்பமரம் உள்ளவர்கள் பிறருக்கு வருடத்திற்கான வேப்பம் பூக்களைச் சேகரித்துக் கொடுக்கும் பொழுது, அத்துடன் சிறிது வெல்லமும் மறக்காமல் கொடுங்கள்" எத்தனை அருமையான யோசனை பாருங்கள்! கசப்பான பொருளை இனிப்புடன் கொடுக்கும் பொழுது பெறுபவர் முகத்திலும் மலர்ச்சி.

- சியாமளா ராஜகோபால், சிட்லபாக்கம்.

வங்க மூலக்கதை:
ஆஷா பூர்ணாதேவி

தமிழாக்கம்:
புவனா நடராஜன்

"இத பாரு ஆலோ... உனக்கு தைரியம் ரொம்ப ஜாஸ்தி ஆயிடுத்து. ஒரு தடவை அப்பாவைப் பார்த்ததிலேயே இத்தனை துணிச்சலா? இத்தனை பாசமா? கடைசியில இன்னும் தெரியும்... தெரியும்... இப்படி நடக்கும்னு அவருக்குத் தெரியும். இப்படி நடக்கணுமின்னுதானே அவரும் வந்தார். ஆனால் நான் அப்படி நடக்க விடமாட்டேன். அவருடைய எண்ணம் நிறைவேற நான் விடமாட்டேன்'' திடீரென்று கட்டிலின் மீதிருந்த பெண்ணின் நோட்டுப் புத்தகத்தை எடுத்து, உரத்த குரலில் கத்தியபடியே, ஓங்கித் தரையில் அடித்தாள். உள்ளிருந்து கசங்கிய, கிழிந்த ஒரு தாள் கீழே வந்து விழுந்தது.

கோபத்தினாலும், சுய கௌரவ உணர்ச்சி காரணமாகவும் குருடாகிப் போயிருந்த பூர்ணிமா அந்தப் பக்கங்களையெல்லாம் எடுத்து சுக்குநூறாகக் கிழித்துப் போட்டாள். கடுமையான குரலில், "உன்னை எச்சரிக்கை செய்து வைக்கிறேன் ஆலோ... நீ அவருடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது. வைத்துக்கொள்ள முயற்சியும் செய்யக் கூடாது...''

ஆலோவால் அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அழுதுகொண்டே "உன் பேச்சை நான் கேட்க மாட்டேன். உன் அதிகாரத்தை ஒப்புக் கொள்ள மாட்டேன். நான் போய் விடுவேன். என் அப்பாக்கிட்டே போய் விடுவேன். ஏன் என் கடிதாசை நீ கிழிச்சுப் போட்டே? நீங்கள்லாம் கொடூரமானவா. நீங்கள்லாம் கோபக்காரா... அப்பா நல்லவர்... நிச்சயம் நல்லவர். அவரைப் பார்த்தாலே தெரிகிறது. நான் தனியாகவே என் அப்பாகிட்டே



போறேன்..."

உடைந்த சுவரின் செங்கல் தூண் மேலேறி, ஜன்னலின் வழியாக வந்தும், ஒரேயடியாக உள் அறைக்குள் நுழைய முடிந்ததா அதீந்திரனால்?

தேன் நிலவு 13



கனவுகள் எல்லாமே கலைந்து போய் விட்டது. இறந்த காலத்தின் இருபத்தி இரண்டு வயது இளைஞன் தோற்றுப் போய் விட்டான். சற்றே வயதான ஆண் மகன், துரித நடையில் முன்னேறி வந்து, அழுது முகம் வீங்கிக் கிடந்த பெண்ணை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு, "நீயே ஏன் தனியா வரணும் அம்மா? நான் உங்க எல்லாரையும் அழைச்சிண்டு போகத்தானே வந்திருக்கேன். உன்னோட பொல்லாத அம்மாவின் பேச்சை நானும் கேட்க மாட்டேன்... அழைச்சிண்டு போகாம விட மாட்டேன்..."

தந்தையின் இந்த திடீர் எதிர்பாராத

வரவைக் கண்டு ஸ்தம்பித்துப் போனா ன் ஆலோ!

பெண்ணின் நெற்றியை அன்புடன் வருடிவிட்டு முகத்தைத் திருப்பி, பூர்ணிமா இருந்த பக்கம் திரும்பிப் பார்த் தான். ஆன வனுக்கு அவளை அடையா யவில்லை. இது யாரோ நினைத்தான். பூர்ணிமா போல நின்று கொண்டிருந்

சிலையின் கண்களில் நெருப்பு ஏன்?

"தயாராக இரு பூர்ணிமா. இன்று உங்கள் எல்லாரையும் அழைத்துப் போகத் தான் போகிறேன். நான் தனியாகப் போகப் போவதில்லை. சண்டை, விவாதம் எல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம்."

ஆனால் இது என்ன? கண்களிலிருந்த நெருப்பு உடல் முழுவதும் பரவி, திகுதிகு வென்று அந்த மரச் சிலையையே எரித்து விட்டதா? அதனாலேயே குரலிலும் நெருப்பு தெறித்து விழுந்ததா?

"தயாராக இருப்பதா? எதற்குத் தயாராக இருக்க வேண்டும்? யார் நீங்கள்? ஏன் இங்கே வந்தீர்கள்? மனிதர்களை வைத்துக்கொண்டு பொம்மை விளை யாட்டு விளையாடுகிறீர்கள் இல்லையா?"

"பூர்ணிமா நீ எப்படி மாறிப் போய் விட்டாய்? எத்தனை மாறிப் போய் விட் டாய்."

பூர்ணிமா தன்னைத்தானே சட் டென்று பார்த்துக் கொண்டாள். ஏதோ கண்டபடி உடுத்திக் கொண்டிருந்த, ன்ன பார்டர் போட்ட புடைவை அணிந்து கொண்டிருந்தாள். அழுக்கிலும், எண்ணெய்ப் பிசுக்கிலும் தோய்ந்த வெள்ளை சங்கு வளையல்கள், பலவீனமாகிப் போய் விட்ட ஆபரணமில்லாத, அந்த மெலிந்த கைகள், வளையல்களிடம் சிறைப் பட்டவை போல நின்றன.

தலைமுடி ஜடா முடி போல சடைப் பிடித்து நின்றது.

முகத்தில் எத்தனை வருடத் துக்கம்?

அவளுடைய குணம்! சீ! சீ!

தன்னைப் பார்க்க, தான் செய்த குற்றத்துக்கெல்லாம் மன்னிப்புக் கேட்க வந்த அதீந்திரன், சொந்தப் பெண் இவர் களுடன் சண்டை போட்டாள் பூர்ணிமா!

ஆனால் தவறு அவளுடையதா?

ஏன் இப்படி திருட்டுத்தனமாக வந் தான்?

திருடன், திருடன் எப்போதுமே திருட்டுத்தனம்.

பளபளக்கும் கத்தி போன்ற அவள் முகம், தன் கீழ் ஓர் அரக்கனை பார்த்தது. இவனைப் பார்த்து கனிவாகப் பேச வேண்டுமா? அன்பு காட்ட வேண்டுமா? பரிவாகப் பேச வேண்டுமா? இல்லை பணிவாகத்தான் பேச வேண்டுமா? என்ன அவசியம்? தலையை நிமிர்த்தி அதிகார மாக வெறுப்புடனேயே எதையும் சொல்லுவாள்.

"மாறி விட்டேனா? பெரிய தவறு நடந்துபோய் விட்டது இல்லையா? ஒரேயடியாக மாறாமல் இருந்திருக்க வேண்டும் இல்லையா? யார் உடம்பில்

வாடுமோ வாழைப்பூ!



நாம் வாழைப் பூவை வாங்கினால் அன்றோ, மறுநாளோ சமைத்து விட வேண்டும். அப்படிச் சமைக்க முடியாத போது, வாழைப் பூவை வெளிப்புறமாக ஒரு சணல் கயிற்றால் இறுகக் கட்டி வைத்து விட்டால், மடல்கள் விரியாமலும் பூக்கள் கெடாமலும் இருக்கும். இது நான் கடையில் வாழைப்பூ வாங்கும் போது காய்கறிக்காரம்மா சொன்னது.

- பிருந்தா இரமணி, மதுரை

Anandam

Haven of Happiness

ஆனந்தம்
உலவிடும் விலாசம்



கோவையின் நிலப்பரப்பை அழகிய கட்டிடங்களால் அலங்கரித்திட வேண்டும் என்ற எமது இலட்சியத்திற்கு கிடைத்த மற்றுமொரு பரிசு – ஆனந்தம்.

திருச்சி சாலையில், இராமநாதபுரம் சந்திப்பிலிருந்து செல்லும் நஞ்சுண்டாபுரம் ரோட்டில் அமைந்துள்ள ஆனந்தம், உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் ஒரு ஆனந்தமிகு வாழ்வை வழங்கும் ஓர் எழில்மிகு குடியிருப்பு.

கண்ணையும், கருத்தையும் கவரும் கட்டிடக்கலை வடிவமும், உட்புறத் தோற்றமும், அதிநவீன வசதிகளும் பெற்றுள்ள ஆனந்தம், அனைவரும் சொந்தமாக்கிடும் விலையில் கிடைப்பது இதன் மற்றுமொரு சிறப்பு.

உங்கள் இல்லக் கனவுகளை நனவாக்கிட, ஆனந்தம் குடியிருப்பில் உங்கள் இடத்தை முன்பதிவு செய்யுங்கள். வாழ்நாள் முழுவதும் ஆனந்தம் அனுபவியுங்கள்.

ஆனந்தம் வழங்குவது :

• 1.5 ஏக்கர் நிலத்தில், மிக உன்னதமாக வடிவமைந்த 72 அடுக்குமாடி குடியிருப்புக்கள் • மூன்று பிளாக்குகளில் 2/3 படுக்கையறை குடியிருப்புக்கள் • லே–அவுட் முழுவதும் தார் சாலைகள் • நீச்சல் குளம் • ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட 'லவுன்ச்' • உடற்பயிற்சிக்கென ஜிம் • லிப்ட், பொது இடம் மற்றும் குடியிருப்புகளுக்கென எப்பொழுதும் தயார் நிலையில் ஜெனரேட்டர் • தண்ணீரை தூய்மையாக்கும் வசதிகள் • சோலார் வாட்டர் ஹீட்டர் மற்றும் கீஸர் • சென்ட்ரல் கேஸ் விநியோகம் • குடி இருப்போர் மற்றும் விருந்தினருக்கான கார் பார்க்கிங் வசதிகள் • 24 மணி நேர பாதுகாப்பு • இன்டர்காம் • தீயணைப்பு ஏற்பாடுகள் • அழகுபடுத்தப்பட்ட பூங்கா.

வீட்டுக் கடனுதவி வழங்குவோர் :

• HDFC லிட். • ICICI பேங்க் ஹோம் லோன் • SBI ஹோம் லோன் • கனரா வங்கி

Our representatives:
Chennai : Ms. Gita Ramesh, Ph : 044 - 24463063
Muscat : Mrs. Latha Natarajan, Ph : +96895296698

Project Developers : **M/s Auromira**

முதல் புக்கிங் செய்பவருக்கு *modular kitchen* இலவசம்

COVAI
PROPERTY CENTRE (INDIA) PRIVATE LIMITED

C 601, Pioneer Apartments, 1075 Avinashi Road,
Coimbatore - 641018. Ph : 91-422-5572625,
Telefax : 2216867. Mobile : 098943 - 17841.
Email : covaiprop@vsnl.net
Website : www.covaiprop.com

AN EX-SERVICEMAN'S ENTERPRISE

Manipal/CPC/06

வெட்கம், மானம் என்று ஒன்றிருக்கிறதோ அவர்கள் நிச்சயம் மாறுவார்கள். யார் உடம்பில் வெட்கம், மான அவமான உணர்ச்சிகள், கௌரவம், நியாயம், அநியாய பாதிப்புகள் இல்லையோ அவர்கள் நிச்சயம் மாற மாட்டார்கள்."

ஸ்தம்பித்துப் போய் விட்டான் அதீந்திரன். சிலையாக நின்றான். குத்திட்டு நின்ற கண்களால், பூர்ணிமாவைப் பார்த்துக் கொண்டே நின்றான். கிட்டத்தட்ட பதினாறு வருடங்களுக்கு முன்னால் சலசலத்துக் கொண்டிருந்த வேப்ப மரம், இன்றும் மாறாமல் சலசலத்துக் கொண்டிருந்தது பூர்ணிமாவின் சுற்றிலும் எந்த மாறுதலும் இல்லை. சூழ்நிலையிலும் எந்த மாறுதலும் இல்லை.

அதோ அந்த தாழ்வாரத்தின் ஓரத்தில், நிலவின் ஒளிக்கீற்று வந்து விழும். பதினாறு வருடங்களுக்கு முன்பும் இப்படித் தான் விழுந்து கொண்டிருந்தது. உடைந்து கிடந்த சுவர்கள் வெறுமே இந்த ஒளிப் போர்வையைப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருக்கும் இலைகளினூடே ஊடுருவிய வெள்ளி ஒளிக்கற்றைத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது.

அந்த வெள்ளி ஒளிக்கீற்று, இன்னும் கீழே இறங்கி வரவில்லை. இன்னும் மரம், இலைகளில், சுவரில், முற்றத்தில், மாடுகள் கிளப்பி விடும் புழுதிப் படலம் போல பரவிக் கிடந்தது.



கால் முறிந்து படுக்கையில் கிடந்து புலம்பும் பாட்டிக்கு வாக்மேனுடன் பக்திப் பாடல் சிடி வாங்கிப் பரிசளித்தான் பேரன். இசை சிகிச்சையால், பாட்டிக்கு விரைவான குணம் கிடைத்தது. அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்தால் கேட்கணுமா?

- மீரா வீரராகவன், குஜராத்.

முடிவே இல்லாத இந்த ஐஸ்வரியத்தை இயற்கை எங்கிருந்து பெறுகிறது? ஒரு துளியை மனிதனுக்கென்று கொடுக்கக் கூடாதா? மனிதன் மட்டும் அழிந்து போவதென்றால் ஒரேயடியாக அடையாளம் தெரியாமல் அழிந்து போகிறானே.

"அப்பா!"

தாயிடமிருந்து விலகி தந்தையிடம் ஒட்டிக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினாள் ஆலோ! "நானும் உங்களுடன் வருவேன்... வருவேன்... கட்டாயம் வருவேன்..."

"கட்டாயம் வருவேன்."

திடீரென்று பூர்ணிமாவின் கண்களில் ஒரு பொறாமையின் நிழல் விழுகிறது. உதட்டின் ஒரு ஓரம் வெறுப்பினால் சுழிந்தது.

"ஹாங்... கட்டாயம் வருவேனா? கெட்டிக்காரத்தனம்... எங்கே போவாய் சொல்லு பார்க்கலாம். ஹாட்கோலாவின் ராய் வீட்டுக்கா? என்ன காரணம் சொல்லிக்கொண்டு போவாய்? உனக்கு என்ன உறவு அவர்கள்? அவர்கள் யாரும் இத்தனை வருஷமாக என்றைக்காவது உன்னைக் கூப்பிட்டார்களா? உன் கதையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று துடித்தாய் இல்லையா? அப்போ, இப்போது கேளு கதையை... உலகத்தை சாட்சியாக வைத்து இன்று உண்மையைச் சொல்கிறேன்... 'நீ இன்னும் பிறக்கவில்லை. என் வயிற்றினுள்ளே சிறிது சிறிதாக வளர்ந்து கொண்டிருந்தாய். பிச்சைக்காரி போல அந்த ஹாட்கோலாவின் ராய் வீட்டு வாசலுக்கு... மிகப் பெரிய வீடு. பெரிய இரும்புக் கதவு... அப்படியும் அந்தக் கதவைத் தட்டப் போனார் உன் தாத்தா. ஆனா அந்தக் கதவைத் தட்டக் கூட விடவில்லை. அன்று 'தூரப் போ தூரப் போ' என்று முகத்தின் மீதே கதவை மூடி விட்டார்கள்.

"நீ சின்னக் குழந்தை என்பதால் இது பற்றியெல்லாம் உன்னிடம் இதுநாள்வரை சொல்லவில்லை. ஆனால் நீ சின்னக் குழந்தையாக இருக்க விரும்பவில்லை என்பதைப் பார்க்கிறேன்" ஜுரம் கண்ட



இட்லி மாவில் ஒரு கரண்டி நெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி நன்கு கலந்து பாருங்கள். இட்லி மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும்.

- பூ. பிரேமா, திருநெல்வேலி

நோயாளியைப் போல அவளுடைய இயற்கை குணத்திற்கு மாறாகச் சொல்லி கொண்டே போகிறாள் பூர்ணிமா.

''இத்தனை தூரத்திற்கு உன்னை வளர்த்து ஆளாக்கிய என்னை அவமானப்படுத்திவிட்டு, அப்பாவுடன் போக நினைக்கிறாய். அவர் யார், என்ன என்று கூட உனக்குத் தெரியாது. இவர்கள் உன்னைக், காலில் இருக்கும் சேற்றைப் போலத் தூக்கி வெளியே விட்டெறிந்தார்கள். சொன்னார்கள், ''நீ அழுக்கானவள், தூய்மை இல்லாதவள், கன்னித் தாயின் களங்கம் நிறைந்த குழந்தை இது'' என்று. அந்த அவமானத்தைத் தலையில் சுமந்து கொண்டு வந்தேன். உன்னை அடித்துக் கொல்லவில்லை. குப்பையில் தூக்கிப் போடவில்லை. என் உயிரைக் கொடுத்து, என் கஷ்டங்களையெல்லாம் மறந்து, என் துக்கங்களையெல்லாம் மறந்து, என் அவமானங்களையெல்லாம் மறந்து உன்னை வளர்த்து ஆளாக்கியிருக்கிறேன்.. ஆனால் நீ... ஆமாம் இப்படித்தானே நீ நடந்து கொள்வாய்... உன்னைச் சொல்லிக் குற்றமில்லை...'' பயங்கரமான பெருமூச்சு விட்டாள் பூர்ணிமா. பயத்தினால் வாய் அடைத்துப்போயிருந்த இரண்டு ஜீவன்களுக்கு முன்னால், ''இதுதானே உன் நன்றி... எப்பேர்ப்பட்ட குடும்பத்தில் பிறந்திருக்கிறாய்? நிஷ்டூரமான, இதயமில்லாத...''

''பூர்ணிமா!''

பெண்ணை நகர்த்தி விட்டு, வேகமாக ஓடிப்போய், கோபத்தாலும், ஆத்திரத்தாலும் கொதித்தும் நடுங்கியும் கொண்டிருந்த அவளைப் பிடித்துக் கொண்டான். தாங்க முடியாத அன்புடனும், ஆதுரத்துடனும், அவளைத் தன் மார்போடு இழுத்து ஆரத் தழுவிக் கொண்டான்.

''பூர்ணிமா ஒரு நிதானத்துக்கு வா. அமைதியாக இரு... என் அப்பாவின் அந்தப் பயங்கரமான பாவத்துக்கு பிராயச்சித்தம் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடு. நான் உன்னை அழைத்துப் போகி

இரத்த அழுத்தம் உள்ளவர்கள் காலையில் எழுந்திருக்கும் பொழுது உடனே சட்டென்று எழுந்திருக்காமல் பக்கவாட்டில் 5 நிமிடம் படுத்துவிட்டு எழுந்து கட்டிலில் ஒரு 5 நிமிடமாவது உட்கார்ந்து எழுவது நல்லது.

- டி. சாந்தா, ஹைதராபாத்.



றேன். எந்த வீடு தவறான எண்ணத்தில் உன்னை உள்ளே அனுமதிக்க மறுத்ததோ, அந்த வீடு இன்று தன்னுடைய எல்லாக் கதவுகளையும் திறந்து விட்டுக்கொண்டு உனக்காகக் காத்திருக்கும். உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. எனக்கே தெரியாமல் நடந்த அந்தத் தவறுக்கு என்னை மன்னிக்க மாட்டாயா? இஷ்... இது என்ன? பூர்ணிமா! பூர்ணிமா.... பூர்ணி... ஆலோ! ஆலோ... ஜலம்... ஜலம் கொஞ்சம் ஜலம்...''

ஆம். மேலே என்ன நடக்கிறது என்றே புரியவில்லை பூர்ணிமாவுக்கு. தடுமாறினாள். தவித்தாள். வெகு காலத்துக்குப் பிறகு திடீரென்று அனுபவித்த அந்தக் கைகளின் தழுவலால்... ஸ்பரிசத்தால் ஏற்பட்ட உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் உடலின் துடிப்பில். உள்ளத்தின் தவிப்பில் தன் நினைவு இழந்தாள்... பூர்ணிமா! அந்த அன்புத் தழுவலின் ஸ்பரிசத்தில் எல்லா தவறுகளுமே கரைந்து மறைந்து போயிற்று. வானத்தையும், பூமியையும், காற்றையும், செடி கொடிகளையும் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றையுமே மறந்தாள். ஜுரம் கண்ட நோயாளிக்கு தூக்க மருந்து கொடுக்கும் சுகம் போல, மனதை மோகிக்கச் செய்யும் ஓர் அனுபூதி அவளை அப்படியே அலக்காகத் தூக்கிக் கொண்டு, சமுத்திரம், மலை, தீவுகள் எல்லாவற்றையும் கடந்து, இன்னொரு உலகத்துக்கு அழைத்துச் சென்றது.

அந்த கர ஸ்பரிசத்தை, தழுவலை, அன்பின் வெளிப்பாட்டை பூர்ணிமாவால் தாங்க முடியவில்லையா? சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பி தாக்கியது போல தன்னை மறந்து, மயக்கத்தில் மூழ்கிப் போய்க் கொண்டிருக்கிறாளா?

பூர்ணிமா இறந்து போய் விடுவாளோ?

அவன் மடியில் தலையை வைத்துக் கொண்டு இறக்க வேண்டும் என்றுதானே ஒரு காலத்தில் பூர்ணிமா விரும்பினாள்.

"பூர்ணிமா! பூ...ர்ணி....மா! இது என்ன? ஏன் இப்படிச் செய்கிறாய்? நான் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமல் இப்படி இறந்து போய் விட்டாயே.''

(நிலவு வளரும்)



ஆல்பம்



• அனிஷ்



தாத்தா : வி.ஆர். சங்கரன்,
பாட்டி : ராஜலக்ஷ்மி,
சென்னை - 78.



ஆதித்யா



வருண் ஆனந்த்

தாத்தா : பத்மனாபன்,
ராஜேஸ்வரி, மைசூர்-2.



தாத்தா :
வி.வெ. சந்தானம்
பாட்டி : எஸ். நாகலக்ஷ்மி,
சென்னை - 17.

என் செல்லமே!




குழந்தை: அம்பிகா
தாத்தா : கிருஷ்ணமணி
பாட்டி : சீதாலக்ஷ்மி,
மேற்கு மாம்பலம்.

'கடகட'

"ஒரு கச்சேரி சோபிக்கிறது என்றால் வாய்ப்பாட்டுக்காரரின் வித்வாம்சம், குரல் வளம், சங்கதிகள் பிருகாக்களினால்... மாத்திரம் அல்ல, பக்கவாத்தியங்களினாலும்தான். ஆனால் ஒரு சங்கீத விமர்சனம் எழுதும்போது பக்கவாத்தியங்களைப் பற்றி பெரும்பாலும் ஒரு வரி இரண்டு வரிதானிருக்கும். நாங்களும் அதே சாதகம்தானே பண்ணுகிறோம்? மேலும் பாடுகிற கலைஞர்கள் ஒரு கச்சேரி என்றால் முன்னேற்பாடுடன் வருவார்கள். 'இன்ன வர்ணம், கீர்த்தனை, நிரவல்... என எங்களுக்கு மேடையேறின பிறகுதான் தெரியும். ஸ்பான்டேனியஸாக வாசிக்கணும், அதிலும் மிருதங்கக்காரர் அனுமதித்த பிறகே...! எங்களுக்குக் கிடைக்கும் நேரமே மிக மிகக் குறைச்சல். மெயின் பாடகர், வயலின், மிருதங்கம்.. இவர்களுக்குப் பிறகே, இவர்களின் கண்ணசைவுக்குப் பிறகே வாசிக்க வேண்டிய கட்டாயம். இதையெல்லாம் தாண்டி வாசித்தாலும் தனி ஆவர்த்தனம் தொடங்கியவுடன் கும்பலாக எழுந்து வீட்டுக்குப் போக ஆரம்பிக்கும் பொது மக்களை என்ன சொல்ல? எங்களையும் உற்சாகப்படுத்தலாமே... கடம் என்பது உப பக்க வாத்தியமாகக் கருதப்படுகிறது... கடத்திலிருக்கும் அழகுகள், லயத்தைப் பற்றி சராசரி மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்...'' கடகடவென பேசுவது இந்தியாவின் ஒரே பெண் கடம் விதூஷகியான, பெங்களூரிலிருக்கும் சுகன்யா ராம்கோபால்.





கடத்திற்கு ஒரு முக்கியமான அந்தஸ்தைத் தர பாடுபட்டுக் கொண்டிருக்கிறார், கடந்த முப்பது வருஷங்களாக பல்லாயிரக்கணக்கான கச்சேரிகள் செய்த சுகன்யா!

"92-ல் கடதரங்கம் என ஒரு புதுமைக் கச்சேரி செய்தேன். வரிசையாகக் கடங்களை ஸ்வரங்களின் அடிப்படையில் அடுக்கி ஒரு ராகத்தை எடுத்துக்கொண்டு வாசித்தேன். அது ஒரு புது முயற்சி... பிறகு 96-ல் 'ஸ்த்ரீ தாள் தரங்' என்ற பெண்கள் வாத்தியக் குழு ஆரம்பித்தேன். வயலின், வீணை, மோர்சிங், கஞ்சிரா, கொன்னக்கோல், கடம்... என இந்த இசைக்குழுவில் அனைவருமே பெண்கள். நாங்கள் எல்லோருமே பிஸியான ஆர்ட்டிஸ்டுகள். இருந்தாலும் பக்காவாக ப்ராக்டீஸ் பண்ணுவோம். ரெயின்போ என ஒரு ம்யூசிக் ஆல்பமும் வெளியிட்டுள்ளோம். நம் புராணங்களில் கூட வாய்ப்பாட்டு, வீணைக்கு நிகராக முன் சீட்டில் உட்கார ஒரு கடம் வித்வானுக்கு அருகதை உள்ளது என விவரம் உள்ளது. வால்மீகி ராமாயணத்தில், கிருஷ்ண ராச லீலையில் கூட இந்த வாத்தியத்தைப் பற்றி எழுதியுள்ளார்கள். பெண் கலைஞர்களுக்கும் சான்ஸ் தர வேண்டும்...'' விநயமாகக் கேட்டுக் கொள்கிறார் சுகன்யா.

சுகன்யா, கடம் வித்வான் பத்மஸ்ரீ விக்கு விநாயகராமின் சிஷ்யை. தமிழ்



தாத்தா உ.வே. சாமிநாத அய்யரின் கொள்ளுப் பேத்தி. "சின்ன வயசில முதலில் பாட்டுதான் கத்துண்டேன். ஆனா கோயில், கல்யாண வீடுகளுக்குப் போனா தவில், மிருதங்கம், கடம் போன்ற வாத்தியங்களைத்தான் ரசிப்பேன். பிடிவாதம் பிடிச்சு முதலில் மிருதங்கம் கற்றுக் கொண்டேன். விநாயகராம் ஸாரின் அப்பா ஹரிஹர சர்மா அவர்கள்தான் என் முதல் குரு. விநாயகராம் ஸார், 'உன்னால் முடியாது. கஷ்டம், மண்

சுகன்யா

வாத்தியம்...' என்றெல்லாம் அவர் சொல்லச் சொல்ல தீவிரமாகி அவர் அப்பாவிடமே முதலில் கற்று தேர்ச்சி பெற்றேன். பிறகே விநாயகராம் ஸார் ஏற்றுக் கொண்டார். 15 வயதிலிருந்து மேடையேற்றம். பலரிடமிருந்தும் பாராட்டுக்களையே பெற்றிருக்கிறேன்... என் தாத்தாவுக்குக் கூட (உ.வே) தமிழ், இசை இரண்டிலுமே அபார ஆர்வமாம். பிறகு இசையை விட்டு தமிழைப் பிடித்துக் கொண்டாராம். இப்போதும் என்னைப் பார்த்து தாத்தாவின் மறுபிறவி என சொல்வதுண்டு...'' சிரிக்கிறார் சுகன்யா.

ஒரு வருஷத்தில் சுமாராக 200 கச்சேரிகள் செய்யும் சுகன்யாவின் கைகளைப் பார்த்துத் திடுக்கிட்டோம். காய்ந்து போயிருந்தது. திட்டுத் திட்டாக, முடிச்சு முடிச்சாக கன்றிப் போயிருந்தது. ''இது சகஜம்'' எனச் சிரிக்கிறார். மானாமதுரையிலிருந்து ஸ்பெஷல் கடம் வாங்கி ஒரு அறை முழுவதும் 50 கடங்கள் வரை அடுக்கி வைத்திருக்கிறார்.

"ஒருமுறை சேலத்தில் கதிரி கோபால்நாத்தின் கச்சேரி. ஹரித்வாரமங்கலம் பழனிவேல் தவில்... நான் 'தனி' வாசிச்ச பிறகு "பிச்சு உதறிட்டேம்மா. எனக்கு புல்லரிச்சுடுத்து'' என்று என்னை மனதாரப் பாராட்டியதை என்னால் வாழ்நாளில் மறக்கவே முடியாது... ஒருசில கலைஞர்கள், "பெண் கடம் வாசித்தால் எங்களுக்குச் சரிப்பட்டு வராது'' என்றும் சொல்வதுண்டு. மனப்பூர்வமாகப் புகழ்பவர்களும் உண்டு. பொதுவாகக் கடம் வாசிப்பவர்களுக்கு பொறுமை, பாடுபவரின் மனோபாவம், மென்ட்டல் டெலிபதி.. இதெல்லாம் தெரிந்திருத்தல் அவசியம்! கிடைச்ச சான்ஸில் விளாசித் தள்ளி விட வேண்டியதுதான்...'' என்கிறார்.

கடத்தைப் பற்றிப் புத்தகம் எழுத அவா எனும் சுகன்யாவுக்கு ஒரே ஆச்சர்யம் என்னவென்றால் ஏன் பெண்கள் இத்துறைக்கு வருவதில்லை என்பதுதான். "சொல்லித் தர காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்கிறார்.

'ஸ்த்ரீ தான் தரங்கம்' மூலமாக சுகன்யா உப பக்கவாத்தியங்களுக்கெல்லாம் உபயோகமான ஒரு இடத்தைப் பிடித்துக் கொடுப்பதில் குறியாக இருக்கிறார்.

கலக்குங்க மேடம்!

- லதா சேகர்



கோர்ச்சர் சிரிப்பு - வரிசை

அதிகம் அசைவு;

கட்டுரை ஆக்கம் : ஜி.எஸ்.எஸ்.

''சென்ட்ரல் ரயில்வே நிலையத்தில் போன மாதம் ஒரு தகராறு'' என்று தொடங்கினார் ஒருவர். அங்கு தகராறு இல்லாவிட்டால்தானே அது செய்தி?

''ஒரே ஒரு சூட்கேஸ்தான். அதைத் தூக்கிட்டு வர ஐம்பது ரூபாய் கேட்டார் போர்ட்டர்'' என்று அவர் தொடர, அவர் மனைவி வெகுவேகமாக நடுவில் புகுந்தார்.

''கொடுத்துத் தொலைச்சிருக்கலாம். அல்லது பேரமாவது பேசியிருக்கலாம்.



ஆனால், 'நான் எதுக்கு இருக்கேன்?' என்ற படி இவர் டக்கென்று குனிந்து சூட்கேஸைத் தூக்கினார். அவ்வளவுதான், முதுகு பிடிச்சுக்கிடுச்சு. அப்போ பிடிச்ச முதுகு இப்போதும் நிமிர்ந்த பாடில்லே'' என்றார்.

முதுகுப்பிடிப்பு எனும்போது ஜவ்வுகள் குறித்துப் பேசியே ஆக வேண்டும்.

(யாரோ எதிரில் துப்பாக்கியோடு ''அப்படியே அசையாமல் நில்லுங்க'' என்று கட்டளையிட்டது போல் நிரந்தரமாக ஒரு பெண்மணியைச் சென்ற இதழில் குறிப்பிட்டோமே, அதற்குக் காரணமும் அவரது முதுகெலும்பின் நடுவிலுள்ள ஜவ்வுகள் தேய்ந்திருந்ததுதான்).

வீட்டு வாசல்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் பலகையில் அந்த வீட்டு ஆணின் (குடும்பத் தலைவர்) பெயர்தான் பெரும்பாலும் காணப்படும். ஆனால் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து அந்தக் குடும்பத்தை தலைநிமிர வைப்பதில் பெண்ணுக்கே அதிக பங்கு உண்டு என்பது நமக்குத் தெரியும்.

அந்த மாதிரிதான் இதுவும். முதுகெலும்புத் தொடர் என்றதும் அதிலுள்ள எலும்புச் சங்கிலிதான் நினைவுக்கு வரும்.

ஆனால் அந்தச் சங்கிலியை வளைந்து நெளிந்து கொடுக்க வைத்து அதை அழகாக இயக்குவது அதைச் சார்ந்த தசைகளும், நார்களும், முதுகெலும்புகளுக்கு நடுவே இருக்கும் ஜவ்வுகளும்தான்.

முதுகெலும்பின் பலம் அதில் உள்ள எலும்புகளின் உறுதி மட்டுமல்ல. அவை எந்த அளவுக்கு வளைந்து கொடுக்கின்றன என்பதும்தான்.

அப்படி வளைந்து கொடுப்பதால்தான் நம்மால் குனியவும் நிமிரவும் முடிகிறது. இப்படிக் குனிந்து நிமிர முதுகுப் பகுதியில் உள்ள தசைகளின் இயக்கம் தேவை. அதே சமயம் இந்தத் தசைகள் இயங்கும்போது எலும்புகள் எந்த அதிர்ச்சியும் இல்லாமல் செயல்பட வேண்டுமென்றால் அதற்கு ஜவ்வுகளின் பங்கு மிக முக்கியம்.

இந்த ஜவ்வுகள் முதுகெலும்புகளுக்கு நடுவே அமைந்துள்ளன. இப்படி மொத்தம் 24 ஜவ்வுகள். ஸ்பெஷல் திசுக்களினால் ஆனவை இவை. வெளியில் நார்போலவும் உள்ளே ஜெல்லி போன்ற கொழகொழ திரவத்தாலும் ஆனவை.

முதுகெலும்பில் இருபத்து நான்கு ஜவ்வுகள் இருந்தாலும், அவற்றில் சிலதான் பெரும்பாலும் சீக்கிரம் தேய்கின்றன. காரணம் அவற்றைச் சுற்றியுள்ள எலும்புகள்தான் அதிகமாக அசைகின்றன.

நடுமுதுகிலிருந்து இடுப்புக் கட்டுவரை உள்ள முதுகெலும்புப் பகுதியை 'லம்பார்' பகுதி என்போம். இந்தப் பகுதியில் ஐந்து



எலும்புமுறிவு
சிகிச்சை மருத்துவர்
டாக்டர்
எம். பார்த்தசாரதி

முக்கியமாக லம்பார் பகுதியிலுள்ள 4-5 எலும்புகளுக்கு நடுவே உள்ள ஜவ்வு தேய்ந்து விலகும்போது, முதுகில் முதலில் பிடிப்புப் போல் ஏற்படுகிறது. பிறகு எப்போதாவது எக்கச்சக்கமாக குனியும்போதோ சடாரென்று திரும்பும்போதோ சட்டென்று இந்த ஜவ்வு மிகவும் விலகுகிறது. அப்போது கீழ் முதுகிலோ இடுப்புமூட்டின் பின்புறத்திலோ, தொடையிலோ கொக்கி போட்டு இழுப்பதைப் போல் சுரீர் என்ற வலி ஏற்படும்.

கீழ்முதுகில் ஜவ்வு விலகினால் தொடையில் ஏன் வலி உண்டாக வேண்டும்? தொடைத் தசைகளை வேலை செய்ய வைக்கும் நரம்புகள் கீழ் முதுகின் வழியாகத்தான் பயணம் செய்கின்றன. ஜவ்வு விலகுவதால் அந்தப் பாதை குறுகி

அதிகம் தேய்வு!

எலும்புகள் உள்ளன. அவற்றில் 3-4 மற்றும் 4-5 ஆகிய எலும்புகளுக்கிடையே அசைவுகள் மிக அதிகம் என்பதால் அங்குள்ள ஜவ்வுகள் வேகமாகத் தேய்கின்றன. இதனால் அந்த எலும்புகளுக்கிடையே இடைவெளி குறைகிறது.

நரம்புகளுக்குச் செல்லும் ரத்த ஓட்டமும் குறைகிறது. அந்த நரம்புகளின் மேல் நேரடி அழுத்தமும் அதிகமாகிறது. இதனால்தான் அந்த வலி தொடை அல்லது கால் பகுதியில் குடைச்சலாக வெளிப்படுகிறது.

வயதான குழந்தைகளை வளர்ப்போம்!





நம் நாடு தற்போது சீனாவுக்கு அடுத்தபடியாக வயதான குழந்தைகள் அதிகமுள்ள நாடாக உள்ளது! ஆம், முதியவர்களைத்தான் சொல்கிறேன்.

முதிய தலைமுறை அதிகரித்திருப்பதற்கு முக்கியக் காரணம் இன்றைய மருத்துவ வசதிகள் அடைந்துள்ள முன்னேற்றம்தான். புதிய புதிய கண்டுபிடிப்புகள் ஒருவரது வாழும் காலத்தை உயர்த்துகிறது. அது எதற்காக? அவர்களிடமிருந்து நாம் பெறுவதற்கு இன்னும் சில பல உள்ளன என்பதால்தானே? ஆகவே அவர்களை ஒதுக்குவதை விட்டு அவர்களை எந்த வழியில் பயனுள்ளவர்களாக மாற்றிக் கொள்ளலாம் என யோசித்துச் செயல்பட வேண்டும்.

முதியவர்கள் தங்கள் உடல் வலிமை, மற்றும் அனுபவத்திறன் அடிப்படையில் பல வேலைகளையும் பணிகளையும் ஏற்றுச் செய்து வருகின்றனர். குடும்பத்தில் சிறிய (அ) எளிதாகச் செய்யக் கூடிய பணிகளைக் கொடுத்து அவர்கள் மனச்சோர்வு அடையாமல் கவனித்துக் கொள்ளலாம். இப்பொழுது பல பன்மாடிக் கட்டடங்களில் பாதுகாப்புப் பணிக்கு வயதான நபர்களை வைத்துள்ளனர். இது அவர்களது பொருளாதார நிலை உயர்வுக்கு ஒரு சிறந்த வழி. ஆனால் சில குடும்பங்களில், நல்ல நிலையிலுள்ள இளையவர்கள், முதியவர்களை உதாசினப்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் உடலால் பாதிப்பதை விட, மனத்தில் பாதிப்பு ஏற்பட்டு, குடும்பத்தை விட்டுச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இது மிகவும் தவறு. தன்னுடைய இன்றைய நல்ல வாழ்க்கை முறைக்கு வித்திட்டு வளர்த்து, உயர்த்தியவரை, பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு இளையதலைமுறையினரின் கடமையாகும்.

"வெள்ளையனே வெளியேறு" என்று அன்று மகாத்மா காந்தி முழங்கியதால்தான், இன்றைய இந்திய இளைஞர் நல்ல நிலையை அடைந்துள்ளனர். அதே இளைய சமுதாயம் 'முதியவரே வெளியேறு' என்று சொல்வது அநாகரிகச் செயல் அல்லவோ? வெளிநாட்டினர், நம் இந்திய சமுதாயத்தின் கூட்டுக் குடும்ப கலாசாரத்தையும், பாசம், நேசம் முதலானவற்றைக் கண்டும் கேட்டும் வியப்புறுகின்றனர். இத்தகையச் சூழலில் நாம் அதனை மறந்து முதிய குழந்தைகளைப் பராமரிக்காமல் இருக்கலாமா? பெருகி வரும் முதியோர் இல்லக் கலாசாரத்தை நாம் உடைக்க வேண்டும்.

வசதி படைத்தவர்கள், ஒரு முதியவரை தத்தெடுத்துக் கொண்டு, அவரைப் பேணி பாதுகாத்து சமுதாயத்திற்கு நல்ல உதாரணம் காட்டிட வேண்டும். இதனை இன்றைய இளைய சமுதாயம் நிச்சயமாக நினைக்க வேண்டும். ஏனெனில் நாளை அவர்களும் இதே முதிய குழந்தைகளாக மாறப் போகிறவர்கள் அல்லவா?

- வி. கணேசன்

இந்தியன் என்று பெருமை கொள்வோமடி!



- பாரத நாட்டின் அஞ்சல் துறைதான் உலகத்திலேயே மிகப் பெரிய அஞ்சல் துறை ஆகும்.
- உலகிலேயே அதிகம் பால் உற்பத்தி பாரதத்தில்தான்.
- வைரங்களுக்கு பட்டை தீட்டுவதிலும், ஏற்றுமதி செய்வதிலும் உலகிலேயே முதலிடம் பாரதத்திற்கே.
- சிமெண்ட் உற்பத்தியிலும் முதலிடம் பாரதத்திற்கே.
- தேயிலை உற்பத்தியில் உலகில் முதல் இடம் பாரதத்திற்கே. உலக உற்பத்தியில் 30 சதவிகிதம் பாரதத்தில்தான்.
- உலகிலேயே மிகப் பெரிய எண்ணிக்கையிலான வங்கிக் கிளைகள் பாரத நாட்டிலேதான் இருக்கின்றன.
- உலக வங்கியின் அளவுகோலில் நாலாவது பெரிய பொருளாதார நாடு பாரதமே.
- மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் (பங்குச் சந்தை)தான் உலகிலேயே இரண்டாவது பெரிய பங்கு பத்திர விற்பனை மையமாகும்.
- அமெரிக்கா மற்றும் ஜப்பானுக்கு அடுத்தபடியாக பாரதம்தான், உள்நாட்டிலேயே சூப்பர் கம்ப்யூட்டரை உருவாக்கியுள்ளது.
- உலகிலேயே முதலாவது பெண் பைலட்டை 1966ல் நியமித்தது இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம்:

நன்றி : **விவேகானந்த கேந்திரத்தின் 'சமர்த்த பாரதப் பருவம்' விழா வெளியீடு.**


என் பேத்தி இந்தி பிரவேஷிகா பரீட்சையை மேற்கு மாம்பலம் பள்ளி ஒன்றில் எழுதினாள். துணைக்கு என்னை அழைத்துச் சென்றிருந்தாள். 4 மணிக்கு பரீட்சை முடியும். அதுவரை அவளது தோழி 'எங்கள் வீட்டில் இருங்கள்' என்று அழைத்துப் போனாள். நான் போய் விட்டுத் திரும்பும் போது ஒரு வாலிபன் 30 வயது இருக்கும். என்னைப் பார்த்து "மாமி சௌக்கியமா?" என்றான். ''நீ யார்னே எனக்குத் தெரியவில்லை?'' என்றேன். ''என்னை மறந்து விட்டீர்களா? உங்களை நான் அடிக்கடி ஆபீஸில் பார்க்கிறேனே'' என்றான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''எந்த ஆபீஸ்? என் பெண் ஆபீஸிலா?'' என்று கேட்டதற்கு, "அங்குதான் அடிக்கடி உங்களைப் பார்க்கிறேன்'' என்றான்.

எனக்கு அடிக்கடி ஞாபகமறதி உண்டு. அதனால், "சரி இங்கு எதற்கு வந்தாய்?'' என்றதற்கு, "எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. உங்கள் செயின் டிசைன் நன்றாக இருக்கிறதே எங்கு வாங்கினீர்கள்?'' என்றான். நானும் பேக்கு மாதிரி "ஜி.ஆர்.டி. என்று கூறினேன்'' உடனே அவன், "இந்த மாதிரி என் மனைவிக்கும் வாங்க வேண்டும். மாடல் அழகாக இருக்கிறது. பக்கத்தில் ஆசாரி இருக்கிறார். வந்து 5 நிமிடத்தில் காட்டி விட்டுத் திரும்பி விடலாம்'' என்றான். ''சரி'' என்று மடத்தனமாகக் கூறினேன். "ஆட்டோ'' என்று கைதட்டினான். டிரைவரிடம் ''ஆச்சாரி கடைக்குப் போங்க'' என்றான். நானும் நம்பினேன்!

போகிறது ஆட்டோ, போய்க் கொண்டே இருக்கிறது. மாம்பலத்திலிருந்து அசோக் நகர் தாண்டி காசி தியேட்டர் பின் பாலம் கடந்து எங்கோ போய் நின்றது. ஆசாரியைப் பார்த்து வரச் சென்றவன் திரும்பி வந்து, "அவர் இல்லை கடை பூட்டியிருக்கிறது. சரி, சற்றுக் கழற்றிக் கொடுங்கள். டிசைன் பார்த்து விட்டுத் தருகிறேன்'' என்றான். எனக்கு அப்பவும் புரியவில்லை. ஆனால், நான் நல்லவேளை கழற்றிக் கொடுக்காமல், "இப்படியே பார்'' என்றேன். நான் கழற்றிக் கொடுக்காவிட்டாலும் பக்கத்தில் இருந்தவன் பிய்த்துக் கொண்டு போயிருக்கலாம். நான் வணங்கும் முருகன்தான் அன்று என்னைக் காப்பாற்றினார். இல்லாவிடில் 10 பவுன் போயே போயிருக்கும். அன்று முதல் தங்கம் போடுவதையே விட்டு விட்டேன்.

தப்பித்தேன்!

- ஜி. சுந்தரி



மூங்கில் பாய் ஓவியங்களுக்கு அதன் தனி அமைப்பு சிறப்பு என்றால் அரச இலை ஓவியங்களுக்கு அதன் துளை துளையான அமைப்பே அழகு. அதே போல இந்தப் பாக்குப் பட்டை ஓவியங்களுக்கு மட்டை மேல் இயற்கையாக அமைந்துள்ள அழகான சீரான வரி வரியான கோடுகளே மிக மிகச் சிறப்பு!



பாக்குத் தட்டில் பரவசமூட்டும் ஓவியங்கள்!



அந்த இயற்கையான கோடுகளைச் சார்ந்து வரையப்படும் இயற்கைக் காட்சிகள், பறவைகள், மனித உருவங்கள் எல்லாமே அந்தக் கோடுகளையே படுக்கைக் கோடுகளாகப் பயன்படுத்தி பிரஷ்ஷும் வலது இடது பக்கமாக மட்டுமே செய்யப்படுவதால் படம் மிக அருமையாக அமைந்து விடுகிறது. பாக்கு மட்டைகளை அப்படியே பயன்படுத்தாமல் பக்குவப்படுத்தி, பதப்படுத்தி வர்ணமிட்டால்தான் படம் சீரான மேல் பாகமும் சுத்தமான பகுதியுமாகக் காண்பதற்கு நன்றாக இருக்கும். இதற்கு பதப்படுத்தி சுருக்கங்களை நீக்கிய பாக்குத் தட்டுகளையே நீங்கள் வாங்குவதுதான் சுலபமானது.

தட்டின் ஓரத்தில் மிகச் சீரான சிறு அலங்கார வளைவுகளைக் கொண்டு நடுவில் சீரான தட்டையான பகுதியைக் கொண்ட தட்டுக்களே வர்ணமிட ஏற்றது. இதில் ஆயில் கலர் அல்லது துணி வர்ணங்கள் மிக மிக நேர்த்தியாக வர்ணமிட வருகிறது. வர்ணங்களை இவ்வகை தட்டுகள் அதிகம் இழுத்துக் கொள்வது இல்லை. அதனால் படம் வரைந்தும் பளிச்சென்ற தோற்றம் கிடைக்கிறது.

இவ்வகை தட்டுகள் விலை குறைவு என்பதுடன் சாதாரணமாக பேப்பர் தட்டுகள் கிடைக்கும் கடைகளிலும் சுலபமாகக் கிடைக்கும். செய்து பார்த்து மகிழுங்கள்.

தேவைப்படும் பொருள்கள் :

வட்டமான பாக்குத் தட்டுக்கள் பெரிய அளவுள்ளது - 2 (சீரான ஒரே அளவுள்ளது),

துணி வர்ணங்கள் (ஃபேப்ரிக் கலர், - 1 செட்,



½ அங்குல பட்டையான பிரஷ், நெ. 4. lல் இரண்டு வகை பிரஷ்
பேப்பர் வெட்டும் சிறுகத்தி - 1.
ஃபெவிகால் - 1 டப்பா.



செய்முறை :

ஒரே சீரான அளவுள்ள தட்டுகளில் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு நடுப் பகுதியை சீரான வட்டமாக வரும்படி ஒரு எவர்சில்வர் தட்டை வைத்து மார்க் செய்துகொண்டு சிறு கத்தியால் பொறுமையாக வெட்டி எடுக்கவும்.

அதன் மேல் பகுதியை அதாவது தட்டின் உட்பகுதியை (வெள்ளை நிறமாக இருக்கும் பகுதியை) வெள்ளை நிற துணி வர்ணத்தால் பட்டையான பிரஷ் கொண்டு பூசிக் காய விடுங்கள். நன்கு காய்ந்ததும் வெள்ளை நிறம் பூசப்பட்ட அந்தத் தட்டின் மேல் நீங்கள் விரும்பும் இயற்கைக் காட்சிகள், மனித உருவங்கள், பறவைகள் என்று எந்த டிசைனையும் பென்சிலால் இலேசாக வரைந்து கொண்டோ அல்லது கார்பன் டிரேஸ் செய்தோ

வைத்துக்கொண்டு, பெயிண்ட் செய்ய தட்டு வட்டமாக இருந்தாலும், நீள்சதுர வடிவில் இருந்தாலும் அதில் இயற்கை யாக உள்ள வரிக்கோடு களை படுக்கைக் கோடுகளாக வைத்துக் கொண்டு படத்தை வரைந்தால் படம் மிக நேர்த்தியாக அமைந்து விடும். பிரஷ்ஷைப் பயன் படுத்துவதும் சுலபம்.

இயற்கைக் காட்சியாக இருந்தால் தொலைதூரக் காட்சியை இலேசான வர்ண அமைப்புடனும் அருகில் உள்ள கொண்ட இந்த பாக்கு மரத் தட்டுகளில் அப்படியே வரைவது சிரமமானது. அதனால்தான் இந்த இரட்டை தட்டு முறை! இது போல இரண்டு தட்டுகள் இணைந்து இருப்பதால் வளையாமலும் மாட்டுவதற்குச் சற்று கனமுள்ளதாகவும் ஆகிவிடுகிறது என்பதும் ஒரு காரணம்.

பின்பக்கம் ஒரு ஸ்டிக்கர் துண்டை ஒட்டி வைத்தால் சுவரிலும் மாட்டலாம். அலமாரியிலும் வைக்கலாம். பிரேம் போட்டும் மாட்டலாம். எப்படிச் செய்

பஞ்சாமிர்தம்!



பாட்டி - பட்டம்மாள், பெண் - வேதாம்பாள், பேத்தி - வசந்தா, கொள்ளுப் பேத்தி - லெட்சுமி, எள்ளுப் பேரன் - பிரவீண்

மரம், பாறைகள், செடி, கொடிகள் இவற்றை பனிச்சென்றும் வரைந்தால்தான் படம் இயற்கையாக இருக்கும். பூர்த்தி செய்த பிறகு சிறு சிறு பறவைகள் பறப்பது போலப் போட்டால் இன்னும் உயிரோவியமாக உங்கள் படம் அமைந்து விடும். சற்றே பளபளப்பான துணி வர்ணம் வரைந்து வர்ணமிடவும். இனி இந்த வட்டத் தட்டை ஃபெவிகால் கொண்டு மற்றொரு தட்டில் பதிய ஒட்ட விடுங்கள். தூக்கலான விளிம்புகளைக் தாலும் பாக்குமரத் தட்டில் செய்த ஓவியங்கள் காண்பவர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் சந்தேகமே இல்லை.

எளிய, ஆனால் விலைமதிப்பான தோற்றம் தரும் இந்தத் தட்டு ஓவியங் களைச் செய்ய அதிக செலவும் இல்லை. பிறகு என்ன? நிறைய இதுபோன்ற ஓவியங்களைச் செய்து அசத்துங்கள்!

- ரமணி ரங்கநாதன்



அயபார்வை!

வா, சகோதரி
இந்த
வார்த்தை வளையங்களை
விட்டு
வெளியே வருவோம்!

அதிகம் பேசுபவள் பெண்
என்று
அதிகம் பேசுபவரை
ஆச்சர்யப்படுத்துவோம்!

மென்மை என்ற
போர்வையை உதறி
மேன்மை என்னும்
உயரம் தீண்டுவோம்!

உதட்டுச் சாயம்
உயரச் செருப்பு
என்ற
அடையாளங்கள் அழிப்போம்

நம்
முதுகுக்குப் பின்னால்
வீசப்படுபவை
கத்திகள் அல்ல
வெறும்
காகித அம்புகளே!

கண்ணீரல்ல நம் ஆயுதம்
பெண்மையின் கம்பீரம்

நம்மிடம் இருக்கட்டும்
தாய்மையின் கனிவும்
தளராத உழைப்பும்!

எல்லோரிடமும் நட்பாயிருப்போம்
எல்லைகள் தாண்டினால்
எவரையும் மறுப்போம்!

நாம் குளிக்க அல்ல நெருப்பு
நம் விழிகளில் இருக்கட்டும்
அதன் இருப்பு!

- ரேவதி கணேசன்

பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள்



நான் 17 வருடங்களாக மனச் சிதைவு நோயுள்ள கணவருடன் வாழ்ந்து வருகிறேன். இதனால் பல கொடுமைகளுக்கு ஆளாகி வருகிறேன். தற்போது எனது மகளுக்கு 13 வயதாகி விட்டதால், கணவரது நடவடிக்கை எனது மகளது வாழ்க்கையைப் பாதித்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. தற்போது நான் என்ன முடிவெடுப்பது?

- பெயர் வெளியிட விரும்பாத வாசகி.

பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமா?

படித்தவர்களே தைரியமாக முடிவெடுக்கத் தயங்கும் நிலை இன்னமும் இருந்து வருகிறது. இந்த வாசகியின் கணவரும் ஒரு மருத்துவர்தான். இருந்தாலும் மனச்சிதைவு நோயின் காரணமாக அவரால் ஒரு சராசரி மனிதராக நடந்துகொள்ள முடியவில்லை. இந்த நோயாளிகளுக்கே உள்ள சந்தேகக் குணம் இவரது வாழ்க்கையை மேலும் நரகமாக்கி இருக்கிறது. இவருக்கு சட்ட ஆலோசனையை விட தைரியம்தான் தேவைப்படுகிறது. கணவரை விட்டுப் பிரிந்திருப்பதுதான் இவரது பிரச்னைக்குத் தீர்வு. இவர் தனது ஊரில் பிரபலமான மருத்துவராக இருக்கிறார். அதனால் ஊரைவிட்டு வேறு ஊருக்கு வர முடியாது. இவர் தனது மகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கணவரிடமிருந்து சட்டப்படி விவாகரத்து பெறுவதுதான் ஒரே வழி. இவர் இதை இத்தனை வருடங்களாக முயற்சிக்காமல் இருந்தாலும் இப்பொழுதாவது விவாகரத்து பற்றி யோசிப்பதுதான் புத்திசாலித்தனம். இவரது கணவரின் நோயும் அவரது நடவடிக்கைகளுமே விவாகரத்துக்குப் போதுமான காரணங்கள். இவரது ஊரில் உள்ள நீதிமன்றத்திலேயே வழக்கு தாக்கல் செய்யலாம்.

என் தோழி தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறாள். அரசாங்க ஊழியரான அவரது கணவன் சூதாடி மற்றும் குடிகாரர். பணம் தேவைப்படும்போது தோழியின் கையெழுத்தை காசோலையில் போட்டு வங்கியில் பணம் எடுத்து விடுகிறார். இதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமா?

- உஷா ஹேமலதா, சென்னை - 108.

முதலில் உங்கள் தோழி, தனது கணவருடன் தொடர்ந்து வாழப் போகிறாரா என்பது தெரியவேண்டும். ஏனென்றால் ஒருவர் கையெழுத்தை மற்றவர் போட்டது நிரூபணம் ஆனால் சிறைத் தண்டனை நிச்சயம். மனைவி எடுத்த நடவடிக்கையினால் சிறைத் தண்டனை பெற்றால் அந்தக் கணவர் எப்படி நடந்து கொள்வார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. வங்கிக் கணக்கை கணவருக்குத் தெரியாமல் வேறொரு வங்கிக்கு மாற்றுவதுதான் நடைமுறைக்கு சாத்தியமானது. இருந்



வழக்கறிஞர் புஷ்பா ரமணி



சூப்பர் வாழை!

ஒரு வாழைப் பழத்தில் 36 கிராம் கார்போஹைட்ரேட் 4 கிராம் நார்ச்சத்து, 2 கிராம் புரதம், 2 கிராம் சோடியம், 602 மில்லி கிராம் பொட்டாசியச் சத்துகள் அடங்கியுள்ளன. ஒரு வாழைப்பழத்தில் உள்ள எரிசக்தியின் அளவு 140 கலோரி.

• ஆர். மகாதேவன், திருநெல்வேலி.

தாலும் மற்றவர் கையெழுத்தைப் போட்டால், முதலில் அந்த வங்கிக்குத் தகவல் கொடுக்க வேண்டும். பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் அரசாங்கத் தரப்பில் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, காசோலைகள், நிபுணர் கருத்துப் பெற அனுப்பப்படும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், எந்தச் சூழ்நிலையில் மற்றவரின் கையெழுத்துப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எடுத்த தொகையின் மதிப்பு போன்றவற்றைப் பொறுத்து தண்டனை கிடைக்கும்.

எனது கணவர் சீட்டுக் கம்பெனிகளில் பணம் போட்டு வைத்திருந்தார். கொஞ்சம் பணம் வந்தது. இப்பொழுது என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. புதுக்கோட்டையில் உள்ள நிலம் சம்பந்தமாக 40 வருடங்களாக வழக்கு தற்போது நடந்து வருகிறது. அதன் தற்போதைய நிலைமை என்னவென்று தெரியவில்லை.

- கோமதி, கோயமுத்தூர்.

பல சீட்டுக் கம்பெனிகளின் வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன. அவை முடிந்த பிறகுதான் அதைப் பற்றிச் சொல்ல முடியும். தங்களது சொத்து சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நடப்பதாக எழுதியிருக்கிறார். வழக்கு விவரம் தெரியாமல் அதற்கான ஆவணங்கள் இல்லாமல் எதுவும் சொல்ல இயலாது.

எனது தாயாரின் சொத்து சம்பந்தமாக எனக்கும் எனது சகோதரருக்கும் வழக்கு நடைபெறுகிறது. எனது தந்தை தனக்கு எதுவும் வேண்டாமென்று சொல்லி விட்டதாலும், வரிகள் என் சகோதரர் கட்டி வருவதாலும், நான் அந்த வீட்டில் வசிக்காததாலும் எனக்கு சொத்து கிடைக்காமல் போய் விடுமா? என் தாயின் பணத்தில் சொத்து வாங்கியிருப்பதாலும், எனது சகோதரர் வசதியாக இருப்பதாலும் அந்தச் சொத்து எனக்கு மட்டுமே சொந்தம் என்று வழக்காட முடியுமா? எனது தாயாரின் நகைகள் என் சகோதரரிடம் இருக்கின்றன. அதில் எனக்கு பங்கு உண்டா?

- கமலா, திருநெல்வேலி - 2.

உங்கள் தந்தை தனக்கு பங்கு வேண்டாமென்பதாலோ, தங்களது சகோதரர் வரிகள் கட்டி வருவதாலோ மற்றும் நீங்கள் அந்த வீட்டில் வசிக்காததாலோ உங்களுக்கு சொத்தில் பங்கு இல்லையென்று சொல்லிவிட முடியாது. அதே போல் தங்களது சகோதரர் வசதியாக இருப்பதால் சொத்து முழுவதும் உங்களுக்கு மட்டுமே சொந்தமாக வேண்டும் என்று கேட்பதும் சட்டப்படி செல்லாது. தாங்கள் வழக்குப் போடும்போதே தங்களின் தாயாரின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கு (நகைகள், பாத்திரங்கள் போன்றவை) சேர்த்துப் போட்டிருக்கலாம். அப்போது போடவில்லை யென்றாலும் தவறில்லை. இப்பொழுது கூட அந்த வழக்கில் அசையும் சொத்துக்களுக்காக கூடுதல் மனுதாக்கல் செய்யலாம்.

எனது பாட்டன் வழிச் சொத்தான வீட்டை, வங்கியில் அடமானம் வைத்து என் அண்ணன் கடன் வாங்கி, அதைத் திருப்பிக் கட்டாததால், வங்கியில் என் அண்ணனின் வியாபாரத்தை முடக்கி வீட்டை ஏலம் விடப் போவதாகச் சொல்கிறார்கள். என் பங்குக்கு என்ன செய்வது?

ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?

- சொர்ணலதா, சென்னை - 85.

தங்களது அண்ணனுக்கு இந்த வியாபாரம் மூலம் வேறு ஏதாவது சொத்து சேர்ந்திருந்தால் அதில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று வழக்குத்தொடரலாம். அல்லது வங்கிக்கு. அந்தச் சொத்தில் பங்கு இருப்பதால் வீட்டை விற்று வங்கிக்குக் கட்ட வேண்டியது போக மீதி உள்ள பணத்தில் தங்களுக்குச் சேர வேண்டிய பங்குக்கு நோட்டீஸ் அனுப்பலாம்.

எனக்குத் திருமணமாகி 3 வருடங்களாகின்றன. 10 மாதத்தில் பெண் குழந்தை இருக்கிறது. குழந்தை பிறந்த 15 நாட்களுக்குப் பிறகு என் கணவர் என்னையும், குழந்தையையும் வந்து பார்த்தார். பிறகு வரவும் இல்லை. என் அம்மாவும் அப்பாவும் என்னை எப்பொழுது கொண்டு வந்து விடுவது என்று கேட்டால் என் மாமியார் வீட்டில் 'இப்பொழுது உங்கள் மகளின் ஜாதகப்படி நேரம் சரியில்லை' என்ற பதிலைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். என் கணவர் மிகவும் நல்லவர். என் மீது அதிக அன்பு வைத்திருப்பவர். அவரால் வெளிவர முடியாத சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும். அவர் என்னைத் தனியாகச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் கண்டிப்பாக என்னையும், குழந்தையையும் ஏற்றுக் கொள்வார். நீதிமன்றத்துக்குச் சென்றால் விவாகரத்துதான் பெற முடியும் என்று வேறு சிலர் பயமுறுத்துகிறார்கள். நீதிமன்றத்துக்குச் சென்றால் எனது பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமா?

- நித்யா, திருச்சி - 12.

நீதிமன்றத்துக்குச் சென்றால் விவாகரத்து மட்டுமே பெற முடியும் என்ற தவறான கருத்து பரவலாக நிலவி வருகிறது. குடும்பநல நீதிமன்றம் என்றே அதற்குப் பெயர். குடும்பநல வழக்குகளில் உடனடியாக விவாகரத்து வழங்கப்படுவதில்லை. இருவரும் மனமொத்துக் கோரப்படும் வழக்குகளில் கூட, அவர்கள் மனம் மாறுவதற்கு 6 மாத காலம் அவகாசம் கொடுக்கப்படுகிறது. தங்களைப் போன்றவர்களும் குடும்பநல நீதிமன்றம் மூலமாகத் தீர்வு பெறலாம். கணவரோ அல்லது மனைவியோ சரியான காரணம் இல்லாமல் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தால், அவர்களை நீதிமன்றத்துக்கு வரவழைத்து விசாரித்து, இருவரும் சேர்ந்து வாழ வழி செய்யப்படும். இதற்கு இந்திய திருமணச் சட்டத்தில் 'ரெஸ்டிட்யூஷன் ஆஃப் கான்ஜுகல் ரைட்ஸ்' என்று பெயர். நீதிமன்றத்தில் தங்களது கணவர் தங்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று மனு தாக்கல் செய்யலாம். நீதிமன்றத்தில் கண்டிப்பாக உங்களது கணவர் ஆஜராக வருவார். அப்பொழுது உங்கள் தீராத பிரச்னைக்குத் தீர்வு கிடைத்து விடும்.

கணேசன் ஸ்துதி

அன்றொரு நாள் தாய் - தந்தையரின்
ஆணைதனை சிரமேற்கொண்ட ஆனைமுகனும்
இவ்வுலகம் மட்டுமேயன்றி
ஈரேழு புவனங்களையும்
உங்கள் இருவருக்குள்ளே கண்டேன் என
எடுத்துரைத்த ஏகதந்தன்
ஏகாக்கிர சித்தத்துடன் வலம் வந்தபொழுது,
ஐங்கரனின் அன்பிலே நெகிழ்ந்து
ஒருமித்த மனத்தினராகி மாங்கனி தந்து
ஓங்கார ஸ்வரூபி நீயே! எனப் பெற்றோர்
புகழ்ந்து பாடிய கணபதியே போற்றி!

- மனோரமா கோபிநாத், பெங்களூர்.



மரியாதையும் முக்கியம்!

சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி இது...

உறவினர் வீட்டுக்கு ஒரு நண்பர் சென்றிருக்கிறார். உறவினர் இவரை வரவேற்று அமரச் செய்ய, காப்பி போட மனைவி சமையலறைக்குச் சென்று விட்டார். ஏதோ பேச்சுவாக்கில் நண்பர் கேட்கிறார்,

"இப்பல்லாம் எந்த புக் எடுத்தாலும் 'ஆயில் புல்லிங்' அமர்க்களப்படறதே... எண்ணெயை வாயில் விட்டு, பத்துப் பதினைஞ்சு நிமிஷம் கொப்புளிக்கணுமாமே! செஞ்சு பார்த்திங்களா... பலன் இருக்கா...?"

"ஓ... பலன் இருக்கே... வேறெந்தப் பலனைப் பற்றியும் எனக்குத் தெரியாது... ஆனா... அந்த பதினைஞ்சு நிமிஷம் (உள்ளே பார்த்து குரலைத் தாழ்த்திக் கொண்டு) என் ஒய்ஃப் வாயை மூடிக்கிட்டு இருப்பா..."

ஹாலில் உட்கார்ந்து பள்ளிப் பாடம் எழுதிக் கொண்டிருந்த குழந்தைகள் இரண்டும் ரசித்துச் சிரித்தன.

அவர்களுடைய அம்மாவைப் பற்றி அப்பா அடித்த கமென்டைத்தான்... அப்புறம் அந்தக் குழந்தைகளின் தப்பைக் கண்டித்து ஏதோ அம்மா சொல்லும் போது...

"ஐய்யோ... அம்மாக்கு பாக்கெட் பாக்கெட்டா எண்ணெய் வாங்கிக் கொடுப்கப்பா..."

இன்னும் சில வீடுகளில்..

"உங்கப்பாவை 'மாதிரி' பார்த்துக் கொண்டியானா உருப்படவே மாட்டே...! ஏதோ உத்தியோகம் பார்க்கிறது.. அதுக்கு என்ன தெரியும்? ஆபீஸ்.. அதை விட்டா வீடு. நீயாவது சமர்த்தா நாலு விஷயம் தெரிஞ்சுக்கோ...' இல்லாவிட்டால்...



• பாரதி - திருமகள்

• சுப்பு ஆறுமுகத்துடன்...



''அசட்டுப் பிடிவாதத்துக்கு அப்படியே பாட்டியைக் கொண்டிருக்கு...'' அல்லது,

''முரட்டுத்தனத்துக்கும் முட்டாள்தனத்துக்கும் தாத்தாவை உரிச்சு வச்சிருக்கு...''

எத்தனை வீடுகளில் இப்படியெல்லாம் குழந்தைகளுக்கு அட்சதை தூவுகிறார்கள்...?

'தர்ம ப்ராஜாஸம் வ்ருத்யர்த்தம்...' மணமகன் சொல்லும் திருமண சங்கல்பம் இது.

'மங்கலமென்ப மனை மாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு...'

என்கிறது திருக்குறள்.

திருமண உறவின் முக்கிய நோக்கமே, ஒரு நல்ல குடும்பத்தை அமைப்பதும் அதன் மூலம் நம் பிறவியின் தலையாய கடமையை நிறைவேற்றுவதும்தானே... அது, பத்தாவது மாசம் ஒரு குழந்தையைப் பெற்று, பெருமைப்பட்டுக் கொள்வதோடு முடிந்து விடுகிறதா?

''பணம் போனாலும் போயிட்டுப் போறது... நல்ல ஸ்கூல்லதான் சேர்க்கணும்'' என்று விலை உயர்ந்த கல்வி தருவதோடா...?

''ஒரு 'இனிய தம்பதி', தம் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளையும், பெரியவரிடத்தில் மரியாதை செய்வது, அனுசரித்துப் போவது, எல்லோரிடமும் இனிமையாய்ப் பழகுவது போன்ற உயர்ந்த குணங்களைக் கற்றுக் கொடுத்து, எதிர்கால 'இனிய தம்பதி'யில் ஒருவராக அந்தக் குழந்தையை உருவாக்க வேண்டாமா?

''நல்லாப் படிச்சு, நல்ல வேலையில இருக்கான் (அல்லது இருக்காள்)னு பேருதான்... நாலு பேர்ட்ட நல்லவிதமா பழகத் தெரியாத முகடு... குணங்கெட்டது... அதுகிட்ட யாரு பேசுவா...?'' என்ற பெயரெடுக்கிற மாதிரி குழந்தையை வளர்ப்பதா இல்லற தர்மம்?

''வீட்டுக்குப் போகவே வெறுப்பா இருக்கு. எப்பப் பாரு அப்பா அம்மா சண்டைதான்...'' என்று சொல்கிற குழந்தைகளையும் பார்த்திருக்கிறோம்.

சமையலறையில் ரகசியமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு, ''அவர் என்ன பாடுபடுத்தினாலும், குழந்தைகள் எதிரே சண்டை போட வேண்டாமேன்னுதான் அடங்கிப் போறேன்...''

என்று குமுறும் பெண்களையும் பார்த்திருக்கிறோம்.

முதலில் தெரியவில்லை என்றாலும் கொஞ்சம் வளர்ந்த நிலையில் 'அப்பாவின் லட்சணம்' தெரிந்து அவர்களுக்கு வெறுப்பு வராதா...?

இன்னும் சில தம்பதிகள் உண்டு...

அடிநாதமாய் அவர்களுக்குள் அன்பு இருக்கும். இருந்தாலும் எப்பப் பாரு, எதுக்கெடுத்தாலும் சண்டைதான். இவர் ஒன்று சொல்ல... மனைவி ஒன்று சொல்ல...

யார் ஜெயிக்கிறார்களோ... ஆனால் இந்தச் சண்டை, மற்றவர்களுக்கு ஒரு ஜாலியான வேடிக்கை நிகழ்ச்சியாக ஆகிவிடுகிறதே....! பிள்ளைகள், கொஞ்சம் வளர்ந்தபின் இதை லட்சியமே செய்ய மாட்டார்கள்.

தப்பு செய்யும் பிள்ளையை இலேசாகக் கண்டிப்பதில் தவறு இல்லை என்று நினைக்கிற அப்பா, கம்ப்யூட்டரில் முக்கியமான புரோகிராம் ஒன்று எழுதிக் கொண்டிருக்கிறார்.. ஒரு வேலையாக சற்று நகர வேண்டியிருக்கிறது. ஐந்து வயது மகனிடம், "கண்ணா... கம்ப்யூட்டர்ல நான் முக்கியமா வேலை பண்ணிட்டு இருக்கேன். கிட்ட போகாதே. சமர்த்து இல்ல..." என்று நல்லவிதமாகச் சொல்லி விட்டு கொஞ்சம் நகர்கிறார்.

சும்மா இருக்குமா பிள்ளை?

சகலமும் டெலீட் ஆகிவிட, அப்பா கோபிக்கிறார்.

நல்ல மனைவி என்றால்.. நிலைமையை உணர்ந்து பேசாமல் இருப்பாள்.

''என்ன செய்கிறோம்'' என்று தெரியாத மக்குப் பெண் என்றால் பாய்ந்து வருவாள்...

''குழந்தையை ஏன் திட்டறீங்க... அவனுக்கு என்ன தெரியும்...'' ஆரம்பித்து விடுவாள்...

அம்மா பின்னால் ஓடும் அது...

''நம்மகிட்டே என்ன பாசம்'' என்று உருகுவான். பின்னாளில் அந்தப் பிள்ளை அவனுக்கே எதிராகத் திரும்பலாம் அல்லவா?

கணவருக்கும், மனைவிக்கும் 'பரஸ்பரம் நம்பிக்கை எவ்வளவு முக்கியமோ... அதே அளவு முக்கியம் அல்லவா மரியாதையும்?

ஆல்ப்ரெட் ஐன்ஸ்டீனின் மனைவியிடம் ஒருவர் கேட்டார்.

"உங்கள் கணவர் கண்டுபிடித்திருக்கும் 'தியரி ஆஃப் ரிலேடிவிடி' மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?''

மனைவி பதிலளித்தார்.

"எனக்கு அந்தத் தத்துவத்தைப் பற்றித் தெரியாது. ஆனால் என் கணவர் மேல் நம்பிக்கை உண்டு... அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.''

இந்த நம்பிக்கையையும் மரியாதையையும் வளர்த்துக் கொள்ளாமல் கோபத்திலும் கசப்பிலும் எத்தனை பேர் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்....?

வேறு வேறு சூழ்நிலைகளில் வளர்ந்து திடீரென ஒருநாள் தாலி கட்டி, ஓர் இரவில் தோன்றி விடுமா... இந்த மரியாதை, பாசம், அன்பு எல்லாம்...? எதிர்பார்க்கவும் முடியாதுதான்...

மெல்ல மெல்ல வளர்த்துக் கொள்ள வேண்டியதுதான்... மனம் விட்டுப் பேசி... பழகி... வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்வது அவர்கள் கையில் தான் இருக்கிறது.

ஆனால் இதன் 'பிள்ளையார் சுழி' ஒரு நல்ல குடும்பப் பின்னணியில் அல்



அப்பளம், பப்படம் பொரிக்கும் முன் ஒரு துணியால் இரு பக்கமும் நன்றாகத் துடைத்து விட வேண்டும். மேலாக இருக்கும் பொடி போய் விடுவதால் எண்ணெயும் கலங்காது. சோடாவும் நம் உடம்பில் சேராது.

- லக்ஷ்மி கணபதி, கோவை.

ஹா(ர்)ட் நியூஸ்!



Neomed Hospital

Non-Surgical Treatment Centre For Heart Attack Problems

திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தேதிகளில்
சென்னையிலும்

பிரதி வியாழன், வெள்ளி, சனி ஆகிய தேதிகளில்
மதுரையிலும்

நியோமெட் மருத்துவமனையின்
தலைமை டாக்டர். L. சிவபாலன்
M.B.B.S., Dc. OT (Canada) CCP (USA), MCCP.
மருத்துவ ஆலோசனை வழங்குகிறார்.

வந்துவிட்டது, சிக்கலான பைபாஸ் சர்ஜரிக்கு மாற்று சிகிச்சை. அறுவை சிகிச்சையின்றி இதய அடைப்பைப் போக்கும் அற்புத கிலேசன் சிகிச்சை! (Artery Clearance Therapy) இதய நோய்களை எளிதாகக் குணப்படுத்த, உலகமெங்கும் 26 நாடுகளில் பிரபல மருத்துவர்களால் பின்பற்றப்படும் ஓஸோன் / கிலேசன் சிகிச்சை சிக்கல் இல்லாதது, ஆனால் சிக்கனமானது. ஆம், பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு ஆகும் செலவில் 3ல் 1 பங்கை விட குறைவான தொகையே கிலேசன் சிகிச்சைக்குப் போதுமானது. இந்த சிகிச்சைகள் மூலம் மேலும் Arteriosclerosis (Blocked Arteries), Arthritis, Stroke, Chronic Backpain, Parkinsonism, Cancer, Diabetic Gangerene and Foot Ulcers போன்ற நோய்களும் குணமாக்கப்படுகிறது. பக்க விளைவுகள் இன்றி பலன் தரும் ஓஸோன் / கிலேசன் சிகிச்சையால் இதுவரை, அமெரிக்காவில் 6.5 லட்சம் பேரும், ஜெர்மனியில் 12 லட்சம் பேரும் முழு குணம் பெற்றுள்ளனர்.

இதய சம்மந்தப்பட்ட நோய் உள்ளவரா நீங்கள்? தயக்கமின்றி நியோமெட் வாருங்கள். ஓஸோன் / கிலேசன் சிகிச்சை மூலம் நிவாரணம் பெறுங்கள். நிம்மதியாக வாழுங்கள்!

- 70% முதல் 100% வரை இதய அடைப்புகள் குணமாக்கப்படுகிறது.
- வலி இல்லை • அறுவை சிகிச்சை இல்லை • நீண்ட நாள் மருந்து இல்லை.
- மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற அவசியம் இல்லை.


NEOMED HOSPITAL
CARE FOR BETTER LIVING

2181, 'L' Block, 12th Main Road, Anna Nagar,
Chennai - 600 040. Ph: 044-26201147, 26200882

11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar,
Madurai - 625 020. Ph: 0452-2581414, 2581515, 4393473

Timing :
Week days
9 am to 6 pm

sasiads/mdu



அலைகள்

எத்தனை பேராசை உனக்கு!
ஒருமுறை சென்று
மறுமுறை வருவதற்குள்
இந்த மனிதர்கள்
மாறிவிடவா போகிறார்கள்?
எத்தனை முறை நீ
வந்து பார்த்துப் போனாலும்
மனிதர்களும் மாறப் போவது இல்லை.
நீயும் உன்னை
மாற்றிக் கொள்ளப் போவதும் இல்லை.

- மீனாக்ஷி ஜானகிராமன், சென்னை - 114.

லவா கிடைக்கும்? குடும்பப் பின்னணியை உருவாக்குவதும் ஓர் இனிய தம்பதி தானே...?

வாழையடி வாழை போலத்தான்.

ஓர் இனிய தம்பதி உருவாக்கிய மற்றோர் இனிய தம்பதியை இப்போது பார்க்கலாமா?

வில்லுப் பாட்டு என்றாலே சுப்பு ஆறுமுகம் என்று சொல்லி விடுவோம்... வில்லிசைக்காகவே வாழும் கலைஞர். அவருக்கு உறுதுணையாய் நிற்பவர் மகாலக்ஷ்மி சுப்பு ஆறுமுகம். கணவரைப் பற்றி 'உண்மையுள்ள ஒரு கவிஞன்' என்ற புத்தகம் எழுதியுள்ளார்.

இந்த இனிய தம்பதியின் மகள்தான் பாரதி திருமகன்.

ஏழு வயதிலிருந்தே கர்நாடக இசை பயின்று, அப்பாவுடன் ஆயிரக்கணக்கான மேடைகளில் வில்லிசை நடத்தி வருபவர்...

பாரம்பரிய வில்லிசையோடு இசைபட வாழவும் கற்றுத் தந்திருப்பதால் பாரதி திருமகன் நற்பண்புகளோடு இனிய இல்லறம் நடத்துகிறார்.

"பானை பிடித்தவர் பாக்கியசாலி" என்கிறார் பாரதி... இவரது வாழ்க்கையில் இயலாக வந்து, இசையாக ஒன்றி, இன்று நாடகமாகி வில்லிசை மேடையில் 'பானை' (கடம்) வாசிக்கும் கலைஞராக மாறியுள்ளார் திருமகன்.

வில்லிசையோடு, மேடைகளில் வெற்றிகரமாக இசைப் பேருரைகளும் நிகழ்த்தி வருகிறார் பாரதி.

திருமகன், ஜெயா பொறியியல் கல்லூரியில் கணிதத் துறை தலைவர். சிறந்த கம்பன் கழகப் பேச்சாளரும் கூட...

தங்கள் திருமணம் நடந்த அனுபவத்தை நினைவுகூர்கிறார் பாரதி.

அண்ணா நகர் ஐயப்பன் கோவிலில் நடந்த வில்லிசை நிகழ்ச்சிக்கு ஒரு ரசிகராக வந்திருந்தார் அவர்... அப்போது என் திருமணம் பற்றி என் அப்பா கொண்டிருந்த எண்ணம், 'ஒழுக்கமானவராகவும், இசையில் ஈடுபாடு உள்ளவராகவும் நன்கு படித்தவராகவும் மருமகன் இருக்க வேண்டும்' என்பது. இதைக் கேள்விப்பட்டு, தன் தாயார் கோதை அம்மாளுடன் வந்து பெண் கேட்டார்.

"பெண் பார்க்கும் நிகழ்ச்சியில் அவர் கீர்த்தனை பாட, என் சகோதரன் கஞ்சிரா வாசிக்க, கச்சேரியாகவே அமைந்தது" என்கிறார். நிறைய தகுதிகள் வைத்திருக்கும் இருவரும், ஈகோ எதுவுமின்றி ஒருவருக்கொருவர் அனுசரித்து இல்லறத்திலும் இசை மேடைகளிலும் வெற்றி பெற்று வருகிறார்களே!

இவர்களின் ஒரே மகன் - கலைமகன். பெற்றோரின் நல்ல பண்புகளுடனும், இசை ஆர்வத்துடனும் வளர்ந்து வரும் இவனுக்கு பாரதி - திருமகன் தம்பதியினர் முக்கியமாகப் போதிப்பது நாட்டுப்பற்று.

நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களை மேடைகளில் வில்லிசையாக்கித் தரும் சுப்பு ஆறுமுகத்தின் வாரிசு அல்லவா...?

(தொடரும்)

- பத்மினி பட்டாபிராமன்

❑ அதிக நகைகள் போட்டுக்கொண்டு பிரயாணம் செய்ய வேண்டாம்.

❑ முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச வேண்டாம்.




பிரயாணம் செய்யும் போது!

❑ பெண்களைத் தனியாக ஆட்டோவில் விட்டு விட்டு ஆண்கள் இறங்கி பூ, பழம், பிஸ்கெட் வாங்கி வர போக வேண்டாம்.

❑ கடையில் பான் பீடா வாங்கிப் போட வேண்டாம். சில பீடாக்கள் மயக்கத்தை உண்டு பண்ணும்.

❑ ஒவ்வொருவரும் தனித்தனியாக ஓரளவு பணம் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவருடைய பணம் காணாமல் போனாலும் மற்றவர்களிடம் இருப்பதைக் கொண்டு சமாளிக்கலாம்.



❑ கொண்டு செல்லும் எல்லாப் பணத்தையும் ஒரே இடத்தில் வைக்கக் கூடாது. பெட்டியில் கொஞ்சம், கைப்பையில் கொஞ்சம், பாக்கெட்டில் கொஞ்சம் வைத்துக் கொள்ள வேண்டும்.

- கே. சுப்புலக்ஷ்மி, பவானி.

பெண்கள் இரயிலில் பயணம் செய்யும்போது கவனிக்க வேண்டியவை :

• சாமான்கள் கொண்டு செல்லும் போது பழைய செய்தித்தாளை கொண்டு செல்ல வேண்டும்.

• இரவில் குழந்தைகள் படுப்பதற்கு போர்வை விரிப்பதற்கு முன்பாக பழைய பேப்பரைப் போட்டுக் கொள்ளலாம்.

• சாப்பிடும்போது நம் இருக்கை அழுக்காகாமல் இருக்க, பழைய பேப்பரை மேலே விரித்துச் சாப்பிடலாம்.

• சூட்கேஸ் அடிப்பாகம் பழுதடையாமல் இருக்க, பழைய பேப்பரை விரித்து அதன் மேல் சூட்கேஸ் வைக்கலாம்.

• தண்ணீர் இல்லாதபோது கையைச் சுத்தம் செய்ய பழைய பேப்பரை உபயோகிக்கலாம்.

- பிரேமலதா மகாதேவன், பெரியகுளம்.

சுற்றுலா இன்பமாக அமைய...

தேர்வுகள் முடிந்து, விடுமுறை குஷியில்

இருக்கும் குழந்தைகளுடன், குடும்பமாகச் சுற்றுலா பயணம் செல்வது எல்லோருக்கும் பிடித்தமான ஒன்று. சில விஷயங்களை முன் யோசனையுடன் கவனித்தால், பயணம் இன்பச் சுற்றுலாவாக அமையும். இல்லையெனில் மூட்-அவுட்டாகி துன்பச் சுற்றுலாவாகி, அவதிப்பட நேரிடும்.

❑ வெளியூருக்கு அல்லது மலைப் பிரதேசங்களுக்கு செல்வதற்கு முன் அங்கிருக்கும் தங்கும் விடுதிகள், நமக்குப் பிடித்த உணவுகள் கிடைக்கும் உணவகங்கள் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ளவும். அப்போதுதான் போகுமிடத்தில், வண்டியை விட்டு இறங்கியதும், யாரிடமும் ஏமாறாமல், நல்ல ஓட்டலாகப் பார்த்துப் போக முடியும்.

❑ பயண டிக்கெட்டுகளை, ஜெராக்ஸ் எடுத்து வைத்துக்கொண்டு, ஒரிஜினல் டிக்கெட்டைப் பத்திரமாக கைப்பையில் வைக்கவும். ஜெராக்ஸ் டிக்கெட்டை, நாம் எடுத்துச் செல்லும் சூட்கேஸ்களிலும் வைத்துக் கொண்டால், ஒருவேளை டிக்கெட் தொலைந்தாலும், ஜெராக்ஸைக் காண்பிக்கலாம். பணம், டிராவலர்ஸ் செக், கிரெடிட் கார்டு எல்லாவற்றையும், ஒரே பையில் வைக்காமல், தனித்தனியே பத்திரமாக வைக்கவும். இதனால் பெட்டி அல்லது பேக் தொலைந்து போனாலும் மற்றது கைகொடுக்கும்.

❑ சிறு குழந்தைகளுடன் பிரயாணம் செல்லும்போது, அவர்களின் விளையாட்டு பொம்மைகள், அவர்களுக்குப் பிடித்த புத்தகங்கள், வண்ணம் தீட்டும் ஓவியப் புத்தகங்கள், கலர் பென்சில்களையும் கொண்டு செல்லவும்.

❑ சுற்றுலா செல்லும் இடத்தில் உறவினர்கள், நண்பர்கள் இருப்பார்களேயானால், அவர்களின் விலாசம், டெலிபோன் நம்பர்களைக் குறித்து வைத்துக் கொள்ளவும். புது இடத்தில், அவசரத்திற்கு உதவி கேட்க வசதியாக இருக்கும். அவர்கள் வீட்டுக்குப் போகும்படி நேர்ந்தால், கண்டிப்பாக சிறிய அளவிலாவது, பரிசுப் பொருளை உடன் கொண்டு செல்லவும்.

❑ ஓய்வில்லாமல் பயணப்பட்டால், அடுத்த நாள் ஊர் சுற்றிப் பார்க்கும்போது, களைப்புதான் ஏற்படும். ஓரிடத்தையும் உற்சாகமாக சுற்றிப் பார்க்க முடியாது. பகலில் பயணம், இரவில் ஓய்வு என்று முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி, பயண டிக்கெட்டுகள் வாங்குவது நல்லது.

❑ மருந்துகளுக்கு என்று தனி 'மெடிகல் கிட் பேக்' வைத்துக் கொள்வது நல்லது.

❑ பல ஊர்களில் பலதரப்பட்ட உணவுகளை, சாப்பிடும்படி நேரிடலாம். எளிதில் செரிக்கக்கூடிய, ஆவியில் வெந்த உணவுகளாகத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட வேண்டும்.

❑ கடைசியாக, வீட்டைப் பூட்டும் முன், தண்ணீர்க் குழாய்கள் மூடப்பட்டுள்ளதா, கேஸ் சிலிண்டர் மூடியுள்ளதா என்று நன்றாகப் பார்த்துக் கொள்ளவும். அத்துடன் டெலிபோன், கம்ப்யூட்டர், டிவி போன்ற மின்சார இணைப்புகளையும் துண்டித்து விட வேண்டும். இல்லாவிடில் இடி, மின்னல் வந்தால், 'இன்பச் சுற்றுலா' முடிந்து, வீடு திரும்பும்போது, ஆயிரக்கணக்கில் செலவழிக்க நேரிடும் வாய்ப்புள்ளது.

என்ன தோழிகளே! உற்சாகத்துடன் இன்பமாக, சுற்றுலா கிளம்ப தயாராகி விட்டீர்கள்தானே!


- குர்ஷீத் அஷ்ரப்,
இராமநாதபுரம் மாவட்டம்.



முள்ளங்கியை விடாமல் சாப்பாட்டில் தினமும் சேர்த்து வந்தால் மூலம், சிறுநீரக சம்பந்தமான நோய்கள், வயிற்றுப்பொருமல் ஆகியவை நீங்கும்.

- சுகந்தாராம், சென்னை - 59.

உங்கள் நிதித் தேவைகள் அனைத்திற்கும்
ஒரே தீர்வு – ஸ்ரீராம்!



நிதித் தேவைகள் பலவிதம்

குடும்ப வாழ்வில் பொருளாதாரத் தேவைகள் ஏராளம். பிள்ளைகளின் கல்வி, திருமணம், வீடு கட்டுதல், வாகனங்கள், வீட்டு உபயோக சாதனங்கள், மருத்துவமனைச் செலவுகள், பயணச் செலவுகள் எனப் பல வகையான நிதித் தேவைகள் உருவாகின்றன.

அனைத்து தேவைகளுக்கும் தீர்வு!

அனைத்து நிதித் தேவைகளுக்கும் ஒரே குடையின் கீழ் தீர்வுகளை அளிக்கிறது ஸ்ரீராம் குரூப்:

- மாதந்தோறும் சேமிக்கவும், அதிலிருந்தே நிதியுதவி பெறவும் வகை செய்யும் சீட்டுத் திட்டங்கள்.
- இருசக்கர வாகனங்கள், கார் வாங்க வாகனக் கடன்.
- ஃப்ரிட்ஜ், ஏசி, மைக்ரோவேவ், டிவி, வாஷிங் மெஷின் போன்ற வீட்டு உபயோக சாதனங்கள் வாங்குவதற்கு 0% வட்டியில் நுகர்வோர் கடன்.
- அவசரச் செலவுகளைச் சமாளிக்க தனிநபர் கடன் (Personal Loan).
- வெளிநாட்டு விடுமுறைப் பயணங்கள் மேற்கொள்ள 0% வட்டியில் பயணக் கடன் (Travel Loan).
- நீண்ட காலப் பொருளாதாரப் பாதுகாப்புக்கு ஆயுள் காப்பீடு.
- வீட்டுச் சாதனங்களுக்கான காப்பீடு, நபர் விபத்துக் காப்பீடு, மருத்துவமனைச் செலவுக்கான காப்பீடு போன்ற பல்வேறு காப்பீட்டுத் திட்டங்கள்.

வருங்காலப் பாதுகாப்புக்குக் காப்பீடு

உங்கள் குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்க, ஸ்ரீராம் சிட்ஸ் சீட்டுத் திட்டத்துடன், லைஃப் இன்சூரன்ஸ் திட்டமும் கிடைக்கிறது.

லைஃப் இன்சூரன்ஸ் எண்டோமெண்ட் பாலிசி (Endowment Policy)

• காலம்: 20 ஆண்டுகள் • காப்பீட்டுத் தொகை: ரூ.50,000 • வயது வரம்பு: 18 முதல் 45 வரை • வருடாந்திர ப்ரீமியம்: ரூ.3,000.

ப்ரீமியத்தை காலாண்டு, அரையாண்டு, வருடாந்திர தவணைகளில் கட்டலாம்.

ஸ்ரீராம் சீட்டுத் திட்டத்துடன் நீங்கள் லைஃப் இன்சூரன்ஸ் திட்டத்திலும் விருப்பப்பட்டு இணைந்தால், மைக்ரோ வேவ் கண்ணாடி பவுல் அன்பளிப்புடன் வாக்கியப் போட்டிக்கான (Slogan Contest) நுழைவுப் படிவம்* வழங்கப்படும்.

லைஃப் இன்சூரன்ஸ் பாலிசி இணைப்பு இல்லாமலும் சீட்டுத் திட்டத்தில் சேரலாம்.

ரூ.1,00,000 பரிசு!

ஸ்ரீராம் வாக்கியப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெறுவோர்க்கு பம்பர் பரிசாக ரூ.1,00,000 மதிப்புள்ள தங்க நகை; ஒரு முதல் பரிசாக ரூ.25,000 மதிப்புள்ள தங்க நகை; இரண்டு இரண்டாம் பரிசுகளாக ரூ.10,000 மதிப்புள்ள தங்க நகை; 10,000 ஆறுதல் பரிசுகளாக ரூ.375 மதிப்புள்ள கிஃப்ட் வவுச்சர் வழங்கப்படும். போட்டியில் பங்கு கொண்டு பரிசுகளை வெல்லுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்

• 32 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி • நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமானவர்க்கு வேலை வாய்ப்பு • இதுவரை ரூ.16,500 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா • தினந்தோறும் ரூ.10 கோடிக்கு மேல் சீட்டுப் பணம் பட்டுவாடா • தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிராவில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

சித்திரைப் புத்தாண்டு விழா

சித்திரைப் புத்தாண்டு விழாவைக் கொண்டாட ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். உங்கள் குடும்பத்தின் தேவைகளுக்கு ஏற்ற திட்டத்தில் இணையுங்கள். வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறையக் காணுங்கள்.

சித்திரைப் புத்தாண்டு '06

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு பிரைவேட் லிமிடெட்
கிரீம்ஸ் டவர், 149 கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006. போன்: 42236000

'ஜில்' இருங்களேன்!

சீஸன் டிப்ஸ்

கோடைக்காலம் வந்தாலே, "ஸ்ஸ்... அப்பப்பா... என்ன வெயில்.. என்ன வெயில்" என்று புலம்பத் தொடங்கி விடுவோம். இந்தக் கொளுத்தும் கோடை உஷ்ணத்தை, குளுகுளு வென்று பனிக்கட்டியாக மாற்ற, சில 'ஜிலுஜிலு' யோசனைகள்!

கோடைக் காலத்தில், வீட்டில் துணி ஸ்கிரீனைக் கழற்றி விட்டு, மூங்கில் தட்டி தொங்க விடலாம். இதனால் உள்ளே இருக்கும் குளிர்ச்சி சுலபமாக வெளியே போகாது. அது போல, வெளி உஷ்ணமும் சுலபமாக உள்ளே நுழையாது. இரவு படுக்கும் முன், படுக்கை யறையின் ஜன்னல் அருகில், ஒரு டேபிள் வைத்து, அதன் மேல் அகலமான பிளாஸ்டிக் டப் நிறைய நீர் வைத்தால், இரவில் உஷ்ணம் குறைந்து, ஜிலுஜிலுவென்று குளிர்ந்த காற்று வரும்.

கோடையின் முதல் சோதனை வியர்வைக் குளியல்தான். ஆனால் வெயிலுக்கு வெள்ளம் போல, வியர்வை வெளிப்பட்டால்தான், உடலுக்குக் குளிர்ச்சி உண்டாகும். அதனால் வியர்வையைத் தடுக்காதீர்கள். தாராளமாகத் தண்ணீர், ஜூஸ் குடித்து, உடலின் நச்சுப் பொருட்களை வெளியேற்றுங்கள்.

இரண்டு தக்காளிப் பழங்களை மிக்ஸியில் விழுதாக அரைத்து, நீர் மோரில் கலந்து, ஒரு சிட்டிகை உப்பு, கால் ஸ்பூன் பெருங்காயம், கொத்துமல்லி, கறிவேப்பிலை போட்டுக் குடித்தால் களைப்பும், சோர்வும் பறந்து போகும்!

உஷ்ணத்தால் சில நேரங்களில், வயிற்று வலி ஏற்படும். இதற்கு அகத்திக் கீரையை வேக வைத்து நீரை வடிகட்டி, அதில் தேன் சேர்த்துச் சாப்பிட்டால் குணமாகும். மேலும் சூட்டில் வாய்ப்புண் வருவது சகஜம். இதற்கு விளக்கெண்ணெயை வாயில் விட்டுக் கொப்பளித்துத் துப்பலாம். தேங்காய்ப் பாலை சில நிமிடம் வாய் நிறைய தேக்கி வைத்துக் குடித்தாலும் வாய்ப் புண் ஆறிவிடும்.

வெயில் காலத்தில் அதிகம் சாப்பிட வேண்டியவை,



சீரகம், தனியா போட்ட கூட்டு அயிட்டங்களும், பூசணி, சுரைக்காய், பீர்க்கங்காய், வெண்டை, வெங்காயம் போன்ற நீர்ச்சத்து காய்கறிகளும்தான். இத்துடன் வாழைப் பூவையோ அல்லது வாழைத் தண்டையோ கூட்டு, பொரியல் செய்து உண்டால், மூளை, குளிர்ச்சி பெறும். சிறுநீர் எளிதில் பிரியும்.



மோர் என்ற பெயரில் தயிரில் நிறைய தண்ணீர் விட்டுக் குடிக்கக் கூடாது



கோடைத் தொல்லைகளை நீக்குவதில் பழங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. தர்பூசணிப் பழத்தைத் துண்டுகளாக்கி, இளநீர் அல்லது பதநீரில் போட்டு அருந்தினால், உடல் குளிர்ச்சியடையும். மற்றும் ஆரஞ்சு, திராட்சை, மாதுளைப் பழங்களின் சாறுகளும் வெப்பத்தால் ஏற்படும் தலைவலி மற்றும் வயிற்றுக் கோளாறுகளைத் தீர்க்கும்.

வெயிலுக்கு மோர் நல்லதுதான். மோர் என்ற பெயரில், தயிரிலே நிறைய தண்ணீர் விட்டுக் குடிக்கக் கூடாது. அதனால் எந்த உபயோகமும் இல்லை. உடல் சூடுதான் அதிகரிக்கும். தயிரைக் குறைந்தது 15 நிமிடமாவது மிக்ஸியில் அடித்து, மேலே திரளும் வெண்ணெயை எடுத்து விடவும். இப்போது கிடைக்கும் மோரின் அளவுக்கு ஆறு அல்லது ஏழு மடங்கு தண்ணீர் விட்டு, கிடைக்கிற மோரைத்தான் குடிக்க வேண்டும்.

பொதுவாக, எந்த ஒரு விஷயத்துக்கும் நாம் அயர்ந்து போகாமல் 'கூலாக' இருக்கப் பழகிக் கொண்டால், கோடையாவது, உஷ்ணமாவது?

- கே. பாத்திமா, கீழக்கரை.

மாடல் :

டாக்டர் கரீஷ்மா கௌசிக், பூனே.

ஆன்மாவின் மீது படியும் தூசியைத் துடைப்பது இசையும் இலக்கியமும். அப்படிப்பட்ட இலக்கியத்தின் ஊற்றுக் கண்கள் நூல்களே.

ஆண்டுதோறும் ஏப்ரல் 23-ம் தேதி உலக புத்தக மற்றும் பதிப்புரிமை நாள் யுனெஸ்கோ சார்பில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



கலங்கரை தீபங்கள்!

ஒரு நல்ல புத்தகம், ஒரு நல்ல நண்பன்.
- இத்தாலியப் பழமொழி

நல்ல புத்தகங்கள், நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள், நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களை உருவாக்கும்
- அப்துல்கலாம்.



புத்தகங்கள், குழந்தைகளைப் போல் வளருவதில்லை. அவை பிரமிட்களைப் போல உருவாகி நிலைப்பவை. **- ஆங்கில அறிஞன்.**

புத்தகம் இல்லாத வீடு; ஜன்னல் இல்லாத அறை போன்றது. படிப்பதன் மூலம்தான் அறிவுக் கண் திறக்கும்.
- ஓர் அறிஞர்.

எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம்! **- பாரதியார்.**

புத்தகங்கள் காலமென்னும் கடலில் கட்டப்பட்டிருக்கின்ற கலங்கரை தீபங்கள். **- வால்ட் விட்மன்.**

மோசம் செய்யாத நண்பன் புத்தகம் மட்டுமே.
- பிரெஞ்சு பழமொழி.

படிப்பில் பிரியமில்லாத அரசனாக இருப்பதை விட ஏராளமான நூல்களைக் கற்ற ஏழையாக இருப்பதே மேல்.
- மெக்காலே.

நல்ல புத்தகங்களைப் படிப்பது, மிகச் சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு ஒப்பாகும். **- டெங்கார்டிஸ்.**

நீ புகழுடன் இருக்க விரும்பினால், படிப்பதற்குத் தகுந்தபடி புத்தகங்களை எழுது. அல்லது உன்னைப் பற்றி எழுதுவதற்குத் தகுந்தபடி உன் செயல்களை மாற்றிக் கொள்.
- ப்ராங்க்ளின்.

ஒரு எழுத்தாளன் தன்னுடைய வாழ்க்கைக்காகவும், எழுதுவதற்காகவும் பணம் சேர்க்க வேண்டியது அவசியம். ஆனால் எந்தச் சூழலிலும் அவன் பணம் சேர்ப்பதற்காக வாழ்வதோ, எழுதுவதோ கூடாது. **- கார்ல் மாக்ஸ்.**

ஒரு நூல் நிலையம் திறக்கப்படும்போது, சிறைச்சாலையின் கதவு ஒன்று மூடப்படுகிறது.
- விவேகானந்தர்.

தொகுப்பு :
குமாரி குப்புசாமி

சொல்ல விரும்புகிறோம்



அரிய வரப்பிரசாதம்!

✉ திருமணமான புதிதில் வாசகி நந்தினியும், அவர் கணவரும் சேர்ந்து மைசூர்பா செய்த அனுபவத்தை, நகைச்சுவையுடன் எழுதியிருந்ததைப் படித்ததும் மூட்-அவுட்டாக இருந்த நான் வயிறுவலிக்க சிரித்து விட்டேன்.

மும்பை - 86, வைதேகி ரமணி.

✉ 'வீட்டுக்கு ஒரு வேப்ப மரம்' பாதுகாக்கப்பட வேண்டிய கட்டுரை.

வேளச்சேரி, லட்சுமி வாசுதேவன்.

✉ 'உடம்பெல்லாம் உப்புச் சீடை' அருமையான கதை. புதிய எழுத்தாளருக்கு வாழ்த்து!

சென்னை - 64, கலாவதி தலையூர்.

✉ 'ஈஸ்வரி ஜெகதீச்வரி' தொடர் எங்கள் மனத்தில் என்றும் ஆன்மிக அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும்.

சீர்காழி, ஆர். கவிதா.

✉ இறைவன் எல்லோரையும் ஏதேனும் ஒரு திறமையோடும், சிறப்போடுமே படைக்கின்றான். அதை அறிந்து, நம்மை நாமே உணர்ந்து மேன்மையடைவதே பெருமை என்பதை மூங்கில் - பெரணை கதை மூலம் அன்பு வட்டத்தில் அழகாக ஆசிரியர் விளக்கி விட்டார்.

ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ முப்பது வயதாகியும், கையில் காசிருந்தும், நல்ல தகுதிகள் இருந்தும் திருமணம் தடைபெறுகிறதே என ஏங்கும் பெண்களுக்கு 'திருமணம் நடத்தித் தரும் திருத்தலங்கள்!' இணைப்பு அரிய வரப்பிரசாதம். ஆசிரியரின் அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது.

மேலகிருஷ்ணன்புதூர், கே.எல். சுபாக்கனி.

✉ மும்பை மணியின் புதிய ஆத்திச்சூடியில் 'ஈமெயில்' 'ஃபாஷன்' என்ற இரு ஆங்கில வார்த்தைகளுக்கு மாற்றாக வேறு தமிழ்ச் சொற்களைத் தேடிப் போட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

திருவரங்கம், அ. சம்பத்.

✉ 'தானத்தில் சிறந்தது உதானம்' தொடர்ந்து படித்துப் பயனடைகிறோம். இப்பகுதி முடிந்ததை எண்ணி வருந்தினாலும் அறிந்த செய்திகள் ஏராளம். டாக்டர். என். ராமகிருஷ்ணனுக்கு நன்றி!

பட்டாபிராம், நா. கலையரசி.

✉ 'கை முறுக்கு' அலங்காரம் அற்புதம். அதனைச் சுற்ற, தோழி கற்றுக் கொடுத்த பாங்கு அதனை விட அருமை.

மதுரை, எஸ். பானுமதி சிவராம்.

✉ 'பெண்ணியச் சிந்தனைகள்' வாசக சகோதரிகளின் சிந்தனைகள் ஒவ்வொன்றும் சுவைமிக்க செய்திக்களஞ்சியங்களாய்ப் பரிமளித்தன.

நெய்வேலி, எஸ். ஸ்ரீகாந்த்.



குளிர்பான ஆபத்து!

என் மகனுக்கு தலையில் பொடுகு அதிகமாக இருந்தது. ஷாம்பூகளும், மருந்துகளும் பயனில்லாததால் அருகில் உள்ள மருத்துவரை அணுகினோம். வெகு நாட்களாக வைத்தியம் பார்த்தோம். எதிலும் பலனில்லை. அதற்குப் பின் உடலிலும் அவ்வப்போது, ஓரிரு இடங்களில் பூச்சிக்கடி போல் சிவந்தும் தடித்தும் காணப்படும். சுமார் பத்து நிமிடங்களில் மறைந்து விடும். எப்போது வரும், போகும் என்பது தெரியாததால் மருத்துவரிடம் காண்பிக்கவும் இயலாது.

சுமார் ஆறு மாத காலத்துக்குப் பிறகு, எமது குடும்ப வைத்தியர் வெளிநாட்டிலிருந்து வந்தார். அவர் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள் செய்யும்படி சிபாரிசு செய்தார். அவனுக்கு பிளட் ஷுகர் 30% என்றும் அதன் காரணமாகத்தான் பொடுகு, ஆகிய பிரச்னைகள் என்றும் தெரியவந்தது. அருமையான மருந்துகள் அளித்தார்.

வீட்டில் முன்னோர்கள் யாருக்கும் இல்லாத சர்க்கரை நோய் இருபது வயதே ஆன என் மகனுக்கு எப்படி வந்தது என மிகவும் வேதனையடைந்தோம். அவன் நிறைய குளிர்ந்த பானங்கள் குடித்ததும் மேலும் அலுவலகத்திலும் சரி, வீட்டிலும் சரி, உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாததும் முக்கிய காரணமாகி விட்டது.

மருத்துவர் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு உடற்பயிற்சியுடன் மருந்து உட்கொண்டான்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீ அரவிந்தர் அன்னையிடம் மிகவும் பிரார்த்தனை செய்து கொண்டோம்.

எங்கள் பிரார்த்தனை நிறைவேறியது. சில மாத காலத்தில் மாத்திரை இல்லாமலேயே சர்க்கரையின் அளவு நார்மலாகி விட்டது.

அன்னையின் அற்புத அருளை, வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம்.

- பி.எஸ். அநுராதா, சிட்லபாக்கம்.

விஷுக்கணி காணணும்!



சதசதயம் (தேங்காய்ப் பால் பாயசம்)

கேரள மக்களின் மிக முக்கியமான பண்டிகைகளில் விஷுக்கணி. இது சித்திரைத் திங்கள் முதல் நாள் வரும். அன்று கேரள மக்கள் அதிகாலையில் எழுந்து, சுவாமி அறையில் பழங்கள், காய்கறிகள், நகைகள், நெற்கதிர் ஆகியவற்றை வைத்து கண் விழித்ததும் அதனைத் தரிசிப்பார்கள். வருடம் முழுவதும் பசுமையும், பொருளுமாக விளங்குவோம் என்பது ஐதீகம். அன்று செய்யப்படும் சில உணவு வகையில் சிலவற்றைத் தெரிந்து கொள்வோம்:



தேவையானவை :

பச்சரிசி - 1 ஆழாக்கு, நல்ல வெல்லம் - 2 ஆழாக்கு, நெய் - 100 கிராம், தேங்காய் அதாவது இளசான பால் தேங்காய் - 3, முற்றின தேங்காய் கீற்றுகள் - 5 (அ)6, ஏலக்காய்ப் பவுடர், சுக்கு பவுடர் - 2 சிட்டிகை.

செய்முறை : முதலில் அரிசியை நன்கு களைந்து அடிகனமான ஒரு அகல பாத்திரத்தில் இரண்டரைத் தம்ளர் தண்ணீர் ஊற்றி வேகவிடவும். வெல்லத்தைப் பொடி செய்து சிறிது தண்ணீரில் கரைத்து மண் கல் போக்கி வைத்துக் கொள்ளவும். அரிசி நன்றாக வெந்ததும் வெல்லக் கரைசலை ஊற்றிக் கொதிக்க விடவும்.

மூன்று தேங்காய்களையும் துருவி முதல் பால் தனியே எடுத்து வைக்கவும். பின் இரண்டாம் பாலைப் பிழிந்து, கொதிக்கும் பாயசத்தில் கலந்து வேக விடவும். கலவை கொதித்துக் கெட்டியானவுடன் கீழே இறக்கி முதல் பால்,



பண்டிகை

ஏலப்பவுடர், சுக்குப் பவுடர் ஆகியவற்றைச் சேர்க்கவும்.

ஒரு வாணலியில் நெய் ஊற்றி, அது காய்ந்ததும் தேங்காய் கீற்றுகளை பல் பல்லாக அரிந்து போட்டு அது சிவந்ததும் பாயசத்தில் கொட்டவும். கமகம சதசதயம் தயார்!



ஓலன்

தேவையானவை : வெள்ளைப் பூசணி - அரை கிலோ, மஞ்சள் பூசணி - கால் கிலோ, காராமணிக்காய் 100 கிராம், தேவையான உப்பு, தேங்காய் - 1, தேங்காய் எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன், பச்சை மிளகாய் - 1.



செய்முறை : பூசணி, பரங்கிக்காய்களை தோல் சீவி சிறிய 1 அங்குல சதுரங்களாக வெட்டிக் கொள்ளவும். காராமணிக்காயை 1 அங்குல நீளத் துண்டுகளாக அரிந்து கொள்ளவும். தேங்காயை உடைத்துத் துருவி கெட்டியான பால் எடுத்துக் கொள்ளவும். நறுக்கிய காய்களைச் சிறிது தண்ணீர் சேர்த்து வேகவிடவும். பாதி வெந்த பின் தேவையான உப்பு, கீறின பச்சை மிளகாய் சேர்த்து, நன்றாகத் தண்ணீர் வற்றி வெந்ததும் கீழே இறக்கி கெட்டியான தேங்காய்ப் பாலையும், தேங்காய் எண்ணெயும் சேர்த்துக் கலக்கவும். இதுதான் ஓலன்! சூடாகச் சாப்பிட சுவையாக இருக்கும்.

மத்தன் பச்சடி

தேவையானவை :

பழுத்த பரங்கிக்காய் - கால் கிலோ, வெள்ளைப் பூசணி - கால் கிலோவிலும் பாதி, தேங்காய் - 1 மூடி, பச்சை மிளகாய் இரண்டு, சிறிய துண்டு வெல்லம், 1½ ஸ்பூன் கடுகு, மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு, தாளிக்க தேங்காய் எண்ணெய் 2 ஸ்பூன்.

செய்முறை : இரண்டு காய்களையும் தோல் சீவி 1 அங்குல சதுரங்களாக வெட்டிக் கொள்ளவும். கனமான பாத்திரத்தில் காய்களைப் போட்டு அதனுடன் மஞ்சள் தூள், உப்பு, வெல்லம் சேர்த்து வேக

ஸ்ரீராம நவமி மஹோத்ஸவம்



திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலிருந்து பதினெட்டு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது கேட்டவரம்பாளையம்.

இங்கு 1907-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம், வரும் ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி அன்று நூறாவது வருஷ ஸ்ரீராமநவமி மஹோத்ஸவமாக வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. வேத பாராயணம், லட்சார்ச்சனை, பஜனை, ஆன்மிகச் சொற்பொழிவுகள், பட்டி மன்றம், அன்னதானம் என பெரும் வைபவமாக நடைபெறும்.

இவ் விழாவில் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டு, அருள்மிகு சீதா பிராட்டி சமேத ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி யின் அருளைப் பெறலாம்!

- புனர்வசு,
அபிராமபுரம்.

விடவும். தேங்காயைத் துருவி பச்சை மிளகாய், ½ ஸ்பூன் கடுகு சேர்த்து நன்கு மை போல அரைக்கவும். காய்கள் நன்றாக வெந்ததும் அரைத்த விழுதை அதில் கொட்டி சிறிது தளர, கூட்டு போல கரைத்து விடவும். கொதித்ததும் இறக்கி வாணலியில் எண்ணெய் காயவைத்து கடுகு தாளித்துக் கொட்டவும். இதை 'கல்யாண பச்சடி' என்றும் சொல்லுவார்கள்.

காயும் சேனை எரிசேரி

தேவையானவை : நேந்திரன் காய் - 1, சேனைக் கிழங்கு - ¼ கிலோ, பெரிய தேங்காய் - 1, மிளகு - 10, வரமிளகாய் - 2, சீரகம் - ½ ஸ்பூன், உப்பு - தேவையான அளவு, தேங்காய் எண்ணெய் - 100 கிராம், கறிவேப்பிலை - சிறிது, கடுகு - 1 ஸ்பூன், உளுத்தம் பருப்பு - 1 ஸ்பூன், மஞ்சள் தூள் - ½ ஸ்பூன்.

செய்முறை :

முதலில் தேங்காயைத் துருவி, அதில் பாதி அளவு தேங்காய் பூவை மிளகு, வரமிளகாய், சீரகம் சேர்த்து நன்றாக அரைத்து தனியே வைக்கவும். பிறகு நேந்திர வாழைக்காயைத் தோலுடன் சிறு சதுரத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். சேனைக்கிழங்கை தோல் சீவி, சதுரத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். இரண்டையும் நன்றாகக் கழுவி, ஒரு கனமான பாத்திரத்தில் சிறிது தண்ணீர் சேர்த்து மஞ்சள் தூள் போட்டு வேக விடவும். பாதி வெந்ததும் உப்புப் போட்டு குழையாமல் வேகவிட்டு அரைத்த தேங்காய் விழுதைப் போட்டு இரண்டு கொதி வந்ததும் இறக்கி வைக்கவும்.

வாணலியில் தேங்காய் எண்ணெயை விட்டு, காய்ந்ததும் அதில் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை போட்டுச் சிவந்ததும் துருவின தேங்காய்ப் பூவை போட்டு நன்றாகச் சிவக்க வறுத்து எரிசேரியில் கொட்டவும். இது மிகவும் சுவையாக இருக்கும்.

- சரோஜினி நடராஜன்

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

அடுக்குமாடி குடியிருப்புகள் விற்பனைக்கு



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கார்டன்ஸ்

DTP No.44/2003

மேலூர் ரோடு, ஸ்ரீரங்கம்,

திருச்சி – 6.

ஒன்று, இரண்டு & மூன்று படுக்கையறை வீடுகள்/உடன் குடிபுகும் நிலையில்

சிறப்பம்சங்கள்:

- ஸ்ரீரங்கம் பேருந்து நிலையத்திலிருந்து 10 நிமிட நடை தூரத்தில் மற்றும் 2 நிமிட நடை தூரத்தில் காவிரி ஆறு.
- 24 மணி நேர குடிநீர் வசதி, பாதாள சாக்கடை திட்டம், 3-பேஸ் மின் இணைப்பு உள்ளடங்கியது.
- நடுத்தர மக்களுக்கு ஏற்ற விலையில். சிறுவர் / சிறுமி விளையாட்டு இடம் மற்றும் புதிய கோவில்.
- தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் குறைந்த வீடுகளே உள்ளன.
- DTP அங்கீகாரம் மற்றும் வங்கி கடன் வசதி உண்டு.
- வாடகைக்கும் சில வீடுகள் உள்ளன.

OTHER ONGOING PROJECT

SHRI NARAYANA HOMES

Sheshadripuram, Subramanipuram, Srirangam

S.K.V. ENGINEERING CONSTRUCTIONS

54-A, அம்மாமண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 6.

Ph : 0431 - 2433132, 94431-44132

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு (சிறப்புத் தள்ளுபடியில்)



"கடலங்குடியின் இரு அரிய வாய்ப்புகள்"

ஜோதிட கலாநிதி Dr. K.N. சரஸ்வதி M.A., M.S., M.Ed., Doctorate in Counselling வழங்கும் தபால் வழி ஜோதிடம், தபால் வழி ஓவியம் வகுப்புகளில் சேர்ந்துப் பயனடையுங்கள்! **17.4.06** அன்று ஆரம்பம்.

ஜோதிடம் தபாலில் கற்கலாம் (தமிழ்/English) (ரூ.100/- சிறப்புத் தள்ளுபடியுடன்)

தம்முடைய 50 வருட ஜோதிட அனுபவமும், பரம்பரைக் கலைஞானமும் பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க ஜோதிட கலாநிதி டாக்டர் **கே.என்.சரஸ்வதி** அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கி இருக்கிறார். இம்முறையில் ஜோதிடம் பயில 4 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் வினாத்தாள்களுடன் சேர்த்து ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். 4 மாத முடிவில், **கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்** என்ற அமைப்பின் சார்பில், அருமையான டிப்ளோமோ DHA வழங்கப்படும்.

அட்மிஷன் பாரம், கட்டணம், பாட திட்டம் முதலான எல்லா விவரங்களடங்கிய Prospectus (தமிழிற்கும் ரூ. 33/-) (English-க்கு ரூ.30/-) M.O. செய்யவும். M.O. Coupon பின்புறம் விலாசம் எழுதவும். வெளிநாட்டவர் Pound 2/- Uncrossed British Postal Order அனுப்புக.

17.4.06 ஜோதிட வகுப்பில் சேர முந்துங்கள்.

Computer-ல் ஜாதகம் கணித்துத் தரப்படும். Sunday Holiday

KADALANGUDI ASTROLOGICAL RESEARCH CENTRE
38, Natesa Iyer Street, T. Nagar, Madras - 17.

6 முதல் 60 வயது வரை ஓவியம் தபாலில் கற்கலாம் (தமிழில் மட்டும் ரூ.225/- சிறப்புத் தள்ளுபடியுடன்)

தற்சமயம் எங்கும் கம்ப்யூட்டர் எதிலும் கம்ப்யூட்டர் என கம்ப்யூட்டரின் ஆதிக்கம் பெருகியுள்ளது. குறிப்பாக விஷுவல் கம்யூனிகேஷன்ஸ், கிராபிக்ஸ், அனிமேஷன்ஸ் போன்ற துறைகளுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றின் வெகுவாக முன்னேற ஓவியக் கலையில் தேர்ச்சி பெறுவது மிகவும் முக்கியமானது. எனது ஓவியப் பயிற்சி மேற்கூறிய துறைகளில் முன்னேற வெகுவாக உதவும் என்பதில் ஐயமில்லை. சிறப்பு வாய்ந்த ஓவியக் கலையை ஆர்வம் உள்ளவர்கள் தபால் மூலம் பயின்று தேர்ச்சி பெற டாக்டர் **கே.என்.சரஸ்வதி** அவர்கள் பாடத் திட்டங்களை 5 மாதங்கள் கொண்ட கோர்ஸாக உருவாக்கியுள்ளார். இந்த கோர்ஸில் கோடுகள் மூலம் படங்கள் மனித உருவம், கார்ட்டூன்கள், பூனைகள், வாட்டர்கலர் வர்ணம் தீட்டும் முறைகள் Modern Art என 20 பாடங்கள் அடங்கியுள்ளன. கோர்ஸின் முடிவில் **கடலங்குடி ஓவிய மையம்** சார்பில் DCA என சர்டிபிகேட் வழங்கப்படும். அட்மிஷன்பாரம், கட்டணம், பாடத் திட்டம் முதலான எல்லா விவரங்களடங்கிய ப்ராஸ்பெக்டஸ்க்கு ரூ.32/- MO அனுப்புக.

17.4.06 அன்று தபால் வழி ஓவிய வகுப்பில் சேர முந்துங்கள்.

KADALANGUDI ART CENTRE
38, Natesa Iyer Street, T. Nagar, Madras - 17.

சிறுகதை

சூரியா சிதானந்த்

"டேய் வருண், ஆட்டோக்காரன் வந்தாச்சு. ஸ்கூலுக்குக் கிளம்பியாச்சா இல்லியா...?" அடுப்பிலிருந்து தோசைக் கல்லை இறக்கியபடியே குரல்கொடுத்த அகல்யா, பரபரப்பாய் முன்னறைக்குள் எட்டிப் பார்க்கிறாள். அங்கே -

மகள் ஷோபி கல்லூரி செல்ல தயாராகிக் கொண்டிருக்க... ஷூவை மாட்டிக் கொண்டிருந்த வருணோ அழுகையின் விளிம்பிலிருந்தான்.

"போங்கம்மா... ஷூ பாலீஷ் தீர்ந்திடுச்சுன்னு நாலு நாளா சொல்லிட்டிருக்கேன். நீங்க காதுலயே போட்டுக்க மாட்டேன் றீங்க." என்கிறான் நாசி விடைக்க.

"அதுக்கு ஏண்டா ஒப்பாரி வைக்கறே! அம்மா இன்னிக்கே மறக்காம டவுனுக்குப் போய் வாங்கியாந்துடறேன்... போதுமா?" சொன்ன அகல்யா அதே கையோடு, "என்னங்க... ஆபீஸ் கிளம்பறப்போ ஞாபகமா ஒரு ஆயிரம் ரூபாயை என் ஹாண்ட்பாகில் போட்டு வச்சுட்டுப் போயிடுங்க" என்கிறாள் தன் கணவனிடம் அமர்த்தலாய்.

தோசையை வாயில் போடப் போன மௌலியின் கரம், இந்த ஆயிரம் ரூபாய் டிமாண்டுக்கு ஃப்ரீஸிங் மோடில் நின்று விட

"வாவ்... ஒரு சின்ன ஷூ பாலீஷ் டப்பா வாங்கறதுக்கு ஆயிரம் ரூபாயா! ஏம்மா... உங்களுக்கே இது கொஞ்சம் டூமச்சா படலே?" என்கிறாள் ஷோபி தன் வட்டக் கண்கள் அகலமாய் விரிய.

"க்கும்... ஷூ பாலீஷ்னா வெறுமே அதை மட்டும் வாங்கிட்டு ஓடி வந்துற முடியுமா? இன்னும் வீட்டுக்கான மளிகை... காய்கறி... லொட்டு லொசுக்குன்னு எல்லாத்தையும்தானே வாங்கியாவணும்...!" என அகல்யா நொடித்துவிட்டுப் போக, 'பாவம் அப்பா! இன்னிக்கு அவர் பர்ஸுக்கு வேட்டுதான்' என நினைத்துக் கொண்டாள் ஷோபி.

ஷோபி பயந்தபடியேதான் ஆயிற்று. சாயந்திரம் காலேஜ் முடிந்து திரும்பியவளுக்கு முன் ஹால் டீப்பாயின் மீது பரத்திக் கிடந்த சில பல பார்சல்களும், பாத்திர பண்ட வகையறாக்களும் கட்டியம் கூற

பின்கட்டிலிருந்து ஆவலாய் ஓடி வந்தாள் அகல்யா.

"ஏய் ஷோபி... முதல்ல இந்த சல்வார்கமீஸ் உனக்குப் பிடிக்குதான்னு பார்... வா"

வித்தை காட்டுபவள் போல் பெரிய கவர் ஒன்றிலிருந்து அம்மா உருவிக் காட்டிய அந்த இளம்நீல நிற காட்டன் சல்வார் அழகாய் இருந்ததுதான். என்றாலும் எதற்கு இப்போது புதிதாய் ஒன்று?

"எனக்குத்தான் பீரோ அடைக்க ட்ரெஸ் இருக்கேம்மா. இப்ப எதுக்கு இது?"



''நீ சும்மாயிரு. ஒரு ரெடிமேட் கடை ஷோகேஸ்ல இதைத் தொங்கவிட்டிருந்தான். கலர் சூப்பராயிருந்துச்சா... உனக்கு நல்லாயிருக்குமேன்னு வாங்கிட்டேன்'' என சிலாகித்துக் கொண்ட அகல்யா, ''சரி... அடுத்து இதைப் பாரு. அசந்து போயிடுவே'' என்றபடி, ஒரு பேப்பர் பொட்டலத்தைப் பிரிக்க - உள்ளிருந்து பளபளப்பாகச் சிரித்தது அந்தச் சின்ன மூன்றடுக்கு டிபன் கேரியர்.

அடி அகலமாய்... மேலே குறுகலாய்... கோவில் கோபுரம் போல் தோன்றிய அது நிஜத்துக்குமே புது மாடல்தான். சந்தேகமில்லை. ஆனால் இதை வைத்தும்தான் இந்த அம்மா என்ன செய்யப் போகிறாளாம்?

''எப்படியிருக்குன்னு கேக்கறேனில்லே? வாயைத் திறந்து சொல்லேன்''

''நல்லாத்தான் இருக்கு. ஆனா இப்போ இதை எதுக்காக வாங்கினீங்கன்னுதான் தெரியலை...'' சொன்ன ஷோபியை வெடுக்கென முறைத்தான் அகல்யா.





குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஆகார வகையில் இனிப்புச் சுவையைச் சேர்க்க வெல்லத்தைப் பயன்படுத்தினால் அதிக இரும்புச் சத்து கிடைக்கும்.

- கே. ராஜேஸ்வரி, மருதாடு.

"உனக்கு வேணாம்னா போயேன். வருண் ஆசை ஆசையா கொண்டு போவான் பார்" என்கிறாள் தன் ஆதங்கத்தை மறைத்தபடி.

"க்கும்... நெனச்சுட்டேயிருங்க. அந்த தடியனுக்கு பொரியல் வைக்கப் போதாது இது" - நக்கலாய்ச் சிரித்த ஷோபி.

"ஆமா... இதென்ன பார்சல்மா? வெயிட்டா தெரியுது" என்றபடி இழுக்க, உள்ளிருந்து வழுவழுவென நழுவி விழுந்தன மூன்று ஷிபான் புடவைகளும் அதற்கான மேட்சிங் ரவிக்கைத் துணிகளும்.

"நம்ம பூமணி சில்க்ஸ்லே ஆடித் தள்ளுபடி போட்டிருந்தான். சரிதான்... உடுமாத்துக்கு ஆகுமேன்னு எடுத்தேன். நல்லாயிருக்கில்லே?"

ஆவல் மின்ன கேட்ட அம்மாவை அதற்கு மேலும் நோகடிக்க விரும்பாத ஷோபி, "ஓ ஃபர்ஸ்ட் கிளாஸ்மா" என்றதுடன் நழுவி விட்டாள்.

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒருநாள் -

ஆபீஸிலிருந்து திரும்பிய மௌலி, வீட்டில் அகல்யாவைக் காணாமல் திகைத்தான்.

"அம்மா எங்கேடா காணோம்?"

"அவங்க ப்ரெண்ட் ப்ரீதா ஆன்ட்டி வீட்ல ஏதோ பர்த்டே பார்ட்டியாம். ஏழு மணிக்கெல்லாம் வந்துடறேன்னு சொன்னாங்க."

வருண் சொல்லி வாய் மூடவில்லை. வாசலில் ஆட்டோ ஒன்றின் கர்ரா புர்ரா சத்தம். தொடர்ச்சியாய் "அந்தப் பெட்டியை இறக்கி வீட்டுக்குள் கொண்டு வச்சிடுப்பா" என்கிற அகல்யாவின் உத்தரவு.

ஆட்டோக்காரன் பின்னாலேயே வந்து அவனுக்குப் பணம் தந்து அனுப்பிய அகல்யாவின் முகத்திலோ நூறு முழு நிலாக்களின் மொத்தப் பிரகாசத்தையும் குத்தகைக்கு எடுத்தாற்போல் ஜொலிப்பு.

"என்ன அகல்யா அது?"

"பெட்டிக்கு மேலே ஃபுட் ப்ராஸஸர்னு போட்டிருக்குப்பா. நம்ம மிக்ஸி மாதிரியே பெரிசா படமெல்லாம் போட்டிருக்கு."

பெட்டியிலிருந்த அந்தச் சாதனத்தை கிச்சன் மேடை மேல் அலுங்காமல் எடுத்து வைத்து ஒருகணம் அழகு பார்த்தாள் அகல்யா.

"ஏங்க... பார்க்கறதுக்கே அசத்தலாயிருக்கில்லே! இது சப்பாத்தி... பூரிக்கு மாவு பிசைஞ்சுடுமாம்! காரட்... வெங்காயம்... இன்னும் எல்லா வெஜிடபிளையும் நிமிஷமா அரிஞ்சுடுமாம். ஆப்பிள்... திராட்சை... ஆரஞ்சு... அன்னாசின்னு அத்தினி பழ ஜூஸையும் சக்கையில்லாம பிழிஞ்சுடுமாம். தேங்காயை ஆட்டி பால் எடுத்துடுமாம்... ம்... இன்னும் கூட என்னவோ சொன்னாள்..." மூச்சு வாங்காமல்.

அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை மௌலிக்கு. இப்படித்தான் யாரோ சொன்னதாய், போன வருஷம் ஒரு சான்ட்விச் மேக்கரை வாங்கினாள். வந்த ஜோரில் இரண்டு மூன்று தடவை சான்ட்விச் போட்டு தடபுடல் படுத்தியது டன் சரி. அதோ... ஷெல்ஃபின் மேலே ஒட்டடை படிந்து உறங்குகிறது அது.

அதற்கும் முன்பாய், 'வாக்வம் க்ளீனர் வாங்கினாலே ஆயிற்று' என அவனுடன் மல்லுக்கு நின்று அந்த நாலாயிரம் ரூபாய் மெஷினை வாங்கியவள்தான். ஒரே மாதம்! "செக்கு உலக்கையாட்டம் இதைக் கட்டி இழுத்துட்டுப் போறதுக்கு விளக்கு மாற்றால் நாலு தட்டுத் தட்டிப் பெருக்கிடலாம்" என்ற விமர்சனத்துடன் ஒரேயடியாய் ஓரங்கட்டிப் போட்டாயிற்று.

இதோ... இன்று இந்த ஃபுட் ப்ராஸஸர்! இதன் மோகம் எத்தனை நாள்

நீடிக்குமோ? பிரம்மனுக்குத்தான் வெளிச்சம்.

"ஏம்மா... தேங்காய்ப் பாலை நம்ம மிக்ஸியே பர்ஸ்ட் கிளாஸா எடுத்துடுது. சப்பாத்தி மாவை வெறும் கையாலேயே இரண்டு நிமிஷத்துலேயே பிசைஞ்சுடலாம். நம்ம நாலு பேர் சமையலுக்கு வெங்காயமும் காயும் வெட்டறதுங்கறது ஒரு விஷயமேயில்லை. பிறகு எதுக்கு இதிலே போய்ப் பணத்தை வேஸ்ட் பண்ணுறீங்க?"

"ஷ்.... இதோட அருமை புரியாம பேசாதே போடி அந்தப் பக்கம்" விரட்டினாள் அகல்யா.

"ஹாய்... அகல்யா எப்படியிருக்கே? ரொம்ப நாளாச்சு!" -கடைத் தெருவில் விதம்விதமாய் பீங்கான் பொருட்களைக் குவித்து கூவிக் கொண்டிருந்தவனிடம், எதை வாங்குவது என யோசித்தவாறு நின்ற அகல்யா தோளில் விழுந்த தட்டலுக்கு திகைத்துத் திரும்புகிறாள்.

பின்னால் -

மலர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தவள் அவளது பால்ய கால சிநேகிதி ரம்யா!

"ஏய் ரமி... எப்படி இருக்கே? உன்னைப் பார்த்து எத்தினி வருஷமாகுது...!" கண்ணகலக் கேட்டவளின் தோளைப் பிடித்துக் கொண்ட அகல்யாவின் அணைப்பில் நிறைய நேசமிருந்தது.

"சரி சரி வா... எங்க வீடு இதோ ரொம்பப் பக்கம்தான்" என்றபடி தோழியை இழுத்துச் சென்றாள் ரம்யா.

வெகு இட்டமாக - அளவாக அழகாக இருந்தது ரம்யாவின் வீடு. முன்னறையில் வந்தவர்கள் அமர ஒரு சோபாசெட். சின்னதாய் ஒரு டீப்பாய். அறை மூலையில் டீ.வி. ஸ்டாண்ட் என்றிருக்க, பெட்ரூமாகட்டும்... பிள்ளைகளின் ஸ்டடி ரூமாகட்டும்... எந்தவித அடைசலையும் காணோம்! ஓங்கிப் பேசினால் எதிரொலி கேட்குமளவு படு கச்சிதம்.

"முதன் முதலா எங்க வீட்டுக்கு வந்திருக்கே. சாப்பிட்டுட்டுத்தான் போகணும் அகல்யா" சொன்ன ரம்யாவை மறுக்க முடியாமல் பின்தொடர்ந்து கிச்சனுள் நுழைந்த அகல்யா அசந்தே போனாள். இத்தனை பாந்தமாய் கூட சமையல் கட்டை வைத்துக் கொள்ள முடியுமா என்ன! அங்கே -

தேவையில்லாதது என்று எந்தவொரு அநாவசியப் பொருளும் இல்லை. ஆனால் சமையலுக்குத் தோதாக எல்லாமே இருந்தது. கிரைண்டர்... மிக்ஸி... ப்ரிஜ்... கேஸ் ஸ்டவ்... குக்கர்... தவிர்த்து, இருந்த இரண்டே அலமாரிகளில் அத்தனை பொருட்களும் நறுவிசாய் அடுக்கப்

புது யுக்தி

ஆடியோ கேசட்டுகள் நிறைய வெளியிடுகிறார்கள். சினிமாப் பாடல்கள் மட்டுமின்றி, ஆன்மிகத்திலும், இசைத் துறையிலும் நிறைய கேசட்டுகள் வெளிவருகின்றன. காலையில் எழுந்தவுடன் ஸ்லோகங்கள், பக்தி கானங்கள் கேட்பதற்கு இனிமையாகவும், பயனுள்ளதாகவும் இருக்கின்றன. மனமுருக கூடச் சேர்ந்து பாடலாம் என்று தோன்றும்போது முடியாமல் போகிறது. அந்தந்த ஆடியோ வெளியீட்டாளர்கள் ஆடியோ கேசட் வெளியிடும்போது கூடவே அதில் அடங்கிய பாடல்களைப் பற்றிய அச்சடித்த சிறு புத்தகத்தையும் சேர்த்து வழங்கினால் எங்களைப் போன்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவர்களுக்கும் புது வியாபார யுக்திதானே. செய்வார்களா?



- வி. சொர்ணலதா, நாகர்கோவில்.



Sculpting Nyabharatha

St. John's Matriculation School

(Co-educational Residential & Day School-English Medium)
Govt. of Tamil Nadu Recognized - Reg. No.12808/E2/2002

Arise! Awake!! Stop-Not!!!
Till the Goal is Reached...

Attention Parents,

1) Do you have a longingness to promote your children as Genius, Active, Brilliant and in brief, 'The Best' among all?

2) We believe the education should lead the students to a practical, confident & successful living. Do you also think like this?

3) Do you seek an Educational Institution which realises your thirst to see your budding children as the 'DREAM KIDS' and the pride achievers in the forthcoming days?

Come to us



The BEST of Facilities

- Individual attention-Experienced Teachers
- Free Computer education
- Sports and yoga training
- Hostel facilities separate for boys & girls
- English, Hindi, Malayalam, Tamil, Sanskrit and French Language options
- Assured results for talented, skilled and hardworking students.
- Dance, Music & Library
- Bus / Van facility for day scholars



Assured Scholarship for New Students who scored Top 3 level Ranks in their earlier schools & from financially poor background

For Further Details or write to
The Secretary
St. John's Matriculation School
21, Sakthi Nagar, Press Colony, Coimbatore - 641 019.
Cell : 98422-26662, 93632-19846, 5544366
www.pearlseducation.com

To avail 10% Fee Concession in admission Bring this Paper Cutting

'Win Small. 'Win Early. 'Win Often'
'Win the 'World of 'Wisdom with us'



சிவதரிசன ஐதீகம்

சிவதரிசனம் முடிந்தபின் சிறிது நேரம் கிழக்கு நோக்கி அமர வேண்டும். சிவகணங்கள் கோயில் வாசல் வரை வந்து திரும்பி விடுவதாக ஐதீகம். விஷ்ணு ஆலயத்தில் அவ்வாறு அமர வேண்டியது இல்லை. ஏனெனில், விஷ்ணு தூதர்கள் நம்மோடு நம் வீடு வரை வருவார்களாம்!

- ஆர். மீனாட்சி, திருநெல்வேலி.

பட்டிருந்தன. எதனாலோ... வகவுக்கு அடைசல் அடைசலாய் சாமான்களைச் சேமித்து வைத்திருக்கும் தன் வீட்டுக் கிச்சன் ஒரு விநாடி நினைவுக்கு வந்து போகிறது.

இதற்குள் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்த நன்னாரி சர்பத்தை அளவான கண்ணாடித் தம்ளரில் ஊற்றி, வகவிடம் நீட்டிய ரம்யா, சப்பாத்திக்கு மாவு பிசையத் தொடங்குகிறாள்.

"நீ வெஜிடபிள் கட்டர்... ரோட்டி மேக்கர்னு எதுவும் வாங்கி வச்சுக்கலையா ரமி?" கேட்டவளை நிமிர்ந்து பார்த்த ரம்யா புன்னகைத்தாள்.

"ப்ச... எதுக்கு அகல்யா? நாமென்ன அன்றாடம் முப்பது நாப்பது பேருக்கா விருந்து சமைக்கப் போறோம்? அப்படியே வாங்கினாலும் வாங்கின புதுசுல ஆசையா நாலு நாளைக்கு உபயோகிப் போம். அப்புறம் பழையபடி அருவா மணைக்கும் கத்திக்குமே வந்துடுவோம். பிறகெதுக்கு அநாவஸ்யமா காசை விரயம் பண்ணிக்கிட்டு?"

உண்மை... உண்மை என்றலறியது அகல்யாவின் குறுகுறுத்த நெஞ்சம். எதை எதையோ ஆசைப்பட்டு வாங்கிக் குவித் தாளே... அதில் எதையாவது ஒழுங்காக உபயோகிக்கிறாளா? என்றோ வாங்கிய காபி பர்குலேட்டர் முதற்கொண்டு மூன்று மாதம் முன்பு வாங்கிய ஃபுட்ப்ராஸஸர் வரை கேட்பாரற்றுத்தான் கிடக்கின்றன.

ஆம்! - இனி சகல உபயோகத்துக்கும் இதுதானாக்கும் என்று சவால் விட்ட வளுக்கு இரண்டே வாரத்தில் எல்லாம் அலுத்துப் போயிற்று. அந்த நவீன மெஷினின் உதிரி பாகங்களை மாட்டி... கழற்றி... கழுவி... துடைத்து என காபந்து பண்ணுவதற்குள் போதும் போதும் என் றாகிப் போனது. கணவனுக்கும் பிள்ளை களுக்கும் பதில் சொல்லியாக வேண்டுமே என்கிற பயத்தில்தான் அவ்வப்போது அதை உபயோகிப்பதே!

"என்ன அகல்... சைலன்ட் ஆயிட்டே... வா... வந்து சாப்பிடு."

ரம்யா அன்பாய் அழைக்க ஒரு பெரு மூச்சுடன் டைனிங் டேபிள் முன் அமர்ந் தாள் அகல்யா.

"வீட்டை அருமையா வச்சுட்டிருக்கே ரமி. அதிகப்படின்னு சொல்றா மாதிரி ஒரு சாமான் செட்டு வாங்காமல்... அடைசல் சேர விடாமல்.. ஹ்..ம்... எப் படித்தான் உன்னால் இருக்க முடியுதோ!

"ஏன் முடியாது அகல்யா! ஷாப்பிங் கிளம்பறப்பவே எதையும் தேவையில்லாம வாங்கிடப்படாதுன்னு தீர்மானம் பண் ணிக்குவேன். அதை மீறி எது மேலேயாச் சும் சபலம் தோணிச்சுன்னு வை. "சீ-சீ... இது நல்லாவேயில்லை. இதில் பணத்தைப் போடறது படுதண்டம்"னு எனக்குள்ளே சொல்லித் திரும்பிப்பேன். ஆச்சர்யம் பார்... அதுக்குப் பிறகு அதை வாங்கவே தோணாது."

தோழியிடம் விடைபெற்று வீடு திரும்பும் வழியில் பிரம்மாண்டமான டெக்ஸ்டைல்ஸ் ஒன்றின் வெளியே, அகல்யாவுக்கு மிகவும் பிடித்தமான ஆரஞ்சு வண்ணத்தில் சிறு சிறு கட்டங் களிட்ட அழகிய புடைவையொன்று கண்ணில் பட,

"சீச்சீ... என்ன புடைவை இது! நல்லாவேயில்லையே. இதற்குப் போய் யாராவது தண்டமாகச் செலவழிப்பார் களா!" என்ற அழுத்தமான நினைப்புடன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் அகல்யா. ●

பழந்தின்னும் பளபள கன்னம்!



• தர்பூசணியை சிறு துண்டுகளாக்கி, கடித்து மெதுவாகச் சாப்பிடுவதால், உடலில் உள்ள கொழுப்புச் சத்து குறைகிறது.

• சாத்துக்குடி சாறு தினமும் 1 தம்ளர் குடிப்பதால், உடல் இளைக்கும்.

• எலுமிச்சை பழச்சாறு குடித்தால் பித்த சம்பந்தமான நோய்கள், நீர்க்கடுப்பு, மலச்சிக்கல், உஷ்ண வயிற்று வலி நீங்கும்.

• பேரிக்காய் தாய்ப்பால் சுரக்க உதவும்.

• முலாம்பழம் ஜீரண சிக்கலுக்கு கைகண்ட மருந்து. மலச்சிக்கலுக்கு நிவாரணம் கிடைக்கும்.

• உலர்ந்த திராட்சைப் பழம் மலச்சிக்கல் வராமல் தடுக்கும். உடல் பலத்துக்கும் எலும்பு வளர்ச்சிக்கும் உதவுகிறது.

• பப்பாளி மாதவிடாய் கோளாறுகளை நீக்கும்.

• மாம்பழம் மலச்சிக்கலை நீக்க, சருமம் பொலிவு பெற, ஆண்மைக் குறைவு நீங்க உதவு கிறது. கண் பார்வை ஒளிரும்.

• பழங்களை அடிக்கடி சாப்பிடுவதால் உடலில் எதிர்ப்பு சக்தி கூடும்.

• உடல் இளைக்க வேண்டுமா? சிறிது உடற்பயிற்சியும், வாரத்தில் 4 நாட்கள் இரவு உணவாக ஒரு கிண்ணம் பழம் மட்டும் சாப்பிட்டுப் பாருங்கள் பலன் எளிதில் கிடைக்கும்; கூடவே இலவச இணைப்பாக சருமமும் மினுமினுக்கும்.

லட்சுமி பாலசுப்ரமணியம், உள்ளகரம்.

படம் : **புதூர் சரவணன்**



புத்தாண்டு ரெசிபி!

தமிழ்ப் புத்தாண்டு அன்று இனிப்பு, புளிப்பு, உப்பு, காரம், கார்ப்பு, உவர்ப்பு என அறுசுவையோடு பல ரெசிபிகள் செய்து உண்டு குடும்பத்தோடு மகிழ்கிறோம். ஆனால் கீழே கொடுக்கப்பட்டுள்ள வித்தியாசமான இந்தக் குறிப்பைச் செய்து, கடைப்பிடித்துப் பாருங்கள் ஆண்டு முழுவதும் சந்தோஷம் நிலவும். அமைதி ஏற்படும்.



முதலில் 12 மாதங்களையும் எடுத்துக் கொள்ளவும். அவற்றில் உள்ள கசப்புத் தன்மை, வெறுப்பு, பகைமை, பொறாமை போன்றவற்றைச் சுத்தமாகக் கழுவவும்.

29, 30, 31 என்று (தேதிகளை) பல வகையாகத் துண்டுகளாக்கிக் கொள்ளவும்.

அதில் ஒவ்வொரு நாளும் ஒரு துளி நம்பிக்கை, ஒரு துளி சகிப்புத்தன்மை, துளி தைரியம், துளி உழைப்பு போட்டு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தினம் சிறிது நம்பிக்கை, எதிர்பார்ப்பு கலந்து, தியானம், பக்தி என்ற கரண்டியால் நன்கு கலக்கவும்.

மறக்காமல் இரண்டு கரண்டி சந்தோஷம், அதிக நகைச்சுவை உணர்வு சேர்க்கவும்!

எல்லாவற்றையும் 'அன்பு' என்ற பாத்திரத்தில் பரப்பவும். ஒளி நிறைந்த சந்தோஷம் என்ற நெருப்பால் சமைக்கவும்.

கடைசியாக, புன்னகையால் நன்கு அலங்கரித்து, தாராளமாகப் பரிமாறவும்.

- ஆர். ஜானகி,
சென்னை - 4.

*‘சதுர்பாக : ஸுப; ஸுபக்ஷோடஷோ லவணாம்ஷ;
சதுர்பாக ; ஸர்பிஷ; தைலஸ்யாவா, ஏகமார்ய பக்தம்
ப்ரஸ்தஷட்பாக : ஸுப; அர்த்தஸ்நேஹ மவராணாம்
பாதோநம் ஸ்த்ரீணாம்; அர்த்தம் பாலாநாம்’*

ஓர் ஆணின் உணவில் பெண்ணுக்கு முக்கால் பங்கு!



என்ன ஸ்லோகம் இது? தெய்வத்தை வழிபடும் ஏதாவது மந்திரமா? என்ன அர்த்தம் இதற்கு? என்று யோசிக்கிறீர்களா? ஆம்! இந்த ஸ்லோகம் யார், யார், எந்த அளவில் சாப்பிட வேண்டும் என்று வெகு அற்புதமாகக் குறிப்பிடுகிறது. ‘அன்னம் பரம்பிரம்ஹம்’ - உணவே இறைவன்தான்! அதிலும், மலர் போன்ற மங்கையர் எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று வெகு அழகாகக் குறிப்பிடுகிறது! ஊட்டச்சத்துள்ள உணவின்மையால் தான், பெண்கள், இளமையிலேயே முதுமைத் தோற்றம் தருகிறார்கள்!



இதை எழுதியவர் : சந்திரகுப்த பேரரசின் அற்புத மூளையாக விளங்கிய சாணக்கியர். அர்த்தசாஸ்திரம் என்ற நீதிநூலில் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சுலோகத்தின் அர்த்தம் :

“ஒரு வீரன், ஒரு படி அரிசி, கால் படி பருப்பு வகைகள், பதினாறில் ஒரு பங்கு உப்பு, நான்கில் ஒரு பாகம் நெய் அல்லது எண்ணெய் தன் உணவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நடுத்தர வயதுள்ள சாதாரண ஆண் மகன், ஒரு படி அரிசி, ஆறில் ஒரு பங்கு பருப்பு வகைகள், அதில் பாதிக்கு நெய் அல்லது எண்ணெய் தன் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பெண்களே! நீங்கள் இந்த ஆணின் உணவில் முக்கால் பங்கு சாப்பிட வேண்டும். சிறுவர்களே! நீங்கள் தவறாது உங்கள் அன்னையர் சாப்பிடும் உணவில் அரைப் பங்கு சாப்பிட வேண்டும்” இதுதான் ஸ்லோகத்தின் அர்த்தம்!

இப்படிச் சாப்பிட்டால்தான் உடலும் உள்ளமும் உறுதியாக இருக்கும். அப்படித்தான் நம் மூதாதையர் இருந்தனர். நாம் இவ்வாறு சாப்பிடுகிறோமோ இல்லையோ, இனியேனும் இந்த அளவில் சாப்பிட முயல்வோமே!

- மு. முரளீதரன்.

அலோஹாவின் அதிவேக கணிதம்

- பந்து மடங்கு அதிக வேகத்தில் கணக்கிட
- தேர்வு நேரங்களில் நேரத்தை மிச்சப்படுத்த
- கணிதப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்றிட
- முழு கணக்கினை திரும்பவும் கணக்கிடாமல் விடைகளை சரிபார்க்க
- பாடப் புத்தகத்திலுள்ள அனைத்து கணக்குகளின் விடைகளையும் சுலபமான முறையில் சரிபார்க்க
- கழித்தல் கணக்குகளில் கடன் வாங்கும் முறை இல்லாமல் செய்ய
- பெருக்கல் கணக்கில் ஒரே படியில் விடைகளை அறிந்து கொள்ள
- அனைத்து கணக்குகளையும் மனக்கணக்கின் மூலம் கணக்கிட
- தேர்வில் சிறு சிறு தவறுகளை தவிர்க்க

$199995^3 = ?$
கால்குலேட்டர் உதவி இல்லாமல் இந்த கணக்கை Aloha Speed Maths பயிலும் குழந்தைகளால் சில விநாடிகளில் தீர்வு காணமுடியும்.



அரசு தேர்வு எழுதும் 10வது மற்றும் 12வது வகுப்பு மாணவர்களுக்கான சிறப்பு பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ALOHA Speed MATHS

Tel : 044-55682410, 55682411

Further Details contact :

ALOHA INDIA

(A Division of KK Academy (P) Ltd) An ISO 9001 : 2000 Certified Company
"Deccan Heritage" New No.521, 2nd Floor, Anna Salai,
Nandanam, Chennai - 35. Tamilnadu, India.
E-mail : info@alohaindia.com Web : www.alohaindia.com

Become our Franchisee & join the successful ALOHA family



பயிற்சிக் காலம் முடிந்தவுடன் தமிழக அரசின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், கடனுதவி மற்றும் லைசன்ஸ், வேலை வாய்ப்பில் உதவி ஆகியவற்றுக்கு மிகச் சிறந்த வாய்ப்பு அளிக்கிறது

மகா அழகுக் கலை பயிற்சி நிலையம்

தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்றது No1/4087/THOPA/'98

Maha Beauty Training Institute offers

- Diploma in Beautician & Hair Dresser
- Diploma in Herbal Cosmetic preparation
- Diploma in Latest Electrical Equipment Handling

MAHA introduces India's most popular LASER for permanent hair removal

Skin whitening cream available only at MAHA
Get free consultation for skin & Laser Hair Removal directly from MAHA

Maha appears in JAYA TV on every Thursday Watch between 11 to 11.30 p.m
In Tamilan TV everyday 1 to 1.30 p.m

சிறப்பு தங்கும் இடவசதி
பயிற்சிக் காலம் : 2 மாதம்.
சிறப்புப் பயிற்சி 1 மாதம்.

Timing : 9.30 a.m to 8.00 p.m

Maha (Ladies Only)

MAHA BEAUTY PARLOUR & BEAUTY TRAINING INSTITUTE

INSTITUTE / PARLOUR 4, C-Block, 1st Floor, Venkatesa Agraharam, Mylapore, Chennai-4, (Near Saibaba Temple), Tel : 24950009, 24950922, Cell : 98400 94466 BRANCH: W-111 3rd Avenue, Anna Nagar, Phone : 26205960. Cell: 98403-27770 E-mail: mahakann@yahoo.com Web: mahabeautyparlour.com

வெற்றிப்பாதை-6

டாக்டர் பே.நா.நாராயண ராஜா



கல்லூரி செல்லும் மாணவனை அவனது வாழ்க்கைக் குறிக்கோள் என்னவென்று கேட்டால், அந்த வருடத் தேர்வில் எப்படியாவது வெற்றி கொள்ள வேண்டுமென்றும், வெற்றி பெற்ற பின்பு ஒரு வேலை தேடுதலே தனது குறிக்கோள் என்றும், பின்பு வாழ்க்கையில் செட்டிலாகி திருமண பந்தத்தை ஏற்படுத்துவதில் முனைப்போடு இருந்து, பின்பு தனது பிள்ளைகளுக்கு சொத்துச் சேர்ப்பதை, அவரவர் வசதிக்கேற்ப, வாய்ப்புகளுக்கேற்ப, குறிக்கோளாகக் கொண்டு வாழ்வின் விளிம்புக்குச் செல்கின்றான்.

ஆரம்ப காலத்திலேயே தங்களது வாழ்க்கைக்கு வளம் சேர்க்க எந்தளவு பொருளாதாரத்தைச் சேர்க்க வேண்டுமென்ற நீண்டகாலக் குறிக்கோளை இவர்கள் வகுக்காது, காலம் கடந்த பின்பு இதனைச் சிந்திக்கின்றனர். அவர்களது சிந்தனை செயல் வடிவம் பெறுவதற்குள் வாழ்வின் பெரும் பகுதியை இழந்து விட்டிருப்பர்.

பல நேரங்களில் மனிதர்கள் தனிமனித முன்னேற்றத்தில் ஒரு கோணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, சான்றாக பொருளாதாரத்தில் மேன்மையடைய வேண்டுமென்ற குறிக்கோளை மட்டும் கொண்டு, வாழ்க்கையின் பல்வேறு கோணங்களைப் புரிந்து கொள்ளாமலேயே விரக்தி அடைந்து விடுகின்றனர். தனிமனித வாழ்வின் முன்னேற்றக் கோணங்கள் எவை? நான்கு தலைமுறைக்கு சொத்து சேர்த்தவன், தனது குடும்ப வாழ்க்கை சரியில்லாத காரணத்தால் தற்கொலை செய்து கொள்வது ஏன்? குடும்பச் சுமையை இறக்க முடியாமல் அதனைச் சுமந்து, பொருளாதாரச் சிக்கலில் சிக்கி, பின் இது என்ன வாழ்க்கை என்று சலிப்புக் கொள்வது ஏன்? நல்ல வேலை, நல்ல சம்பளமிருந்தும் மன உளைச்சல் தீர மனோதத்துவ நிபுணரைச் சந்திப்பது ஏன்? சிறந்த அறிவாளி என்று உலகம் புகழும் ஒருவன், தனது இல்லத்தில் அமைதியில்லாது இருப்பது ஏன்? இன்னமும் ஆயிரமாயிரம் முரண்பாடுகளைத் தனிப்பட்ட வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் சந்திக்கின்றோமே, இதனுடைய உண்மை நிலை என்ன? எது வெற்றி? எது தோல்வி? இது தத்துவார்த்தமான வினாவன்று, யதார்த்த நிலை என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தனிமனித முன்னேற்றத்தின் கோணங்கள் எவை?



வாழ்வில் வெற்றியின் கோணங்கள்


தனிமனித முன்னேற்றம் என்பது ஆறு வகை



ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உதவிகரமாக இருக்கும்.

1. உடலைச் சார்ந்த குறிக்கோள்கள்

பொருளை ஈட்டுவதிலேயே குறியாக இருந்து, தனது உடல் நிலையைப் பற்றிய அக்கறை கொள்ளாது அல்சர், தீராத தலைவலி, இதய அடைப்பு என்று சிக்கிக் கொள்வது பரவலாகி விட்டது. மாறி வரும் உணவுப் பழக்கங்கள் பெரிய காரணங்களாக இருந்தாலும், அதனைப் புரிந்து கொண்டு தங்களது உடலைச் சார்ந்த வெற்றிக்குரிய குறிக்கோள்களை இன்றைய இளைஞன் தீட்டிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இந்த விழிப்புணர்வே அவனது மற்ற வெற்றிக் கோணங்களைத் தாண்டிச் செல்ல அடித்தளமாக அமையும். மேலும் 'தன்னை உணர வேண்டும்' என்ற வேத வாக்கியம் மனம், புத்தி, யான வெற்றிப் பாதையை மையமாகக் கொண்டுள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ஆறு வகையான வெற்றிக் கோணத்துக்கும் தேவையான குறிக்கோள்களை அமைத்துச் செயல்படுவதே நமது வாழ்வின்



ஆன்மாவை மட்டுமல்லாது, உடலையும் குறிக்கின்றது. 'ஊனுடம்பு ஆலயம்' அல்லவா? உடலைச் சீராக வைத்துக் கொள்ள உதவும் பழக்க வழக்கங்களைக் கையாண்டால் உங்களது உடலைச் சார்ந்த வெற்றிக் குறிக்கோள்களை எளிதாகத் தீர்மானம் செய்ய இயலும்.


2. மனம், புத்தியைச் சார்ந்த குறிக்கோள்கள்

உடல் உறுப்புகள் தானாக எதையும் உணர்ந்துகொள்ள முடியாது. கண்கள் ஏதேனும் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அது எதனைப் பார்க்கிறது என்பதை மனம்தான் எடுத்துக்கூற இயலும். சில மனிதர்கள் கண்களைத் திறந்து கொண்டே தூங்கும்பொழுது அவர்களுக்கு முன்னால் இருக்கும் எந்தப் பொருள்களும் தெரிவது கிடையாது. ஏனெனில் அந்த நேரத்தில் மனம் இயங்குவதில்லை. மனம் இயங்கும் பொழுது மட்டுமே கண்ணின் பணி பூர்த்தி அடைகிறது. எனவே, உடல் மட்டும் நன்கு அமைந்தால் போதாது. மனமும், புத்தியும் திண்மை வாய்ந்ததாக அமைந்தால் மட்டுமே அவை நமது வாழ்வின் வெற்றிக்கு உதவுவதாக அமையுமென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது மனமும் புத்தியும் தெளிவடைய கல்வியும் நமது அனுபவங்களும் கருவியாக அமைகின்றன. பாரதத்தின் பாரம்பரிய குருகுல கல்வி மாணவனின் உடல், மனம், புத்தி என மூன்றையும் செம்மைப்படுத்த உதவியது. நவீன கல்வி நிறைய விஷயங்களை நமக்கு எடுத்துக் கூறினாலும் புத்தியின் வளர்ச்சிக்குப் பெரிதாக உதவவில்லை. கல்வி வேறு, அறிவு வேறு. கற்றவற்றிலிருந்து அறிவு பல நேரங்களில் வளர்ச்சி பெறுவதில்லை. சான்றாக 'மதுப்பழக்கம் உடலுக்குத் தீங்கு' என்ற கல்வி, கற்றவர் மத்தியில் கூட புத்தியை வளர்க்காத காரணத்தினாலேயே அவர்கள் மது அருந்துகின்றனர். நமது மனமும் புத்தியும் வெற்றிக்கு அடித்தளம் என்ற அறிவே அவையிரண்டையும் பக்குவப்படுத்திக் கொள்ளத் தேவையான குறிக்கோள்களை நாம் வரையறுக்க உதவும்.



3. குடும்ப உறவுகள் சார்ந்த குறிக்கோள்கள்

குடும்பம், பாரத கலாசாரத்தின் ஆணிவேர். குடும்ப உறவுகளை உருவாக்குவதும் தக்கவைத்துக் கொள்வதும் சீராக வளர்த்துக் கொள்வதும் தனிமனித வெற்றியின் மூலப்பொருள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனிதனுடைய உடல், மனம், புத்தியை இளமைக் காலத்தில் செம்மைப்படுத்த குடும்ப பந்தங்கள் மிகவும் உதவிகரமாக இருந்து வருகின்றன. குறிப்பாக கூட்டுக் குடும்ப அமைப்பு மனிதனுக்கு ஒன்றிப் போதல், விட்டுக் கொடுத்தல், பகிர்தல், சகிப்புத் தன்மை கலந்தாலோசித்தல் போன்ற நற்குணங்களைக் கற்றுத் தருகிறது. மாறிவரும் சமூக அமைப்புகளில் கூட்டுக் குடும்பத்தின் பங்கு மறையத் தொடங்கினாலும், பண்டிகைக் காலங்களிலும் வீட்டு விசேஷ நாளிலும் குடும்பங்கள் கூட்டாகச் சேர்ந்து ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழும் முறை இன்னமும் தொடர்வது நமது பாக்கியமே. தனிக் குடும்பத்திலும் கணவன் - மனைவி, பெற்றோர் - குழந்தைகள்; சகோதர-சகோதரிகள் ஆகியவர்களுக்கிடையே உள்ள உறவுகளும் முக்கியம் வாய்ந்தவையே. இன்றைய உலகில் உறவுகளை பொருளாதார நிலைகளை



வைத்து உரசிப் பார்ப்பதால் உறவுகளின் நெருக்கம் குறைந்து வருகிறது. இந்த உறவுகளை எவ்வாறு பலமடையச் செய்வது? எந்த உறவுகள் பலவீனமாக உள்ளன என யோசித்தால் பலவீனத்துக்கு என்ன காரணம்? எந்த மாதிரி திட்டமிட்டால் பலவீனத்தை, பலமாக்க முடியும் என யோசித்தால் அந்த முயற்சியின் முடிவே குடும்ப உறவுகளைச் செம்மையடையச் செய்யும். உங்கள் குறிக்கோள்களை எளிதாக நிர்ணயம் செய்யவும் உதவும்.

4. சமூக உறவுகள் மேம்பாட்டுக் குறிக்கோள்கள்

குடும்ப உறவுகளைப் போன்றதே நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள சமூகத்தோடு வைத்துள்ள உறவுகளும் உங்களது வெற்றிக்கு உதவியாக இருக்கும். மனிதனின் சமூக அந்தஸ்து அவன் காத்து வைத்துள்ள சமூக உறவுகளைச் சார்ந்தே அமைகின்றது. பக்கத்து வீட்டு மனிதனிடம் உறவு வளர்க்கத் தெரியாத ஒருவனால் சமூக உறவுகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள இயலாது. பல்வேறு சமூக அமைப்புகளில் உறுப்பினராகி தவறாது கூட்டங்களில் கலந்து கொள்வதும் சமூக உறவுகளை வளர்த்துக் கொள்ளும் உத்தியே ஆகும். தனிமனிதனின் முன்னேற்றத்துக்கு சமூக உறவுகள் உறுதியாகவும் பக்கபலமாகவும் அமையும். புத்தாண்டு வாழ்த்துகளை நாம் பரிமாறிக் கொள்கிறோமே அதுவும் சமூக உறவுகளை வளர்த்துக் கொள்ளும் உத்திதான். உங்களை உள்ளன்போடு வாழ்த்துவோர் மற்றும் உங்களால் மானசீகமாக வாழ்த்தப் படுபவர் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்ததெனில் உங்களது சமூக உறவுகளும் பரவுகிறது என்று பொருள். சமூக உறவுகள் உங்களுள் சுய கண்ணோட்டத்தை வளர்ப்பதோடு, இச்சமூகத்தில் உங்கள் நிலை என்ன என்பதையும் தெளிவாக உணர்த்தும். சமூக உறவுகளில் நிகழ்கால நிலையைப் புரிந்து கொண்டு எதிர்கால நிலையைத் திட்டமிட்டு, அதற்கேற்ப உங்களது குறிக்கோள்களை முடிவு செய்வது உங்களது வெற்றிக்கு உரமாகும்.

5. பொருளாதார மேம்பாட்டுக் குறிக்கோள்கள்

தனிமனித வளர்ச்சிக் கோணத்தின் முக்கியப் பகுதி பொருளாதார மேம்பாடு. 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை', பொருளை எந்தளவு ஈட்ட வேண்டுமென்பது தனி நபர்களின் வாழ்க்கைக் குறிக்கோளையொட்டி வேறுபடும். சிலருக்குப் பணம் சுயதேவையைப் பூர்த்தி செய்யவும், சிலருக்குத் தன் பின்னுள்ள நான்கு பரம்பரை மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் (அவர்களைச் சோம்பேறியாக்கும் மூலதனம்), சிலருக்கு தான் வளர்ந்தது போல இன்னும் சிலர் வளர வேண்டுமென்ற சமூக சிந்தனையைப் பொறுத்தும் பொருளீட்டும் அளவு வேறுபடலாம். எது எப்படியோ 'The glory of earning is in worthful spending', என்பதை மட்டும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பகிர்தல் அன்பு செலுத்துவதன் அடையாளம் என்பதை தன் தேவைக்கு மேல் பொருள் ஈட்டுவோர் நினைவில் கொண்டால் பல தனிமனித, சமூகப் பிரச்னைகளுக்கு விடை கிடைக்கும். சுனாமி பேரழிவில் மக்கள் சிக்கித் திணறிய பொழுது உடுக்க மாற்றுடை வேண்டி

தெருக்களில் பயணித்தபொழுது கிழிந்து போன உள்ளாடை பழைய மேல் துண்டை ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்து தானும் தனது சமூகப் பங்கை பூரணமாக ஆற்றி விட்டோம் என தற் பெருமை அடையும் கோடீஸ்வரனை விட, பத்துப் பைசா தரும் அன்றாடங் காய்ச்சியின் வாழ்க்கை அர்த்தமானது. பொருளை ஈட்ட திட்டமிட்டுக் குறிக் கோள்களை நிர்ணயம் செய்பவர்கள், அந்தப் பொருளை உயர்ந்த வழியில் செலவிடத் திட்டமிட்டுக் குறிக்கோள் களை முடிவு செய்து கொள்ள வேண்டும்.

6. ஆன்மிகக் குறிக்கோள்கள்

நம்முள் தோன்றும் சக்தியின் ஊற்று வாய் எங்கோ இருக்கிறது. அந்தச் சக்தி நமக்கு மேலே, நம்மால் எளிதில் உணர முடியாததொன்று என்ற எண்ணம் மட்டுமே தனி மனிதனின் ஆன்மிகக் குறிக்கோள்களை வரையறை செய்ய உதவும். ஆன்மிகம் என்பது தன்னுள்ளே இருக்கும் 'ஆன்மாவை'ப் புரிந்துகொள்ள நாம் எடுக்கும் முயற்சியே. ஆன்மிகப் பயணமென்பது மதத்திற்கு அப்பாற் பட்டது. 'தன்வினைக்குத் தானே பொறுப்பு' அந்த வினைகளின் காரண, காரியங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள மனிதனுக்கு ஆன்மிகப் பயணம் தேவைப்படுகின்றது. ஆன்மிகப் பயிற்சி களை எல்லா மதமும் அவரவர்கள் நம்பிக்கைக்கு ஏற்ப, வழங்குகிறது. அந்தப் பயற்சிகளின் தேவைகளைப் புரிந்து, அதனை நாமும் அடைய நமக்குள்ளே சரியான குறிக்கோள்களை முடிவு செய் வது வெற்றிக்கு உதவும்.

தனிமனித முன்னேற்றக் குறிக்கோள் களின் வெவ்வேறு கோணத்தைப் புரிந்துகொண்ட நாம், இந்தக் குறிக்கோள் கள் நம்மிடையே எவ்வாறு உதிக்கின்றன, எப்படி வலுப்பெறுகின்றன, எவ்வாறு வெளிப்படுகின்றதென்பதை இனி வரும் இதழில் காண்போம்.

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : மைதா | **கடைசித் தேதி : 20.4.2006**

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

குழந்தை நலம்



குழந்தையின் அழுகைக்கு பதிலளியுங்கள்!



புதிதாகக் குழந்தை பெற்றுள்ள இளந்தாய்மார்களுக்கு குழந்தை அழுதால், கையும் ஓடாது. காலும் ஓடாது. குழந்தை எதற்கு அழுகிறது. எப்படி அழுகையை நிறுத்துவது என்று தெரியாமல் திக்குமுக்காடிப் போவார்கள்.

குழந்தை பிறந்ததிலிருந்து சில மாதங்கள் வரை அழுகைதான் குழந்தைக்கும் நமக்குமுள்ள தொடர்பு சாதனம். அழுகையின் மூலம் குழந்தை, தன் தேவையை, தன் அசௌகரியத்தைச் சொல்ல விழைகிறது.

'குழந்தை ரொம்பச் சுட்டியாக இருந்தால் அழுவான்', 'தன்னைக் கையில் தூக்கி வைத்துக் கொள்ளச் சொல்லி அழுகிறான். அப்படி அழுதவுடன் தூக்கினால், குழந்தையை நீங்களே கெடுக்கிறீர்கள்' என்று அழுகையைப் பற்றி பல கட்டுக்கதைகள் உலவுகின்றன. 'பச்சிளங் குழந்தைகள் குறிப்பிட்ட அளவு நேரம் அழுவது நல்லது. அவர்களின் நுரையீரலுக்கு அது ஒரு உடற்பயிற்சி' என்றெல்லாம் கூட புரளிகள் உண்டு.

ஆனால், ஆராய்ச்சிகளின் முடிவோ, வேறுவிதமாக உள்ளது. உங்கள் செல்லம் அழுதவுடன் ஓடிப் போய் கவனிக்கிறீர்களா? கைகொடுங்கள். நீங்கள் தான் பெஸ்ட் அம்மா! முதல் ஆறு மாதங்களில், குழந்தையின் அழுகைக்கு உடனே பதிலளித்துக் கவனித்தோமானால், அடுத்த ஆறு மாதங்களில் குழந்தையின் அழுகை கணிசமான அளவு குறைந்து விடுகிறது.

'குழந்தையின் துன்ப ஒலிக்கு சரியாகப் பதிலளித்து கவனித்தால் தான், தாய்க்கும் குழந்தைக்கும் இடையே ஒரு நம்பிக்கையான உறவும், பிணைப்பும் உருவாகும்' என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

அழுகைக்கான காரணங்களைப் பார்ப்போமா?

பசி : அழுகையின் முக்கியக் காரணம் இதுதான். குழந்தைக்குப் பால் கொடுத்தாலே, இந்த அழுகையை எளிதாக நிறுத்தி விடலாம்.


வலி : சில சமயம், குழந்தையின வயிற்றில் காற்று ஏறியிருக்கும்.



குழந்தையைத் தூக்கி, தோளில் போட்டு, முதுகைத் தட்டி விட்டால் போதும். உடனே அழுகை நின்று விடும். குழந்தையை எறும்பு கடித்திருக்கலாம். ஆடையிலுள்ள ஊக்கு குத்தி இருக்கலாம். இல்லையேல், அவன் ரொம்ப சூடாகவோ, அல்லது ரொம்ப குளிர்ச்சியாகவோ உணர்ந்தாலும் அழ நேரிடும்.



போரடித்தல் : சில புஜ்ஜிகள், எல்லாம் தங்களைச் சுற்றித்தான் நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கும். தனியாக இருந்தால், போரடித்து அழ ஆரம்பிக்கும். இப்படிப்பட்ட குழந்



தைகளுக்கு நீங்கள் நிறைய விளையாட்டுக் காட்ட வேண்டும். அழும் குழந்தையை சமாதானப்படுத்தி, நீங்களோ, உங்கள் குரலோ குழந்தைக்கு எப்போதும் கேட்கும்படி செய்யவும்.

ஈரம் : நேப்பியைப் பாருங்கள். நம்பர் ஒன் (அ) டூ போயிருந்தால், குழந்தை நிச்சயம் அழும்.

தனிமை : சில நேரங்களில் குழந்தை உங்கள் அருகாமைக்கு ஏங்கும். குழந்தைகளுக்கு இயற்கையாகவே உள்ள ஆவலால், தாயின் ஸ்பரிசத்தையும், அரவணைப்பையும் எதிர்பார்க்கும்.

துணி மாற்றுதல் : குட்டீஸ்களின் ஆடையைக் கழற்றினால், காற்று சருமத்தில் பட்டவுடன் பயந்து அழுவதும் உண்டு. துணி மாற்றும்போது, ஒரு டவலை நெஞ்சு (அ) வயிற்றின் மீது போட்டுக் கொள்ளவும்.



அதிக விழிப்பு : குழந்தைகள் அதிகமாக விழித்திருந்தால், சோர்வுண்டாகி, எரிச்சலடைய ஆரம்பித்து விடுவார்கள். உங்கள் பட்டுக்குட்டி நல்ல மூடில் இருக்கும் நேரத்தில் மட்டும் விளையாடுங்கள். அவனுடைய ஓய்வுக்கு மதிப்பளித்து, உறங்கச் செய்யுங்கள்.

இது மட்டுமல்லாமல் இன்னும் சில காரணங்களுக்கும் மழலைகள் அழலாம். உங்கள் குழந்தைகளை நன்கு புரிந்து வைத்திருந்தால், எதெதற்கு அழுவான் என்று கண்டுபிடித்து, அவன் முகத்தில் சிரிப்பை மலரச் செய்யலாம். ஆரம்ப மாதங்களிலேயே அவனை அமைதிப்படுத்தினால், உடல், மன வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். அவனும் அழுகையை குறைத்து, மற்ற வழிகளில் உங்களைத் தொடர்பு கொள்வான்.

- மு. கலைஹரா

அப்பப்பா! வரிசை வரிசையாக எத்தனை சைக்கிள், ஸ்கூட்டர், கார், பஸ், போகின்ற இந்தச் சாலையில்!

ஒவ்வொரு நாளும் அவர் ஆபீஸ் சென்றவுடன் நான் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் பால்கனியில் சிறிது நேரம் நின்று கொண்டு, அலைமோதும் இந்தக் கும்பலை வேடிக்கை பார்ப்பது என் வழக்கம். இந்தக் காலை நேர நெரிசலைப் பார்த்தாலே பிரமிப்பாக இருக்கிறது! ஒவ்வொருவரும் ஏன் இப்படி ஓடிக் கொண்டே இருக்கின்றனர்? அப்படி என்ன அவசரம்?

இதுவரை திருச்சியின் புறநகர்ப் பகுதிகளிலுள்ள வங்கிகளில் பணியாற்றி வந்த என் கணவர், சமீபத்தில்தான் சென்னைக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். சென்னையின் பிரதான சாலைகளில் ஒன்றான ஆற்காடு ரோடில் அமைந்திருந்த அடுக்கு மாடிக் குடியிருப்பில் ஒரு ஃபிளாட்டை, வாடகைக்கு எடுத்த கையுடன், என்னையும் அழைத்து வந்து விட்டார். சென்னைக்குப் பலமுறை தான் வந்திருந்தாலும், சென்னையில் வசிப்பது இதுதான் முதன் முறை. நாங்கள் குடியிருந்த இடம் சகல வசதிகளுடன் கூடியதாக இருந்தது மட்டுமின்றி, எங்கள் அபார்ட்மெண்டுக்குப் பக்கத்திலேயே வங்கிகள், பார்மசி, பலசரக்குக் கடைகள், ஸ்கூல் எல்லாம் இருந்தன. நீல்கிரீஸ், ஃபுட்வேர்ல்ட் என்று பக்கம் பக்கமாக சூப்பர் மார்க்கெட்டுகள் என்ன, மேரி பிரௌன், வசந்த பவன், சரவண பவன் என்று ரெஸ்டாரண்டுகள் என்ன, ஒரே அமர்க்களம்தான்!

ஆனால் எல்லாம் பக்கத்திலேயே இருந்தும், இந்தப் போக்குவரத்து நெரிசலில் நடந்து செல்வதே மிகவும் சிரமமாக இருந்தது. தவிர, எனக்குத் தேவையான பார்மசி, வங்கி, மற்ற கடைகள் யாவும் எதிர் வரிசையிலேயே இருந்தன. அவற்றுக்குப் போக வேண்டுமானால், சாலையைக் கடந்து செல்ல வேண்டி வந்தது. ஆபீஸ் நேரங்களான காலையிலும், மாலையிலும் சாலையைக் கடப்பது முடியாத ஒன்று. பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை சற்று சுலபமாகத் தாண்டலாம்.

சாலையைத் தாண்டுவது கூட எனக்கு கஷ்டமாகத் தெரியவில்லை. எனக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு பெரிய பிரச்னையாக இருந்தது. என் அபார்ட்



வாசுகி

மெண்ட்டுக்கு நேர் எதிரில் இருந்த 'ஒயின் ஷாப்'தான்! இரவு நேரங்களில் அங்கு திருவிழாக் கூட்டம் கூடுமென்றால், பகல் நேரங்களிலும் ஒரு கும்பல் அங்கே நின்று கொண்டேயிருக்கும். அங்கு நின்று கொண்டு எங்கள் அபார்ட்மெண்ட்டையே எப்போதும் அவர்கள் உற்றுப் பார்ப்பதாகத் தோன்றும்.

"சரியான இடம் பார்த்து வாடகைக்கு வீடு எடுத்தீங்க! வீட்டுக்கு நேர் எதிரே இப்படி ஒரு ஒயின் ஷாப்பா?" என்று என் கணவரிடம் அலுத்துக் கொண்டால், அவர், "ராஜி, சென்னையில் ஒயின்ஷாப் இல்லாத தெருவே கிடையாது. இதையெல்லாம் பார்த்தால் முடியுமா?" என்று அவர் பதிலளித்து விடுவார்.

அவருக்கென்ன! பாங்க் வேலை, பார்மசிக்குப் போவது, கடைக்குப் போவது இப்படி எல்லா வேலைகளையும் எனக்குக் கொடுத்துவிட்டு, அவர் நிம்மதியாக ஆபீஸ் போய் விடுவார். நானல்லவா ஒவ்வொரு முறையும் அந்த ஒயின் ஷாப்பைத் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது! அங்கு நிற்கும் சோம்பேறிக் கும்பலும், அவர்கள் பார்க்கும் பார்வையும்... சே! நினைத்தாலே குமட்டுகிறது.



போன வாரம் அண்ணா நகரில் இருக்கும் என் அத்தை பெண் சுதா வந்திருந்தாள். பல வருஷங்கள்

தருமமிகு சென்னையில்...

பெற்றோருடன் நாக்பூர் அருகிலுள்ள பிலாயில் இருந்தவள், சில ஆண்டுகளுக்கு முன்புதான் சென்னைக்கு வந்து பெற்றோருடன் செட்டில் ஆகியிருக்கிறாள். என்னைப் பார்த்ததுமே, "என்ன ராஜி! சென்னை வாசம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டவள், பிறகு சுதா தனது சென்னை வாசத்தைப் பற்றி ஏராளமான குறைகளைக் கொட்டித் தீர்த்தாள்.

"பிலாயிலுள்ள தமிழர்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள் தெரியுமா?

நாங்கள் அங்கிருந்தபோது ஒருவருக் கொருவர் சந்தித்துப் பேசி, பரஸ் பரம் உதவி செய்து கொள்வோம். சென்னைக்கு வந்ததிலிருந்து வாழ்க் கையே ஒரு இயந்திரம் போல ஆகி விட்டது. சென்னையில் உள்ளவர் கள் எல்லோரும் ரோபோ மாதிரி இருக்கிறார்கள். ஒருவர் மற்றவர்களு டன் பழகுவதில்லை. யாரும் எந்த உதவியும் செய்வதில்லை" என்று அடுக்கினான்.



பல கடைகளில் பரிசாகக் கொடுக்கும் கட்டைப் பையில் உள்ள பிரம்புக் கைப்பிடிகள், நாளடைவில் உடைந்து போய் விடும். அதற்காக பையை உபயோகப்படுத்தாமலிருக்க முடியுமா? 'பிவிசி' பைப் துண்டுகளை கைப்பிடிகளின் நீளத்துக்கு வெட்டி பையில் செருகி விட்டால் உறுதியான பை ரெடி! - எஸ். தீபா சாந்தினி

"இங்கே கல்யாணம், சாவு எல் லாமே இயந்திரமயம்தான்! கல் யாண வரவேற்புக்கு அவசர அவசர மாக வந்து விட்டு, பரிசு கொடுத்து விட்டு, வீடியோ முன் நின்று, உடனே சாப்பிட்டுவிட்டு உடனே கிளம்பி விடுவார்கள். அதுபோல் ஏதாவது இறப்பு நடந்தாலும், தலையை ஒப்புக்கு நீட்டி விட்டு, உடனே தன் வேலையைப் பார்க்க ஓடி விடுவார்கள். நாளைக்கு உனக்கே ஏதாவது ஆனால் கூட, நீ இருக்கிறாயா, போய் விட்டாயா என்று கூடப் பார்க்க வர மாட்டார் கள்'' என்று சுதா சொல்லச் சொல்ல, எனக்கு நெஞ்சு நிஜமாகவே பட படத்தது.

''என்ன சுதா! 'தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்தில்...' என்று ஒரு பாட்டு உண்டே!'' என்று இழுத்தேன்.

''அது அந்தக் காலம். இப்போது இங்கே இருப்பவர்கள் உணர்ச்சியற்ற பொம்மைகள். மனிதநேயம் துளிக்கூட இல்லாதவர்கள். அப் படியே யாராவது உனக்காகத் தன் நேரத்தை ஒதுக்கி உதவி செய்தால், அது ஏதோ ஆதா யத்திற்குத்தான் என்று தெரிந்துகொள்'' என்று என்னை ஏகமாகப் பயமுறுத்தி விட்டுச் சென்று விட்டாள்.

இப்படிப்பட்ட சென்னையிலா இப்போது இருக்கிறோம்! கடவுள்தான் காப்பாற்ற வேண் டும் என்று நினைத்துக் கொண்டேன். அப் போதுதான் திடீரென்று ஞாபகம் வந்தது. பாங்க் லாக்கரிலிருந்து சில நகைகள் எடுத்துவர வேண் டும். இந்த மாதிரி வேலைக்கெல்லாம் என் கூட வாருங்கள் என்றால் என் கணவர் கேட்ப தில்லை. ''இதற்காக நான் ஆபீசுக்கு லீவு போட முடியுமா? சிரிப் பார்கள் எல்லோரும்!'' என்று பதிலடி அடித்து விட்டு, ''இந்த ரோடு 'ஜேஜே' என்றிருக்கிறது. ஆள் நடமாட்டம் இல் லாத நேரமே இருப்ப தில்லை. என்னை எதற் குத் துணைக்குக் கூப்பிடுகிறாய்?'' என்று எரிந்து விழுவார்.

சரி, என்ன செய்வது என்று அலுத்துக் கொண்டே, சாலையைக் கடந்து ஒயின் ஷாப் பைத் தாண்டி அதன் பக்கத்திலிருந்த பாங்க் சென்றேன். வேண்டிய நகைகளை எடுத்துக் கொண்டு திரும்பி அந்த ஒயின் ஷாப்பைத் தாண்டி வரும்போது, திடீரென்று ஒரு பயம் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் அனைவரும் என்னையும், என் கையிலிருந்த நகைப் பையையும் கூர்ந்து கவனிப்பதாக ஒரு பிரமை ஏற்பட்டது. நெஞ்சும், மார்பும் படபடவென்று அடித்துக்கொள்ள, நகைப்பையை மார்புடன் சேர்த்து இறுக்கிப் பிடித்துக் கொண்டே சாலையைத் தாண்டி எதிர்வரிசையிலிருந்த என் வீட்டுக்குச் செல்ல முயன்றேன்.

சாலையின் இருபக்கமும் பார்த்துக் கொண்டே, நடுநடுவில் பின்னாலும் பார்த்துக்கொண்டே சாலையைத் தாண்டிக்கொண்டிருந்த சமயம், ஒரு வினாடி கவனக்குறைவால், விரைவாக வந்த சைக்கிளை நான் கவனிக்கவில்லை. வேகமாக என் காலில் மோதிய சைக்கிள் காரன் என்னை இடித்துக் கீழே தள்ளி விட்டு நிற்காமல் சிட்டாய்ப் பறந்து விட்டான்: 'ஐயோ' என்று அலறிக் கொண்டே கீழே விழுந்த நான், பின் சமாளித்து எழுந்து நின்றேன். இடதுகாலில் சுரீர் என்று வலித்தது. பாழாய்ப் போன சைக்கிள்காரன்! இப்படியா இடித்துவிட்டு நிற்காமல் ஓடுவான்? சுதா சொன்னது உண்மைதான்! இந்த மாதிரி அக்கிரமம் தமிழ்நாட்டில் வேறு எங்கும் நடக்காது. கண்ணகியாய் மாறி சென்னையையே அழித்துவிட சாபம் கொடுக்கலாம் போல் தோன்றியது. இவ்வளவு வலியிலும், நகைப்பையை மட்டும் என் கைகள் நழுவ விடவில்லை. திடீரென ஓர் ஆச்சரியம் நடந்தது. ஒயின்ஷாப்பில் கூடியிருந்த சிலர் திடுதிடுமென என்னை நோக்கி ஓடி வந்தனர்.

"அடிபட்டுடுச்சாம்மா?"

"அடடா! காலில் காயம் பட்டிருக்குடா! ஓடு! அந்தப் பார்மசிக்காரரைக் கூட்டியா!"

"இந்தாம்மா! கொஞ்சம் தண்ணி குடிங்க!"

"டேய், எதிரே வர வண்டிகளை எல்லாம் நிறுத்துப்பா! அம்மா, உங்க வீடு எங்கே?"

ஒருவன் எனக்கு குடிக்கத் தண்ணீர் தர, பார்மசிக்காரர் காயத்தைத் துடைத்துப் பிளாஸ்டர் போட, அந்த சாலைப் போக்குவரத்தையே சிறிது நேரம் அந்த ஒயின்ஷாப் கும்பல் நிறுத்தி, என்னை என் அபார்ட்மெண்ட் வரை பத்திரமாகக் கூட்டிச் சென்று விட்டார்கள்.

அட! ஆபத்து என்றதும் உதவி செய்பவர்களும் இருக்கிறார்களே! அதுவும் யாரைப் பற்றிக் கேவலமாக நினைத்தோமோ, அவர்களா இப்படி உதவி செய்தார்கள்! நல்லவேளை! இந்த நகைப் பை கீழே விழவில்லை. பத்திரமாக இருக்கிறது. வழக்கப்படி அபார்ட்மெண்ட் வாசலில் செக்யூரிட்டி ஆளைக் காணோம். அது சரி, அது ஏன் அந்த முரட்டு ஆசாமி என் பின்னால் வருகிறான்? அடக் கடவுளே! இவன்தான் நமக்கு நிறைய உதவி செய்தவன். இப்போது ஏன் என்னைத் தொடர்ந்து வருகிறான்? ஏதாவது செய்த உதவிக்கு ஆதாயம் தேடுகிறானோ?

'இல்லை... ஐயோ.. .நான் பாங்கிலிருந்து வருவதைத் தெரிந்து கொண்டு, இந்த நகைப் பையை பறிக்க வருகிறானோ? கடவுளே காப்பாற்று!'

ஓட்டமும் நடையுமாக லிஃப்டை நெருங்கி விட்டேன். அதற்குள் அவன் மிக அருகே வந்து விட்டான்.

"அம்மா, நில்லுங்க!" என்ற அவன் குரலைக் கேட்டதும் என் சப்தநாடியும் ஒடுங்கியது. நகைப் பையை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன்.

"உங்க கொலுசு ஒண்ணு அங்கே அறுந்து விழுந்திருச்சு. இந்தாங்க" என்றான்.

ஆகா! தருமமிகு சென்னையில் இன்னும் மனிதநேயம் மறைந்து விடவில்லை போலிருக்கிறதே என்று வியந்து கல்லாய் சமைந்து நின்றேன்.

மங்கையர் மலரில் ஆங்காங்கே வெளியாகும் முத்தான டிப்ஸ்களை பாதுகாக்க எண்ணினேன். என் மகளின் பழைய நோட்டை எடுத்துக் கொண்டேன். டிப்ஸ்களை கத்தரித்து அப்படியே எழுதிய பக்கங்களின் மேல் ஒட்டினேன். செலவில்லாத டிப்ஸ் புத்தகம் தயார்!

- பெனாஸிர் ஆமினா.



அழகு

அழகாய் இருக்க ஆலோசனை!

அழகுக்கலை நிபுணர் வசுந்தரா



நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வரவேற்பாளராக வேலை பார்க்கிறேன். என்னைப் பார்க்கிற எல்லோரும் நான் டல்லாக இருப்பதாகச் சொல்கிறார்கள். தினசரி போட்டுக் கொள்கிற மாதிரி சிம்பிளான மேக்-அப் பற்றிச் சொல்லுங்களேன்...

- வி. சாந்தினி, கோவை - 3.

கிளென்சிங் மில்க் வாங்கி அதைச் சிறிதளவு முகத்தில் தடவி இலேசாக மசாஜ் செய்யவும். பிறகு பஞ்சால் துடைத்தெடுக்கவும். உங்கள் சரும நிறத்திலேயே ஃபவுண்டேஷன் வாங்கிக் கொள்ளுங்கள். அதில் சிறிதை எடுத்து முகமெங்கும் புள்ளிகளாக வைத்து மேக்-அப் ஸ்பான்ஜினால் நன்றாகப் பரப்பிவிடவும். அதை 3 முதல் 5 நிமிடங்களுக்கு அப்படியே விடவும். உங்கள் சரும நிறத்துக்கேற்ப காம்பேக்ட் பவுடர் வாங்கி, அதிலேயே இருக்கிற பஃப் கொண்டு முகமெங்கும் ஒற்றியெடுக்கவும். ஐப்ரோ பென்சிலால் புருவங்களில் ஏதேனும் சரிசெய்ய வேண்டுமானால் செய்யவும். கண்களுக்கு மேலே லைட் ஷேடில் ஐ ஷேடோ போடலாம். இது போட்ட மாதிரியே தெரியாதபடி மிதமாக இருக்கட்டும். இமைகளுக்கு மேல் உங்கள் கண்களின் வடிவம் மற்றும் அளவைப் பொறுத்து மெலிதாகவோ அல்லது திக்காகவோ ஐ லைனர் தடவலாம். மை வைக்காத பெண்கள் அபூர்வம். இப்போது காஜல் பென்சில் மற்றும் ஐ கான்டுர் பென்சில் கிடைக்கிறது. சாதாரண மை வைக்கிறபோது கண்களுக்கு வெளியே வருகிற மாதிரி இதில் வராது. இமைகளை நீளமாக அடர்த்தியாகக் காட்ட அவற்றின் மேல் மஸ்காரா தடவலாம். நீங்கள் வரவேற்பாளராக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளதால் ருஜ் அல்லது பிளஷ்ஷர் தடவலாம். பிங்க் அல்லது பீஜ் நிறத்தில் இதை உபயோகிக்கிறபோது சருமம் ஆரோக்கியமாகத் தெரியும். அடுத்து லிப்ஸ்டிக். முதலில் லிப் லைனர் பென்சிலால் உதடுகளுக்கு அவுட்லைன் வரையவும். எந்த நிறத்தில் லிப்ஸ்டிக் போடப் போகிறீர்களோ அதே நிறத்தில் லிப் லைனர் பென்சில் கிடைக்கிறது. பெரிய உதடுகளைச் சிறியதாக, சிறிய உதடுகளைப் பெரியதாக இதனைக் கொண்டு அவுட்லைன் செய்யலாம். பிறகு அதனுள் லிப்ஸ்டிக்கை, லிப் பிரஷ்ஷால் நிரப்ப வேண்டியதுதான். லிப்ஸ்டிக்கில் கிரீம், மேட் ஃபினிஷ், கிளாஸி எனப் பல வகை கிடைக்கின்றன. நீண்ட நேரம் லிப்ஸ்டிக் அப்படியே இருக்க வேண்டுமானால் கிரீம் அல்லது மேட் ஃபினிஷ் உபயோகிக்கலாம். ஏதோ

ஒரு விசேஷம், கொஞ்ச நேரம்தான் ஆகும் என்கிறபோது கிளாஸி லிப்ஸ்டிக உபயோகிக்கலாம்.

எனக்கு எப்போதும் பொடுகு இருந்தபடியே இருக்கிறது. அதைப் போக்க வழியே இல்லையா? வீட்டிலேயே செய்து கொள்ளக்கூடிய சிகிச்சைகள் ஏதும் உண்டா?

- வசந்தா ராமன், சென்னை - 4.

பிரிட்டிரியாசிஸ் என்கிற ஒருவித சரும பாதிப்புதான் இது. எப்படி நமது சருமப் பகுதியானது உரிந்து, புதிய சருமம் உருவாகிறதோ, அதே மாதிரி மண்டைப் பகுதியில் உள்ள சருமமும் உதிர்ந்து புதிய சருமம் வரும். மண்டைப் பகுதி சுறுசுறுப்பாக இயங்குவதில்லை. அங்கே இரத்த ஓட்டம் குறைவு. சரியான பராமரிப்பில்லை, சத்தில்லாத ஆகாரமின்மை என இவையெல்லாம் சேர்ந்து கொள்கிறபோது பொடுகு வரலாம். பொடுகில் வறண்டது, மெழுகுத் தன்மை கொண்டது என இரண்டு வகை உள்ளன. வறண்ட பொடுகு இருந்தால் அரிப்பு இருக்கும். வெள்ளை நிறத்தில் பொடிப் பொடியாக உதிரும். மெழுகுத் தன்மையுள்ள பொடுகு, மஞ்சள் நிறத்தில் இருக்கும். அரிப்பு இருக்கும். பொடியாக வராது. கைகளில் எடுத்தால் வரும். எப்படியிருந்தாலும் பொடுகுக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சைகள் எடுப்பது நல்லது. கடைகளில் காஸ்மெடிக் வினிகர் எனக் கிடைக்கும். அதில் 2 டேபிள் ஸ்பூன் எடுத்து, 10 டேபிள் ஸ்பூன் வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து பஞ்சில் நனைத்து பொடுகு உள்ள இடங்களில் தடவவும். மறுநாள் காலையில் தலையை ஆன்டி டான்டிரஃப் ஷாம்பூ போட்டு அலசவும். வாரம் இரண்டு முறை இப்படிச் செய்து வரலாம். 2 டீஸ்பூன் நல்லெண்ணெயும், அதே அளவு ஆலிவ் எண்ணெயும் எடுத்துச் சூடாக்கி, பஞ்சில் நனைத்துத் தலையில் தடவி தலைக்கு ஸ்டீம் கொடுக்கவும். அல்லது வெந்நீரில் நனைத்துப் பிழிந்த டவலால் தலையை நான்கைந்து முறை கட்டிக் கொள்ளலாம். பிறகு சீயக்காய் அல்லது ஷாம்பூ போட்டுத் தலையை அலசவும். இதுவும் பொடுகை விரட்டும் அருமையான சிகிச்சை.

நான் மாநிறம். வீட்டில் திருமணப் பேச்சு நடக்கிறது. என் நிறம் எனக்கு மிகப் பெரிய மைனஸாகத் தெரிகிறது. எனக்குள் தாழ்வுமனப்பான்மை. ஃபேர்னஸ் கிரீம்கள் எல்லாம் உபயோகித்துப் பார்த்தும் பலனில்லை. எனக்கு உதவுங்கள்.


கே. எஸ். திருச்சி - 3

கறுப்பான பெண்களின் கவலையைப் போக்க இன்று அழகுத் துறையில் நிறைய விஷயங்கள் வந்து விட்டன. ஒயிட்டனிங் ஃபேஷியல் அல்லது ஸ்கின் லைட்டனிங் ஃபேஷியல் சரும நிறத்தை வெளுக்கச் செய்வதில் மிகப் பிரமாதமாக வேலை செய்கிறது. இதில் கோஜிக் ஆசிட், மல்பெரியின் சாரம் என இயற்கையான பொருள்கள் பிரதானமாக இருப்பதால் சருமம் பக்கவிளைவுகள் இல்லாமல் சிவப்பாக மாறுகிறது. திருமணம் நிச்சயமான பெண்கள் வாரம் ஒருமுறை அல்லது பதினைந்து நாட்களுக்கொருமுறை இந்த ஃபேஷியலைச் செய்து கொண்டு சரும நிறம் கூடி, தன்னம்பிக்கையுடன் திருமணத்துக்குத் தயாராகிறார்கள். எனவே கவலையை விட்டு, நீங்களும் இதை முயற்சி செய்து பாருங்கள்.



கூந்தல் மிக அதிகமாக
உதிரும் போது வெந்தயக் கீரையை
அரைத்துத் தலையில் தடவிக் கொண்டு
கொஞ்ச நேரம் கழித்து, கூந்தலைத் தண்ணீரால்
அலசினால் முடி உதிர்வது நிற்கும்.
கறிவேப்பிலையை எந்தச் சமையலில்
சேர்த்தாலும் அதை மென்று தின்று விட வேண்டும்.
அப்படிச் செய்தால் முடி கருமையாக
நன்றாக வளரும்.

- கீதா வெங்கடேஸ்வரன், சிட்லபாக்கம்.


Teddyy

‘குழந்தைகள் குறும்பு’ போட்டியில்

நான் தினமும் காலையில் மாடிக்குச் சென்று, காக்கைக்குச் சாதம் வைத்து விட்டுத் திரும்பும்போது எல்.கே.ஜி. படிக்கும் என் மகன் மாடி சென்று திரும்புவான்.

ஒருநாள், "என்னடா, தினமும் மாடிக்குப் போய் என்ன பார்க்கிறாய்?" என்றேன். உடனே அவன், "அம்மா தினமும் காக்கைக்கு சாதம் மட்டும்தான் போடுறாங்க. சாப்பிட்டவுடன் தண்ணீர் குடிக்கணும்னு நீதானம்மா சொல்வாய். காக்கா பாவம் இல்லையா? அதனால்தான் நான் போய் ஒரு பிளாஸ்டிக் மக்கில் காக்கா குடிக்க தண்ணீர் பிடிச்சு வைக்கிறேன்" என்றான்.



என் தவறை இதமாக, குறும்பாகச் சுட்டிக்காட்டிய என் மகனின் அன்பு இனிமையானது!

- சௌம்யா ரமேஷ், நங்கநல்லூர்.

கோயிலில் சனிபகவானுக்கு நடக்கும் எண்ணெய் அபிஷேகத்தைப் பார்த்த என் மகன் என்ன என்று வினவ, "சனிபகவானுக்கு அடிக்கடி கோபம் வந்து நம்மளைப் படுத்துவார். அதனால் அவருக்குத் தலையிலே எண்ணெய் ஊற்றினால் கோபம் போயிடும்" என்றேனே.

மறுநாள் நான் ஓய்வு எடுக்கும் பொழுது குழந்தைகள் சத்தம் போடவே நான் இரண்டு பேருக்கும் ஒவ்வொரு அடி கொடுத்து விட்டு மறுபடி தூங்கப்



போனேன். ஐந்து நிமிடம் கழித்து ஏதோ பிசுபிசுவென்று தலை மீது வழிந்து ஓடியது. எழுந்து பார்த்தால் தேங்காய் எண்ணெய் பாட்டிலுடன் என் மகன்.

"அம்மா, சனிக்கு கோபம் போனா மாதிரி உனக்கும் போகணும்னுதான் எண்ணெயை ஊற்றினேன்" என்றான்.

என் அலறலைக் கேட்டு விழித்த என் கணவர், "என்னால் அடக்கமுடியாத எங்க வீட்டுச் சனியனை என் மகன் அடக்கிவிட்டானே!" என்று வியந்து பாராட்டினார்.

- எஸ். ஸம்பத் குமாரி, நியூடெல்லி.



ரூ.1000/- பரிசு பெற்ற அனுபவங்கள்

நானும் என் கணவரும் 3 வயது குழந்தையுடன் ஊட்டிக்குச் சென்றோம். மலை ஏற ஆரம்பித்ததும் என் மடியில் அமர்ந்திருந்த குழந்தையின் காதில் காற்றடைத்துக் கொண்டு அதுக்கு எதுவுமே கேட்கவில்லை. உடனே குழந்தைக்கு அதை எப்படி எங்களிடம் சொல்வது என்று தெரியவில்லை. தன் மழலைக் குரலில், "அம்மா, என் காதில் கரண்ட் ஆஃப் ஆயிடுச்சு" என்று சொன்னதைக் கேட்டதும் எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. இன்றும் எங்கள் வீட்டில் காது கேட்காத சந்தர்ப்பங்களில், "காதில் கரண்ட் ஆஃப் ஆயிடுச்சா?" என்றுதான் கிண்டல் செய்து கொள்வோம்.

- உமா சுப்பிரமணியம்,
செகந்திராபாத்.



1971-ம் வருடம் நாங்கள் திருச்சியில் இருந்தபோது என் மகள் உஷாவுக்கு மூன்று வயது. அப்போது பால் பாக்கெட்



கிடையாது. பெரிய பால் கேன்களை சைக்கிளில் கொண்டு வந்து அளந்து ஊற்றுவார்கள். அவ் வருட விடுமுறையில் சென்னைக்கு, புகுந்த வீட்டுக்கு வந்த போது வாசலில் மாடு கட்டி, பால் கறப்பதை அதிசயம் பொங்கப் பார்த்தாள் உஷா.

உடனே, "அம்மா, இந்த ஊர்லே மாட்டிலேருந்து பால் வருது. நம்ம ஊர்லே கேனிலிருந்துதானே பால் வரும்?" என்று விழிகள் விரிய அவள் அதிசயமாகக் கேட்டபோது ஒரே சிரிப்புதான்!

- குமாரி சோமசுந்தரம்,
சென்னை - 85.

என் கணவர் ஜோவியலாகப் பேசுவார். ஒருமுறை தங்கை வீட்டுக்குச் சென்றிருந்த போது, தங்கையின் இரண்டரை வயதுப் பெண், வாசலில் பழைய டூத் பிரஷ்ஷை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டு, ஏதோ விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கோ, பல் ஓரிரண்டு



அந்த வயதிலேயே கோக்கோ கறை படிந்தும், உடைந்தும் இருந்தன.

"உனக்கோ பல் இல்லை; எதுக்கு டூத் பிரஷ்?" என்றார் கிண்டலாக. என் கணவர் அப்போது, தலை கலைந்து விட்டது என, சீப்பால், தன் வழுக்கைத் தலையை (பின்னேயும், முன்னேயும் மட்டும் கொஞ்சம் முடி உண்டு) வாரிய படி வந்து கொண்டிருந்தார். அடுத்த விநாடி அந்தக் குழந்தை,

"உனக்கோ முடி இல்லை; உனக்கு எதுக்கு சீப்பு?" என்று கேட்டதே பார்க்கலாம். நாங்கள் அவளது சாதுர்யமான நகைச்சுவையான பேச்சில், திகைத்துப் போனோம்.

- ரமா ஜெயராம், பெங்களூர்.

நானும் என் மகனும் திருப்பதிக்குப் போக கோயம்பேடு பேருந்து நிலையத்துக்குச் சென்றோம். திருப்பதிக்குச் செல்லும் பேருந்துகள் வரிசையாக நின்றன. ஒரு கண்டக்டர், "இந்தப் பேருந்து நான்ஸ்டாப். எங்கேயும் நிற்காது" என்றார். அப்போது என் மகன், "பஞ்சரானால் கூட நிற்காதா?" என்று கேட்க கண்டக்டர் உட்பட அனைவரும் சிரித்தே விட்டோம்.

- வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.




என் பக்கத்து வீட்டுப் பெண் புது வருடத்தன்று கொடுத்த பாயசத்தை என் நான்கு வயது மகன், "நல்லாயில்லை. வேண்டாம்" என்று சொல்லவும், அந்த

ருசித்துப் பார்த்த என் மாமியார், "வெறும் சேமியாவை வேகவைத்துக் கொடுத்த மாதிரியிருக்கு" என்று சொல்லி சர்க்கரை, பால், முந்திரி சேர்த்து பேரனிடம் கொடுத்தார். ஒரு வாரம் கழித்து அதே பெண், திருமண நாள் என்று அதே சேமியாவுடன் வந்தாள். என் மகன், "பாட்டி, ஆன்ட்டி சேமியாவை வேக வைச்சு கொண்டு வந்திருக்காங்க; அதில் சீனி, பால் சேர்த்துத் தாங்க" என்று சொல்லவும், அப் பெண்ணின் முகம் போன போக்கைப் பார்த்து, நானும் மாமியாரும் அசடுவழியச் சமாளித்தோம்.

- வி. மீனா, திருமங்கலம்.

என் மகன் சுமார் மூன்று வயதாக இருக்கும்போது நடந்தது இது

நான் தினமும் அலுவலகத்திலிருந்து திரும்பி உடை மாற்றியபின் சேலையில் பின் பண்ணிய சேஃப்டி பின்னை செயினில் மாட்டிக் கொள்வது வழக்கம். என் மகன் உடனே அந்த பின்னைக் கழற்ற முயற்சிப்பான். பின் குத்தி விடுமோ என்று நான் அதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. எனவே, அவன் சேப்டி பின் என்பது மிகவும் விலை உயர்ந்த பொருள் என்று நினைத்திருக்கிறான். ஒரு நாள் என் அம்மாவிடமும், தங்கையிடமும் அடுத்தத் தெருவில் ஒரு பெண்மணியின் தாலிச் சங்கிலியைத் திருடன் பறித்துச் சென்றதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த என் மகன் என்னைப் பார்த்து, "பின்னையுமா சேர்த்துப்



பறிச்சுட்டுப் போயிட்டான்?" என்று கள்ளமில்லாமல் கேட்க, நாங்கள் கண்ணீர் வரும் வரை சிரித்தோம்.

தங்கத்திற்கும் தகரத்திற்கும் வித்தியாசம் தெரியாத அந்த மழலைப் பருவம் தான் எத்தனை இனிமையானது!

- என். ராஜரேகம், தூத்துக்குடி.

எங்கள் தூரத்து உறவினர் ஒருவர் இரண்டரை வயதாகும் என் மகன் ஸ்ரீவத்ஸன் கையில் நிறைய சாக்லேட்ஸ்



திணித்தார்.

அவர் சென்றவுடன், "குட்டிப் பயலே, இவ்ளோ சாக்லேட் சாப்பிடக் கூடாது. சாப்பிட்டா பல் எல்லாம் கொட்டிப் போய் கிழவனாயிடுவே. அந்த அங்கிள் உன்னை கிழவனாக்கப் பார்க்கிறார்" என்று சொல்லி விட்டேன்.

இன்னொரு நாள், நான் வேலையாக இருந்தபோது அழைப்பு மணி ஒலித்தது. "கண்ணா, யாருன்னு பாரு?" என்றேன். வேகவேகமாகச் சென்றவன், "அம்மா, என்னைக் கிழவனாக்கறதுக்கு அந்த அங்கிள் வந்திருக்கிறார்" என்றானே பார்க்கலாம்!

- லட்சுமி சுதாகரன், திருச்சி.

எனக்கும் என் மருமகளுக்கும் ஒத்து வராது. நான் என்ன சொன்னாலும் தவறாகப் புரிந்து கொள்வாள். எனக்கு இதயக் கோளாறு இருந்ததினால், "இதயம் நல்லெண்ணெய் வாங்கி, இனிமேல் சமை" என்றேன். அவள் "இதயமே இல்லாதவங்களுக்கு இதய நோயாம்!



அதில் வேறு இதயம் நல்லெண்ணெய் வாங்கிச் சமைக்க வேண்டுமாம்" என்று சொல்லி இருக்கிறாள்.

இதைக் கேட்ட என் பேரன், என்னிடம் பாட்டி, "இதயம் என்றால் என்ன என்றான்?"

நான் "இதயம் நம் உடலில் உள்ள உறுப்பு; அது இல்லாவிட்டால் நாம் உயிரோடு இருக்க முடியாது" என்றேன்.

உடனே அவன், "உனக்குத்தான் இதயமே இல்லையே; நீ மட்டும் எப்படி உயிரோடு இருக்கிறாய்? அம்மா சொன்னார்கள். உனக்கு இதயமே இல்லையாம்" என்று சொன்னானே பார்க்கலாம்.

இதைக் கேட்ட என் மருமகள் தலை குனிந்தாள். குழந்தைகள் எதிரில் பார்த்துப் பேச வேண்டும்.

- விக்டோரியா லோகநாதன், சென்னை - 8.



எனது பேத்தி வைஷ்ணவிக்கு ஐந்து வயதாக இருக்கும்போது நடந்த சம்பவம். ஒருநாள் மாலையில் முகம் அலம்பி பவுடர் போட்டுக் கொண்டபோது. "பாட்டி, நீ ஏன் பவுடர் போட்டுக்கிறே?" என்று கேட்டாள்.

"நீ நல்ல சிவப்பா இருக்கே; நான் கறுப்பு. அதனால் பவுடர் போட்டுக்கிறேன்'' என்றேன். உடனே அவள், "இத்தனை வருஷமா பவுடர் போட்டும் ஏன் சிவப்பா மாறலை?''னு கேட்டாள். அவளது பேச்சுத் திறமையைப் பாராட்டினோம்.

- பி. ஜானகி, சென்னை - 78.

எங்கள் உறவினரின் ஆறு வயதுக் குழந்தை காயத்ரி, குளித்துக் கொண்டிருந்தாள். அவளது தங்கை அட்சயாவுக்கு இரண்டரை வயது. அவளது அம்மா, "நேரமாகி விட்டது. எவ்வளவு நேரம் குளித்துக் கொண்டிருக்கிறாய்? ஆட்டோ வந்து விடும் மணி எட்டரை ஆகிவிட்டது'' என்று கூறினாள்:

உடனே காயத்ரி, தங்கையிடம், "அட்சயா, அம்மா பொய் சொல்கிறாள் நீ வந்து கடிகாரத்தைப் பார்த்து பெரிய முள், சின்ன முள் எங்கிருக்கிறது சொல்லு; நான் மணி என்ன என்று தெரிந்து கொள்கிறேன்'' என்றாள். உடனே தங்கை, "ஏய்! அம்மா பொய் சொல்றாங்க. சின்ன முள், பெரிய முள் இரண்டுமே கடிகாரத்தில்தான் இருக்குது'' என்றாளே பார்க்கலாம். அனைவரும் கொல்லென்று சிரித்தோம். இன்றும் அந்தக் குழந்தையின் குறும்பான சொல் சர்க்கரையாய் இனிக்கிறது.



- ஆர். புவனேஸ்வரி பாஸ்கர், மதுராந்தகம்.

என் மகள் அபர்ணாவுக்கு மூன்று வயதாக இருக்கும் போது கஜேந்திர மோக்ஷம் கதை கூறினார் என் அம்மா. "'ஆதிமூலமே' என்று யானை கூவியதும் உடனே பறந்து வந்தார் பெருமாள்'' என்று கூறியதும், உடனே கேட்டது சுட்டி, "பாட்டி, யானைக்கு 4 கால்கள், முதலைக்கு 1 வாய்தானே? மீதி மூன்று கால்களால் முதலையை 'சக்சக்' என்று மிதிக்க வேண்டியதுதானே; எதற்குக் கதற வேண்டும்?''

- எஸ். மைதிலி, சென்னை - 11.

சட்பட் பொங்கல்



***ச**மைத்த சாதம் அதிகமாகி விட்டதா? கவலைப்படேல்!*

2 கப் சாதத்திற்கு - குக்கரில் 2 ஸ்பூன் நெய் விட்டு, அதில் மிளகு, சீரகம், ஒடித்த முந்திரி இவற்றை வறுத்து, தனியாக வையுங்கள்.

ஒரு பிடி பயத்தம் பருப்பை நன்றாகக் கழுவி வேகவிடுங்கள். வெந்த பருப்புடன் சாதம், வறுத்து வைத்திருக்கும் பொருள்கள், கறிவேப்பிலை, தேவையான உப்புப் போட்டு 2 கப் தண்ணீர் விட்டு குக்கரில் 2 விசில் வரும்வரை வைத்து, குக்கரின் பிரஷர் போகும் வரை அப்படியே வைத்து விடுங்கள்.

திறந்து, ஒரு கிளறு கிளறினால் சுவையான 'சட்பட்' பொங்கல் ரெடி!

- பாவா, சென்னை - 6.

மாம்பழத்தின் இனிமையும், சுவையும் தனிதான். மாம்பழம் நமக்கு நோய் எதிர்ப்பு சக்தியையும், இரத்த விருத்தியையும் கொடுக்கக்கூடியது. கோடைக்கால மயக்கம், பித்தம், மாலைக்கண், பல்வலி போன்றவற்றைக் குணப்படுத்தக்கூடியது. பொதுவாக மாம்பழத்தை அப்படியேதான் சாப்பிடுவோம். நாம் கொஞ்சம் வித்தியாசமாக, சுவையாக மாம்பழத்தைச் சமைத்து, அனைவரையும் அசத்தலாம் வாருங்கள்!



விதவிதமா... ருசியா... புதியா...!

டேஸ்டி மேங்கோ கிரேவி

தேவையான பொருள்கள் :

மாம்பழம் - 3, கெட்டியான தேங்காய்ப் பால் - ½ கப், பனீர் துருவல் - 150 கிராம், மைதா மாவு - 2 டேபிள் ஸ்பூன், பேக்கிங் பவுடர் - ஒரு சிட்டிகை, பச்சை மிளகாய் (நறுக்கியது) - 3, கொத்துமல்லி இலை (நறுக்கியது) - சிறிதளவு, கடுகு - 1 டீஸ்பூன், பெருங்காயம் - ஒரு சிட்டிகை, சிவப்பு மிளகாய் - 4, வெந்தயம் - ½ டீஸ்பூன், சர்க்கரை - ½ டீஸ்பூன், உப்பு - ருசிக்கேற்ப, எண்ணெய் - தேவையான அளவு, ஃப்ரெஷ் க்ரீம் - 1 டேபிள் ஸ்பூன்.

செய்முறை :

மாம்பழத்தின் தோல், கொட்டை நீக்கி, துண்டுகளாக அரிந்து விழுது போல் அரைத்துக் கொள்ளவும். பனீர் துருவலுடன் மைதா மாவு, பேக்கிங் பவுடர், பச்சை மிளகாய், கொத்துமல்லி இலை, உப்பு சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும்.

பனீர் கலவையை உருண்டைகளாக உருட்டி, எண்ணெயைக் காயவைத்து பொன்னிறமாகப் பொரித்தெடுத்து வைக்கவும். பின் கடாயில் இரண்டு டேபிள் ஸ்பூன் எண்ணெய் விட்டு, கடுகு, கிள்ளிய சிவப்பு மிளகாய், வெந்தயம், பெருங்காயம் போட்டுத் தாளித்துக் கொள்ளவும்.

சமையல்

இதில் மாம்பழம் அரைத்த விழுது, ஒரு கப் நீர் சேர்த்து, மிதமான தீயில் வேகவிடவும். அதன் பிறகு சர்க்கரையைச் சேர்த்து, தேங்காய்ப் பாலையும் ஊற்றிக் கொதிக்க விடவும். கிரேவி கொதித்ததும், பொரித்த பனீர் உருண்டைகளைப் போட்டுக் கிளறி, மேலும் ஒரு கொதி விட்டு இறக்கவும்.

பரிமாறும்போது, ஃப்ரெஷ்



க்ரீம் தூவி அலங்கரித்துக் கொடுக்கவும். இந்த 'டேஸ்டி மேங்கோ கிரேவியை' சப்பாத்தி, நாண், குல்ச்சாவுடன் பரிமாற அருமையாக இருக்கும்.

மேங்கோ மோமோ

தேவையான பொருள்கள் :

பெரிய மாம்பழம் - 1, துருவிய வெல்லம் - 2 டேபிள் ஸ்பூன், முந்திரிப் பருப்பு (நறுக்கியது) - ¼ கப், பேரீச்சம் பழம் - 15, ஏலக்காய்ப் பொடி - சிறிதளவு, மைதா மாவு - 1 கப், உப்பு - ஒரு சிட்டிகை, எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்.

செய்முறை :

மாம்பழத்தை தோல், கொட்டை நீக்கி, மிகவும் பொடித் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பேரீச்சம் பழத்தையும் கொட்டையை எடுத்துவிட்டு, பொடியாக நறுக்கவும். பின் மாம்பழத் துண்டுகளுடன் துருவிய வெல்லம், முந்திரிப் பருப்பு, பேரீச்சம்பழம், ஏலக்காய்ப் பொடி சேர்த்துக் கலந்து கொள்ளவும். இப்போது மாம்பழ பூரணம் தயார்.

மைதா மாவில் உப்பு, எண்ணெய், நீர் சேர்த்து பூரி மாவு பதத்திற்குப் பிசைந்து, மெல்லிசாக, அப்பளம் போல் திரட்டிக் கொள்ளவும்.

இதன் நடுவில் சிறிதளவு மாம்பழ பூரணத்தை வைத்து, சுற்றிலும் உள்ள மாவை, சிறு சிறு சுருக்கங்களாக, புடைவை கொசுவம் மடிப்பது போல மடித்துக் கொண்டே வந்து, கடைசியில் மொத்தமாகச் சேர்த்து, அதை இலேசாகத் திருகினால் அதிகப்படி மாவு கையோடு வந்து விடும்.



இதே போல் எல்லாவற்றையும் செய்து இட்லிப் பானையில் அடுக்கி, ஆவியில் பத்து நிமிடங்கள் வேகவைத்து எடுக்கவும். இந்த 'மேங்கோ மோமோ' சூடாகச் சாப்பிட சுவையாக இருக்கும்.

மேங்கோ மேதி முட்டியா

தேவையான பொருள்கள் :

சற்று புளிப்பான மாம்பழம் அரைத்த விழுது - 1 கப், வெந்தயக் கீரை (நறுக்கியது) - 1 கப், கோதுமை மாவு, ரவை, கடலை மாவு, சோயா மாவு ஆகியவை தலா - ½ கப், உருளைக்




கிழங்கு - 2, பிரெட் துண்டுகள் - 3, மிளகாய்த் தூள் - 1 டீஸ்பூன், மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன், இஞ்சி - பச்சை மிளகாய் சேர்த்து அரைத்த விழுது - 2 டீஸ்பூன், உப்பு - ருசிக்கேற்ப, எண்ணெய் - பொரிக்க.

செய்முறை :

மாவு வகைகளை ஒன்றாகக் கலந்து, வெறும் வாணலியில் போட்டு, வறுத்து எடுத்து ஆறவிடவும். உருளைக்கிழங்கை வேகவைத்து, தோலுரித்து, மசித்து வைக்கவும்.

பின் ஒரு அகலமான பேசினில் வறுத்த மாவு வகைகள், மாம்பழம் அரைத்த விழுது, வெந்தயக் கீரை, உருளைக்கிழங்கு மசித்தது சேர்த்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும். இத்துடன் பிரெட் துண்டுகளையும் ஓரம் நீக்கி, கையால் மசித்துச் சேர்க்கவும்.



முட்டைக்கோஸ் வேகவைத்த நீரைப் பருகி வந்தால் அல்சர் நீங்கும்.
- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 13.

பின் மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், இஞ்சி, பச்சை மிளகாய் விழுது, உப்பு ஆகியவற்றையும் சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும். இக் கலவையை எலுமிச்சம் பழம் அளவு உருண்டைகளாக எடுத்து, குலோப் ஜாமூனுக்குப் பிடிப்பது போல் நீளவாக்கில் உருட்டி வைக்கவும்.

வாணலியில் எண்ணெய் காயவைத்து, பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும். இந்தச் சத்து நிறைந்த 'மேங்கோ மேதி முட்டியா' கொத்துமல்லி சட்னியுடன், மாலை நேர டிபனாகக் கொடுக்க, வெகு ஜோராக இருக்கும்.

மாம்பழ கோதுமை இட்லி

தேவையான பொருள்கள் :

மாம்பழம் (பொடியாக நறுக்கியது) - 1 கப், சம்பா கோதுமை - 2 கப், உளுந்து - 1 கப், தயிர் - ½ கப், கொத்துமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு, கடுகு - 1 டீஸ்பூன், கடலைப் பருப்பு - 2 டீஸ்பூன், இஞ்சித் துருவல் - 1 டீஸ்பூன், சிவப்பு மிளகாய் - 6, பெருங்காயம் - ¼ டீஸ்பூன், உப்பு - ருசிக்கேற்ப, எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்.

செய்முறை :


சம்பா கோதுமையுடன் தண்ணீர் ஊற்றி, இரண்டு மணி நேரம் ஊறவைத்து, சற்று கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும். உளுந்தை அரைமணி நேரம் ஊறவைத்து, நைஸாக, நுரைக்க அரைத்து, கோதுமை அரைத்ததுடன் சேர்த்து, உப்பு, தண்ணீர் கலந்து, ஆறு மணி நேரம் அப்படியே வைத்து புளிக்க விடவும்.

பின் வாணலியில் எண்ணெய் விட்டு, கடுகு, கடலைப் பருப்பு, இஞ்சி, சிவப்பு மிளகாய், பெருங்காயம், சேர்த்து தாளித்துக் கொண்டு, மாம்பழத் துண்டுகள் சேர்த்து வதக்கிக் கொள்ளவும்.

இதனை அரைத்து வைத்த மாவில் கொட்டி, அத்தோடு தயிர், நறுக்கிய கொத்துமல்லி, கறிவேப்பிலை சேர்த்து கலக்கிக் கொள்ளவும். இட்லித் தட்டுகளில் எண்ணெய் தடவி, இக் கலவையை வார்த்து, ஆவியில் வேகவைத்து எடுக்கவும். இப்போது 'மாம்பழ கோதுமை இட்லி' தயார். இந்த சுவைமிகுந்த, வித்தியாசமான டிபனை, சட்னி, சாம்பாருடன் பரிமாறி அசத்தலாம்.

- குர்ஷீத் அஷ்ரப், கீழக்கரை.

மங்கையர் மலர் மே இதழில்...





சுபா எழுதும்

என்னை விட்டுப் போகாதே!

உள்ளம் கசியும்

குடும்பத் தொடர் ஆரம்பம்...



இந்த மாதம் எப்படி?

பார்த்திப வருஷம் பங்குனி 18
முதல் விய வருஷம்
சித்திரை 17 வரை

மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கார்த்திகை, 1-ம் பாதம்

தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான நேரமிது. வியாபாரிகள் வளம் காண்பர். பண வரவு சரளமாக இருக்கும். கடனை அடைத்து புதிய சேமிப்புகளைத் துவங்குவீர்கள்.

மாத பிற்பகுதியில் பிள்ளைகளின் முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக விளங்கும். கணவன் அல்லது மனைவியின் உடல் ஆரோக்கியத்தில் ஒரு சிறு பின்னடைவு ஏற்படலாம். எனினும் பெரிய பாதிப்புகள் எதுவும் இராது.

சூரிய ராகு	சந்	செவ்வாய்	
புதன் சுக்ரன்	1-4-2006 அன்று உள்ள கிரக நிலவரம் (வாக்கியப் பஞ்சாங்கப்படி) இம்மாத கிரக மாற்றங்கள் 3 - மிதுன-செவ்வாய் 7 - மீன -புதன் 14 - மேஷ -சூரியன் 25 - மேஷ -புதன் 28 - மீன -சுக்		சனி
		குரு	கேது

அரசியல்வாதிகளுக்கு அற்புதமான நேரம். மாணவ, மாணவியர் கல்வியில் மகத்தான சாதனை புரிவர்.

இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள்.

சந்திராஷ்டம நாட்கள்: 16ம் தேதி காலை 2.58 முதல் 18ம் தேதி பிற்பகல் 2.16 வரை

பரிகாரம்: லக்ஷ்மி சஹஸ்ரநாமம் படிக்கவும் அல்லது கேட்கவும்.

ரிஷப ராசி :

கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிஷம் 1, 2-ம் பாதம்

தொழிலில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு அபரிமிதமான வளர்ச்சி காண்பீர்கள். பொருளாதார நிலையில் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றம் ஏற்படும். இல்லாமை இல்லாதொழியும். புதிய வீடு வாங்குதல், பழைய சொத்துக்களை விற்பனை செய்தல், பூர்விகச் சொத்து கைக்குக் கிடைத்தல், தற்போதுள்ள வீட்டைப் புதுப்பித்தல்



ஹரிகேசநல்லூர்
வெங்கட்ராமன்

போன்றவை நிகழும்.

திருமணத் தடை விலகும். உடலாரோக்கியம் சிறந்து விளங்கும். மாணவ, மாணவியரின் கல்வி முன்னேற்றம் வியக்கத்தக்க வகையில் நற்செய்திகளைக் கொண்டு வரும்.

சந்திராஷ்டம நாட்கள்: *18ம் தேதி பிற்பகல் 2.16 முதல் 20ம் தேதி மாலை 6.31 வரை.*

பரிகாரம்: லக்ஷ்மி நரசிம்மப் பெருமானை உங்கள் ஜென்ம நட்சத்திர நாளன்று சேவித்து பானகம் நிவேதனம் செய்யவும்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்

பண வரவு வழக்கம் போல இருந்தாலும் செலவுகள் மிகக் கடுமையாக ஏற்படும். சமூக அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், உறவினர்கள் மத்தியில் உங்களை உயர்த்திக் காட்டிக் கொள்ளவும் சில 'பந்தா' செலவுகள் செய்ய நேரிடும்.

தொழில் வளர்ச்சி சுமாராக இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களை திருப்திப்படுத்த அரும்பாடுபட வேண்டியிருக்கும். மாணவ, மாணவியர் கல்வியில் சுமாரான முன்னேற்றம் காண்பர். அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உணவுப் பழக்கத்தில் அதிக கவனம் தேவை.

சந்திராஷ்டம நாட்கள்: *20ம் தேதி மாலை 6.31 முதல் 22ம் தேதி இரவு 9.22 வரை*

பரிகாரம்: தினமும் இயன்ற அளவு ஸ்ரீராமஜெயம் எழுதி வந்தால் மனம் அமைதி பெறும்.

கடக ராசி :

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

சோதனைகளைத் தாண்டி வந்து சாதனை படைப்பீர்கள். சிறிய செயல்களைக் கூடக் கடின முயற்சி செய்துதான் முடிக்க முடியும். உழைப்புக்கும் பலனுக்குமிடையே ஒரு வெற்றிடம் இருப்பதை உணர்வீர்கள்.

பொருளாதார முன்னேற்றம் மனதிற்கு ஆறுதல் அளிக்கும். எதிர்பாராத விதமாக பழைய பாக்கிகள் வசூலாகும். 'தாளில் இட்ட நீர் தலையால் தருதல் போலே' சிலருக்கு பூர்விக சொத்தில் உரிய பங்கு கிடைக்கும்.

குடும்பம் மகிழ்ச்சியுறும். இல்லறம் இனிக்கும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பர்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் வேலையை ராஜினாமா செய்துவிட வேண்டாம்.

சந்திராஷ்டம நாட்கள்: *22ம் தேதி இரவு 9.22 முதல் 24ம் தேதி இரவு 11.43 வரை.*

பரிகாரம்: சிவ வழிபாடு செய்து




நான் ஸ்டிக்
என்றாலே
மரக்கரண்டிகள்
தானா ?
Unique 3 layer coating
enables scratch resistance
இல்லை! இதோ வந்து விட்டது Premier Astral நான் ஸ்டிக் குக்வேர். மரக்கரண்டிகள் தான் உபயோகிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. 3 முறை கோட்டிங் செய்திருப்பதால் திடமான மேற்பூச்சு கொண்டது. ஸ்டீல் கரண்டிகளை தாராளமாக உபயோகிக்கலாம். கீறல் விழாது. நீடித்து உழைக்கும். அழகிய வடிவமைப்பு.
Premier
Astral Non-Stick Scratch Resistant Cookware
Marketed by
PREMIER MARKETING
"Waikiki Complex" 289, P. H. Road, Chennai - 600 007.
Ph : 044 - 26421924 / 26420890
e-mail : ketana@vsnl.net
AVAILABLE AT ALL LEADING STORES

வரவும். கோளறுபதிகம் படிப்பது நலம்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

மாணவ, மாணவியர் கல்வியில் மிகச் சிறந்து விளங்குவர். தொழிலில் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

பொருளும் அருளும் ஒருசேரப் பெறுவீர்கள். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். மண வாழ்க்கை மகிழ்ச்சி அளிக்கும். உடல் ஆரோக்கியம் சீர்பெறும். பெயர், புகழ், செல்வாக்கு கூடுதலாகும்.

சந்திராஷ்டம நாட்கள்: 24ம் தேதி இரவு 11.43 முதல் 27ம் தேதி அதிகாலை (அதாவது 26ம் தேதி பின்னிரவு) 2.25 வரை.

பரிகாரம்: 'சரணாகத தீனார்த்தப் பரித்ராண பராயணி சர்வஸ்யார்த்தி ஹரே தேவி நாராயணி நமோஸ்த்துதே' என்று சொல்லி தினமும் 3 முறை வீட்டில் அம்மன் படத்துக்கு நமஸ்காரம் செய்யவும்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4-ம் பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதம்

திருமணம் நிச்சயிக்கப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொடர்பின்றி விட்டுப்போன உறவினர்கள் வந்து மீண்டும் ஒட்டிக் கொள்வர்.

தொழிலில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்படும். பண வரவு அதிகரிக்கும். எனினும் சேமிக்க இயலாதபடி செலவுகளும் பன்மடங்காகும். உடல் ஆரோக்கியத்தில் ஒரு சிறு பின்னடைவு ஏற்பட வாய்ப்புள்ளது.

மாணவ, மாணவியரின் உயர்கல்விக் கனவுகள் நனவாகும். கடல் கடந்து செல்லும் வாய்ப்பு வலுவாகக் காணப்படுகிறது.

சந்திராஷ்டம நாட்கள்: மார்ச் 30ம் தேதி மாலை 6.30 முதல் 1ம் தேதி இரவு 10.38 வரையிலும், மீண்டும் 27ம் தேதி அதிகாலை (அதாவது 26ம் தேதி

பின்னிரவு 2.25 முதல் 29ம் தேதி காலை 6.24 வரை.

பரிகாரம்: ராசியில் உள்ள கேதுவுக்கு சனி பார்வை உள்ளதால் விநாயகப் பெருமானை வழிபட்டு வரவும்.

துலாம் ராசி :

சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்


புதிய முயற்சிகள் வெற்றி அளிக்கும். தொழிலில் நல்ல பல மாற்றங்கள் நிகழ்ந்து மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் துளிர்விடும். தமிழ்ப் புத்தாண்டு உங்கள் ராசியில் பிறப்பதால் ஒளிமயமான எதிர் காலம் வெகு அருகில் உள்ளது.

திருமண வயதினருக்கு மணமேடை தயாராகும். மக்கட்செல்வம் வேண்டுவோர் மழலைமொழி கேட்பர்.

தொழில் மேன்மையுறும். தற்போது உள்ள உத்தியோகத்தைவிட நல்ல வேலை கிடைத்து மகிழ்வீர்கள்.

வீடு கழுவும்போதோ அல்லது துடைக்கும்போதோ கமகமக்கும் மல்லிகைப்பூ வாசனை கொண்ட ஒரு ரூபாய் ஷாம்பூ வாங்கி தண்ணீரில் கலந்து துடைத்தோ, அலம்பியோ பாருங்கள். சுத்தமாவதுடன் வீடே கும்மென்று மணக்கும். 'மல்லிகை என் மன்னன் மயங்கும்' என்று பாட ஆரம்பித்து விடுவீர்கள்.

- ராஜேஸ்வரி வெங்கட்,
சென்னை - 82.



சந்திராஷ்டம நாட்கள்: 1ம் தேதி இரவு 10.38 முதல் 4ம் தேதி அதிகாலை 4.51 வரையிலும், மீண்டும் 29ம் தேதி காலை 6.24 முதல் மே 1ம் தேதி பகல் 12.28 வரை.

பரிகாரம்: பிரதோஷ நாளன்று நந்திகேஸ்வரருக்கு வில்வமும், தும்பைப் பூவும் சமர்ப்பித்து 'ஓம் நமச்சிவாய' என்று மனதிற்குள் உச்சரித்து வழிபடவும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

உடல் ஆரோக்கியம் சிறக்கும். மருத்துவச் செலவுகள் இனி இல்லை. பொன், வெள்ளி, ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.

அரசு ஊழியர்கள், அற்புதமான நன்மை அடைவர். அரசியல்வாதிகள் அரியணை ஏறுவர். செய்தொழில் எதுவாகிலும் அதில் மகோன்னதமான நிலைக்கு உயர்த்தப்படுவீர்கள்.

குடும்பம் குதூகலமாக விளங்கும். நீதிமன்ற வழக்குகள் இருப்பின் அவை உங்களுக்குச் சாதகமாக தீர்ப்பாகி விடும். எதிரிகள் உதிரிகளாவார்கள்.



எலுமிச்சை பழ ஜூஸ் பண்ணும் போது, எலுமிச்சை பழத் தோலை வீணாக்காமல் நன்றாக வெயிலில் உலர்த்தி, அதனைப் பொடித்து வைத்துக் கொண்டு, பாத்திரம் துலக்க நாம் பயன்படுத்தும் பொடியுடன் கலந்து பாத்திரங்கள் துலக்கினால் 'பளிச் பளிச்' என பாத்திரங்கள் மின்னும்.

- பூமா சிவராமகிருஷ்ணன், பெங்களூர்.

சந்திராஷ்டம நாட்கள்: 4ம் தேதி அதிகாலை 4.51 முதல் 6ம் தேதி மதியம் 1.38 வரை

பரிகாரம்: திருப்பதி ஏழுமலையானை மனதாரத் துதிக்கவும். குலதெய்வ வழிபாடு செய்தால் நடக்க வேண்டிய நன்மைகள் தடையின்றி நடைபெறும்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

மாத முற்பகுதியைவிட பிற்பகுதியில் நன்மைகள் சற்று அதிகமாக நடைபெறும். பூர்விகச் சொத்து ஏதேனும் வரவேண்டியிருந்தால் மாத இறுதியில் கிடைக்க வாய்ப்புள்ளது. தொழில் முன்னேற்றம் திருப்தி அளிக்கும். நிதி நிலவரத்தில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருக்கும். இயன்றவரை செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். தந்தை வழி உறவினர்களுடன் நல்லுறவு மலரும். திருமணத் தடை விலகும். ஆரோக்கியத்தில் சிறிது முன்னேற்றம் ஏற்படும்.

சந்திராஷ்டம நாட்கள்: 6ம் தேதி மதியம் 1.38 முதல் 8ம் தேதி நள்ளிரவு 12.29 வரை.

பரிகாரம்: திங்கள், சனி ஆகிய கிழமைகளில் சிவதரிசனம் செய்து வரவும்.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

எதிரிகளும் நண்பர்களாக மாறுவர். உறவினர்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெறுவீர்கள். செல்வ நிலை உயரும். சொந்த வீடு வாங்கும் யோகம் வலுவாகக் காணப்படுகிறது. பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும். சிலருக்கு உத்தியோக மாற்றம் நிகழலாம். பயணங்கள் பயனுள்ளதாக இருக்கும். புதிய சேமிப்புகளைத் துவக்குவீர்கள்.

குடும்பம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கும். மாணவ, மாணவியர் தேர்வுகளில் மகத்தான வெற்றி பெறுவர்.

S.J.N. CONSTRUCTION (P) Ltd.,

Offers

BHASKARAA APARTMENTS

"Block - A". Specially designed withan unique concept of an "Individual House - within Apartment" with all round independent walls

1, Tolgate (On the Bank of River Kollidam), Trichy - 621216

Ph : 0431 - 5538377 / 2481365, 2418365 .Cell : 94433 81365, 98949 - 95364 - 65



Features

- Clear Title, Potable water & Clear Drainage System
- Reticulated Pipeline Gas System
- All Flats with 3 phase connection Granite working Table & Sink
- Two Lifts & Staircase Facility
- Ample Covered Car Parking

Amenities

- All Master Bed Room with Branded one ton A/c
- All Kitchen fitted with Electrical Exhaust Chimney
- Joint free Ceramic Flooring
- Generator Backup for Entire Power System

"UDHAYAA"

Residential Apartments & Commercial Complex (DTCP Approved)

at Heber Road, (Old Balaji Theatre), Cantonment, Trichy - 620001

Features

- Clear Title, Potable water & Clear Drainage System
- Reticulated Pipeline Gas System
- All Flats with 3 phase E.B. connection
- Granite working Table, Sink with Garbage Disposer
- Lifts & Staircase Facility
- Ample Covered Free Car Parking

Amenities

- All Kitchen fitted with Electrical Exhaust Chimney
- Joint free Ceramic Flooring
- Generator Backup for Entire Power System



LOAN ARRANGED FROM ALL LEADING BANKS & FINANCIAL INSTITUTIONS

For Bookings, contact : Executive Director, S.J.N. Construction (P) Ltd.,

"BHASKARAA APARTMENTS"

1, Tolgate (On the Bank of River Kollidam), Trichy - 621216

Ph : 0431 - 5538377 / 2481365,2418365 Cell : 94433 81365, 98949 - 95364 - 65



பிரட் தயிர் வடை.

பிரட் 2 ஸ்லைஸ் எடுத்துக் கொண்டு சூடான தண்ணீரில் முக்கி எடுத்து, அதை நன்கு பிழிந்து எடுத்து விட்டு, உருண்டையாக உருட்டிய பிறகு வடை போல் தட்டி, ஒரு பிளேட்டில் வரிசையாக அடுக்கி வைக்க வேண்டும். புளிக்காத கெட்டித் தயிரில் பொடிப் பொடியாக அரிந்த பச்சை மிளகாய் இரண்டு, கொஞ்சம் இஞ்சி, சிறிதளவு உப்புப் போட்டு, மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றி, இந்தத் தயிரை அடுக்கி வைத்துள்ள வடையின் மேல் மூழ்கும்படி ஊற்ற வேண்டும். பிறகு கேரட், கொத்துமல்லி இரண்டையும் பொடியாக நறுக்கி வடை மேல் தூவி 10 நிமிடம் ஃப்ரிஜ்ஜில் வைத்து, பிறகு எடுத்துச் சாப்பிடவும். விரும்பினால் சாட் மசாலாவையும் சிறிதளவு மேலே தூவலாம். கோதுமை பிரட்டில் செய்தால், தயிர் வடை போலவே இருக்கும்.

- ஜெயசுந்தரி, சென்னை - 33.

சந்திராஷ்டம நாட்கள்: 8ம் தேதி நள்ளிரவு 12.29 முதல் 11ம் தேதி பகல் 12.11 வரை.

பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 7 மணிக்குள்ளாக சுக்ர ஹோரையில் லக்ஷ்மிதேவியை மனமுருகி வேண்டிக் கொள்ளவும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்

தொழில் முன்னேற்றம் அடையும். பணம் கொடுக்கல் வாங்கலில் நிலவி வந்த இறுக்கமான சூழ்நிலை சிறிது மாறும். பணவரவு சற்று அதிகரிக்கும். மாத பிற்பகுதியில் திருமணத் தடை விலகும்.

நீதிமன்ற வழக்குகள் அல்லது தொழில் தொடர்பான விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் இருந்தால் அவை உங்களுக்குச் சாதகமாக முடிந்து விடும்.

உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவர்கள் முற்றிலுமாகக் குணம் அடைந்து நோயற்ற வாழ்வு பெறுவர். மாணவ, மாணவியர் கல்வியின் கண் அதிக அக்கறை செலுத்துவர்.

சந்திராஷ்டம நாட்கள்: 11ம் தேதி பகல் 12.11 முதல் 13ம் தேதி இரவு 11.06 வரை.

பரிகாரம்: 'மாறுபாடு சூரரை வதைத்த முகம் ஒன்றே' எனும் வரியை 6 முறை சொல்லி தினமும் முருகப் பெருமானை வழிபடவும்.

மீன ராசி :

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் நிகழ வாய்ப்புள்ளது. மாத பிற்பகுதியில் உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். வீடு வாங்கும் முயற்சி வெற்றி அளிக்கும். நிதி நிலவரத்தில் தொய்வு இராது.

தொழில் முன்னேற்றம் சுமாராக இருக்கும். மாத பிற்பகுதியைக் காட்டிலும் முற்பகுதியில் நன்மைகள் சற்று அதிகமாக நடைபெறும். குடும்பம் மகிழ்ச்சியாக விளங்கும்.

சந்திராஷ்டம நாட்கள்: 13ம் தேதி இரவு 11.06 முதல் 16ம் தேதி காலை 7.58 வரை.

பரிகாரம்: அம்மன் கோவிலுக்கு வெள்ளிக்கிழமைகளில் சென்று தரிசனம் செய்யவும்.



* உமா சுப்ரமணியம்



இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு : டேபிள் டாப் வெட் கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி : உமா சுப்பிரமணியம், செகந்திராபாத்.

பொருள் : சுரைக்காய்

மிதக்கும் பந்துகள்

தேவையான பொருள்கள் :

பந்து செய்ய :

சுரைக்காய்த் துருவல் - 1½ கப்,
பாசிப் பருப்பு - 1 கப்,
தேங்காய்த் துருவல் - ¼ கப்,
இஞ்சி சீவியது - சிறிது,
பச்சை மிளகாய் - 6 (அ) 7,
உப்பு தேவையான அளவு.

மிதக்க தண்ணீர் செய்ய :

தண்ணீர் - 1 லிட்டர்,
கெட்டியாகக் கொதித்த புளிக்கரைசல் ¼ கப்,
உப்பு
பொதினா - ¼ கப்,
பச்சை மிளகாய் - 3
பானிபூரி சாட் மசாலா - 2 ஸ்பூன்.

செய்முறை :

சுரைக்காய் துருவியதை ஒட்டப் பிழிந்து, ஊறவைத்த பாசிப் பருப்பை கெட்டியாக இஞ்சித் துருவல், உப்பு, பச்சை மிளகாய் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்த விழுதுடன் சுரைக்காய் துருவியதைச் சேர்த்து சிறு சிறு உருண்டை பந்துகளாக பொன் னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

கொதித்த புளிக்கரைசலை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன் பொதினாவையும், பச்சை மிளகாயை யும் அரைத்த விழுதையும் சேர்த்து நன் றாகக் கலக்கவும். பானிபூரி மசாலாப் பொடி இரண்டு ஸ்பூனையும் உப்பு தேவையான அளவையும் சேர்த்து நன்றாகக் கரைக்கவும். (இனிப்புச் சுவை பிடித்தவர்கள் சிறிது வெல்லம் சேர்க்கலாம்.)

பொரித்த சுரைப் பந்துகளை இந்த நீரில் போட்டு ஊறியதும் பரிமாறினால் சுவை அள்ளும்.

விருப்பப்பட்டால் கப்பில் போட்டு மேலே சிறிது கெட்டித் தயிர் விட்டுக் கொத்துமல்லி, சேவ் தூவி அலங்கரிக்கலாம்.

எளிய மாலை நேர சிற்றுண்டி. நேரமும் அதிகம் ஆகாது.

- உமா சுப்பிரமணியம்,
செகந்திராபாத்.

இரண்டாம் பரிசு
ரூ. 300/-

பால் சுரைக்காய் டிலைட்

தேவையான பொருள்கள் :

பொடியாக நறுக்கிய சுரைக்காய்த் துண்டுகள் - 2 கப்,
புழுங்கலரிசி - 1 கப்,
தேங்காய் - 1,
பால் - ½ கப்,
சர்க்கரை - 2½ கப்,
முந்திரிப் பருப்பு - 10,
ஏலப்பொடி - சிறிது.

செய்முறை :

அரிசியைத் தண்ணீரில் ஊறவைக்கவும். பிஞ்சு சுரைக்காயை வெட்டி உள்ளிருக்கும் நுரை, விதைகளை எடுத்து விட்டு பச்சைத் தோலை நீக்கிப் பொடியாக நறுக்கி 2 கப் அளவு எடுத்துக் கொள்ளவும். அரிசி நன்றாக ஊறியதும் கெட்டியாக மையாய் அரைத்து வைக்கவும். தேங்காயைத் துருவி மிக்ஸியில் அடித்து முதல் பால் 1 தம்ளர் அளவு எடுத்து, தனியாக வைக்கவும். மறுபடியும் அந்தத் தேங்காயை மிக்ஸியில் அரைத்து இரண்டாம் தேங்காய்ப் பால் 5 கப் அளவு எடுத்து வாயகன்ற பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்துக் கொதிக்கவிடவும். அதனுடன் ½ கப் பாலையும் சேர்க்கவும். கொதிக்கும் பாலில் சுரைக்காய்த் துண்டுகளைப் போட்டு வேகவிடவும்.

சுரைக்காய் வெந்ததும் அதில் அரைத்து வைத்துள்ள அரிசி மாவை தேன்குழல் அச்சில் போட்டு ஒரு சுற்றுப் பிழிந்து ஒரு நிமிடம் கழித்து ஒரு கிளறு கிளறி, மறுபடியும் ஒரு சுற்றுப் பிழிந்து மீண்டும் கிளறி வேகவிடவும். இப்படியே எல்லா மாவையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிழிந்து பாத்திரத்தை மூடி வேகவிடவும். தண்ணீரில் கை நனைத்து சுரைக்காய் மாவின் மேல் கை வைத்துப் பார்த்தால் விரலில் மாவு ஒட்டக்கூடாது. அதுதான் வெந்ததன் அடையாளம். வெந்ததும் சிறிதளவு உப்பு, சர்க்கரை முதல் தேங்காய்ப் பால் எல்லாம் சேர்த்து இளந்தீயில் 5 நிமிடம் கொதிக்க விடவும். பிறகு ஏலப்பொடி, இலேசாக வறுத்த முந்திரிப் பொடி போட்டுக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கி சிறு சிறு கப்புகளில் ஊற்றி ஆறவைத்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். ஃப்ரிட்ஜினுள் வைத்து மேலும் நான்கு நாட்களுக்குச் சாப்பிடலாம். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள். மேலும் சுரைக்காய் சாப்பிடுவதால் சிறுநீர் தாராளமாகப் பிரியும்.



ஊறுகாயை நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்க!

ஊறுகாயை ஜாடியில் போடுவதற்கு முன் ஜாடியின் உள்ளே கடுகு எண்ணெயை நன்றாகத் தடவி, ஜாடியின் மேல் உப்பை நன்றாகத் தடவி விட்டால் ஊறுகாய் கெடாமல் இருக்கும்.

- குமுதினி வேணுகோபால், கோவை.



நாம் வெளியூர்ப் பிரயாணம் செய்யும் பொழுது கட்டாயமாக அட்ரஸ் டைரியுடன் சில மருந்துகளும் எடுத்துச் செல்வோம். தவறுதலாக மருந்துகள் தொலைந்து விட்டால் ஞாபகம் இல்லாத மருந்துகளை வாங்குவது சிரமம் ஆகிவிடும். அதனால் பிரயாணம் புறப்படுமுன் அட்ரஸ் டைரியின் கடைசிப் பக்கத்தில் மருந்துகளின் பெயர்களையும் எழுதிக் கொண்டால் எந்த ஊரிலும் வாங்கிக் கொள்ளலாம்!

- கோமதி நாராயணன், கொல்கத்தா

சுரைக்காய் பால் பாயசம் :

செய்து வைத்துள்ள பால் சுரைக்காய் டிலைட்டில் ஒரு கப் எடுத்து மிக்ஸியில் இலேசாக ஒரு அடி அடித்து சூடான பால் ஒரு தம்ளர் விட்டுக் கலக்கிச் சாப்பிட, சுவையான சுரைக்காய் பால் பாயசம் ரெடி!

- லக்ஷ்மிதேவி அருணாசலம், நாகை மாவட்டம்.

மூன்றாம் பரிசு ரூ. 200/-

சுரைக்காய் கேக்

குஜராத்தில் மிகவும் விரும்பிச் சாப்பிடும் டிபன்-மினி-மீல். இதற்கென்றே கிடைக்கும் பாத்திரத்தில் சமைக்கப்படும் இந்த டிபன், காலத்திற்கேற்ப பேக் செய்யக்கூடிய முறை தரப்பட்டிருக்கிறது.

தேவையான பொருள்கள் :

பச்சரிசி - 2 கப்,
துவரம் பருப்பு - 1 கப்,
உளுத்தம் பருப்பு - ¼ கப்,
பயத்தம் பருப்பு - ¼ கப்,
கடலைப் பருப்பு - ¼ கப்,
சற்று புளித்த தயிர் - 1 கப்,
பச்சை மிளகாய் - 10-12,
இஞ்சித் துண்டு - 1"
சுரைக்காய் - 450 கிராம்,
எண்ணெய் - 9 டேபிள் ஸ்பூன்,
எலுமிச்சை பழ ஜூஸ் - பாதி,
சோடா - 1 டீஸ்பூன்,
சர்க்கரை - 4-5 டீஸ்பூன்,
மிளகாய்ப் பொடி - 1 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி - ½ டீஸ்பூன்,
கடுகு - 2 டீஸ்பூன்,
எள் - 2 டீஸ்பூன்,
ஓமம் - 2 டீஸ்பூன்,
பெருங்காயம் - ½ டீஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப.

செய்முறை :

அரிசி, மற்ற பருப்பு வகையை நன்கு துடைத்து, கலந்து ரவை மாதிரி மிக்ஸரில் பொடித்துக் கொள்ளவும். அல்லது எல்லாவற்றையும் கலந்து 6 மணி நேரம் ஊறவைத்து மிக்ஸியில் அடைக்கு அரைப்பது போல் அரைத்துக் கொள்ளவும்.

தயிருடன் சற்று மிதமான சூட்டுடன் உள்ள தண்ணீர் சேர்த்து அரைத்த மாவுடன் கலந்து 6-7 மணி நேரம் ஊறவிடவும்.

சுரைக்காயை தோல் நீக்கி துருவிக் கொள்ளவும். மாவுடன் கலந்து 4 டேபிள் ஸ்பூன் எண்ணெய், எலுமிச்சம் பழ ஜூஸ், சோடா, சர்க்கரை, மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, அரைத்த பச்சை மிளகாய், இஞ்சி விழுது சேர்க்கவும்.

இந்தக் கலவையை எண்ணெய் தடவிய பாத்திரத்தில் அல்லது பிளேட்டில் விட்டுப் பரப்பவும்.

5 டேபிள் ஸ்பூன் எண்ணெயில் கடுகு, எள், ஓமம், பெருங்காயம் போட்டுத் தாளித்து கலவையின் மேல் பரப்பி விடவும்.

450 டிகிரி ஃபாரன்ஹீட்/250 டிகிரி சென்டிகிரேடு சூட்டில் ஓவனில் 30-35 நிமிடங்கள் பேக் செய்யவும். கலவையின்

மேற்பரப்பு சற்று பிரௌன் நிறத்தில் வரும் வரை பேக் செய்யவும்.

சதுர துண்டங்களாகச் செய்து கொத்துமல்லி சட்னி, தயிர் அல்லது கார ஊறுகாயுடன் பரிமாறவும். தக்காளி சாஸும் நன்றாக இருக்கும்.

- ரேவதி சங்கர், குஜராத்.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

சுரை வடாம்

அதிகமாகக் கிடைக்கும் காலத்தில் பதப்படுத்தி தேவையான சமயம் பயன்படுத்தலாமே!

தேவையான பொருள்கள் :

கடலைப் பருப்பு - 200 கிராம்,
துவரம் பருப்பு - 200 கிராம்,
உளுத்தம் பருப்பு - 200 கிராம்,
மிளகாய் வற்றல் - 8,
பச்சை மிளகாய் - 5,
சிறிய வெங்காயம் - 50 கிராம்,
சுரை துருவல் - ¼ கிலோ,
கறிவேப்பிலை, உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

முதலில் சுரைக்காய்த் தோல், விதை அகற்றி சுத்தம் செய்து கொப்பரைத் துருவியில் துருவி, வடிகட்டியில் வடியப் போடவும். பருப்பு வகைகளைக் களைந்து, சுமார் 1½ மணி நேரம் ஊறவைக்கவும். பின் மிளகாய் சேர்த்து, தண்ணீர் சேர்க்காமல் கரகரப்பாக அரைத்து, உப்பு, கறிவேப்பிலை சேர்த்து பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தையும் பொடியாக அரிந்து, சுரைத் துருவல் இவற்றை, பருப்பு அரைத்த கலவையுடன் சேர்த்துக் கலந்து கொண்டு, வெயிலில் பிளாஸ்டிக் பேப்பரில், சிறு பக்கோடாக்கள், அல்லது வடைகளாகத் தட்டி நன்கு காயவைத்து, எடுத்து காற்றுப் புகாத டப்பாக்களில் அடைத்து வைத்துக் கொள்ளவும். தேவையானபோது எண்ணெயில் பொரித்தெடுத்து குழந்தைகளுக்கு மாலை நேரச் சிற்றுண்டியாகக் கொடுக்கலாம்.

சிறிது தோசை மாவுடன், இந்த வடைகளை ஊறவைத்து கலந்து அடை போல் தட்டி, அதனை மோரில் ஊறவைத்த குடைமிளகாய் அல்லது பச்சை மிளகாய் தக்காளி, காரட், துருவல் மேலும் சீஸ் துருவல் பரப்பி 'இந்தியன் பீட்சா'வாக மாற்றி விடலாம்.

- மோகா, புதுக்கோட்டை.

கை முறுக்கு செய்முறை மிகவும் உபயோகமாக இருந்தது. எனக்கு முறுக்குச் சுற்ற சொல்லிக் கொடுத்தவர் தந்த மேலும் 2 டிப்ஸ் :

1. முறுக்கு மாவு பிசையும்போது தண்ணீர் அல்லது வெண்ணெய் அதிகமாகி விட்டால் மாவு தளர்ந்து போய் சுற்ற வராது. நாம் எந்தத் துணியில் சுற்றுகிறோமோ அதிலேயே மாவை நன்றாக ஒற்றி எடுத்தால் ஈரம் உறிஞ்சப்பட்டு எளிதாக சுற்ற வரும்.

2. முறுக்கு கரகரப்பாக வந்திருக்கிறதா என அறிய வெந்த முறுக்கை ஒரு துணியின் மேல் சிறிது உயரத்திலிருந்து போட்டால் சில்லுகளாக உடைய வேண்டும். இல்லாவிடில் சாப்பிடும் போது 'சவுக்' என ஆகி பல்தான் உடையும். 'சவுக்' என இருந்தால் மேலும் சிறிது வெண்ணெய் போட்டுப் பிசைய வேண்டும்.

- ஜி. லதா கணேஷ்,
கோவை - 46.



ஆறுதல் பரிசு ரூ. 100/-

சுரைக்காய் கோப்ஃதா

தேவையான பொருள்கள் :
சுரைக்காய் - 500 கிராம்,
கடலை மாவு - 250 கிராம்,
தயிர் - 4 டீஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப,
மிளகாய்ப் பொடி - ½ டீஸ்பூன்,
கரம் மசாலா - 1 டீஸ்பூன்,
ரீபைண்டு ஆயில் - பொரிப்பதற்கு

கிரேவிக்குத் தேவையானவை :
தக்காளி - 6,
வெங்காயம் - 4(அ) 5
பச்சை மிளகாய் - 2,
இஞ்சி - 1 துண்டு,
பூண்டு - (அவசியமானால்)
கொத்துமல்லித் தழை
பாலேடு (அ) மலாய் - 5 டீஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப,
கரம் மசாலா - ருசிக்கேற்ப,
சீரகம் - 1 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி - ½ டீஸ்பூன்.

செய்முறை :

சுரைக்காயை தோல் சீவி, கழுவி ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சுரைக்காய் மூழ்கும் அளவு தண்ணீர் வைத்து பத்து நிமிடம் வேகவைக்கவும். ஆறியபின், வெந்த சுரைக்காயை வடிகட்டியில் கொட்டி நன்றாக அமிழ்த்தி, தண்ணீரைத் தனியாக வைக்கவும் கடலை மாவை வரட்டுச் சட்டியில் வாசனை வரும் வரை வறுக்கவும். வறுத்த மாவு, வெந்த சுரைக் காய், உப்பு, மிளகாய்ப் பொடி, கரம் மசாலா, தயிர் எல்லாவற்றையும ஒரு பாத் திரத்தில் ஒன்றாகப் போட்டு நன்றாகக் கலந்து தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்ச மாக விட்டு, தளரப் பிசையவும். பக் கோடா மாவு மாதிரி இல்லாமல் தளர இருந்தால்தான் கோப்ஃதா மிருதுவாக இருக்கும்.

அடுப்பில் எண்ணெயை வைத்துக் காய்ந்தவுடன் மாவை சிறிய உருண்டை களாகவோ, நீளவாக்கிலோ போட்டு கரகரப்பு ஆவதற்கு முன்னமே சிறிய தீயில், மிருதுவாகப் பொரித்து எடுக்கவும். மாவு மிகவும் கெட்டியாக இருந்தால், கோப்ஃதா கல்லாகி விடும்.

இனி கிரேவி தயாரிக்க :

வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகா யைப் பொடியாக நறுக்கி, மிக்ஸியில் தண்ணீர் அதிகம் விடாமல் அரைக்கவும். தக்காளியைப் பொடியாக நறுக்கியோ அல்லது தண்ணீர் விடாமல் அரைத்தோ வைக்கவும்.

கடாயில் எண்ணெயை விட்டு, சீரகம் தாளித்து, அரைத்த வெங்காயத்தை நன்கு வதக்கி மஞ்சள் பொடி போட்டு தக்காளி விழுதையும் வதக்கி, உப்பு, கரம் மசாலா போட்டு, சுரைக்காய் வெந்த தண்ணீரைப் போட்டுக் கொதிக்க விடவும். பச்சை வாசனை போகும் வரை கொதித்ததும், அடுப்பைச் சிறியதாக்கி, கோப்ஃதாக் களைப் போட்டு பத்து நிமிடம் இலே சாகக் கொதிக்க விடவும். கிளறும் போது உடையாமல் பார்த்துக் கொள்ள வும்.

இறக்கியபின், கிரேவி வற்றாமல் இருக்கும்போதே, மலாய் மேலாக விட்டு கொத்துமல்லியைப் பொடியாக நறுக்கித் தூவவும். சூடாகப் பரிமாறவும்.

- கனகா ஜகன்னாதன், ஹரியானா.



சோப்புப் பெட்டியின் அடியில் சிறிய ஸ்பான்ஞ் வைத்தால், சோப்பில் ஊறிய ஸ்பாஞ்சினால், டைனிங் டேபிள், கண்ணாடி, பீங்கான், டைல்ஸ் போன்றவற்றைச் சுத்தப்படுத்தலாம்.
- பிரேமலதா மகாதேவன், தேனி மாவட்டம்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஹரியின் அப்பா சந்திரனுக்கு, பள்ளியிலிருந்து எஸ்.ஓ.எஸ்.

"உங்கள் மகன் ஹரியைப் பற்றிய



சிறு கதை

இனை நினைத்தால்...

சில விஷயங்களை உங்களுடன் பேச வேண்டும். நாளை மாலை நான்கு மணிக்கு என்னைச் சந்திக்கவும்" என்று ஹரியின் ஆசிரியர் கடிதம் எழுதி ஒட்டி அனுப்பியிருந்தார்.

ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகிறான். திருப்தியாகவே மார்க்கும் வாங்குகிறானே... இந்தக் கடிதம் எதற்கு? ஹரியும் வாயைத் திறக்கவே இல்லை. சந்திரனுக்கு ஒன்றும் புரியவுமில்லை.

"நான்தான் ஹரியின் அப்பா சந்திரன்" என்று அறிமுகப்படுத்திபதும்,

"சார்! வெளியே போய்ப் பேசலாம் வாங்க..." என்று அழைத்து வந்தார்.

"உங்க பையன், ஹரி... பேனா, பென்சில், நோட்-புக், ஸ்கேல் எதுவானாலும் மத்த பசங்ககிட்டேயிருந்து எடுத்து விடுகிறான்... கோந்து பாட்டில், பேப்பர் கூட விட்டு வைப்பதில்லை..."

"திருடறான்னா சொல்றீங்க?" சந்திரனின் குரல் உயர்ந்தது.

"மெதுவாப் பேசுங்க... நீங்க இப்போ கேட்டீங்களே, அது மாதிரி நிரந்தரமா ஆகிவிடக் கூடாதேன்னுதான் உங்களைக் கூப்பிட்டனுப்பினேன். அதட்டி மிரட்டிக் கேட்டால்தான்

பாலா விஸ்வநாதன்

ஆஹா சப்தம்! வேண்டும் சப்தம்!

'உஷ்...! சப்தம் செய்யாதீர்கள்...' 'அமைதி காக்கவும்' போன்ற வாசகங்கள் உள்ள இடங்கள் முருங்கை மரத்துக்கு ஒவ்வாது.

ஜனசந்தடி மிக்க குடிசைப் பகுதிகளிலும், ஆரவாரமிகுந்த சாலையோரங்களிலும், முருங்கை மரத்தில் காய்கள் சாட்டை, சாட்டையாகத் தொங்கி, உங்கள் நாக்கில் நீர் ஊறவைக்கிறதல்லவா! இரைச்சல் அதிகமானால் முருங்கை இரட்டிப்பு விளைச்சல்



தருமாம். முருங்கை மரத்துக்கு சப்தம் தான் ஊட்டம்; தண்ணீரல்ல!

● ஒற்றை முருங்கை மரம் வளர்ப்பதை விட, ஜோடியாக அடுத்தடுத்து இரண்டு மரங்கள் வைத்தால், மகரந்தச் சேர்க்கையில் காய்கள் கணிசமாகக் காய்க்கும்.

● கிள்ளுக் கிள்ளாக வெந்த கடலைப் பருப்போடு முருங்கைப்பூ சேர்த்து பொரியல் செய்தால் நல்ல சுவையாக இருக்கும்.

- நிர்மலா மாத்ருபூதம்,
குரோம்பேட்டை.

எடுத்த பொருளைக் கொடுக்கிறானே."

தன் விசிட்டிங் கார்டை நீட்டியபடி, "நான் ஒரு மதிப்புள்ள ஆபீசர். ஹரி ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்று எனக்குப் புரியவே இல்லை. ரொம்ப நன்றி சார்! இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் சந்திரன்.

கோபம் கொப்பளிக்க, ஹரியையும் கூட்டிக்கொண்டு வீடு திரும்பிய சந்திரனையும், ஹரியையும் பார்த்ததுமே, ஏதோ 'கசமுச' என்று புரிந்துகொண்டு விட்டாள் ஹரியின் தாயார் சாவித்திரி.

மகனின் திரு(ட்டு) விளையாடலைப் பற்றி அப்பா, சொல்லச் சொல்ல, ஹரி தலைகுனிந்து நின்றான்.

"ஏன்டா! உனக்கு நான் என்ன குறை வைத்தேன்? பென், பென்சில், ரப்பர்... குண்டூசியிலிருந்து, கோந்து பாட்டில் வரை... எல்லாமே இருக்கே! பெஸ்ட் ஆஃப் ஸ்டேஷனரிடா எல்லாமே..." சந்திரனுக்குத் தொண்டை அடைத்தது.

கணவனின் புலம்பலில் நெகிழ்ந்து போனாள் சாவித்திரி. "ஏன்டா தலையைக் குனிஞ்சுக்கிட்டு நிற்கிறே? இப்படித்தானே பாவம்... உங்கப்பா உங்க வாத்தியார் எதிரே நின்னிருப்பார்... இது தேவையாடா?"

"சொல்லு... உரைக்கற மாதிரி சொல்லு! அவன் எது கேட்டாலும்... ஏன்? கேக்கலின்னா கூட 'பெஸ்ட்' ஸ்டேஷனரி எல்லாம் ஆபீசிலிருந்து கொண்டு வந்து தரேன். லேட்டஸ்டா, நீ எது கேட்டாலும் 'இன்டென்ட்' போட்டு வாங்கறேன். யாருக்காகடா வாங்கறேன்? உனக்காக... நீ இனிமேல் யார் சாமானையும் எடுக்கக் கூடாதுடா! திருடக் கூடாது... புரிஞ்சுதா?" என்று பிள்ளைக்கு நேர்மையை உபதேசித்தார் ஹரியின் அப்பா சந்திரன்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

5 ரோசஸ் திட்டம்



பிடியுங்க சந்தா; அடியுங்க பரிசு!

மங்கையர் மலர் வாசகியருக்கு ஓர் அற்புதமான வாய்ப்பு! நீங்கள் ஆண்டுச் சந்தாக்கள் 5 சேகரித்து/பரிசளித்து (ரூ. 1125/-) அனுப்பினால் உங்களுக்கு ரூ. 300/- மதிப்புள்ள ஒரு பந்தாவான பரிசு உங்கள் வீடு தேடி வரும்!

உங்கள் உற்ற தோழியர், உறவினர், அக்கம் பக்கத்தவர், அறிந்தவர் தெரிந்தவர் என யாரை வேண்டுமானாலும் மங்கையர் மலர் வாசகியராக அறிமுகப்படுத்துங்கள்.

லேடீஸ் க்ளப், மகளிர் மன்றம், சமூக சேவை மையங்கள், காலனி அசோஸியேஷன் இன்னும் பல அமைப்புகளிலும் சந்தா சேகரிப்பை நடத்தலாம். 10, 15, 20 ஆண்டுச் சந்தாக்களை நீங்கள் சேகரித்து/பரிசளித்து அனுப்பினால் அதற்கேற்றவாறு 2, 3, 4 பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். இந்த வாய்ப்பு **30.06.2006** வரைதான்.



சந்தா சேகரிப்பவர் :

பெயர் : ....

முகவரி : ....

....

....

சந்தா எண் (சந்தாதாரராக இருந்தால்) :..

உங்கள் பரிசைத் தேர்ந்தெடுத்து உரிய கட்டத்தில் ✓ செய்யுங்கள்.

1. அழகிய புடைவை ☐
2. அமரர் கல்கியின் அற்புத நூல்கள் ☐
3. லேடீஸ் பர்ஸ் ☐
4. சிறுவர்களுக்கான மாத இதழ்கள் : கோகுலம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), கோகுலம் காமிக்ஸ் (ஆங்கிலம்) ஓராண்டுச் சந்தா ☐
5. கல்கி 6 மாதச் சந்தா + கோகுலம் (ஆங்கிலம்) ஓராண்டுச் சந்தா ☐

ஆண்டுச் சந்தாக்கள் 5 க்கு ரூ. 1125/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Mangayar Malar' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ. 20/- கூடுதலாகச் சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

புதிய வாசகியர் முகவரிகள் :



1. பெயர் : ....
முகவரி : ....
....
....



2. பெயர் ....
முகவரி : ....
....
....



3. பெயர் ....
முகவரி : ....
....
....



4. பெயர்..
முகவரி : ....
....
....



5. பெயர் ....
முகவரி : ....
....
....

* ஐந்துக்கும் மேற்பட்ட சந்தாக்களைச் சேகரித்தால், தனித்தாளில் முகவரிகளை எழுதி இணைத்து அனுப்பவும்.

KGEYES

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

என் இனிய இல்லம் போட்டி முடிவு!

ஏப்ரல் 2005 முதல் ஜனவரி 2006 வரை நடைபெற்ற இப் போட்டியில் KGEYES தரப்பில் மிக சுவாரஸ்யமாகவும் அதே சமயம் வாசகியரின் அறிவுக்குத் தீனி போடும் விதமாகவும் கேள்விகள் அமைக்கப்படிருந்தன.

ஆயிரக்கணக்கான வாசகியரிடமிருந்து வந்துக் குவிந்திருந்த 'என் இனிய இல்லப் போட்டி'க்கான கூப்பன்களையும், கட்டுரைகளையும் தேர்ந்தெடுத்த முறையும் இறுதிச் சுற்றுக்குத் தேர்வான வாசகியரின் பெயர்ப் பட்டியலும் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம்.

இதில் இறுதிச் சுற்றுக்கு எம். மாலதிமணியன், பாண்டிச்சேரி; நீலா சந்திரசேகரன், சென்னை; லக்ஷ்மி மோகன், சென்னை; ஆர். கலைச்செல்வி பாண்டிச்சேரி; மற்றும் மதுரை வாசகி சே. சொர்ணசுந்தரி ஆகியோர் தேர்வாகியிருந்தனர்.

இவர்கள் ஐவருக்கும் சென்னையில் நடைபெற்ற மங்கையர் மலர் வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டு. அங்குதான் இந்த ஐவரில் யாருக்கு வீடு என்று அறிவிக்கப்படும் என்றதால் சஸ்பென்ஸ் மேலும் நீடித்தது!

அன்று விழா மேடையில் ஐவரும் மங்கையர் மலர் பரிசாக வழங்கிய ஒரே விதமான பட்டுப் புடைவை அணிந்து காட்சியளிக்க ஜோராக இருந்தது. வீடு பரிசு அறிவிக்கப்படும் வரை அவர்கள் முகத்தில் காணப்பட்ட டென்ஷனும், பரபரப்பும் அப்பப்பா! அதை எழுத்தில் வடிக்க முடியாதுதான.

இறுதியில் ஆசிரியர் ரேவதி சங்கரன் மேடையில் தோன்றி வெற்றி பெற்ற வாசகியாக கு. சொர்ணசுந்தரியை அறிவிக்க கரகோஷம் விண்ணை எட்டியது.



வீடு பரிசு பெற்ற

அம்மா, அப்பா, மகன், கணவர் சகிதம் குடும்பத்துடன் மதுரையிலிருந்து விழாவுக்கு வந்திருந்த சொர்ணசுந்தரி கண்ணீர் மல்க, மேடையில் KGEYES உரிமையாளர்கள் திரு. வெங்கட், சண்முகநாதன் அளித்த வீட்டுச் சாவியைப் பெற்றுக் கொண்டார்.

இறுதிச் சுற்றில் தேர்வான ஐந்து வாசகியரில் யாருக்கு வீடு என்று கேள்வி எழுந்த போது இறுதிக் கட்டுரைப் போட்டியான 'மனிதநேய வீடு'ம் KGEYES இன் கணவன் மனைவி உரையாடல் கூப்பனும்தான் முடிச்சாக அமைந்தது!

கு. சொர்ணசுந்தரி எழுதியிருந்த கணவன் - மனைவி உரையாடலில் விடுபட்ட கட்டங்களின் விடைகள் கிட்டத்தட்ட KGEYES-ல் விதிக்கப்பட்டிருந்த விடை

ளுடன் ஒத்துப்போயின. மேலும் கட்டுரைத் தலைப்பான மனிதநேய வீட்டுக்கு சொர்ணசுந்தரி வர்ணித்திருந்த விதமும் பழனியில் மனிதநேய உள்ளத்துடன் வாழும் அந்த வீட்டை கோடிட்டுக் காண்பித்திருந்ததும்தான் வெற்றிக்கு வழிகோலியது.

'உண்மையான அன்பு ஒன்றே அஸ்திவாரமாக இருப்பதால் அந்த வீடு எந்த பூகம்பத்தாலும் அசைக்க முடியாமல் நிலைத்திருக்கும்' என்று கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் சொர்ணசுந்தரியின் வார்த்தைகள் நூற்றுக்கு நூறு உண்மை! அதே போல் இவரது வீடும் அப்படிப்பட்ட அன்பால் அமைக்கப்பட்டிருக்கிறதோ என்று நாம் மதுரையில் அவர் இல்லத்துக்குச் சென்ற போது உணர முடிந்தது.

ஒரு வீடு பரிசாகக் கிடைப்பது என்பது எவ்வளவு பெரிய விஷயம். இருபத்தி ஐந்து வருடங்களாக மகத்தான வாசகியர் வட்டத்தை உருவாக்கியிருக்கும் மங்கையர்மலர்' தமது லட்சக்கணக்கான வாசகியரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து வெள்ளி விழா ஆண்டில் அந்த வாசகிக்கு ஒரு வீடும் பரிசாகத் தந்து கௌரவித்தது இமாலய சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.



* கு. சொர்ண சுந்தரி

சரி, KGEYESன் பத்து மாதப் போட்டிகளுக்கான விடைகளைப் பார்ப்போமா?

ஏப்ரல் 2005

கேள்வி : KGEYES-ன் மூன்று புதிய கட்டுமானப்பணிகள் எங்கெங்கு நடைபெறுகின்றன?

பதில் : சேமியர்ஸ் ரோடு, கலாக்ஷேத்திரா காலனி, நந்தனம் (மேலும் முகப்பேர், கிரீன்வேஸ் ரோடு)

மே - 2005

கேள்வி : 33 அடி சாலையில் KGEYESஆல் கட்டப்படுகிற ஏதாவது ஒரு கட்டடத்தின் பெயர் எழுதவும்.

பதில் : சமுத்ராஸ் அல்லது அபூர்வா.

அதிர்ஷ்டசாலி!

ஜூன் 2005

கேள்வி :

1. இந்தப் படம் எந்தக் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கிறது?

2. இந்தப் படத்தில் ஒளிந்துள்ள ஐந்து

கட்டடக் கலை சம்பந்தப்பட்ட பொருட்களைக் கண்டுபிடிக்கவும்.

பதில் : 1. செட்டிநாடு கட்டடக் கலை, 2. தரை, தூண், நிலைக் கதவு, ஊஞ்சல், மேற்கூரை, கைப்பிடி. (மேலும் ஜன்னல், விளக்கு, மரப்பெட்டி)

ஜூலை 2005

கேள்வி : எதிர்பக்கப் படத்தில் காணப்படும் ஏதேனும் ஐந்து தூண்கள், எந்தக் கோவில் மற்றும் அரண்மனையைச் சார்ந்தது என்று குறிப்பிடவும்.

பதில் :

1. மதுரைநாயக்கர் மஹால், 2. மைசூர் அரண்மனை, 3. கேரளா பத்மநாபபுரம் அரண்மனை, 4. காரைக்குடி செட்டிநாட்டு அரண்மனை, 5. தஞ்சாவூர் அரண்மனை மேலும் 6. ஸ்ரீரங்கம்



கோவில், 7. ஜெய்பூர் அரண்மனை

ஆகஸ்ட் 2005

கேள்வி : படத்தில் உள்ள மங்கலப் பொருள்களை வகைப் படுத்திப் பொருத்தவும்.

பதில் : 1. கேரளா விளக்கு, 2. பாவை விளக்கு, 3. அகல் விளக்கு, 4. குத்து விளக்கு, 5. காமாட்சியம்மன் விளக்கு, 6. அன்னப்பட்சி விளக்கு, 7. கஜலட்சுமி விளக்கு, 8. கலசம், 9. கும்பம்

செப்டெம்பர் 2005

கேள்வி :

படத்தில் உள்ள டைல்ஸ்களை வகைப்படுத்தி எழுதவும்.

பதில் :

1. செராமிக் டைல்ஸ், 2. மார்பிள், 3. கிரானைட், 4. வுட்டன், 5. கான்கிரீட் டிசைனர் டைல்ஸ், 6. வெர்ட்டிஃபைட் டைல்ஸ், 7. கிளாஸ் மொசைக் டைல்ஸ், 8. கான்கிரீட் பிளாக்ஸ்

அக்டோபர் 2005

கேள்வி : படத்தில் உள்ள கதவுகளை வகைப்படுத்தி எழுதவும்.

பதில் : 1. பூஜா ரூம் டோர், 2. டிசைன் ஃப்ளஷ் டோர், 3. க்ரில் டோர், 4. டீக்ஃப்ளஷ் டோர், 5. பேனல் டோர், 6. டீக் வுட் டோர், 7. ஸ்கின் டோர், 8. தஞ்சாவூர் ஆர்ட் டோர்.

நவம்பர் 2005

கேள்வி : மேலே காணும் இரண்டு குளியலறைக்கும் தேவையான சாதனங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றின் எண்களை எடுத்து எழுதுக.

இறுதிச் சுற்றுக்கு வந்த நான்கு வாசகியருக்கும் டிவைன் ஹோம் அளித்த ரூபாய் 10,000/-க்கான பரிசுக் கூப்பன் பரிசாக வழங்கப்பட்டது!

பதில் :

குளியலறை - 1

3 5 7 8 9 10

குளியலறை - 2

1 2 4 6

டிசம்பர் 2005

கேள்வி : படத்தில் உள்ள ஸ்விட்சுகளில் ஏதேனும் ஏழு ஸ்விட்சுகளின் பெயர்



களை, பொருத்தி எழுதவும்.

பதில் :

1. 5 ஆம்ப்ஸ் ப்ளக் பாயிண்ட், 2. டீ.வி. சாக்கெட், 3. ஏ.சி. மெட்டல் பாக்ஸ், 4. ஃபேஸ் சேன்ச்சஸ் டி.பி. பாக்ஸ் **(DB)**. 5. ஃபேன் ரெகுலேட்டர், 6. 15 ஆம்ப்ஸ் ப்ளக் பாயின்ட், 7. டூ வே ஸ்விட்ச், 8. காலிங்பெல், 9. டெலிஃபோன் சாக்கெட்

ஜனவரி 2006

கேள்வி : கணவன், மனைவி உரையாடல்களைப் பூர்த்தி செய்யவும்.

பதில் :

கணவன் : போட்டியில், வீடு

மனைவி : காற்றோட்டமா, அமைப்பா, வெளிச்சமா

கணவன் : வீடு, பில்டர்கிட்ட

மனைவி : Kgeyes பில்டர், புக்/அட்வான்ஸ்

கணவன் : பட்ஜெட்டுக்கு, விரும்பிய

மனைவி : பட்ஜெட்டுக்கு, இடத்திலேயும்

கணவன் : Kgeyes

அனுஷா பதில்கள்!

சக்தி பிரபா, மதுரை.

அன்புச் சகோதரி, நான் ஒரு புற்றுநோயாளி. அன்பு வட்டத்தில் கலந்து கொள்ள ரொம்ப ஆசை. ஆனால் புகைப்படம் எடுக்க முடியாத நிலை. கீமோதெரபியால் தலைமுடியெல்லாம் உதிர்ந்து, முகமே விகாரமாக உள்ளதால், வீட்டில் அனுமதி தரவில்லை. 'அன்பு வட்ட' அட்டையை, புகைப்படமில்லாமல் அனுப்பி வைக்கலாமா?

இதோ, இப்போதே அன்பு வட்டத்துக்குள் வந்து, எங்களுடன் கைகோத்துக் கொண்டு விட்டீர்களே பிரபா!

'அன்பு வட்டம்' என்பது ஓர் அடையாளம்தான். அதில் உங்கள் பழைய புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். பரவாயில்லை!

உங்கள் உடல்நலன் தேறி, விரைவில் நலமடைய மங்கையர் மலர் வாசகியர் அனைவரும் மனதாரப் பிரார்த்தனை செய்கிறோம். 'நம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனை, நோயாளிகளின் துயரைப் போக்கும்' என்கிறது வேதம்.

வி. பாரதி வீரமணி, நங்கநல்லூர்.

டி.வி.யில் ஒரு பெயின்ட் விளம்பரம் ஒளிபரப்பாகிறது. "அம்மா... ஒருநாளைக்கு நான் இந்த வீட்டுலதான் கல்யாணம் பண்ணிக்குவேன்" என்பாள் இளம் பெண்ணொருத்தி. அவளது ஆசைப்படியே, அந்த வீட்டுக்குச் சென்று, அவளுடைய பெற்றோர்கள் பேசுவார்கள். "ஆஷு" என்று குரல் கொடுக்க, பத்து வயதுப் பையன் வந்து நிற்பான். "பரவாயில்லை. நான் காத்துக்கிட்டிருப்பேன்" என்பாள் அந்தப் பெண். இந்த விளம்பரம், பெண்களை இழிவுபடுத்துவது போல இருக்கிறதே!

கூல் மேடம் கூல்! பத்து அல்லது இருபது நொடிகளில், தாங்கள் விளம்பரப்படுத்த விரும்பும் பொருளின் முழு சிறப்பம்சத்தையும், புதுமையாகவும் சிறப்பாகவும், போட்டி விளம்பரங்களிலிருந்து வித்தியாசப்படுத்த வேண்டிய சவால், விளம்பர ஏஜென்ஸிகளுக்கு இருக்கிறது.



'தங்கள் கம்பெனியின் வர்ணப் பூச்சின் எழிலுக்காக, எவ்வளவு தியாகம் பண்ணவும் அந்தப் பெண் தயார்' - இதுதான் அவர்கள் சொல்ல விழைவது. அதிலிருக்கும் நகைச்சுவையையும், ('சாரி, கொஞ்சம் ஓவர்' ரகம்தான் என்றாலும்) படைப்பாற்றலையும் மட்டும் ரசியுங்களேன்.

வருஷாபிரியா,

மடிப்பாக்கம்.

இராமலிங்க சுவாமிகள் உருவ வழிபாட்டை எதிர்த்தாரா?

இல்லவே இல்லை! தொடக்க காலத்திலே முருகவழிபாட்டுக்காரராகவும், பின்னாளில் நடராஜர்



உபாசகராகவும் இருந்து, இறுதியில் அருட்ஜோதி வடிவில் ஆண்டவனை வழிபட்டு வந்தவர் வள்ளலார் சுவாமிகள்.

ஸ்ரீதர சுவாமிகள் என்கிற பெரியாரே வள்ளலாருடன் வாதிட்டு இருக்கிறார். ஸ்ரீதர சுவாமிகள் அத்வைதி. உருவ வழிபாட்டை எதிர்த்துப் பேசிக் கொண்டிருந்த அவரிடமே, உருவ வழிபாட்டின் பெருமையை எடுத்துச் சொல்லி 'ஆன்மிகத்தின் தொடக்க நிலையில் உருவ வழிபாடும், வளர்ச்சி நிலையில் அருவவழிபாடும் பயன் தரும்' என்று வலியுறுத்தினாராம் வள்ளலார்!

வத்சலா சதாசிவன், சிட்லபாக்கம்.

வீடுகளில் கிழக்கு திசை நோக்கித்தான் பூஜை செய்ய வேண்டும் என்கிறார்கள். ஆனால் வாஸ்து நிபுணர்கள் கிழக்கு மூலையில் எவ்வித கனமான பொருளையும் வைக்கக் கூடாது என்கிறார்கள். இது எப்படி சாத்தியம்? வீடுகளில் எந்தத் திசையை நோக்கி பூஜை செய்ய வேண்டும்? தெரியப்படுத்துங்கள்.

நீங்கபாட்டுக்கு, சுலபமாக ஒரு அஞ்சல் அட்டையில் கேள்வி கேட்டு விட்டீர்கள். இதற்காக, சென்னையில் உள்ள எல்லா பிரபல வாஸ்து நிபுணர்களையும் கலந்தாலோசித்து அதிரிபுதிரி செய்து விட்டேனாக்கும்.

சரி, பிடியுங்க... ஸாரி படியுங்க பதிலை! சுவாமி படங்கள் எல்லாம் கிழக்கு நோக்கி வைக்கணும் என்றால், அவற்றை மேற்கு திசையில் வைத்தால்தானே சாத்தியம்? எனவே, மேற்கு திசையில் மண்டபங்களோ, பெரிய படங்களோ வைப்பதில் பிரச்னையே இல்லையே!

கிழக்கு திசை நோக்கி கடவுளர் இருக்க, நீங்கள் வடக்கு நோக்கி அமர்ந்து பூஜை செய்ய வேண்டும். அப்போதுதான் தென்திசை நோக்கி அமர்ந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தியின் அருட்கடாக்ஷம் நம் மீது நேரடியாக விழுமாம். இன்னொரு முக்கியமான விஷயம், வடகிழக்கு மூலையில் பழைய துணிகளோ, பெரும் பாரமோ இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொண்டு விடுங்கள். பிரச்னை ஓவர்!

சுசீலா அரவிந்தன், திருச்சி - 621 216.

1. படைப்புகளை ஒவ்வொரு மாதமும் 7ம் தேதிக்குள் அனுப்பி விட வேண்டுமா?

2. படைப்புகளின் ஜெராக்ஸ் காப்பி அனுப்பலாமா?

3. தொலைபேசியில் தங்களைத் தொடர்பு கொள்ள முடியுமா? அதை, தொல்லைப் பேசியாகக் கருதி விடுவீர்களா?

4. நாங்கள் கூட சிறுகதைகள் எழுதி அனுப்பினால் நம் மலரில் பிரசுரிக்கப்படுமா?

5. மிக மிக நீண்ட மடல் எழுதினாலும் ஒரு எழுத்து விடாமல் படிப்பீர்களா?

அப்படி எல்லாம் பிரமாதமாகச் சட்டம் எதுவுமில்லை. தாமதமாக வந்தாலும் சிறப்பான படைப்புகள் பின்னால் வரும் இதழ்களில் பிரசுரமாகும். அவ்வளவுதான்.

2. ஜெராக்ஸ் அனுப்பலாம். ஆனால் முடிவு தெரியும்வரை பொறுமை தேவை.

3. சுருக்கமாகவும், சுவையாகவும் பேசினால் விரும்பி வரவேற்போம் வாசகியே...

4. 'நாங்கள் கூட' என்ன...? உங்களைப் போன்ற வாசகியரின் எழுத்துக்குத்தான் வெற்றிலைப் பாக்கு வைத்து முதல் மரியாதை!

5. 'மடல் என்ன...' உங்கள் மொத்த படைப்புகளையுமே, அரைப் புள்ளி, கால் புள்ளி கூட விடாமல் படிச்சாச்சு! ஒரு ரகசியம்... உங்களுக்கு மட்டும்... உங்களுடைய படைப்பு ஒன்று தேர்வு கூட ஆகி விட்டது.



ஜெயஸ்ரீ ராஜ் நினைவு சிறுகதைப் போட்டி—2006



வாசகியரே... உங்கள் படைப்புத் திறனை நிரூபிக்க நல்லதொரு வாய்ப்பு!

முதல் பரிசு	**- ரூ.**	**10,000**
இரண்டாம் பரிசு	**- ரூ.**	**7,500**
மூன்றாம் பரிசு	**- ரூ.**	**5,000**

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 1000 சன்மானம் பெறும்.

மும்பை ஜெயஸ்ரீராஜ், கல்கி, மங்கையர் மலர் வாசகிகளுக்கு நன்கு அறிமுகமானவர். நல்ல எழுத்தாளர். நகைச்சுவையாக எழுதுவதில் தனிமுத்திரை பதித்தவர். மறைந்த ஜெயஸ்ரீயின் நினைவாக, அவரது கணவர் திரு. ராஜ், மங்கையர் மலர் வாசகிகளுக்கு ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தி பரிசளிக்க முன்வந்திருக்கிறார்.

பரிசு பெறுபவர் அறிமுக எழுத்தாளராகவோ, கல்லூரி மாணவியாகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. தேர்வாகும் நகைச்சுவைக் கதைகளுக்கும் சிறப்புப் பரிசு உண்டு! மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

(விவரங்கள் அடுத்த இதழில்...)

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

Sri Krishna Sweets Private Limited

இணைந்து வழங்கும்

உள்ளம் உயர்ந்திட சக்தி கொடு

மார்ச் 15ம் தேதி ஹோலி பண்டிகை. ஆனால், அன்றைய தினம் நாம் சென்னை செல்லம்மாள் கல்லூரிக்குச் சென்ற போது மாணவிகள் தங்களுடைய ஹோலி கொண்டாட்டங்களையெல்லாம் மூட்டை கட்டி வைத்திருந்தனர். சமர்த்தாக உள்ளரங்கில் அமர்ந்திருந்தனர். "ஹோலியெல்லாம் விட இன்னைக்குத்தான் எங்க காலேஜ்ல அட்டகாசமான நிகழ்ச்சியொன்று நடக்கப் போகுதே" என்று முகம் மலர்ந்தார் கல்லூரி மாணவி



• ராணி கண்ணா

களின் தலைவியான ராணி கண்ணா.

கிருஷ்ணா ஸ்வீட்ஸும் மங்கையர் மலரும் இணைந்து நடத்தும் 'சக்தி கொடு' நிகழ்ச்சிக்கு செல்லம்மாள் கல்லூரியைச் சேர்ந்த அத்தனை மாணவிகளும் திரளாக அரங்கத்தில் ஆஜராகியிருந்தனர். அன்றைய நிகழ்ச்சியின் நட்சத்திரப் பேச்சாளர்கள் பாரதி பாஸ்கர் மற்றும் கவிஞர் நெல்லை ஜெயந்தா.

"பாரதி பாஸ்கர் பேச ஆரம்பிச்சாங்கன்னா நடுவர் இவர் பக்கம் தீர்ப்பு கொடுத்து போய்க்கிட்டே இருப்பாரு. அதே மாதிரி கவிஞர் நெல்லை ஜெயந்தா, பொதிகையில் காலையில் பேசும்பொழுது நான் பலமுறை அடுப்புல பாலை பொங்க விட்டிருக்கேன்" என்று கவைபடப் பேசி வரவேற்றார் மங்கையர் மலரின் பொறுப்டாசிரியரான அனுராதா சேகர்.

தும்பைப் பூ வெள்ளை உடையில் வந்திருந்த கவிஞர் நெல்லை ஜெயந்தா ஆரம்பத்திலிருந்தே மாணவிகளின் ஒட்டு மொத்த ஓட்டு வங்கியைக் கைப்பற்றிக் கொண்டார்.

"உலக அழகிப் போட்டியில் ஒரு ஐஸ்வர்யாராயைப் பார்க்க நேர்ந்தது. ஷங்கரின் ஜீன்ஸ் படத்தில் கூட இரண்டு ஐஸ்வர்யாக்களைத்தான் பார்த்தேன். ஆனால் இந்தக் கல்லூரியில்தான் இத்தனை ஐஸ்வர்யாராய்களை ஒரே இடத்தில் பார்க்கிறேன் (நீண்ட நேரம் கைத்தட்டல்).

ஒருமுறை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனும் அவரது மனைவி ஹிலாரி கிளிண்டனும் காரில் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு இடத்தில் பெட்ரோல் நிரப்பச் சென்றனர்.

• பார்வையாளர்களின் ஒரு பகுதி...



ஆண்கள் கல்லூரியில் பெண்களைப் பாராட்டுவீர்களா?



• மேடையில்...

அப்போது பெட்ரோல் போடும் நபரிடம் ஹிலாரி சிரித்துச் சிரித்துப் பேசுவதைக் கண்டார் கிளிண்டன். கார் அங்கிருந்து கிளம்பிய பிறகு அவரிடம், "ஹிலாரி, அந்த பெட்ரோல் போடுபவரை உனக்குத் தெரியுமா?" என மெல்ல கேட்டிருக்கிறார். அதற்கு ஹிலாரியும் ஆமாம் என்றிருக்கிறார். அதோடு விடாமல், 'ஹிலாரி, ஒருவேளை எனக்குப் பதிலாக நீ அந்த நபரைத் திருமணம் செய்திருந்தால் என்ன நடந்திருக்கும்?' என்று விவகாரமாகக் கேட்க, அதற்குப் பதிலளித்த ஹிலாரி, 'என்ன அவன் அமெரிக்க ஜனாதிபதியாகியிருப்பான். நீங்கள் பெட்ரோல் போடுபவராக இருந்திருப்பீர்கள்' என்று ஒரு போடு போட்டாராம்.



• நெல்லை ஜெயந்தா

பெண்கள், தமது திறமைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கல்லூரி நட்பு என்பது தண்ணீரும் பாலும் போல. நெருப்பு தன் நண்பனை நீராவியாக்கி, பிரிக்கிறதே என்று பால் கோபம் கொண்டு பொங்குமாம். தண்ணீர் தெளித்ததும் கோபம் தணிந்து அடங்குமாம்" - என அமர்க்களமாகப் பேசினார்.

திரண்டிருந்த கூட்டத்தை ஒரு நொடி பார்த்து விட்டுப் பேச ஆரம்பித்தார் பாரதி பாஸ்கர்.

"இந்தக் கல்லூரி என் தாய் வீடு மாதிரி. பதின்மூன்று வருடங்களுக்கு முன்பு நான் இங்கு ஒரு பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிகரமாகப் பரிசு வாங்காமல் திரும்பினேன். அன்று சபதம் எடுத்தேன். இனி இந்தக் கல்லூரியில் ஊரறிந்த பேச்சாளராகத் தான் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்று. (கைத்தட்டல்)

பெண் வேறு, சக்தி வேறு கிடையாது. பெண் தான் சக்தியின் உருவம். ஒருவன்

• பாரதி பாஸ்கர்



வேலையெதுவும் இல்லாமல் இருந்தால் 'போய் சிவனேன்னு கிட என்றுதானே சொல்கிறோம்?' (பலத்த கைத்தட்டல்).

துன்பமில்லாத நிலையே சக்தி என்கிறார் பாரதி. பெண்கள் பேசுவதற்கென்றே பிறந்தவர்கள். பேசும் கலைதான் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான மந்திரக்கோல். நேர்காணல்களில் உங்கள் திறமையை ஓரமாக ஒதுக்கி வைத்து விடுவார்கள். முதலில் உங்களிடம் 'கம்யூனிகேஷன் ஸ்கில்ஸ்' எனும் திறமை உள்ளதா என்றுதான் இப்போது பரிசோதிக்கிறார்கள். அவமானமும் வலியும் தான் வெற்றியைக் கொண்டுவந்து கொடுக்கும். இதோ இந்த அறையில் மின்னிக் கொண்டிருக்கும் விளக்குகள் எடிசன் எனும் மகானால் கண்டுபிடிக்கப்பட்டவை. அவர் இரண்டாயிரம் முறை தோல்வி அடைந்தபின்தான் தம் முயற்சியில் வெற்றி கண்டார். ஆண்மை என்பது ஆண்களுக்கு மட்டும் உரியது அல்ல. ஆண்மை என்றால் ஆளுமை என்று அர்த்தம். பெண்கள் ஆண்மையோடு இருக்கப் பழக வேண்டும். பெண்களை இழிவுபடுத்தும் திரைப்படங்களை புறக்கணிக்க வேண்டும். இந்தப் பருவத்தில் நட்பு கிடைப்பது போல் வேறெந்தப் பருவத்திலும் கிடைக்காது. கிடைக்கும் காலத்தையும் நட்பையும் வீணடிக்காதீர்கள்.

மாணவிகள் பேச்சாளர்கள் மீது கேள்விக்கணைகளை வீசினர். அவற்றிலிருந்து சில :

"பெண்களுக்கு சக்தி உண்டு என்பதை எவ்வாறு மற்றவர்க்கு உணர்த்துவது?"

பாரதி பாஸ்கர் : உங்களுக்குள்ளும் ஒரு சக்தி உள்ளது என்பதை உணர்வது மட்டும்தான் கடினம். அதைக் கண்டுபிடித்து விட்டால் பிறகு வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது.

"தமிழை இன்றைய தலைமுறையினர் புறக்கணிக்கிறார்களே?"

நெல்லை ஜெயந்தா : நாகரிக மாற்றத்தால் வந்த விளைவு இது. இருமுறை நோபல் பரிசு பெற்ற மேரி க்யூரி போலந்து நாட்டைச் சேர்ந்தவர். ரஷ்ய படையெடுப்பின் போது போலந்தினர் யாரும் தாய்மொழியில் படிக்கக் கூடாது என்று தடைசெய்யப்பட்டனர். இதனால் தம் தாய்மொழியில் படிக்க முடியவில்லையே என்று நினைத்து வருத்தப்படுவாராம் மேரிக்யூரி. தாய்மொழியை புறக்கணிப்பது என்பது நம் தாயை புறக்கணிப்பதற்குச் சமம்.


"மங்கையர் தினம் அவசியமா?"

பாரதி பாஸ்கர் : அது கொண்டாடப்பட வேண்டிய தினமல்ல. நினைவுகூர வேண்டிய தினம். தொண்ணூற்றி ஐந்து வருடங்களுக்கு முன்பு நியூயார்க்கிலுள்ள பஞ்சாலை தொழிலாளிப் பெண்கள் தங்களுடைய வேலை நேரத்தை பன்னிரண்டு மணி நேரத்திலிருந்து எட்டு மணி நேரமாகக் குறைக்கப் போராடியதை நினைவுகூரும் தினம்தான் மார்ச் 8.

"ஆண்கள் கல்லூரிக்குச் சென்றாலும் இதுபோல் பெண்களைப் பாராட்டிப் பேசுவீங்களா?" (சிரிப்பு)

நெல்லை ஜெயந்தா : கட்டாயமாக ஒரு ரகசியம் சொல்கிறேன். ஆண்கள் கல்லூரியில் பெண்களைப் பற்றி பேசினால்தான் இதுபோல் கைத்தட்டல்கள் அதிகமாகக் கிடைக்கும். (பலத்த கைத்தட்டல்)

- ச.ந. கண்ணன்



பதினைந்து பேர்
நாங்கள் - வேனில்
ஆபீஸ் செல்கிறோம்
அப்போது
அனைவரும் பேசுகிறோம்
அவரவர் செல்ஃபோனில்.

- பிரபா.ஸ்ரீ., சென்னை.



நியூஸ் சாலட்

பெண்கள் ...றித்த புகார்களை ...ப்-இன்ஸ்பெக்டர் ...தவிக்குக் குறையாத ...திகாரிதான் விசா...க்க வேண்டும். ...வில் பிரச்னை என்...ால் விசாரணை ...யத் தவிர்க்க ...வண்டும். மாலை ...றூ மணிக்கு மேல் ...பண்களை விசா...ணைக்கு அழைக்...க் கூடாது. குடும்...ப் பிரச்னை என்...ால் மகளிர் ...ாவல் நிலையத்...ுக்கே அனுப்ப ...வண்டும். எந்தக் ...ாரணத்திற்காகவும் பெண்களை லாக்-...அப்பில் வைக்கக் கூடாது. இவை, தமிழக ...அரசு காவல் நிலையங்களுக்கு அனுப்பி...ுள்ள அறிக்கையின் ஒரு பகுதி.

மகாராஷ்டிர மாநிலத்தில் நான்கு ...டங்களில் பறவைக் காய்ச்சல் நோய் ...ருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ...மார் எழுபத்தைந்தாயிரம் கோழிகள் அழிக்கப்பட்டன. அரைகுறையாக வேக ...வைக்கப்பட்ட கோழிக் கறியை அனை...வருமே தவிர்ப்பது நலம்.

மார்ச் மாதம் ஏழாம் தேதி காசியில் ...ள்ள சங்கட் மோட்சண் என்ற ஆஞ்ச...நேயர் ஆலயம் மற்றும் ரயில் நிலையத்தில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்ததில் ...ருபது பேர் இறந்தனர். இந்த ஈனச் செய...லில் ஈடுபட்ட தீவிரவாதிகளைக் கண்டு...பிடிக்கும் வேட்டை தீவிரமாக நடந்து ...வருகிறது.

மியான்மர் (முன்பு - பர்மா) நாட்டில் ...ராணுவ அரசாங்கம் நடைபெறுகிறது. ...அது, விடுதலை வீராங்கனை ஆங் சான் ...சூ கி என்பவரை பல ஆண்டுகளாக ...வீட்டுச் சிறையில் வைத்துள்ளது. நோபல் ...பரிசு பெற்ற இந்தப் பெண்மணியின் ...உடல்நலத்தில் தனக்கு உள்ள நேயத்தை ஜனாதிபதி அப்துல் கலாம் அங்குள்ள ராணுவ ஆட்சியாளர்களை சமீபத்தில் சந்தித்தபோது வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தல் நெருங்கிக்கொண்டு வருகிறது. தனியார் சுவர்களில் எந்த அரசியல் கட்சியும் விளம்பரம் செய்யக் கூடாது. "அனுமதியுடன்தான் செய்தோம். விளம்பரத்துக்காக பணம் கொடுத்தோம்" என்றெல்லாம் கூறி அரசியல் கட்சிகள் தப்பிக்க முடியாது. உங்கள் விருப்பத்துக்கு மாறாக உங்கள் வீட்டுச் சுவரில் தேர்தல் பிரசாரம் எழுதப்பட்டால் சம்பந்தப்பட்ட கட்சி அதை அழித்தாக வேண்டும் என கூறியுள்ளது தேர்தல் கமிஷன்.

இந்தியாவில் உள்ள தாராபூர் அணு மின்நிலையத்துக்கு யுரேனியம் அளிக்க ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரில் நடந்த காமன்வெல்த் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் தங்கம் குஞ்சராணியுடையது. 48 கிலோ பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார் இவர். துப்பாக்கி சுடும் போட்டிகளில் தேஜஸ்வினி சாவந்த்-அவுனிக் கௌர், சரோஜாகுமாரி-சுஷ்மா ரமணா ஆகியோர் தங்கப் பதக்கம் பெற்றனர். இந்தியாவைச் சேர்ந்த அருண் முருகேசனும் இலங்கையைச் சேர்ந்த விதானேக் சின்தானாவும் சமமாக 171 கிலோ எடையைத் தூக்கினாலும், விதிமுறைப்படி குறைந்த உடல் எடை கொண்டிருந்த (வெறும் 80 கிராம் வித்தியாசம்தான்) இலங்கை வீரருக்கு தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. இந்தியாவுக்கு வெள்ளி மட்டுமே.

- அருண்சரண்யா

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka

மங்கையர் மலரின்

திருமண மலர்

ஏப்ரல் 2006 இதழுடன்
இணைப்பு



'நவரத்ன ஊஞ்சல்' பாட்டு

மங்கையர் மலரின்

திருமண மலர்

இணைப்பிதழ்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1"X1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/-

(அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-)

(174-ம் பக்கம் பார்க்க...)

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-

வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்கள் திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை, நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, **"மங்கையர் மலர்"** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032, தொலைபேசி: 2225 1522 / 2225 1324

Fax: 044-2225 1021 email: marketing@kalkiweekly.com

வாடா மலர்

மங்கையர் மலரின் திருமண மலர்

திருமண விளம்பரத்திற்காக நான் அனுப்பிய தொகை சிறியது. ஆனால் அதனுடைய பிரதிபலனோ மகத்தானது.

- எஸ்.எச்.எஸ். மணி,
வடிவீஸ்வரம்,
நாகர்கோயில்.

மங்கையர் மலரில் கொடுத்திருந்த எனது தங்கையின் திருமண விளம்பரத்திற்கு 250க்கும் மேற்பட்ட ஜாதகங்கள் வந்தன. அவற்றில் நல்ல வரனைத் தேர்ந்தெடுத்து, திருமணம் செய்யாறில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மங்கையர் மலருக்கு நன்றி!

- கே.ஏ. பாலாஜி.
செய்யாறு.

"என் மகனுக்கும், மகளுக்கும் மங்கையர் மலரின் திருமண மலர் பகுதியில் விளம்பரம் கொடுத்திருந்தேன். இரண்டே மாதங்களில் எழுபதுக்கும் மேற்பட்ட வரன்கள் வந்ததில் எங்களுக்குப் பொருத்தமான வரனைத் தேர்ந்தெடுத்து மகளுக்குத் திருமணமும் இனிதாக நடைபெற்றது. எங்களுக்கு ஏற்ற மாதிரி குடும்பம் அமைந்தது என்பதோடு வரதட்சணையோ பட்டுத் துணிகளோ கூட வேண்டாம் என்று கூறும் சம்பந்திகள் கிடைத்ததில் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

- கே.வி. ஹரிஹரன்,
கிச்சாப்பூர், மேற்கு வங்கம்.

மங்கையர் மலரில் திருமண விளம்பரம் செய்ததில் என்னுடைய இரண்டு மகன்களுக்கும் எங்களுக்கு ஏற்றபடி நல்ல பெண்கள் கிடைத்து விட்டார்கள். மூன்று வருடங்களாக முயற்சி செய்தும் முடியாதது மங்கையர் மலரின் திருமண விளம்பரம் மூலம் இனிதே முடிந்ததற்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்.

-ஏ. ஜானகி அம்மாள்,
சென்னை - 17.

பூனே நகரில் வசிக்கும் எங்களுக்கு பூனேவிலேயே மணப்பெண் கிடைத்தது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. மங்கையர் மலருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- எஸ். கைலாசம்,
சோம்நாத் நகர்,
பூனே - 411 014.

செங்கல்பட்டிலிருந்து மதுராந்தகம் செல்லும் நெடுஞ்சாலையில், பாலாற்றுப் பாலத்தைத் தாண்டியவுடன், வலதுபுறம் உள்ள இணைப்புச் சாலையில் திரும்பினால் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது சத்தியபுரி என்னும் மெய்யூர்.

வழிநெடுக கரும்புத் தோட்டம். வளப்பமான ஊர். வாழ்க்கையின் ஆரம்பத்தில் கரடுமுரடான பாதைகளைச் சமாளித்து கடந்து விட்டால், அடுத்து வரும் அத்தனை பாதைகளும் வசதியாகவே தோன்றும். அதே போல் ஊருக்குள் நுழையும் போது, சரியாகப் போடாமலிருக்கும் கப்பி சாலையைக் கடந்து விட்டால், அடுத்து வரும் கான்கிரீட் சிமெண்ட் சாலை

கல்யாணம் நடக்கும்!

நம்மைச் சுலபமாகக் கோயிலின் வாசலில் கொண்டு விடுகிறது.

சுத்தமான அக்ரஹாரம். சத்தமில்லாத சூழல். சுகமான காற்று. கோபுர வாசலை அலங்கரித்துக் கொண்டிருந்த வாழை மரங்களும், மாவிலைத் தோரணமும் காற்றில் ஆடி அசைந்து, நம்மை வரவேற்கின்றன. சிறிய கோவில். ஆழ்வார், ஆச்சார்யர்களை வணங்கிக் கொண்டு பெருமாளைச் சேவிக்கச் செல்கிறோம்.



* ஸ்ரீபக்த ஆஞ்சநேயர்

ஸ்ரீ சுந்தரவல்லி சமேத சுந்தரராஜப் பெருமாள் சௌந்தர்யமாகக் காட்சி தருகிறார். இவருக்கு ஒரு பின்னணி. சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் இவ்வூர்ப் பெரியவர்கள் பாலாற்றில் நீராட ஆற்றில் இறங்கியபோது சிலை ஒன்று கையில் தட்டுப்பட எடுத்துப் பார்த்தால் ஸ்ரீதேவி, பூதேவி சகிதமாக பெருமாள் சிலை ரூபமாக சேவை சாதிக்கிறார். கூடவே உற்சவ

விக்ரகங்களும் ஊரில் பெருமாள் விக்ரகம் இல்லையே என்கிற ஏக்கத்தைப் போக்கவும், பக்தர்களை பரிபாலிப்பதற்காகவுமே பகவான் பாலாற்றுப் படுகையிலிருந்து வெளிவந்திருக்கிறார் என்று ஆனந்தக் கூத்தாடினராம் மக்கள்.

கரிய திருமேனி. கச்சிதமான உடல்வாகு. கமலக் கண்கள். உதட்டில் ஒரு புன்முறுவல். "பொன்னிவர் மேனி, மரகதத்தின் பொங்கிளம் சோதி அகலத்தாரம் மின்" என்று நாகைப்பட்டினத்தில் உள்ள பெருமாளை திருமங்கையாழ்வார் பாடிய பாசுரங்களை இங்கும் பாடுகிறார்கள். அந்தப் பாடல்கள் இந்தப் பெருமாளுக்கும் பொருந்துகிறது.

மெய்யூரானின் அழகில் மெய்மறந்து நிற்கிறோம். "கவலையை விடு, என்னை வேண்டி வருபவர்களுக்கு கல்யாணம் நடக்கும்" என்று அவரது வலது கை அபயமளிக்கிறது. அதற்கு ஏற்றாற்போல் அர்ச்சகரும், இங்கு வந்து கல்யாண உத்ஸவம் செய்வதாக வேண்டிக்

• மெய்யூர் ஸ்ரீ சுந்தரராஜபெருமாள்





கொண்டால், அடுத்த ஒரு மண்டலத்துக்குள் கல்யாணம் கூடி விடும். போன பங்குனியிலிருந்து ஒவ்வொரு மாதமும் கல்யாண உத்ஸவம் நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் கூட ஒரே நாளில் பத்துக் குடும்பங்கள் வந்து கல்யாண உத்ஸவம் பண்ணினார்கள்" என்றார்.

அழகனைத் தரிசித்த திருப்தியோடு, அனுமனைத் தரிசிக்கச் சென்றோம். இந்த அனுமாருக்கு தனி சன்னதி கட்டியதே ஒரு தனிக்கதை. அனுமார், கருடன் சன்னதியில்தான் முன்பு இருந்தாராம். ஒருநாள், அர்ச்சகர் கனவிலும், திருவல்லிக்கேணியிலுள்ள ஒரு அம்மாளின் கனவிலும் ஒரே சமயத்தில் தோன்றி தனக்கு தனி சன்னிதி கட்டும்படி உத்தரவிட்டாராம். அதற்கு ஏற்றாற்போல, ஒருவர் சன்னதி கட்டிக் கொடுக்க, இன்னொருவர், மேல்கூரை போட்டுக் கொடுத்து விட்டார். இப்படித் தனக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொண்டவர், பக்தர்கள் கேட்பதையும் கொடுக்கிறார். விசா மற்றும் பாஸ்போர்ட் சிக்கலில் மாட்டிக் கொண்ட ஒரு பக்தை இங்கு வந்து வேண்டிக் கொள்ள, ஒரே வாரத்தில் அவரது சிக்கல் தீர்ந்திருக்கிறது. இதே போல் கோடம்பாக்கத்தைச் சார்ந்த இன்னொரு பக்தை தமது பிரார்த்தனை நிறைவேறியதும் சமீபத்தில் இந்த ஆஞ்சநேயருக்கு வெள்ளிக்கவசம் சாத்தியிருக்கிறார்.



• உற்சவர்

அனுமனின் சன்னிதியில் அமர்கிறோம். நகரத்தின் சந்தடியிலிருந்து சற்றே நகர்ந்து ஆரவாரமில்லாத அமைதியான சூழலில் ஆன்மிக அனுபவம் பெற பெய்யூருக்கு வரலாம். அனுமனிடம் பிரியாவிடைபெற்று, வெளியில் வந்தால் அலங்காரமாகக் காட்சி தரும் வாழை மரங்களும், மாவிலைத் தோரணங்களும் கூட ஆடி அசைந்து, பிரியாவிடை தருகின்றன!

தனியாக வருவோர் தம்பதியராக வாருங்கள் என்று சொல்வது போல்!

• நந்தகுமார்

படங்கள் : கே.வி. வேங்கடகிருஷ்ணன்

கேள்வி : பெண்ணுக்குத் திருமணம் என்றால்
முதற்படி
பெற்றவர் காண்பது இவரைத்தான்!
கண் அசைவில் இவர் பதில் கிடைத்தால்தான்
கல்யாணம் என்பார் அடுத்தபடி!
யார் யார் யார் இந்தப் பெருமகனார்?
பேர் பேர் பேர் என்ன? கூறுங்கள்!
பதில்: கோள்கள் ஒன்பதும் குடியிருக்கும்
கோலம் கொண்ட இவர் ஜாதகமே!
சாதகமான இவர் பதிலால் தான்
சதிபதியாவது சாத்தியமே!
சரி சரி எங்கள் விடை 'ஜாதகமே'!
சரி சரி எங்கள் விடை 'ஜாதகமே!'

- திருமதி ஜெயா ராஜாமணி, மதுரை.

விடுகதையில் திருமணம்!



ரத்னம் பதித்த ரமணீயமான ஊஞ்சலில்
ஸ்ரீ ராமர் ஸீதையுடன் ஆடுகிறார் லாலி லாலி...

மரகதம் மின்ன மாண்பான ஊஞ்சலில்
மஹாலக்ஷ்மியுடன் ஸ்ரீவிஷ்ணு ஆடுகிறார் லாலி லாலி

பவளம் பதித்த பாங்கான பொன்னூஞ்சலில்
பார்த்தஸாரதி ருக்மிணியுடன் ஆடுகிறார் லாலி லாலி

கோமேதகம் பளபளக்க கோமளமான ஊஞ்சலில்
கோமளவல்லியுடன் ஆராவமுதன் ஆடுகிறார் லாலி லாலி

வைரம் ஜ்வலிக்க விநோதமான பொன்னூஞ்சலில்
வரதராஜர் பெருந்தேவியுடன் ஆடுகிறார் லாலி லாலி

முத்து கோத்த பொன்னூஞ்சலில் பொன்னரங்கன்
மோஹன ரங்கநாயகியுடன் ஆடுகிறார் லாலி

வைடூர்யம் பதித்த வண்ணமான பொன்னூஞ்சலில்
வேங்கடேசன் பத்மாவதியுடன் ஆடுகிறார் லாலி லாலி



அட்டைப் படம் : ஸ்ரீஹரி

'நவரத்ன ஊஞ்சல்' பாட்டு

பத்மராகம் ப்ரகாசிக்கும் பொன்னூஞ்சலில்
பத்ம நாபன் லக்ஷ்மியுடன் ஆடுகிறார் லாலி லாலி

மாணிக்கம் மின்னிட பொன்னூஞ்சலில்
மரகதவல்லி நாதனுடன் ஆடுகிறார் லாலி லாலி

நவரத்ன மயமான பொன்னூஞ்சலில்
ஸ்ரீமன் நாராயணன் தேவியுடன் ஆடுகிறார் லாலி லாலி

மணி மயமான ஊஞ்சலில் கோதா ரங்கநாதருடன்
மங்களமான மாலைகள் அசைய ஆடுகிறாள் லாலி லாலி

இந்த ஊஞ்சல் பாட்டில் கடைசி இரண்டு வரிகளை பெயரை மாற்றி மணப்பெண், பிள்ளை பெயரில் பாடிடுவது அழகாகப் பொருந்தும்.



- லக்ஷ்மி ராகவன்,
மும்பை.

சுவையான திருமணச் செய்திகள்

மறந்து போன திருமணச் சடங்கு

மதுரைவாழ் (உருது) முஸ்லிம்களிடையே முற்காலந்தொட்டு ஒரு சம்பிரதாயம் உண்டு. ஒரு பெண்ணின் திருமண நாளுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னால் 'மஞ்சள் சடங்கு' நடக்கும். அப்போது பெண்ணின் வீட்டில் ஒரு புறத்தில் 'முளைப்பாரி' முளைக்க விட்டு அதன் மத்தியில் வர்ணம் பூசி அலங்கரிக்கப்பட்ட இரு மண்பாண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும். சடங்கின் போது மணமகளும், அவள் சகோதரனும் ஒன்றாகக் கைப்பிடித்து அப் பானைகளில் தண்ணீர் ஊற்றுவர். பின்பு சகோதரன் சகோதரிக்கு தன் கையால் பணம் தருவார்.

முளைப்பாரி முளைப்பது போல பெண்ணின் வாழ்வு வளமாக இருக்கவும், அவள் வாழ் நாள் முழுவதும் அவளுக்கு உறு துணையாக சகோதரன் இருப்பான் என்பதை உறுதிப் படுத்தவும் இந்தச் சம்பிரதாயம்.

தோரணப் பந்தல்!

நாளாவட்டத்தில் இச் சடங்குகள் மறைந்து போனாலும் அண்மையில் திருவான்மியூரில் நடந்த ஒரு திருமணத்தில் நடந்த இந்தச் சடங்கு கூடியிருந்தோருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

- மும்தாஜ் இமாம்,
சென்னை - 40.



ஜெராக்ஸ் கடையில் பொண்ணு கிடைச்சது!

சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அதிசய சம்பவத்தை வாசகியருடன் பகிர்ந்துக் கொள்ள ஆசைப் படுகிறேன். கோடம் பாக்கம் மகாலிங்கபுரம்



பிள்ளையார் கோவிலுக்கு ஜாதக விஷயமாகச் சென்றபோது முக்கியமான விலாசங்களைக் கொடுத்து ஜெராக்ஸ் எடுக்கச் சொன்னார்கள். என் பிள்ளை ராம் மோகனுக்காகச் சென்றபோது அங்கு தன் மகள் ஆர்த்திக்காக வந்த தம்பதியர் எதற்காக வந்திருக்கிறோம் என்று விசாரித்து விட்டு இது விஞ்ஞான யுகம். பக்கம் பக்கமாகப் போய் ஜாதகப் பொருத்தம் பார்த்து நேரத்தை வீணடிக்காமல் கம்ப்யூட்டரில் பார்க்கலாம்" என்றனர். (ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லி குழப்புவார்கள் என்பதால்) ஜெராக்ஸ் கடையிலேயே கம்ப்யூட்டரில் பொருத்தம் ஓ.கே. ஆகி எல்லாமும் பொருந்தி வந்தது ஆச்சர்யத்திலும் பேராச்சர்யம். சற்று தயங்கிய பெண்ணின் தாத்தா ஜாதகம், மானுடர்கள் பார்த்ததும், கம்ப்யூட்டர் கணித்ததும் பொருந்தவே சந்தோஷித்தார். என் மருமகளின் பிறிதொரு பெயர் அமிர்தா. எல்லாம சோளிங்கபுரம் ஸ்ரீ அமிர்தவல்லி தாயார் மகிமை. இன்று எங்களுக்கு ஒரு பேரன் பெயர் நைத்ருவன்.

- எஸ். அமிர்தா செளந்தர், சென்னை - 26.

பொண்ணு கொடுத்து பொண்ணு எடுத்து!

எங்கள் அண்ணா திருமணம் நடந்து சுமார் 45 வருடங்களாகி விட்டன. இருந்தாலும் சில சம்பவங்கள் பசுமரத் தாணி போல் மனத்



மங்கையர் மலரின் திருமண மலர்

சுவையான திருமணச் செய்திகள்

